# கிறிஸ்தவ நம்பிக்கைகள்

ஆக்கியோன்
டாக்டர். ஸ்டீபன் கிப்ஸன்

இந்த பாடத்திட்டத்திற்கான சில பகுதிகள் ஓஹியோவின் சின்சினாட்டியில் உள்ள தேவனுடைய வேதாகமப் பள்ளி மற்றும் கல்லூரியின் ஆசிரியர்களால் இயற்றப்பட்ட நான் நம்புகிறேன் என்னும் புத்தகத்திலிருந்து தழுவி எடுக்கப்பட்டது.

.

shepherds
GLOBAL CLASSROOM

# கிறிஸ்தவ நம்பிக்கைகள்
*டாக்டர். ஸ்டீபன் கிப்ஸன்*

# CHRISTIAN BELIEFS
Dr. Stephen Gibson

*காப்புரிமை* © 2019 Shepherds Global Classroom
*ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இரண்டாம் பதிப்பு.*

*இந்நூல் காப்புரிமை பெற்றது. மாதிரிப் பக்கங்களைத் தவிர்த்து, Shepherds Global Classroom (SGC) இன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதியையும் எந்த வகையிலும்—வேறு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, நகலெடுத்தல், ஆடியோ பதிவு செய்தல் அல்லது வேறு எந்த வகையிலும் மறு ஆக்கம் செய்வதோ அல்லது சேமித்து பிறருக்கு அனுப்பவோ கூடாது. எங்களது SGC இன் ஆங்கில பாடத்திட்டத்தின் ஒவ்வொரு விற்பனையும் இதே பாடத்திட்டத்தை உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு மொழிபெயர்த்து வழங்குவதற்கு உதவுகிறது. SGC யைத் தொடர்புகொள்ள அல்லது இந்த பாரமுள்ள ஊழியத்திற்கு நன்கொடை அளிக்க: www.shepherdsglobal.org என்கிற இணையதளத்திற்குச் செல்லவும்.*

*குறிப்பிட்டு குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேதாகமப் பகுதிகளின் மேற்கோள்களும் இந்திய வேதாகமச் சங்கத்தின் Tamil-OV என்னும் பரிசுத்த வேதாகமத்தின் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.*

ISBN: 978-81-961252-1-9

All right reserved. No portion of this book may be translated or reproduced in whole or in part in any form without the written permission of the publishers. Originally published by Shepherds Global Classroom (SGC), USA. Translated, published and printed in India with permission.

This edition is published by

Cleft Rock Enterprises Pvt. Ltd, India in arrangement with Shepherds Global Classroom (SGC), USA.

*Printed by:*
**Cleft Rock Enterprises Pvt. Ltd**
Mumbai India
www.cleftrockindia.com
Price : ₹ 100/-

# பொருளடக்கம்


பாடத்தின் கண்ணோட்டம்.....5

(1) தேவனுடைய புத்தகம்.....11

(2) தேவனுடைய பண்புகள்.....33

(3) திரித்துவம்.....49

(4) மனிதக்குலம்.....65

(5) பாவம்.....79

(6) ஆவிகள்.....93

(7) கிறிஸ்து.....109

(8) இரட்சிப்பு.....133

(9) இரட்சிப்பின் பிரச்சினைகள்.....153

(10) பரிசுத்த ஆவியானவர்.....177

(11) கிறிஸ்தவப் பரிசுத்தம்.....195

(12) திருச்சபை.....209

(13) நித்திய விதி.....223

(14) கடைசிக்கால சம்பவங்கள்.....235

(15) பண்டைய சமயக் கோட்பாடுகள்.....249

பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள்.....263

வீட்டுப்பாடங்களின் பதிவு.....266

# பாடத்தின் கண்ணோட்டம்

## பாடத்தின் விவரணம்

*தேவன், கிறிஸ்து, பாவம், இரட்சிப்பு போன்ற கிறிஸ்தவ இறையியலின் ஒவ்வொரு முக்கிய வகையிலும் உள்ள அடிப்படைக் கோட்பாடுகளைப் பற்றிய புரிதலை இந்தப் பாடத்திட்டம் வழங்குகிறது. கோட்பாட்டில் பிழைகளைத் தவிர்ப்பது எப்படி என்பதை மாணவர் கற்றுக்கொள்வார். கிறிஸ்தவ கோட்பாட்டை மற்றவர்களுக்கு கற்பிக்க மாணவர் ஆயத்தமாக இருப்பார்.*

## பாடத்தின் நோக்கங்கள்

*(1) கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கற்றுக்கொள்ளுதல்.*

*(2) கோட்பாட்டிற்கான ஆதாரமாகவும் அதிகாரமாகவும் வேதாகமத்தைச் சரியாகப் பயன்படுத்துதல்.*

*(3) கோட்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க பிழைகளை கண்டறிதல்.*

*(4) தேவனுடனான நமது உறவை ஆழப்படுத்த உதவும் புரிதலைப் பெறுதல்.*

*(5) மற்றவர்களுக்கு கற்பிப்பதற்கான உள்ளடக்கத்தையும் கட்டமைப்பையும் பெறுதல்.*

## வகுப்புத் தலைவர்களுக்கான விளக்கங்கள் மற்றும் வழிகாட்டிகள்

*இந்த வழிகாட்டுதல்கள் வகுப்பை எவ்வாறு மிக உயர்ந்த தரத்துடன் கற்பிக்க முடியும் என்பதை விவரிக்கிறது. ஷெப்பர்ட்ஸ் குளோபல் வகுப்பறையிலிருந்து (Shepherds Global Classroom) சான்றிதழைப் பெறும் மாணவர்களுக்கு வகுப்புத் தலைவர் இந்த தரநிலையை வைத்திருக்க வேண்டும். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத பிற வகை குழுக்களுக்கு,*

ஒரு ஆசிரியர் தேவைகளை அவர்களின் திறனுக்கு ஏற்ப மாற்றி வேறு சான்றிதழை வழங்கலாம்.

ஒரு பாடம் 90 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் எடுக்கும் என்று மதிப்பிடுகிறோம். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு குழு இரண்டு முறை சந்திப்பது சிறந்தது. ஒரு குழு இரண்டு முறை சந்தித்தால், சில வழிகாட்டிகளை மாற்றியமைக்க வேண்டும். உதாரணமாக, இரண்டு முறையும் தேர்வு இருக்காது.

ஒவ்வொரு மாணவருக்கும் இந்தப் புத்தகத்தின் பிரதி தேவை.

வகுப்புத் தலைவர்களுக்கான குறிப்புகள் பாடத்தின் குறிப்பிட்ட பகுதிகளுக்கான வழிகாட்டிகளுடன் பாடத்திட்டம் முழுவதும் சேர்க்கப்பட்டுள்ளன. *அவற்றின் அச்செழுத்துக்கள் வலப்பக்கம் சாய்ந்துள்ள நிலையில் உள்ளன.*

வகுப்பு அமர்வின் தொடக்கத்தில், முந்தைய பாடத்தின் தேர்வை வழங்கவும். ஒவ்வொரு மாணவரும் எந்த உதவியும் இல்லாமல் தங்கள் நினைவிலிருந்து பதில்களை எழுத வேண்டும். ஒரு மாணவரால் தேர்வில் தேர்ச்சி பெற முடியாவிட்டால், அவரை மற்றொரு முறை முயற்சிக்க அனுமதிக்கலாம் (மதிப்பீடு நேரம்: 10 நிமிடங்கள்). ShepherdsGlobal.org இலிருந்து தேர்வு விடைக் குறிப்பேடைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தேர்வுக்குப் பிறகு, முந்தைய பாடத்தின் நோக்கங்களின் பட்டியலை மதிப்பாய்வு கேள்விகளாகப் பயன்படுத்தவும். ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒரு கேள்வியைக் கேட்டு, மாணவர்களை விளக்க அனுமதிக்கவும் (மதிப்பீடு நேரம்: 15 நிமிடங்கள்).

வழங்கப்பட்ட பத்தியை ஒரு மாணவரைப் படிக்க வைப்பதன் மூலம் புதிய பாடத்தைத் தொடங்கவும். பாடத்தின் தலைப்பைப் பற்றி பத்தி என்ன சொல்கிறது என்பதை மாணவர்கள் சுருக்கமாக விவாதிக்கட்டும் (மதிப்பீடு நேரம்: 10 நிமிடங்கள்).

*ஒவ்வொரு பகுதியையும் படித்து விளக்குவதன் மூலம் பாடத்தின் உள்ளடக்கத்தைப் படிக்கவும். வகுப்பின் உறுப்பினர்கள் சில பிரிவுகளை கற்பிக்க முடியும் (மதிப்பீடு நேரம்: 45 நிமிடங்கள்).*

*பாடத்தில் நிறைய* ***வேதப்பகுதி*** *பயன்படுத்தப்பட்டுள்ளது. "வாசிக்கவும்" என்ற வார்த்தையுடன் தொடங்கும் அடிக்குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வேதக் குறிப்புகளும் வகுப்பில் சத்தமாக வாசிக்கப்பட வேண்டும். அடிக்குறிப்புள்ள மற்ற வசனங்கள் உரையில் உள்ள அறிக்கைகளுக்கு ஆதரவாக உள்ளன. அந்த பத்திகளை வகுப்பில் பார்க்கவோ படிக்கவோ தேவையில்லை.*

► *இந்த குறியீடு ஒரு* ***விவாதக் கேள்வியைக்*** *குறிக்கிறது. சில நேரங்களில் விவாதக் கேள்விகள் பிரிவை அறிமுகப்படுத்துகின்றன; சில நேரங்களில் அவை சமீபத்தில் படித்து முடித்த பாடப்பகுதியை மதிப்பாய்வு செய்கின்றன. வகுப்புத் தலைவர் கேள்வியைக் கேட்க வேண்டும் மற்றும் பதிலைப் பற்றி விவாதிக்க மாணவர்களுக்கு நேரம் கொடுக்க வேண்டும். குறிப்பாக கேள்வி ஒரு பகுதியை அறிமுகப்படுத்துவதாக இருந்தால், அந்த நேரத்தில் பதிலை முழுமையாக விளக்க வேண்டிய அவசியமில்லை.*

*வகுப்பினுடைய ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் "****நம்பிக்கைகளின் கூற்றை****" ஒன்றாக இரண்டு முறை படிக்க வேண்டும்.*

*ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும், கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு வேதப்பகுதி ஒதுக்கப்பட வேண்டும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், அவர்கள் வேதப்பகுதியைப் படித்து, பாடத்தைப் பற்றி அந்த வேதப்பகுதி என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தி எழுத வேண்டும். அடுத்த அமர்வில் வகுப்புத் தலைவரிடம் இந்தப் பத்தியைக் காட்ட வேண்டும்.*

*இந்த பாடத்திட்டத்தின் போது குறைந்தது ஏழு முறையாவது, மாணவர் வகுப்பில் இல்லாதவர்களுக்கு ஒரு பாடம் அல்லது*

*பாடத்தின் ஒரு பகுதியை கற்பிக்க வேண்டும். திருச்சபையில் ஒரு வகுப்பில், ஒரு வீட்டு வேத ஆராய்ச்சி குழுவில் அல்லது வேறு அமைப்பில் இதைச் செய்யலாம். ஒவ்வொரு வகுப்பு அமர்வின் முடிவிலும், இந்த வீட்டுப்பாடத்தை மாணவர்களுக்கு நினைவூட்டி, கடந்த வகுப்பு அமர்வில் இருந்து அவர்கள் ஏதேனும் கற்பித்திருந்தால் அதன் அறிக்கையை அளிக்க அவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.*

*வகுப்பின் முடிவில், அடுத்த வகுப்பினுடைய அமர்வுக்கு முன் அடுத்த பாடத்தின் உள்ளடக்கத்தைப் படிக்குமாறு மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள் (அறிவிப்புகள் மற்றும் வீட்டுப்பாடங்களுக்கான மதிப்பீடு நேரம்: 10 நிமிடங்கள்).*

*மாணவர் **ஷெப்பர்ட்ஸ் குளோபல் வகுப்பறையிலிருந்து (Shepherds Global Classroom) சான்றிதழைப் பெற விரும்பினால்**, அவர் வகுப்பு அமர்வுகளில் கலந்துகொண்டு வீட்டுப்பாடங்களை முடிக்க வேண்டும். ஒரு மாணவர் வகுப்பைத் தவறவிட்டால், அவர் தவறவிட்ட பாடத்தைப் படித்து, தேர்வெழுதி, எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட வீட்டுப்பாடத்தைச் செய்ய வேண்டும். முடிக்கப்பட்ட வீட்டுப்பாடங்களைப் பதிவு செய்வதற்கான ஒரு படிவம் பாடத்தின் முடிவில் வழங்கப்படுகிறது.*

***மாணவர்களுக்கான விளக்கங்கள் மற்றும் வழிகாட்டிகள்***

*வகுப்பு கூடும் முன்பு ஒவ்வொரு பாடத்திற்கும் உள்ள விஷயங்களை நீங்கள் படிக்க வேண்டும், அதனால் நீங்கள் சிறந்த புரிதலுடன் கலந்துரையாடலில் பங்கேற்கலாம்.*

*ஒவ்வொரு வகுப்பு அமர்வின் தொடக்கத்திலும், முந்தைய பாடத்தின் மீது ஒரு தேர்வை எழுத தயாராக இருங்கள். வழங்கப்பட்ட தேர்வின் கேள்விகளைப் படிக்கவும்.*

*எப்பொழுதும் ஒரு வேதாகமம், பாடத்தின் அச்சிடப்பட்ட பிரதி மற்றும் உங்கள் சொந்த குறிப்புகளை எழுதுவதற்கான குறிப்பேடு மற்றும் பேனா ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள்.*

வேதாகமக் குறிப்புகளைப் பார்க்கவும், விவாதக் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், வகுப்புத் தலைவர் வழிநடத்தும் படி பங்கேற்கவும் தயாராக இருங்கள்.

ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும், உங்களுக்கு ஒரு வேதப்பகுதி ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பினுடைய அமர்வுக்கு முன், வேதப்பகுதியைப் படித்து, பாடத்திட்டத்தின் பாடத்தைப் பற்றி வேதப்பகுதியில் என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுதுங்கள். வகுப்புத் தலைவரிடம் அந்த பத்தியைக் காட்டுங்கள்.

இந்த பாடத்திட்டத்தின் போது குறைந்தது ஏழு முறையாவது நீங்கள் வகுப்பில் இல்லாதவர்களுக்கு ஒரு பாடம் அல்லது பாடத்தின் ஒரு பகுதியை கற்பிக்க வேண்டும். இந்த கற்பித்தல் திருச்சபையில் ஒரு வகுப்பில், ஒரு வீட்டு வேத ஆராய்ச்சி குழுவில் அல்லது மற்றொரு அமைப்பில் செய்யப்படலாம். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒருவருக்கு கற்பிக்கும் போது வகுப்புத் தலைவரிடம் தெரிவிக்கவும்.

# பாடம் 1
# தேவனுடைய புத்தகம்

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில், மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *பொதுவான வெளிப்பாடு மற்றும் சிறப்பு வெளிப்பாடு பற்றிய கருத்துக்கள்.*
- *வேதாகமம் துல்லியமானது என்பதை ஆதாரம் எவ்வாறு காட்டுகிறது.*
- *வேதத்தினுடைய ஏவுதலின் சரியான புரிதல்.*
- *வேதத்தினுடைய ஏவுதல் ஏன் அது பிழையில்லாதது என்று பொருள்படுகிறது.*
- *ஏவப்பட்டது, தவறில்லாதது மற்றும் பிழையற்றது என்னும் சொற்கள்.*
- *வேதாகமம் ஏன் முற்றுபெற்று விட்டது மற்றும் அது மேலும் விரிவாக்கம் செய்யமுடியாது.*
- *உபதேசத்திற்கான முதன்மை ஆதாரமாகவும் முடிவான அதிகாரமாகவும் வேதாகமம் எப்படி இருக்கிறது.*
- *கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்வில் வேதாகாமம் எப்படி முக்கிய பங்கு வகிக்கிறது.*
- *வேதாகமத்தைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) தவறான அதிகாரத்திற்குச் செவிசாய்ப்பதையோ அல்லது வரையறுக்கப்பட்ட நோக்கத்துடன் வேதாகமத்தை வாசிப்பதையோ மாணவர் தவிர்க்க முடியும்.*

## முன்னுரை

*வகுப்புத் தலைவருக்கான குறிப்பு: வழக்கமாக வகுப்பின் அமர்வு முந்தைய பாடத்தின் மீதான தேர்வு மற்றும் முந்தைய பாடத்தின் நோக்கங்களை மதிப்பாய்வு செய்வதோடு தொடங்கும். இது முதல் பாடம் என்பதால், கீழேயுள்ள வேதப்பகுதியின் வாசிப்புக்குச் செல்லவும்.*

*சங்கீதம் 119:1-16ஐ ஒன்றாகப் படியுங்கள். வேதாகமத்தைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

உலகத்தைப் படைத்த தேவன் பேசியுள்ளார். அவர் தன்னையும் தனது படைப்பின் நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். தேவன் நமக்கு வெளிப்படுத்திய சத்தியம் வெளிப்பாடு என்று அழைக்கப்படுகிறது. வேதாகமத்தில் "வெளிப்படுத்தின விசேஷம்" என்று ஒரு புத்தகம் உள்ளது, ஆனால் தேவன் வெளிப்படுத்திய அனைத்து சத்தியங்களுக்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படலாம்.

> *"தேவனுடைய] இந்த பிரமாணம் நித்தியத்தில் வசிக்கும் உயர்ந்த மற்றும் பரிசுத்தமானவரின் அழியாத சித்திரம். எந்த மனிதனும் தனது சாராம்சத்தில் காணாத தேவன், மனிதர்களுக்கும் தேவதூதர்களுக்கும் தெரியும். அது தேவனுடைய திரையிடப்படாத முகம்; தேவன் தம்முடைய சிருஷ்டிகளுக்கு அவர்கள் அதைத் தாங்கும் திறனை வெளிப்படுத்தினார்; அவர்கள் தேவனைக் கண்டு வாழ்வதற்காக, உயிரைக் கொடுப்பதற்காக" வெளிப்படுத்தினார், அதை அழிக்க அல்ல. இது மனிதனுக்குத் திறக்கப்பட்ட தேவனுடைய இருதயம்.*
> *- John Wesley, "The Origin, Properties, and Use of God's Law" என்பதிலிருந்து எடுக்கப்பட்டது.*

► தேவன் நமக்கு சத்தியத்தை வெளிப்படுத்திய சில வழிகள் *யாவை?*

## வெளிப்பாட்டின் பல்வேறு வடிவங்கள்

தேவன் சத்தியத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தியிருப்பதால், நாம் இரண்டு வகைகளைப் பற்றி பேசுகிறோம்: பொதுவான வெளிப்பாடு மற்றும் சிறப்பு வெளிப்பாடு.

## பொதுவான வெளிப்பாடு

*பொதுவான வெளிப்பாடு என்பது தேவனுடைய படைப்பைப் பார்த்து நாம் புரிந்து கொள்ளக்கூடியது. பிரபஞ்சத்தின் வடிவமைப்பில் தேவனுடைய அற்புதமான ஞானத்தையும் வல்லமையையும் காண்கிறோம்.*

*மனிதன் வடிவமைக்கப்பட்ட விதத்தில் தேவனைப் பற்றிய முக்கியத்துவத்தை நாம் காண்கிறோம். நம்மால் நியாயப்படுத்தவும், அழகைப் பாராட்டவும், சரி மற்றும் தவறுகளுக்கு இடையிலான வேறுபாட்டைக் கூறவும் முடியும் (சரியாக இல்லாவிட்டாலும்) அந்த திறன்களை நம் படைப்பாளர் அதிக அளவில் பெற்றிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அந்தத் திறன்கள் நம்மிடம் இருப்பதால் தேவன் சிந்திக்கவும் தொடர்பு கொள்ளவும் கூடிய ஒருவராக இருக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம்.*

*தேவனால் பேச முடியும் என்று பொதுவான வெளிப்பாடு நமக்குக் காட்டுவதால், சிறப்பு வெளிப்பாடு நிகழக்கூடும் என்பதை நாம் உணர்கிறோம். தேவன் பேசக்கூடியவர் என்பதால், நமக்காக தேவனிடமிருந்து செய்திகளும் தேவனிடமிருந்து ஒரு புத்தகமும் கூட இருக்க முடியும்.*

*பொதுவான வெளிப்பாட்டின் மூலம், தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும், அவர்கள் ஏற்கனவே அவருக்குக் கீழ்ப்படியவில்லை என்றும் ஜனங்கள் அறிவார்கள்.[1] ஆனால் பொதுவான வெளிப்பாடு தேவனுடன் சரியான உறவில் எப்படி வர வேண்டும் என்று சொல்லவில்லை. பொதுவான வெளிப்பாடானது சிறப்பு வெளிப்பாட்டின் அவசியத்தை நமக்குக் காட்டுகிறது, ஏனென்றால் "வித்தியாசமே இல்லை" மற்றும் தங்கள் சிருஷ்டிகரின் முன் ஜனங்கள் பாவமுள்ளவர்கள் என்பதை அதுக் காட்டுகிறது, ஆனால் அது நமக்கு தீர்வைக் கூறவில்லை.*

---

*[1] ரோமர் 1:20 -ஐ வாசிக்கவும். இந்த வசனம் தேவன் படைத்த உலகத்தை அவதானிப்பதன் மூலம் நமக்குத் தெரிந்த சில காரியங்களைச் சொல்லுகிறது.*

### *சிறப்பு வெளிப்பாடு*

*சிறப்பு வெளிப்பாடு வேதாகமத்தின் ஏவுதலிலும் கிறிஸ்துவின் மாம்சத்தில் வந்த மனித அவதாரத்திலும் நிகழ்ந்துள்ளது. சிறப்பு வெளிப்பாடு, பொதுவான வெளிப்பாடு நம்மைக் காட்டும் நிபந்தனையை விளக்குகிறது: விழுந்துபோன மற்றும் குற்றவாளியான நிலையில் உள்ளதைக் காண்பிக்கிறது. சிறப்பு வெளிப்பாடு தேவனை விவரிக்கிறது, மனிதனுடைய வீழ்ச்சி மற்றும் பாவத்தை விளக்குகிறது, மேலும் நாம் எவ்வாறு தேவனுடன் ஒப்புரவாக முடியும் என்பதைக் காட்டுகிறது.*

*வேதாகமம் இருப்பது உங்களுக்குத் தெரியாது என்று கற்பனை செய்து பாருங்கள். ஒரு தேவன் இருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். நீங்கள் தேவனிடம் செல்லமுடியாம சிக்கலில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். மரணத்திற்குப் பிறகு என்ன சம்பவிக்கும் என்று உங்களுக்குத் தெரியாது. வாழ்க்கையின் நோக்கம் உங்களுக்குத் தெரியாது. தேவனை எப்படி அணுகுவது என்று உங்களுக்குத் தெரியாது.*

*பிறகு யாரோ ஒருவர் ஒரு புத்தகத்தை உங்களுக்குக் காட்டி, அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க அது தேவனிடமிருந்து வந்தது என்று உங்களுக்குச் சொல்வதாக கற்பனை செய்து பாருங்கள். அந்த புத்தகம் எவ்வளவு மதிப்புமிக்கதாக இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?*

### வேதாகமத்தின் உரிமைக்கோரல்

► *வேதாகமம் தன்னைப் பற்றி என்ன கூறுகிறது? அது தேவனிடமிருந்து வந்ததாகக் கூறுவதைக் காட்டும் சில உதாரணங்களை வேதாகமத்திலிருந்து தருக.*

*வேதாகமம் தன்னைப் பற்றி கூறும் காரியத்தைப் பற்றி முதலில் பார்க்கலாம். பிறகு, வேதாகமம் உண்மையானது என்பதற்கான ஆதாரங்களைப் பார்ப்போம். வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று கூறுகிறது. பழைய ஏற்பாட்டில், தேவனிடமிருந்து செய்திகள் வந்ததாக 3,000 க்கும் மேற்பட்ட அறிக்கைகள் உள்ளன, அவை பெரும்பாலும் "பின்பு கர்த்தர்*

பேசினார்..." என்று எளிமையாகக் குறிப்பிடப்படுகின்றன.[2] பழைய ஏற்பாடு தேவனால் ஏவப்பட்டதாக இயேசு கருதினார்.[3] புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் பழைய ஏற்பாடு தேவனிடமிருந்து வந்ததாகக் கருதினர்.[4] புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் புதிய ஏற்பாட்டு எழுத்துக்களை தேவனால் ஏவப்பட்டதாகக் கருதினர்.[5]

ஒரு நபர் வேதாகமம் தன்னைப் பற்றிக் கூறுகின்ற கூற்றை ஏற்கவில்லை என்றால், அவர் அதற்கான ஆதாரத்தைப் பார்க்க வேண்டும். வேதாகமத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாது என்று மீண்டும் கற்பனை செய்து பாருங்கள். தேவன் ஒரு நபர், அவர் விரும்பினால் பேச முடியும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, தேவனிடமிருந்து ஒரு புத்தகம் கிடைக்கப்பெறுவது சாத்தியம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்போது ஒருவர் உங்களிடம் ஒரு புத்தகத்தைக் காண்பித்து, அது தேவனிடமிருந்து வந்த புத்தகம் என்று சொல்கிறார்.

► வேதாகமம் உண்மையில் தேவனுடைய வார்த்தை என்பதை நீங்கள் எப்படி அறிந்துகொள்வது? அது எப்படி இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடத்தில், உலகில் எங்கும், அதன் சத்தியத்தின் கண்டித்து உணர்த்துதலை ஜனங்கள் உணர்கிறார்கள். அவர்கள் நற்செய்தியை விசுவாசித்து மனந்திரும்பும்போது, தேவனுடைய மன்னிப்பையும், மாற்றப்பட்ட வாழ்க்கையையும் அவர்கள் அனுபவிக்கிறார்கள். பெரும்பாலான ஜனங்கள், வேதாகமத்தை நம்புவதற்கான முதல் காரணம் இதுதான்.[6]

பின்னர் தேவனுடன் உறவில் இருப்பவர்களுக்கு, தேவனுடைய ஆவியானவர் வேதாகமத்தின் மூலம் பேசுகிறார், புரிதலையும் நம்பிக்கையையும் தருகிறார். பரிசுத்த ஆவியானவர்

---

[2] உதாரணங்களுக்கு, எண்ணாகமம் 34:1, 35:1, 9-ஐப் பார்க்கவும்.
[3] மத்தேயு 5:17-18; யோவான் 10:35; மாற்கு 12:36-ஐ வாசிக்கவும்.
[4] அப்போஸ்தலர் 3:18; 2 பேதுரு 1:20-21; 2 தீமோத்தேயு 3:16-ஐ வாசிக்கவும்.
[5] 1 கொரிந்தியர் 14:37; 2 பேதுரு 3:16-ஐ வாசிக்கவும்.
[6] 1 தெசலோனிக்கேயர் 1:5-ஐ வாசிக்கவும்.

வேதாகமத்தைப் பயன்படுத்தும் விதம் அது தேவனுடைய வார்த்தை என்பதை உறுதிப்படுத்துகிறது.[7]

நாம் தேவனோடு உறவில் நடக்கும்போது, அவருடைய இயல்பையும் அவர் நம்முடன் செயல்படும் விதத்தையும் வேதாகமம் துல்லியமாக வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். தேவனோடு உறவைத் தொடங்குவதற்கான வழியையும் அவருடன் தொடர்வதற்கான வழியையும் வேதாகமம் நமக்குக் காட்டுகிறது. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதற்கு இதுவே சான்று.[8]

ஆனால் உங்கள் சொந்த ஆவிக்குரிய அனுபவத்தின் அடிப்படையில் இல்லாத ஆதாரங்களை நீங்கள் விரும்பினால் என்ன செய்வது? மற்ற மதங்களில் உள்ளவர்களுக்கும் ஆவிக்குரிய அனுபவம் உண்டு, ஆனால் அவர்களின் அனுபவம் சத்தியத்தின் அடிப்படையில் இல்லை. நமது அனுபவம் சத்தியத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதை எப்படி அறிந்து கொள்வது?

► வேதாகமம் சொல்லும் காரியங்கள் துல்லியமானது என்பதற்கு ஆதாரம் உள்ளதா?

வேதாகமம் நாற்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டது, அவர்களில் பெரும்பாலானோர் 1,500 ஆண்டுகளுக்கும் மேலாக மற்றவர்களுடன் அறிமுகம் இல்லாதவர்கள். அத்தகைய புத்தகத்தில் நாம் பொதுவாக என்ன எதிர்பார்க்கிறோம்? அதில் எல்லாவிதமான தவறுகளும் முரண்பாடுகளும் இருக்கும் என்று நாம் கருதுவோம். ஆனால் வேதாகமத்தைப் பற்றிய பின்வரும் உண்மைகளைக் கவனியுங்கள். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான பூகோள தளங்கள் அமைந்துள்ளன; வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான வரலாற்று நிகழ்வுகள் மற்றும் தனிநபர்கள் வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்; எந்த ஒரு கண்டுபிடிப்பும் வேதாகம அறிக்கையை மறுத்ததில்லை; மற்றும் வேதாகமம்

---

[7] எபேசியர் 6:17-ஐ வாசிக்கவும்.
[8] சங்கீதம் 119:1-2-ஐ வாசிக்கவும்.

ஒருபோதும் முரண்படுவதில்லை. இதுபோன்ற உண்மையான கூற்றுகள் இதுவரை எழுதப்பட்ட வேறு எந்த புத்தகத்திலும் இல்லை. தேவனால் ஏவப்பட்டதாக வேதாகமம் கூறுவதை சான்று ஆதரிக்கிறது.

தேவனுடைய வார்த்தை என்று வேதாகமத்தின் கூற்றை ஆதரிக்கும் ஆதாரங்களை ஆறு குறிப்புகளில் சுருக்கமாகக் கூறலாம். வேதாகமம் உண்மையிலேயே தேவனுடைய வார்த்தை என்பதை நாம் அறிவோம், ஏனெனில்:

- ஆயிரக்கணக்கான வேதாகம உண்மைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
- வேதாகமத்தின் எந்த அறிக்கையும் மறுக்கப்படவில்லை.
- வேதாகமம் தன்னில்தானே முரண்படவில்லை.
- சுவிசேஷம் அதன் விளைவுகளால் நிரூபிக்கப்படுகிறது.
- தேவனுடைய ஆவியானவர் வேதாகமம் மூலம் பேசுகிறார்.
- தேவனோடுள்ள நம் உறவில் வேதாகமம் வழிநடத்துகிறது.

**ஏவுதலை வரையறுத்தல்**

► *வேதாகமம் ஏவப்பட்டது என்றால் என்ன அர்த்தம்?*

சில நேரங்களில் ஜனங்கள் சிறந்த யோசனைகளைக் கொண்டிருக்கும்போது அவர்கள் ஈர்க்கப்பட்டதாக உணர்கிறார்கள், ஆனால் வேதாகமம் தேவனால் ஏவப்பட்டதாகக் கூறும்போது அதைவிட அதிகமான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது.

> வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்

> பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது *(2 தீமோத்தேயு 3:16).*

"தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்ற சொற்றொடர் "தேவனால் சுவாசிக்கப்பட்டது" என்று பொருள்படும். வேதாகமம் மனிதக் கைகளிலிருந்த பேனாக்களிலிருந்து பாய்ந்தாலும், வேதாகமம் தேவனிடமிருந்து வந்தது என்பதே இந்த வசனத்தின் வலியுறுத்தல். வேதாகமம் தேவனிடமிருந்து வந்ததால், அது உபதேசம் போன்றவற்றிற்கு நம்பகமானது. மனிதர்கள் செய்யக்கூடிய சிறந்ததை விட இது சிறந்தது.

> வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் *(2 பேதுரு 1:20-21).*

2 பேதுருவில் உள்ள இந்த வசனங்கள், எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியால் கொண்டு செல்லப்பட்டனர் என்று சொல்லர்த்தமாக கூறுகின்றன. அவர்களின் துல்லியம் அவர்களின் சொந்த அறிவைப் பொறுத்தது அல்ல. அவர்கள் எழுதப்பட்டதில் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டது அல்லது கொண்டுச் செல்லப்பட்டது என்பதாகும், எழுத்தின் நம்பகத்தன்மை இறுதியில் தேவனைச் சார்ந்தது என்பதைக் காட்டுகிறது. வேதாகமம் தேவனைப் போலவே நம்பகமானது.

ஏவப்படுதல் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட வேலை, அதில் தேவன் தன்னை வெளிப்படுத்தினார் மற்றும் அந்த வெளிப்பாட்டை எழுத்து வடிவத்திற்கு கொண்டு வந்தார். வேதாகமம் ஏவப்படுதலின் இறுதி தயாரிப்பு. வேறு எந்தப் புத்தகத்தையும் போலில்லாமல் வேதாகமம் தேவனால் ஏவப்பட்டதாய் இருக்கிறது. வேதாகமத்தின் ஏவப்படுதலின் அர்த்தம், அது முற்றிலும் அதாவது பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் கூட தேவனின் வார்த்தை என்பதாகும்.

## ஏவப்படுதல் எப்படிப்பட்டதாக இருந்தது?

► வேதாகம எழுத்தாளர்கள் தாங்கள் எழுதுவதற்கு முன்பே தேவனுடைய சத்தியத்தைப் பெற்ற சில வழிகள் யாவை?

ஏவப்படுதல் எப்படி வேலைச் செய்தது என்பது குறித்து சில நேரங்களில் ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். தேவன் எவ்வாறு தம்முடைய சத்தியத்தைத் தெரிவித்து, அது துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தினார்? தேவனுடைய வெளிப்பாட்டின் பாணியைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய முதல் உண்மை என்னவென்றால், அது பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளது என்பதாகும். அவர் ஒரு குறிப்பிட்ட முறைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவர் அல்ல.[9]

சில சமயங்களில் தேவன் மோசேயிடம் பேசுவது போல் கேட்கக்கூடிய சத்தத்தில் பேசினார்.[10] மற்ற நேரங்களில் அவர் சொப்பனங்கள் அல்லது தரிசனங்களைக் கொடுத்தார், எழுத்தாளர் அவற்றை விவரித்தார்.[11] தேவனிடமிருந்து நேரடியாக அச்சிடப்பட்ட வேதாகமத்தின் பகுதி இஸ்ரவேலுடன் "தேவனுடைய விரலால் எழுதப்பட்ட" உடன்படிக்கையாக இருக்கலாம்.[12] வேதாகமத்தின் மற்ற பகுதிகள் எழுதுவதற்கு எடுத்துக்கூறப்பட்டதாகத் தெரிகிறது, ஏனென்றால்

> "எனவே பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வேதம் தெய்வீக சத்தியத்தின் மிகவும் உறுதியான மற்றும் விலைமதிப்பற்ற அமைப்பாகும். அதன் ஒவ்வொரு பகுதியும் தேவனுக்குத் தகுதியானது; மற்றும் அனைத்தும் ஒன்றாக ஒரு முழு சரீரம், எந்த குறைபாடும் இல்லை, மிகை இல்லை. இது பரலோக ஞானத்தின் ஊற்று, அதைச் சுவைக்கக் கூடியவர்கள், அதை மனிதர்களின் எல்லா எழுத்துக்களையும் விட மேலாக விரும்புகிறார்கள், அவர்கள் ஞானியாக இருந்தாலும் சரி, கற்றவராக இருந்தாலும் சரி, பரிசுத்தமாக இருந்தாலும் சரி."
> - *John Wesley, Explanatory Notes on the New Testament* இல் எழுதப்பட்ட முகவுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

[9] எபிரெயர் 1:1-ஐ வாசிக்கவும்.
[10] யாத்திராகமம் 33:11
[11] தரிசனத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதற்கான எடுத்துக்காட்டுகளுக்கு, தானியேல் 7 மற்றும் 8 ஆம் அதிகாரங்கள் மற்றும் வெளிப்படுத்துதல் புத்தகத்தின் பெரும்பகுதியைப் பார்க்கவும்.
[12] உபாகமம் 9:10

யாத்திராகமம், லேவியராகமம் மற்றும் எண்ணாகமங்களில் உள்ள முக்கிய பகுதிகள், "கர்த்தர் மோசேயிடம் பேசினார்," என்கிற கூற்றுக்குப் பிறகு வருகிறது.

ஏவப்படுதல் என்பதன் அர்த்தம் தேவன் எழுத்தாளரிடம் கேட்கக்கூடிய சத்தத்தில் தமது வார்த்தைகளைப் பேசினார் என்று அர்த்தமல்ல. காரணம், பல்வேறு எழுத்தாளர்களிடையே ஆளுமை மற்றும் அவர்களின் எழுத்து நடைகளில் வேறுபாடுகளைக் காண்கிறோம். உதாரணமாக, பவுலின் பாணி பேதுருவிடமிருந்து மிகவும் வித்தியாசமானது. ஏவப்படுதல் பற்றிய நமது பார்வையில், மனித எழுத்தாளர்களின் ஆளுமைகள், சொற்களஞ்சியம், எழுத்து நடைகள், கல்வி மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆகியவற்றை தேவன் பயன்படுத்தினார் என்பதை உட்படுத்தியதாகும்.

ஏவப்படுதலின் சரியான பார்வை என்னவென்றால், தேவன் மனித எழுத்தாளரின் கற்பனை மற்றும் ஆளுமையைப் பயன்படுத்தி தெய்வீக சத்தியத்தை வெளிப்படுத்த, சத்தியத்தை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், முழுமையானதுல்லியத்தை வழங்க எழுதும் செயல்முறையை மேற்பார்வையிடவும், முழு நபரையும் ஏவினார்.

தேவன் தான் தொடர்பு கொள்ள விரும்பும் கருத்துக்களைக் கொடுத்தார் என்றும், மேலும் மனித எழுத்தாளர் தன்னால் முடிந்தவரை அவற்றை விளக்கினார், தவிர்க்க முடியாமல் மனித தவறுகளை விவரங்களில் செய்தார் என்று சிலர் நினைக்கிறார்கள். ஏவப்படுதல் பற்றிய வேதாகமத்தின் விளக்கத்திற்கு அந்தப் பார்வை பொருந்தவில்லை. வேதாகமம் ஆசிரியர்களை பரிசுத்த ஆவியானவரால் அவர்களின் எழுத்தில் "உடன் கொண்டுச் செல்லப்பட்டதாக" விவரிக்கிறது, எனவே அவர்கள் சொந்தமாக எழுதுவதற்கு விட்டுவிடவில்லை என்றும், அதனால் அவர்கள் தவறு செய்யவில்லை என்பதையும் நாம் அறிவோம்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதால், தேவன் தவறு செய்யாதவராகையால் அது தவறு என்று எதுவும்

*குறிப்பிட்டுச் சொல்லவில்லை.*[13] *வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வரலாற்றில் தேவன் தம்மை வெளிப்படுத்தியிருப்பதால், தேவனைப் பற்றிய நம்பகமான வெளிப்பாட்டைப் பெறுவதற்கு விவரங்கள் துல்லியமாக இருக்க வேண்டும். எனவே, ஏவப்படுதல் பற்றிய வேதாகம விளக்கத்தின் காரணமாக, அது முற்றிலும் துல்லியமாக இருக்கும்படி தேவன் எழுதுவதை வழிநடத்தினார் என்பதை நாம் அறிவோம்.*

## வேதாகமத்தின் முழுத் துல்லியத்தைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் வார்த்தைகள்

### ***ஏவப்பட்டது***

*வேதாகமம் ஏவப்பட்டது என்றால் அது தேவனின் வார்த்தை, அவருடைய வெளிப்பாட்டால் கொடுக்கப்பட்டது என்று அர்த்தம்.*[14] *இந்த வார்த்தை முதலில் வேதாகமத்தின் முழு நம்பகத்தன்மையையும் துல்லியத்தையும் உறுதிப்படுத்த போதுமானதாக இருந்தது, ஆனால் இப்போது வேதாகமம் ஏவப்பட்டதாக நம்பும் சிலர் அது முற்றிலும் துல்லியமானது என்பதை மறுக்கிறார்கள். ஏவப்படுதலின் அத்தியாவசிய அம்சங்களைப் பாதுகாக்க பின்வரும் சொற்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.*

### ***தவறில்லாதது***

*இந்த வார்த்தையின் அர்த்தம் "தவறே இழைக்க முடியாது" என்பதாகும். வேதாகமம் தவறில்லாதது என்று நாம் கூறும்போது, அது நம்பக்கூடியது என்றும் நம்மை ஒருபோதும் தவறாக வழிநடத்தாது என்றும் அர்த்தம். வேதாகமம் அதன் உபதேச அறிக்கைகளில் மட்டுமல்ல, அது வெளியிடும் ஒவ்வொரு அறிக்கையிலும் தவறில்லாததாக இருக்கிறது.*

---

[13] *நீதிமொழிகள் 30:5-ஐ வாசிக்கவும்.*
[14] *2 தீமோத்தேயு 3:16-ஐ வாசிக்கவும். "ஏவப்பட்டது" என்பது தேவனுடைய வாயிலிருந்து வந்த வேதம் "மூச்சு" என்று அர்த்தம்.*

### *பிழையில்லாதது*

*இந்த வார்த்தைக்கு "பிழை இல்லாமல்" என்று பொருள். வேதாகமம் ஒவ்வொரு அறிக்கையிலும் துல்லியமாக இருக்கிறது. தேவன் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார் அல்லது தவறு செய்யமாட்டார்*[15] *மற்றும் வேதாகமம் தேவனின் வார்த்தை என்பதால், அது பிழையில்லாதது என்பதை நாம் உறுதியாக நம்பலாம். வேதாகமத்தை எழுதுவதில் மனிதர்கள் ஈடுபட்டதால் அதில் தவறுகள் இருக்கலாம் என்று ஒருவர் கூறினால், அவர் 2 பேதுரு 1:20-21ல் உள்ள ஏவப்படுதலின் விளக்கத்தை மறந்துவிடுகிறார்: எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியால் "உடன் கொண்டுச் செல்லப்பட்டனர்". ஏவப்படுதல் பற்றிய வேதாகம, வரலாற்றுக் கண்ணோட்டம் என்னவென்றால், முழு வேதாகமமும் ஏவப்பட்டு, அதன் ஒவ்வொரு வார்த்தைகளும் கூட, பிழை இல்லாமல் உள்ளது என்பதாகும்.*[16]

### *பிரதி எடுப்பதில் ஏற்படும் பிழைகள் பற்றி என்ன?*

*இயந்திர அச்சிடுதல் இருப்பதற்கு முன்பு, வேதம் கையால் பிரதி எடுக்கப்பட்டது. பவுல், ஏசாயா அல்லது மோசே எழுதிய அசல் கையெழுத்துப் பிரதிகள் நம்மிடம் இல்லை. கிரேக்க மற்றும் எபிரேய மொழிகளில் உள்ள ஆயிரக்கணக்கான பழங்கால, கைகளால் எழுதப்பட்ட பிரதிகளில், சிறிய வேறுபாடுகள் உள்ளன, மேலும் சரியான அசல் வார்த்தைகள் என்ன என்பதை நாம் எப்போதும் அறிய முடியாது. இருப்பினும், வேறுபாடுகள் மிகவும் சிறியவை, அவற்றின் காரணமாக எந்த உபதேசமும் கேள்விக்குரியதாக இல்லை. மூலப் பிரதிகள் பிழையற்றவை என்பதை நாம் அறிந்திருப்பதாலும், பிரதிகளில் உள்ள வேறுபாடுகள் மிகச் சிறியதாக இருப்பதாலும், வேதாகமம் கூறும் ஒவ்வொரு அறிக்கையையும் நம்பலாம் என்பதை நாம் அறிவோம்.*

---

[15] *தீத்து 1:2-ஐ வாசிக்கவும்.*
[16] *மத்தேயு 5:18-ஐ வாசிக்கவும்.*

► வேதாகமம் பலமுறை கைகளால் எழுதப்பட்டு பிரதி எடுக்கப்பட்டாலும் துல்லியமானது என்பதை நாம் எப்படி அறிவது?

► வேதாகமத்தில் பிழைகள் இருப்பதாக சிலர் நினைக்கும் பல்வேறு காரணங்கள் என்ன?

### வேதாகமத்தில் பிழைகள் இருப்பதாக சிலர் ஏன் நினைக்கிறார்கள்?

சில சமயங்களில் வேதாகமம் பிழைகளைக் கொண்டிருப்பதாக ஜனங்கள் கூறுகின்றனர். வேதாகமத்தின் தன்மையை அவர்கள் புரிந்து கொள்ளாததே இதற்குக் காரணம்.

வேதாகமம் பொதுவான மனித தொடர்புகளைப் பயன்படுத்தியது. உதாரணமாக, வானத்தில் சூரியன் நகர்வதைக் குறிப்பிடும் ஒரு வசனம் உள்ளது. சூரியனைக் காட்டிலும் பூமிதான் சுழல்கிறது என்பதை நாம் அறிவோம். ஆனால் விஞ்ஞானிகள் கூட சூரியன் உதயமாகி மேலே வருவது மற்றும் மாலையில் மறைவது பற்றிப் பேசுகிறார்கள். அது பிழையல்ல; அது நாம் பார்க்கும் விதத்தை எளிமையாக விவரிக்கிறது.

"குன்றுகள் ஆட்டுக்குட்டிகளைப் போலத் துள்ளியது" அல்லது "மரங்கள் கைதட்டின" போன்ற கவிதை அறிக்கைகளும் உள்ளன. இது இலக்கியத்தின் ஒரு பாணி, அது எழுத்தியல் பூர்வமானது அல்ல.

எழுத்து நடையில் வேறுபாடுகள் உள்ளன. ஏவப்படாத நபர்கள் உட்பட பிற எழுத்தாளர்களின் மேற்கோள் உள்ளது. ஏவப்படுதலின் உபதேசத்திற்கு அதெல்லாம் எந்த பிரச்சனையும் இல்லை. இறுதி வடிவம் அவருடைய வார்த்தையாக இருப்பதை உறுதிசெய்ய தேவன் எழுதும் செயல்முறையை வழிநடத்தினார்.

சில நேரங்களில் ஜனங்கள் வேதாகமத்தில் ஒரு முரண்பாட்டைக் காண்பதாக நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் அதை மிகவும் கவனமாகப் பார்க்க வேண்டும். உதாரணமாக, லூக்கா 8:26-27 மற்றும் மாற்கு 5:1-2 ஆகியவை

இயேசுவால் விடுதலையாக்கப்பட்ட ஒரு பிசாசு பிடித்த மனிதனைப் பற்றி நமக்குக் கூறுகின்றன. மத்தேயு *8:28*, உண்மையில் இரண்டு பிசாசு பிடித்த மனிதர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று கூறுகிறது. அது முரண்பாடு அல்ல. லூக்காவும் மாற்கும் ஒரே ஒரு மனிதன் என்று சொல்லவில்லை. அவர்கள் அந்த பகுதியில் ஒரு வரலாற்றைக் கொண்ட ஒரு மனிதனை மையமாகக் கொண்டு அவர்கள் அதைக் குறிப்பிட்டுள்ளனர். ஒருவர் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும் வேதாகமத்தில் உள்ள கூற்றுகளைக் கண்டால், அவர் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வராமல், சந்தர்ப்பச் சூழலைப் புரிந்துகொள்ள நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

## கிறிஸ்தவர்களுக்கான வேதாகமம்

► *கிறிஸ்தவர்கள் வேதாகமத்தைப் பயன்படுத்த வேண்டிய சில வழிகள் யாவை?*

வேதாகமம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை வழங்குகிறது. நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்காது, ஆனால் நாம் எப்படி வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அது நமக்குக் காண்பிக்கிறது. தேவனுடைய நியாயப்பிரமாணம் தேவனுடைய இயல்பைக் காட்டுகிறது. நாம் தேவனைப் போல இருக்க விரும்புவதால் அதை நாம் பின்பற்ற வேண்டும். நாம் கடவுளை நேசிப்பதால், அவருடைய நியாயப்பிரமாணத்தை நேசிக்க வேண்டும். சங்கீதம் *119*, தேவனை ஆராதிப்பவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் எவ்வாறு மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதை விவரிக்கிறது. தேவனை நேசிப்பவர் தேவனின் விருப்பத்திற்கு ஏற்ப தனது இருதயத்தை மாற்ற தேவனிடம் ஜெபம் செய்வார். தேவனை நேசிப்பவர்

> "கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் பூமியில் வசித்ததிலிருந்து, இரட்சிப்புக்குத் தேவையான எதுவும் பரிசுத்த வேதாகமத்தில் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்று நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம்."
> *- James Arminius, "Disputation on the Perfection of the Scriptures"* என்பதிலிருந்து எடுக்கப்பட்டது.

*தேவனைப் பிரியப்படுத்துவதில் அக்கறையில்லாமல் இருப்பது சாத்தியமில்லை.*

*தேவனுடைய வார்த்தை ஒளியாயிருக்கிறது. உலகம் ஆவிக்குரிய இருளில் உள்ளது என்றும், நாம் செல்ல வேண்டிய வழியை வழிநடத்துவதற்கு தேவனுடைய வார்த்தையே வெளிச்சம் என்றும் அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார்.*[17] *ஒரு நபர் தேவனுடைய வார்த்தைக்கு முரணான கருத்துக்களை அல்லது உணர்வுகளை ஒருபோதும் பின்பற்றக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரை வேதாகமம் தவறு என்று சொல்லும் காரியத்தைச் செய்ய ஒருபோதும் வழிநடத்தமாட்டார்.*

*தேவனுடைய வார்த்தையே நமது ஆவிக்குரிய உணவு. நல்ல பசி ஆரோக்கியத்தின் அடையாளம், ஒரு குழந்தை பாலை விரும்புவது போல ஒரு கிறிஸ்தவர் தேவனுடைய வார்த்தையை விரும்புவார்.*[18] *ஒரு கிறிஸ்தவர் முதிர்ச்சியடையும் போது, ஒரு குழந்தை திட உணவை உண்ணக் கற்றுக்கொள்வது போல, தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொண்டு ஜீரணிக்க முடிகிறது.*[19] *ஒரு கிறிஸ்தவர் தினமும் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு ஆவிக்குரிய ரீதியில் உணவளிக்க வேண்டும்.*

*வேதாகமம் சாத்தானுக்கு எதிரான நமது பாதுகாப்பு. ஆவிக்குரிய சர்வாயுத வர்க்கத்துடன் நம்மைச் தயார்ப்படுத்திக்கொள்ளக் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்காக பயன்படுத்தும் பட்டயம் தேவனுடைய வார்த்தை.*[20] *இயேசு பிசாசின் சோதனைகளுக்கு வேதத்தின் மூலம் பதிலளித்தார்.*[21]

*தேவனுடைய வார்த்தை நம் பதிலுக்கு அழைப்பு விடுக்கும் சத்தியமாக இருக்கிறது. இயேசு அதை விதைக்கப்பட்ட*

---

*[17] 2 பேதுரு 1:19-21; சங்கீதம் 119:105-ஐ வாசிக்கவும்.*
*[18] 1 பேதுரு 2:2*
*[19] 1 கொரிந்தியர் 3:2*
*[20] எபேசியர் 6:17*
*[21] மத்தேயு 4:3-4*

*விதைகளுக்கு ஒப்பிட்டார்.*[22] *நிலத்தை பண்படுத்தாததால் சில விதைகள் சரியாக விளையவில்லை. நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, அதன் சத்தியத்திற்கு நாம் பதிலளிக்க வேண்டும் மற்றும் அவருடைய வார்த்தையின் மூலம் நம் வாழ்விலிருந்து பலனைக் கொண்டுவரும்படி தேவனிடம் ஜெபிக்க வேண்டும்.*

**வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்கிறபடியினால்...**

- *இது ஒருபோதும் காலாவதியானதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ இருக்காது. எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் எல்லா மக்களுக்கும் இது பொருந்தும்.*
- *தேவனுடைய விருப்பத்தை பகுத்தறிவதற்கான வழிகாட்டியாக இது உள்ளது, ஏனெனில் தேவன் ஒருபோதும் தமக்குத்தாமே முரண்படமாட்டார் அல்லது அவரது மனதை மாற்றிக்கொள்ளமாட்டார்.*
- *வாழ்க்கையில் சிறந்ததைப் பெறுவதற்கு இது நமது வழிகாட்டியாகும், ஏனென்றால் நம்மைப் படைத்த தேவன் அதை நமக்கு வழிகாட்டுதலுக்காக கொடுத்திருக்கிறார்.*
- *இரட்சிக்கப்படுவதற்கும் தேவனோடு உறவில் நடப்பதற்கும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தும் இதில் உள்ளன.*

*போதகர்களிடமிருந்தும் திருச்சபை பாரம்பரியத்திலிருந்தும் நாம் கற்றுக்கொண்டாலும், வேதத்திற்கு முரணான எந்த கருத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது, ஏனெனில் அதுவே முடிவான அதிகாரமுள்ளது.*

*பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை நம் புரிதலுக்காக வெளிச்சம் தந்து, அதற்குக் கீழ்ப்படியும்படி நம்மை வழிநடத்துகிறார்.*

---

[22] *லூக்கா 8:11-15*

► தேவன் இன்றும் பேசுகிறார், ஆனால் அதற்காக வேதாகமத்தில் எதையும் சேர்க்க முடியும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டுமா?

## வேதாகமம் முடிவுற்றதா?

கடைசி அப்போஸ்தலன் மரித்த காலத்திலிருந்து, திருச்சபை வேதாகமத்தை ஒரு நிறைவுற்ற புத்தகமாகக் கருதுகிறது. திருச்சபை வேதத்தை அமைக்க வெறும் எழுத்துக்களைத் தேர்ந்தெடுக்கவில்லை; அதற்குப் பதிலாக, சில எழுத்துக்கள் தேவனால் ஏவப்பட்டு வேதப்பூர்வ அதிகாரம் பெற்றவை என்பதை அவர்கள் உணர்ந்தனர். வேதாகமமாக அங்கீகரிக்கப்பட்ட எழுத்துக்கள் பிற்கால வேறே எந்த எழுத்துக்களும் சந்திக்க முடியாத தகுதிகளை அடைந்தன.

பழைய ஏற்பாட்டு புத்தகங்களுக்கு, திருச்சபையானது இஸ்ரேல் பாதுகாத்த எழுத்துக்களை வேதமாக வைத்திருந்தது. புதிய ஏற்பாட்டு வேதம் பின்வரும் தகுதிகளால் அங்கீகரிக்கப்பட்டது: அப்போஸ்தலருடனான வரலாற்று பிணைப்பு, சுய-அங்கீகரித்தல் தரம், ஒருமனதாக திருச்சபை ஏற்றுக்கொள்வது, பழைய ஏற்பாட்டின் கனத்திற்குரிய பயன்பாடு மற்றும் தவறான மதங்களுக்கு எதிரான கொள்கையை எதிர்ப்பதில் உள்ள பயன்பாடு.

தேவன் இன்னும் பேசுகிறார், ஆனால் இப்போது வேதாகமத்தில் ஏதாவது சேர்க்க முடியுமா? எந்த ஒரு புதிய எழுத்தும் மூல வேதாகமத்தில் சேர்ப்பதற்கான தகுதிகளை பூர்த்தி செய்ய இயலாது. உதாரணமாக, அப்போஸ்தலர்கள் இன்னும் நம்மிடம் இல்லாததால், புதிய எழுத்துக்களை எழுத முடியாது. எந்தவொரு புதிய எழுத்தையும் உலகெங்கிலும் உள்ள முழு திருச்சபையும் ஏற்றுக்கொள்ளாது.

வேதம் முழுமையானது மற்றும் இரட்சிப்பு மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு போதுமானது.[23] வேதத்தில் முக்கியமான மற்றும் அவசியமான எதையும் சேர்க்க முடியாது, ஏனென்றால் நமக்குத் தேவையான அனைத்தையும் அது ஏற்கனவே கொண்டுள்ளது.

---

[23] 1 தீமோத்தேயு 3:14-16

*புதிய வெளிப்பாட்டைப் பெறுவதாகக் கூறும் ஜனங்கள் அதற்குப் பதிலாக தேவன் ஏற்கனவே கொடுத்த வெளிப்பாட்டைப் படிப்பதில் நேரத்தை செலவிட வேண்டும். அவர்கள் தங்களுக்குத் தேவையான அனைத்தையும் அங்கே காண்பார்கள் மற்றும் தங்களைப் பிழையிலிருந்து பாதுகாத்துக்கொள்வார்கள்.*

## *தவிர்க்க வேண்டிய பிழைகள்*

*வகுப்புத் தலைவருக்கானக் குறிப்பு: வகுப்பின் இரு உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டிய பிழைகள் என்னும் இந்தப் பகுதியையும் சமய வழிபாட்டு முறைகளின் பிழைகள் என்னும் அடுத்த பகுதியையும் விளக்கலாம்.*

*வேதாகம அதிகாரத்தை சமரசம் செய்தல்*

*உங்கள் இறுதியான அதிகாரம் என்ன? பல கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை தங்கள் அதிகாரம் என்று கூறுவார்கள், ஆனால் அவர்கள் உண்மையில் தங்கள் சொந்த உணர்வுகளை அதிகம் நம்புகிறார்கள். ஒரு நபர் ஒரு செயலை சரி என்று சொல்வார், ஏனென்றால் அவர் அதைச் செய்யும்போது குற்ற உணர்ச்சியை உணரவில்லை. இந்த நபர் வேதாகமத்திற்குப் பதிலாக தனது உணர்வுகளை இறுதியான அதிகாரமாக ஆக்குகிறார்.*

*சில சமயங்களில் ஒருவர் மற்றவர்களால் தாக்கம் அடைவதால் வேதாகமத்தை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் மற்றவர்கள் கீழ்ப்படியாததால் அவர் கீழ்ப்படிவதில்லை என்று வேதத்தில் ஒரு கட்டளை உள்ளது. அவர் ஒரு பிரபலமான கிறிஸ்தவத்தை பின்பற்றுகிறார், ஆனால் வேதாகமக் கிறிஸ்தவம் பொதுவாக பிரபலமாக இல்லை.*

*வரையறுக்கப்பட்ட நோக்கத்துடன் வேதாகமத்தை வாசிப்பது*

*வேதாகமம் உபதேசத்தின் முதன்மை ஆதாரம். எந்தவொரு உபதேசக் கேள்விக்கும் இதுவே இறுதியான அதிகாரம். இருப்பினும், ஜனங்கள் தங்கள் உபதேசங்களுக்கு ஆதாரத்தைக் கண்டுபிடிப்பதற்காக மட்டுமே வேதாகமத்தைப்*

*படிக்கும்போது அது ஒரு பிரச்சனையாகிறது. ஆவிக்குரிய உணவுக்காக அவர்கள் வேதாகமத்தைப் பயன்படுத்துவதில்லை. வேறொருவரை எப்படித் தவறாகக் காட்டுவது என்பது பற்றி மட்டுமே அவர்கள் சிந்திக்கிறார்கள். வேதாகமத்தைக் கொண்டு நமது உபதேசங்களை வளர்த்து பாதுகாப்பது சரியானது. இருப்பினும், அதற்காக மட்டுமே நாம் வேதாகமத்தைப் பயன்படுத்தினால், தேவனுடனான நமது தனிப்பட்ட உறவில் அதைப் பயன்படுத்துவதால் வரும் மகிழ்ச்சியை இழந்துவிடுவோம்.*

*சிலர் ஊக்கமளிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே வேதாகமத்தைப் படிக்கிறார்கள். வேதாகமத்தின் நோக்கங்களில் கண்டித்து உணர்த்துதல் மற்றும் திருத்தம் ஆகியவை அடங்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வேதாகமத்தின் கட்டளைகளை நாம் புறக்கணிக்கக்கூடாது, நம்மை நன்றாக உணர வைக்கும் வாக்குறுதிகளைத் தேட வேண்டும். இன்று தேவன் உங்களுக்காக செய்ய விரும்புவது கண்டித்து உணர்த்துதல் அல்லது திருத்தமாக இருக்கலாம்.*

### *சமய வழிபாட்டு முறைகளின் பிழைகள்*

*சில மதக் குழுக்கள் வேதாகமத்தை நம்புவதாகக் கூறுகின்றன, ஆனால் அவர்கள் வேறு எதையாவது தங்களது இறுதியான அதிகாரமாக ஆக்குகிறார்கள். அவர்கள் மட்டுமே வேதாகமத்தை விளக்க முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள், வெளிப்படுத்துதல் அல்லது தங்களுக்கு மட்டுமே இருக்கும் ஒரு சிறப்பு அமைப்பைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களின் மிக முக்கியமான உபதேசங்களை வேதாகமத்திலிருந்து நிரூபிக்க முடியாது.*

*வேதாகமத்தைத் தவிர அதனோடு வேறொரு புத்தகமும் அவர்களிடம் இருக்கலாம். வேதாகமத்தில் மொழிபெயர்ப்பு மற்றும் பிரதி எடுக்கும்போதுள்ள பிழைகள் இருப்பதால் அது நம்பகமானதல்ல என்று அவர்கள் கூறலாம்.*

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக முழுமையடையவில்லை என்பதை அந்தக் கருத்துக்கள் உணர்த்துகின்றன. அந்த ஜனங்களுக்கு, வேறு ஏதோ இறுதியான அதிகாரமாக இருக்கிறது.

*வகுப்பு "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறை படிக்க வேண்டும்.*

### நம்பிக்கைகளின் அறிக்கை

வேதாகமம் தேவனுடைய வார்த்தை. எழுத்தாளர்கள் பிழையின்றி எழுதும்படி தேவன் ஏவினார். பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கும் தேவனோடு உறவாடுவதற்கும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் வேதாகமம் உள்ளடக்கியுள்ளது. வேதாகமம் நமது உபதேசத்தின் முதன்மை ஆதாரம் மற்றும் இறுதியான அதிகாரம். தேவனை நன்கு அறிந்துகொள்ளவும், வழிநடத்தப்படவும், ஆவிக்குரிய வாழ்வில் உணவைப்பெற்று வளருவதற்கு கிறிஸ்தவர் தினமும் வேதாகமத்தைப் படிக்க வேண்டும்.

### பாடம் 1 வீட்டுப்பாடங்கள்

(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.

- *சங்கீதம் 119:33-40*
- *சங்கீதம் 119:129-136*
- *நீதிமொழிகள் 30:5-6*
- *வெளிப்படுத்துதல் 22:18-19*
- *மத்தேயு 5:17-19*
- *2 தீமோத்தேயு 3:15-17*
- *2 பேதுரு 3:15-16*

*(2) தேர்வு: பாடம் 1-க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: இந்தப் பாடத்திட்டத்தின் போது குறைந்தது ஏழு முறையாவது, வகுப்பில் இல்லாதவர்களுக்கு ஒரு பாடம் அல்லது பாடத்தின் ஒரு பகுதியைக் கற்பிப்பீர்கள். இந்த போதனை திருச்சபையில் உள்ள ஒரு வகுப்பில், ஒரு வீட்டு வேத ஆராய்ச்சி குழுவில் அல்லது மற்றொரு அமைப்பில் செய்யப்படலாம். இந்த வாய்ப்புகளை உருவாக்கி உங்கள் வகுப்புத் தலைவரிடம் அறிக்கையளிப்பது உங்கள் பொறுப்பு.*

*(4) அடுத்த வகுப்பிற்கான ஆயத்தத்தில் அடுத்த பாடத்தை எப்போதும் படிக்க நினைவில் கொள்ளுங்கள்.*

### ***பாடம் 1 தேர்வு***

*(1) பொதுவான வெளிப்பாடு என்றால் என்ன?*

*(2) தேவன் எந்த வடிவங்களில் சிறப்பு வெளிப்பாட்டைக் கொடுத்துள்ளார்?*

*(3) பொதுவான வெளிப்பாட்டினால் வெளிப்படுத்தப்படாத எந்த சத்தியங்கள் சிறப்பு வெளிப்பாடு மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன?*

*(4) வேதாகமம் தனக்கென்று எதை உரிமைக் கோருகிறது?*

*(5) வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை என்பதை எந்த ஆறு காரணங்கள் காட்டுகின்றன?*

*(6) வேதாகமம் ஏன் "உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"?*

*(7) எழுத்தாளர்கள் தவறு செய்யாமல் தடுக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் ஏவுதலைப் பற்றி வேதாகமம் என்ன விளக்கத்தைக் கொடுக்கிறது?*

*(8) எவுதலுக்காக தேவன் பயன்படுத்திய சில பல்வேறு முறைகள் யாவை?*

*(9) வேதாகமம் ஏவப்பட்டது என்பதன் அர்த்தம் என்ன?*

*(10) வேதாகமம் தவறில்லாதது என்பதன் அர்த்தம் என்ன?*

*(11) வேதாகமம் பிழையற்றது என்பதன் அர்த்தம் என்ன?*

# *பாடம் 2*
# தேவனுடைய பண்புகள்

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில், மாணவர் பின்வரும் காரியங்களை விளக்க முடியும்:*

- *தேவன் பற்றிய ஒரு நபரின் கருத்து ஏன் மிகவும் முக்கியமானது.*
- *தேவன் சிருஷ்டிகர் என்ற உண்மை அவரை எல்லாவற்றிலிருந்தும் எவ்வாறு வேறுபடுத்துகிறது.*
- *தேவனுடைய பண்புகளாகிய, அவர் ஆள்தன்மையுள்ளவர், ஆவியாயிருக்கிறார், நித்தியமானவர், திரித்துவ தேவன், சர்வ வல்லமையுள்ளவர், எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கிறவர், மாறாதவர், சகலத்தையும் அறிந்தவர், பரிசுத்தமானவர், நீதியுள்ளவர், அன்பானவர் ஆகியவற்றின் அர்த்தம் என்ன என்பதை விளக்குதல்.*
- *தேவனுடைய ஒவ்வொரு பண்பும் அவருடனான நமது உறவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.*
- *தேவனுடைய இறையாண்மை பற்றிய வேதாகமத்தின் பார்வை.*
- *தேவன் பற்றிய நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) ஆராதனை முறைகளின் முக்கியத்துவத்தை தவறாகப் புரிந்துகொள்ளும் பிழையை மாணவர் தவிர்த்தல்.*

**முன்னுரை**

*ஏசாயா 40-ஆம் அதிகாரத்தை ஒன்றாகப் படியுங்கள். இந்த பகுதியில் தேவனைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும்.*

► *ஒருவருக்கு தேவன் பற்றிய சரியான கருத்து இருக்கிறதா இல்லையா என்பது ஏன் முக்கியம்?*

தேவன் யார்? ஏ. டபிள்யூ. டோசர் இந்தக் கேள்வியின் முக்கியத்துவத்தை இப்படியாகக் காண்பித்தார், "உபதேசத்தில் ஒரு பிழையோ அல்லது கிறிஸ்தவ நெறிமுறைகளைப் பயன்படுத்துவதில் தோல்வியோ இல்லை என்று நான் நம்புகிறேன், அது தேவனுடைய அபூரண மற்றும் இழிவான எண்ணங்களுக்கு இறுதியாகக் கொண்டிருக்க முடியாது."[24] கிணற்றருகில் இருந்த சமாரியப் பெண்ணிடம் இயேசு, சமாரியர்களின் ஆராதனையின் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் யாரை ஆராதிக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது என்று சொன்னார். எந்தவொரு நபரின் மிக முக்கியமான பண்பு தேவன் பற்றிய அவரது கருத்து. தேவன் பற்றிய ஒரு நபரின் கருத்து அவரது மதத்தின் அஸ்திபாரமாகும். தேவன் எப்படிப்பட்டவர் என்பதில் தவறாக இருப்பதை விட பெரிய தவறு எதுவும் இருக்க முடியாது.

தேவனை முழுவதுமாக விவரிக்க ஒப்பீடுகள் போதாது, ஏனென்றால் அவர் நமக்கு அப்பாற்பட்டவர் மற்றும் மேலே இருக்கிறார். வேதாகமம் கூட அவரைப் பற்றிய ஒரு முறையான வரையறையை கொடுக்கவில்லை, ஆனால் எல்லா இடங்களிலும் அது அவருடைய இருப்பையும் அவருடைய வல்லமையையும் விவரிக்கிறது. தேவன் எப்படி வானத்தையும் பூமியையும் படைத்தார் என்று ஆதியாகமம் சொல்கிறது; சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள்; தாவரங்கள் மற்றும் மிருக உயிரினங்கள்; இறுதியாக மனிதர்கள். வேதாகமத்தின் முதல் பாடம் மிகவும் தெளிவாக உள்ளது: தேவன் தான் அனைத்தையும் படைத்தவர். இவ்வாறு அவர் இருக்கும் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டவர், ஏனெனில் அவர் அவருடைய படைப்பின் ஒரு பகுதியாக இல்லை.

ஆனால் வேதாகமம் முழுவதும் தேவனைப் பற்றி வேறு பல அறிக்கைகள் உள்ளன. இறையியலாளர்கள் தேவனுடைய பண்புகளின் பட்டியல்களில் வேதாகம தரவுகளை கவனமாக

[24] A. W. Tozer, *The Knowledge of the Holy* (New York: Harper and Row, 1961), 10.

*தொகுத்துள்ளனர். நமது அபூரண புரிதலால் இவற்றில் நாம் ஒருபோதும் தேர்ச்சி பெற முடியாது. இருப்பினும், தேவனுடைய பண்புகளை பயபக்தியுடன் படிப்பது மதிப்புமிக்க ஆவிக்குரிய பயிற்சியாகும். இவ்வாறு தேவனைப் பற்றிய பின்வரும் கூற்றுகளை நாம் கருத்தில் கொள்கிறோம். அவை வேதாகமத்தில் அவர் தன்னை வெளிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டவை, அதனால்தான் அவை உண்மை என்பதை நாம் அறிவோம்.*

## தேவனுடைய பண்புகள்

*நாம் இங்கே உட்படுத்துவது தேவனுடைய பண்புகளின் முழுமையான பட்டியல் அல்ல, ஆனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய மிகவும் முக்கியமானவை.*

► *தேவனுடைய எந்தப் பண்புகளை நீங்கள் பட்டியலிடுவீர்கள்?*

### தேவன் ஆள்தன்மையுள்ள நபராக இருக்கிறார்

*இதன் பொருள் அவர் அறிவு, உணர்வுகள் மற்றும் சித்தத்துடன் உண்மையான, வாழும் நபராக இருக்கிறார். அவர் இயற்கையினுடைய விதிகளின் கூட்டுத்தொகை அல்லது மின்சாரம் அல்லது புவியீர்ப்பு போன்ற ஒரு ஆள்தன்மையற்ற சக்தி அல்ல. அவர் சிருஷ்டிக்கிறார், செயல்படுகிறார், அறிகிறார், விரும்புகிறார், திட்டமிடுகிறார், மற்றும் பேசுகிறார்.*

► *தேவன் ஆள்தன்மையுள்ள நபராக இல்லாவிட்டால் நமக்கு என்ன வித்தியாசம் ஏற்படும்?*

*அவர் ஆள்தன்மையுள்ள நபர் என்பதாலேயே அவருடன் நாம் உறவாட முடியும். அவர் ஆள்தன்மையுள்ள நபராக இல்லாவிட்டால், அவரிடத்தில் நாம் ஜெபிக்க முடியாது. அவர் ஆள்தன்மையுள்ள நபராக இல்லாவிட்டால், அவர் மகிழ்ச்சியடையவோ அல்லது அதிருப்தி அடையவோ முடியாது.*

### தேவன் ஆவியாயிருக்கிறார்

*"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:24).*

*அவர் ஆவியாக இருக்கிறார் என்கிற உண்மை, அவருடன் நாம் ஆவிக்குரிய ரீதியில் தொடர்புகொள்வதற்கும் அவரைத் தொழுதுகொள்வதற்கும் அடிப்படையை வழங்குகிறது. ஜெபம் மற்றும் ஆராதனையானது பொருட்களைச் சார்த்து அல்ல, குறிப்பிட்ட உடல் நிலைகள், திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி அல்லது கட்டிடம் ஆகியவற்றை சார்ந்து இல்லை. அந்த காரியங்கள் தொழுதுகொள்வதில் நம் கவனத்தைச் செலுத்த உதவக்கூடும், ஆனால் ஆராதனை அவற்றைச் சார்ந்து இல்லை.*

*தேவன் ஆவியாக இருக்கிறார் என்பது, அவரைப் பற்றிய எந்த உருவத்தையும் உருவாக்குவதை அவர் தடை செய்ததற்கு ஒரு காரணம் ஆகும்.[25] ஆவியாக, தேவன் ஒரு புலப்படும் வடிவத்தை எடுக்கத் தேர்ந்தெடுக்கும் போது தவிர[26] நமக்குக் கண்ணுக்குத் தெரியாது.[27] தேவனைப் பற்றிய நமது புரிதல் வரம்புக்குட்பட்டதாக இருப்பதால், அவர் காணக்கூடிய வடிவத்தில் தோன்றினாலும், தேவனை யாரும் முழுமையாகக் காணவில்லை என்று சொல்வது உண்மைதான்.[28]*

### தேவன் நித்தியமானவர்

*அவர் இல்லாத காலம் இல்லை, அவர் இனி இல்லாத காலமும் இல்லை; தேவனுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை. நான் இருக்கிறவராக இருக்கிறேன் என்ற பெயரில் தேவன் தன்னை வெளிப்படுத்தினார்.[29] அவர் சர்வவல்லமையுள்ளவர், இருந்தவர், வரப்போகிறவர் என்று யோவான் விவரிக்கிறார்.[30]*

---

*[25] யாத்திராகமம் 20:4-6-ஐ வாசிக்கவும்.*
*[26] 1 தீமோத்தேயு 1:17*
*[27] ஆதியாகமம் 18:1; ஏசாயா 6:1-ஐ வாசிக்கவும்.*
*[28] யோவான் 6:46; யோவான் 1:18; யாத்திராகமம் 33:20*
*[29] யாத்திராகமம் 3:14*
*[30] வெளிப்படுத்தல் 1:8*

அவர் சதாகாலங்களிலும் தேவனாக இருக்கிறார்.[31] சில மதங்கள் தங்கள் கடவுள்கள் எப்போது பிறந்தார்கள் என்பது பற்றிய கட்டுக்கதைகள் உள்ளன, ஆனால் மெய்யானத் தேவன் நித்தியமானவர்.

**தேவன் திரியேகமுள்ளவர்**

> "எல்லையற்ற மற்றும் தன்னிச்சையான இருப்பது ஒன்று இருப்பதாகவும், ஒன்றுக்கு மேற்பட்டவை இருப்பது சாத்தியமற்றது என்றும் நான் உறுதியளிக்கிறேன்; எனவே இந்த ஒரே ஒரு தேவன் எல்லாவற்றுக்கும் பிதா என்று நான் நம்புகிறேன். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர் தாம் விரும்பியவாறு மட்டும் செய்ய முடியாது என்று நான் நம்புகிறேன், ஆனால், தான் உருவாக்கிய அனைத்தையும் சுதந்திரமாக உடைமையாக வைத்திருக்கும் அல்லது" -அப்புறப்படுத்தவும், என்ன வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ளும் நித்திய உரிமையும் அவருக்கு உண்டு. மேலும் அவர் தனது சொந்த நன்மையால் வானத்தையும் பூமியையும் அவற்றில் உள்ள அனைத்தையும் படைத்தார்."
>
> - John Wesley,
> "Letter to a Roman Catholic"

திரித்துவத்தின் உபதேசம் குறித்து வேதாகமம் ஒரே ஒரு தேவன் என்று கூறுகிறது, ஆனால் மூன்று தனித்துவமான நபர்களை தேவன் என்று குறிப்பிடுகிறது. தேவன் ஒருவரே, ஆனால் அவரது இயல்பில் மூன்று நபர்கள் உள்ளனர். திரித்துவத்தை நம்மால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அது பொருத்தமற்றது அல்ல, ஏனென்றால் மூன்று இன்னும் ஒரே விஷயங்களில் ஒன்று இருப்பதாக நாம் கூறவில்லை. ஒரே ஒரு தேவன் இருக்கிறார், ஆனால் மூன்று நபர்களாக இருக்கிறார். பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகத்தின் அனைத்து பண்புகளையும் ஒன்றாகக் கொண்டிருப்பதால், அவர்கள் ஒவ்வொருவரும் மிகச்சரியாகத் தேவன் என்று அழைக்கப்படலாம் மற்றும் தேவனாக ஆராதிக்கப்படுவார்கள்.

---

[31] சங்கீதம் 90:2

### தேவன் சர்வ வல்லமையுள்ளவர்

*அவர் விரும்பியதைச் செய்ய வல்லவர். "நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; அவர் தாம் விரும்பியதைச் செய்கிறார்."[32] அவர் தனது பரிசுத்த இயல்புக்கு முரணாக ஒருபோதும் செயல்படுவதில்லை என்பதைத் தவிர அவருக்கு வரம்புகள் எதுவும் இல்லை, அவர் வாக்குறுதியளித்ததை எப்போதும் நிறைவேற்றுவார். தேவனுக்கு எதுவுமே கடினமாகவோ சவாலாகவோ இல்லை. "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்."[33]*

*► தேவன் எல்லாம் வல்லவர் என்பதை அறிவது நமக்கு என்ன மாறுபாட்டை உண்டாக்குகிறது?*

*இது ஊக்கமளிக்கிறது, ஏனென்றால் நம்முடைய போராட்டங்களுக்கு மத்தியில், அவர் "நம்மில் செயல்படும் வல்லமையின்படி நாம் கேட்பதற்கும் நினைப்பதற்கும் மேலாக மிகுதியாகச் செய்ய முடியும்"[34] என்பதை நாம் அறிவோம். விஷயங்கள் கட்டுப்பாடற்றதாகத் தோன்றினாலும், தேவனுடைய பெரிய திட்டம் நிறைவேறும் என்பதை நாம் அறிவோம். எந்த சூழ்நிலையிலும் தேவன் தலையிட முடியும் என்று நாம் நம்பிக்கையுடன் ஜெபிக்கலாம்.*

### தேவன் எங்கும் வியாபித்திருக்கிறவர்

*அவர் இல்லாத இடமே இல்லை, அவர் பார்க்காதது எதுவும் நடப்பதில்லை. "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி."[35] அவர் பிரபஞ்சத்தின் தேவன், அவருடைய வல்லமை எந்த குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு மட்டும் என மட்டுப்படுத்தப்படவில்லை. "நான் அவரைக் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர்*

---

[32] *சங்கீதம் 115:3*
[33] *வெளிப்படுத்தல் 19:6*
[34] *எபேசியர் 3:20*
[35] *ஏசாயா 66:1*

*அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்."[36] நம்முடைய சூழ்நிலைகளையும் நம்முடைய பிரச்சனைகளையும் தேவன் அறிந்திருக்கிறார் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. எவராலும் தேவனிடமிருந்து மறைக்க முடியாது, அல்லது அவர் பார்க்க முடியாத இடத்தில் பாவம் செய்ய முடியாது என்றும் அது நமக்குச் சொல்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது.[37]*

**தேவன் மாறாதவர்**

*அவர் தேவனாக மாறிய காலம் என்று ஒரு காலமும் இல்லை, அவர் தேவனாக இருப்பதிலிருந்து ஓய்ந்துவிடமாட்டார்.[38] தேவன் வளர்ச்சியின் செயல்பாட்டில் இருப்பதாக நம்பும் மதங்கள் உள்ளன, ஆனால் அவருடைய இருப்பு மற்றும் இயல்பு, மற்றும் அவரது பண்புகளிலும் நோக்கங்களிலும் தேவன் ஒருபோதும் மாறுவதில்லை என்று வேதாகமம் சொல்லுகிறது.[39] அவர் எப்போதும் சரியானதை நேசிக்கிறார், அவர் எப்போதும் தவறானதை வெறுக்கிறார். மோசேக்கு நான் இருக்கிறேன் என்று தன்னை வெளிப்படுத்திய நித்திய தேவன் இன்றைய நான் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் எல்லையற்றவர், நித்தியமானவர், அவருடைய இருப்பு, ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நன்மை மற்றும் சத்தியம் ஆகியவற்றில் மாறாதவர். அவர் எப்போதும் ஒரே மாதிரியாக மாறாதவராயிருக்கிறார் அவரது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை.[40]*

**தேவன் சகலத்தையும் அறிந்தவர்**

*"அவருடைய அறிவு அளவில்லாதது."[41] தேவனுக்கு கற்றல் செயல்முறை இல்லை, ஏனென்றால் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். தேவன் யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளவில்லை, அவருக்கு அறிவுரை சொல்ல யாரும்*

---

[36] *எரேமியா 23:24*
[37] *எபிரெயர் 4:13-ஐ வாசிக்கவும்.*
[38] *யாக்கோபு 1:17-ஐ வாசிக்கவும்.*
[39] *மல்கியா 3:6-ஐ வாசிக்கவும்.*
[40] ***சங்கீதம்** 102:27*
[41] *சங்கீதம் 147:5*

*இல்லை.*[42] *தேவன் எதிர்காலத்தை அறிந்திருக்கிறார், எனவே நடக்கும் எதற்கும் அவர் ஆச்சரியப்படுவதில்லை அல்லது ஆயத்தமில்லாதவராக இல்லை.*[43]

► *தேவன் அனைத்தையும் அறிந்தவர் என்பதை அறிவது நமக்கு என்ன மாறுபாட்டை உண்டாக்குகிறது?*

*தேவனைப் பற்றிய அறிவோடு தொடர்புடையது, சிருஷ்டிப்பிலும் குறிப்பாக இரட்சிப்பின் திட்டத்திலும் காண்பிக்கப்படும் தேவனுடைய ஞானம் ஆகும்.*[44] *அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் மற்றும் புரிந்துகொள்கிறார் என்பதால், அவர் எப்போதும் சரியானதைச் செய்ய அறிந்திருக்கிறார். தேவனுடைய விருப்பம் எப்போதும் நமக்கு சிறந்தது, ஏனென்றால் தேவன் ஒவ்வொரு சூழ்நிலையையும் முழுமையாக புரிந்துகொள்கிறார் மற்றும் ஒவ்வொரு செயலின் முடிவு என்னவாக இருக்கும் என்பதையும் அவர் அறிவார்.*

**தேவன் பரிசுத்தமுள்ளவர்**

*தேவன் தம்மைக்குறித்து முதன்மையாக பரிசுத்தமானவர் என்று விவரித்துள்ளார். ஏசாயா தீர்க்கதரிசி தேவனை "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்று திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார். தேவதூதர்கள் அவருக்கு முன்பாக "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று தொடர்ந்து கூப்பிடுகிறார்கள்.*[45] *தேவனுடைய பரிசுத்தம் ஆராதனையின் கருப்பொருளாக இருந்தது: ''மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக; அது பரிசுத்தமுள்ளது.''*[46] *அவர் அனைத்து தார்மீக பரிபூரணத்தின் முழுமையான தரநிலையைக் கொண்டுள்ளார். அவருடைய செயல்கள் எல்லா நன்மைகளின் இருப்பாலும், எல்லா தீமைகளும் இல்லாத காரணத்தாலும் குறிக்கப்படுகின்றன, மேலும் அது ஒருபோதும் வேறுவிதமாக இருக்க முடியாது. கிருபையால் முதலில் மாற்றப்படாமல்,*

---

[42] *ஏசாயா 40:13-14-ஐ வாசிக்கவும்.*
[43] *சங்கீதம் 139:4*
[44] *சங்கீதம் 104:24; ரோமர் 11:33-ஐ வாசிக்கவும்.*
[45] *ஏசாயா 6:3*
[46] *சங்கீதம் 99:3*

*சேவை செய்வதற்கும் ஆராதிப்பதற்கும் மனிதன் தகுதியற்றவன் என்பதை தேவனுடைய பரிசுத்தம் காட்டுகிறது.*[47] *நாமும் அவரைப் போலவே பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்."*[48]

> *"கர்த்தாவே, நீர் எங்களை உமக்காக உண்டாக்கினீர், அவை உம்மிடத்தில் தங்களுடைய இளைப்பாறுதலைக் காணும்வரை எங்கள் இருதயங்கள் அமைதியின்றி இருக்கும்."*
> *- ஹிப்போவின் அகஸ்டின்*

### *தேவன் நீதியுள்ளவர்*

## பாவத்தின் தோற்றம்

தேவனுடைய சிருஷ்டிப்பு பரிபூரணமானது, அவர் செய்த அனைத்தும் குறைபாடற்றவை. தேவன் சிருஷ்டிப்பை முடித்ததும், அது நல்லது என்று கண்டார்.[93] எனவே, பாவம் தேவனுடைய தவறு அல்ல என்பதை நாம் அறிவோம்.

> *"மனிதன் இயல்பிலேயே எல்லாவிதமான தீமைகளாலும் நிறைந்திருக்கிறானா? அவன் சகல நன்மைகளையும் இல்லாதவனா? அவன் முழுவதுமாக விழுந்துவிட்டானா? அவனது ஆத்துமா முற்றிலும் சிதைந்ததா? அல்லது, மீண்டும் பகுதிக்கு வர, 'அவருடைய இருதயத்தின் எண்ணங்களின் ஒவ்வொரு கற்பனையும் தொடர்ந்து தீயதா?' இதை ஒப்புக்கொள், நீங்கள் இதுவரை ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்கள். அதை மறுக்கும் போது, நீங்கள் இன்னும் ஒரு புறஜாதியாகவே இருக்கிறீர்கள்.*
> *- John Wesley,*

ஆதாமும் ஏவாளும் தேவனுடன் உறவில் இருந்தனர் அவர்கள் தேவனைப் பிரியப்படுத்த விரும்பினர் மற்றும் சரியான அனைத்தையும் செய்யும் திறனைக் கொண்டிருந்தனர். சாத்தான் ஏவாளைத் தவறு செய்யத் தூண்டினான். பிரபஞ்சத்தில் பாவம் ஏற்கனவே இருந்ததை இதன் மூலம் நாம் அறிவோம். சாத்தான் ஏற்கனவே பாவத்தில் விழுந்துவிட்டான். ஆனால் பாவம் இன்னும் மனிதகுலத்திலோ அல்லது அவர்களின் அதிகாரத்தின் கீழ் இருந்த சிருஷ்டிப்பின் பகுதியிலோ பிரவேசிக்கவில்லை.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தெரிந்தெடுக்கும் சுய விருப்பம் இருந்தது. அவர்கள் ஒரு உண்மையான தெரிவை தேர்வு செய்ய முடிந்ததால் பாவம் சாத்தியமானது. அவர்கள் தேவனுடைய கற்பனையை மீறத் தேர்ந்தெடுத்தார்கள், அதுவே மனித பாவத்தின் ஆரம்பம். பாவம் என்பது தேவன் படைத்தது அல்ல.

பாவத்தின் முதல் செயல் மனிதகுலத்தை தேவனிடமிருந்து பிரித்தது. பாவம் மனிதகுலத்தின் தன்மையையும் சிதைத்தது.[94] அதன்பிறகு பிறக்கும் எல்லா குழந்தைகளும் இந்த

---

[93] ஆதியாகமம் 1:31

[94] சங்கீதம் 51:5-ஐ வாசிக்கவும்.

*கெட்டுப்போன இயல்புடையவர்களாக இருப்பார்கள் மற்றும் பாவச் செயல்களையேச் செய்வார்கள்.*[95]

*பாவம் எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் சாபத்தைக் கொண்டுவந்தது.*[96] *பாவத்தின் காரணமாக வாழ்க்கை மாறியது. வேதனை, முதுமை மற்றும் மரணம் வரத் தொடங்கியது.*[97] *வேலையும் பிழைப்பும் கடினமாகிவிட்டது. மனித உறவுகள் மோதல்களால் நிரப்பப்பட்டன. ஆண்டுகள் கடந்து, ஜனங்கள் பெருக, பாவத்தின் விளைவுகள் ஆதாமும் ஏவாளும் கற்பனை செய்ய முடியாத அளவுக்குப் பெருகின.*

### *பரம்பரை சீரழிவு*

► *ஜனங்கள் பிறக்கின்ற போது பாவ சுபாவத்தோடு பிறப்பதை எப்படி விவரிப்பீர்கள்?*

***பரம்பரை சீரழிவு*** *என்பது மனிதனின் தார்மீக இயல்பின் சிதைவு ஆகும், இது பிறப்பிலிருந்தே அவனை பாவத்தை நோக்கி இட்டுச் செல்கிறது. இது சில நேரங்களில் "முதல் பாவம்" என்று அழைக்கப்படுகிறது. ஆதாமின் பாவத்தின் காரணமாக நாம் பிறக்கும்போது கொண்டிருக்கும் பாவ இயல்பு இது.*

*எல்லா ஜனங்களுக்கும் பிறப்பிலிருந்தே தீய குணம் இருக்கும்.*[98] *ஒரு நபரின் இயல்பு அவர் பிறக்கும்போது ஏற்கனவே ஒரு பாவப் போக்கால் சிதைந்துவிட்டது. ஒரு நபர் தேர்வு செய்யத் தொடங்கியவுடன் பாவம் செய்யத் தொடங்குகிறார். பாவப் போக்கு என்பது அவர் தனது சூழலில் இருந்து கற்றுக்கொண்ட ஒன்றல்ல.*

*தாவீது தான் துர்க்குணத்தில் உருவானதாகவும் அவரது தாய் அவரைப் பாவத்தில் கர்ப்பந்தரித்ததாகவும் கூறினார்.*[99] *அவரது தாய் தவறு செய்துவிட்டார் என்று சொல்லவில்லை. கருவில்*

---

*[95] ரோமர் 5:12, 14, 18-19-ஐ வாசிக்கவும்.*
*[96] ஆதியாகமம் 3:16-19*
*[97] 1 கொரிந்தியர் 15:22-ஐ வாசிக்கவும்.*
*[98] சங்கீதம் 58:3-ஐ வாசிக்கவும்.*
*[99] சங்கீதம் 51:5-ஐ வாசிக்கவும்.*

ஒரு குழந்தை உருவாகும் போது, அதன் இயல்பு ஏற்கனவே பாவத்தால் சிதைந்துவிட்டது என்று அவர் அர்த்தம் கொண்டார்.

கெட்டுப்போன இயல்பு காரணமாக, மனிதர்களில் தேவனுடைய சாயல் சேதமடைகிறது. ஒவ்வொரு நபரும் சுயநலம் மற்றும் பாவத்தை நோக்கி வளைந்த விருப்பத்துடன் பிறக்கிறார்கள்.[100] தேவன் நமக்கு விருப்பத்தையும் வலிமையையும் தராத வரையில் நமது விருப்பங்கள் சரியானதைத் தேர்ந்தெடுக்க சுதந்திரமாக இருக்காது.[101]

பரம்பரை சீரழிவு அகங்காரம், பொறாமை, வெறுப்பு மற்றும் மன்னியாமை போன்ற உள் பாவங்களைத் தூண்டுகிறது. பாவத்தின் செயல்களையும் தூண்டுகிறது.

ஜனங்கள் இயற்கையாகவே தேவனுடைய அதிகாரத்திற்கு எதிரான கலக மனப்பான்மையைக் கொண்டுள்ளனர் மற்றும் அவருடைய நியாயப்பிரமாணத்தின் மீது கோபப்படுகிறார்கள். பாவம் செய்தவர்கள் தங்கள் பாவச் செயல்களுக்காக மட்டுமல்ல, தேவனுக்கு எதிரான கலக மனப்பான்மைக்காகவும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.[102]

பாவ சுபாவம் கொண்டவர் இயல்பாகவே சுயநலம் கொண்டவர். தேவன் மற்றும் மற்றவர்களின் அதிகாரத்தை நம்புவதை விட அவர் தனது சொந்த விருப்பத்தை உறுதிப்படுத்தவே விரும்புகிறார். அவர் தேவனைப் பிரியப்படுத்துவதை விட தனது சொந்த ஆசைகளை திருப்திப்படுத்தவே விரும்புகிறார். அவர் தன்னம்பிக்கை கொண்டவர், தேவனைச் சார்ந்திருக்க விரும்பவில்லை. தேவனுடைய மகிமையை விட அவரது வெற்றியே அவருக்கு முக்கியம்.

ஜனங்கள் தங்கள் மனம் இருளடைந்திருப்பதால், சரி எது தவறு எது என்பதைத் துல்லியமாகப் பகுத்தறிவதில்லை.[103] இயல்பாகயே அவர்கள் கலகம் பண்ணும் உலகத்தின்

[100] பிலிப்பியர் 3:19

[101] ரோமர் 6:16-17-ஐ வாசிக்கவும்.

[102] யூதா 15-ஐ வாசிக்கவும்.

[103] எபேசியர் 4:17-18-ஐ வாசிக்கவும்.

*திசையையும், சாத்தானின் கட்டுப்பாட்டையும், தங்கள் சொந்த பாவ ஆசைகளையும் பின்பற்றுகிறார்கள்; மேலும் அவர்கள் தேவனுடைய கோபத்திற்கு ஆளாகிறார்கள்.*[104] *அவர்களின் இயல்பான போக்கு ஒவ்வொரு கணமும் பாவத்தை நோக்கியே இருக்கிறது.*[105]

*பரம்பரை சீரழிவின் அளவு இறையியலில் மொத்தமான சீரழிவு என்று விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபை ஏற்படுத்தும் வித்தியாசம் இல்லாமல், மனிதனால் எந்த நன்மையும் செய்ய முடியாது, அல்லது நல்லது செய்ய விரும்பவும் முடியாது. அவனால் மனந்திரும்பவோ தேவனைத் தேடவோ முடியாது.*[106] *அவன் "அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவன்"*[107] *என்று விவரிக்கப்படுகிறான்.*

*பரம்பரை சீரழிவுக்கு தேவனுடைய கிருபை எவ்வாறு பதிலளிக்கிறது என்பதை அறிவது முக்கியம். முதலாவதாக, தேவனுடைய வல்லமை சுவிசேஷ செய்தியுடன் வருகிறது, இழந்த நபருக்கு நற்செய்திக்கு பதிலளிக்கும் விருப்பத்தையும் திறனையும் அளிக்கிறது.*[108] *பின்னர், ஒரு நபர் இரட்சிக்கப்படும் போது, அவர் பாவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.*[109] *இருப்பினும், பரம்பரை சீரழிவின் தாக்கம் ஒரு புதிய கிறிஸ்தவரிடம் தொடர்கிறது.*

*ஒரு கிறிஸ்தவரின் பரம்பரை சீரழிவின் செல்வாக்கு பல வழிகளில் காண்பிக்கிறது.*

1. *புதிய கிறிஸ்தவர் சில சமயங்களில் சோதிக்கப்படும்போது தனது சொந்த விருப்பத்துடன் போராடுவார்.*
2. *புதிய கிறிஸ்தவர் தான் எதிர்க்க வேண்டிய தவறான நோக்கங்களை உணருவார்.*

---

*104 எபேசியர் 2:2-3-ஐ வாசிக்கவும்.*
*105 ஆதியாகமம் 6:5*
*106 யோவான் 6:44-ஐ வாசிக்கவும்.*
*107 எபேசியர் 2:1*
*108 ரோமர் 1:16-ஐ வாசிக்கவும்.*
*109 ரோமர் 6:11-14*

3. *புதிய கிறிஸ்தவர் தவறான எதிர்வினைகள் மற்றும் மனப்பான்மைகளை அவர் உணர்ந்து கொள்வதற்கு முன்பே சம்பவிக்கும்.*

*புதிய கிறிஸ்தவர் தனது விசுவாசத்தை விட்டுக்கொடுக்காதபடி ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அவர் இன்னும் தவறான நோக்கங்களுடன் போராடுவதால் அவர் இரட்சிக்கப்பட்டிருக்கிறரா என்று சந்தேகிக்கலாம்.*

*ஒரு போதகர் புதிய கிறிஸ்தவர்களுடன் பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் சொல்வதிலும் செய்வதிலும் அவர்கள் நிலையான கிறிஸ்தவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதை அவர் உணர வேண்டும். அவர்கள் தங்கள் பிரச்சினையை உடனடியாக பார்க்க மாட்டார்கள். பரம்பரை சீரழிவை சுத்திகரிப்பதற்காக ஜெபிக்க அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும், ஆனால் அவர்கள் புரிந்து கொள்ள நேரம் தேவைப்படும்.*

## ***மனப்பூர்வமாய் செய்த பாவம்***

► *மனப்பூர்வமாய் செய்த பாவம் என்றால் என்ன?*

***மனப்பூர்வமாய் செய்த பாவம்*** *என்பது தேவனுடைய அறியப்பட்ட சித்தத்தை தெரிந்தே வேண்டுமென்று மீறுவதாகும்.*[110] *ஒரு நபர் தான் செய்வது தவறு என்று தனக்குத் தெரிந்தே செய்வது அல்லது சரியென்று தெரிந்ததைச் செய்யாமல் இருப்பதைத் தேர்ந்தெடுக்கும்போது நிகழ்கிறது.*

*பாவத்தின் தன்மை இயேசுவைத் தவிர ஒவ்வொரு நபரையும் பாவச் செயல்களைச் செய்ய வழிவகுத்தது.*[111] *தன் வாழ்நாள் முழுவதும் நேர்மையாக இருந்தவர் ஒருவரும் இல்லை.*[112]

*ரோமர் 3:10-19 இல், கிருபையால் செய்யப்பட்ட வேறுபாடு இல்லாமல் தங்கள் சொந்த இயல்பைப் பின்பற்றுபவர்களைப்*

---

*[110] 1 யோவான் 3:4; யாக்கோபு 4:17-ஐ வாசிக்கவும்.*
*[111] ரோமர் 3:23-ஐ வாசிக்கவும்.*
*[112] 1 யோவான் 1:10-ஐ வாசிக்கவும்.*

*பற்றிய விளக்கம் உள்ளது. இது கிளர்ச்சி, வெறுப்பு மற்றும் அழிவு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட வாழ்க்கை.*

*துன்மார்க்கராகத் தோன்றாத சில மனமாற்றம் அடையாதவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு எதிராக அழிவுகரமான, தீங்கு விளைவிக்கும் பாவங்களைச் செய்வதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த ஜனங்களும் பாவிகளே, ஏனென்றால் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக தங்கள் சொந்த வழியில் வாழத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஜனங்கள் தங்கள் சொந்த வழியில் சென்ற ஆடுகளைப் போன்றவர்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது.*[113]

*ஒரு நபர் தனது சொந்த வழியைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமையைக் கோருவதும், அவரை வழிநடத்தும் உரிமையை சிருஷ்டிகருக்கு மறுப்பதும் பாவத்தின் சாராம்சம். இது தேவனுடைய அதிகாரத்திற்கு எதிரான கிளர்ச்சி. ஆதாம் மற்றும் ஏவாளுடைய பாவம், முதல் மனிதர்கள், அவர்கள் தங்கள் சொந்தக் கடவுள்களாக இருக்க ஆசைப்பட்டபோது நிகழ்ந்தது.கடைசி நியாயத்தீர்ப்பில், பாவிகளின் பாவச் செயல்களுக்காக நியாயந்தீர்க்கப்பட்டு, அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள்.*[114]

*மனந்திரும்பி, நற்செய்தியை விசுவாசிக்கும் ஒரு பாவி, மனப்பூர்வமாய் செய்த பாவத்தின் மீது வெற்றி பெற்று வாழத் தொடங்குகிறான். அவன் சோதனைக்கு அடிபணிந்து பாவம் செய்தால், அவன் அதற்காக மனந்திரும்பி வருவதால் மன்னிக்கப்படுவான், ஆனால் ஒரு விசுவாசியின் இயல்பான வாழ்க்கை பாவத்தின் மீதான வெற்றியாகும்.*[115]

### ***தற்செயலான மீறல்கள்***

*சில நேரங்களில் ஒரு நபர் **தற்செயலாக** அல்லது அறியாமையால் தேவனுடைய வார்த்தையை **மீறுகிறார்**.*

---

[113] *ஏசாயா 53:6*
[114] *வெளிப்படுத்தல் 20:12-14*
[115] *1 யோவான் 2:1-6, 3:3-10-ஐ வாசிக்கவும்.*

லேவியராகமம் 4:2-3 இல், ஒரு நபர் தான் தவறு செய்ததை உணரும்போது அதற்காக ஒரு பலியைச் செலுத்த வேண்டும் என்று நாம் பார்க்கிறோம். கிறிஸ்துவின் மரணம் பழைய ஏற்பாட்டு பலிகளின் இடத்தைப் பெறுவதால், கிறிஸ்தவர்கள் தற்செயலான மீறல்களிலிருந்து மீட்கப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

இவை தேவனுடைய முழுமையான தரத்தை விட குறைவாக இருக்கும் என்ற பொருளில் பாவங்கள் என்று அழைக்கப்படலாம், ஆனால் வேதாகமம் பொதுவாக பாவம் என்று அழைப்பதில்லை. அவர்களை பாவம் என்று அழைக்கும் நபர், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை வேண்டுமென்றே மீறும் மனித தவறுகளிலிருந்து வேறுபடுத்துவது கடினமாக இருக்கலாம். அவருக்கு மனித பொறுப்பு பற்றிய தவறான உணர்வு இருக்கலாம்.

தேவன் மனப்பூர்வமான மீறல்களை கண்டனம் செய்துள்ளார், ஆனால் மனித தவறுகளை அல்ல. நமது புரிதல் குறைவாக இருக்கும் வரை இவை தவிர்க்க முடியாதவை. அவர்கள் தேவனுடனான நமது உறவை முறித்துக் கொள்ள மாட்டார்கள், ஏனென்றால் அவை தேவன் மீதான நமது அன்போடு முரண்படுவதில்லை. அவர்மீது உள்ள முழுமையான அன்பு, அவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை நிறைவேற்றுகிறது என்று தேவன் சொன்னார்.[116] நமக்குத் தெரியாத காரியங்களுக்கு நாம் பொறுப்பல்ல.[117]

நாம் ஒளியில் நடக்கும்போது [நமக்குத் தெரிந்த சத்தியத்தின்படி], எல்லா பாவங்களிலிருந்தும் சுத்திகரிக்கப்படுகிறோம்.[118] கிறிஸ்துவின் பாவநிவாரணத்தில் நாம் நம்பிக்கை வைத்துள்ளதால், அறியப்படாத மீறல்கள் தேவனுடனான நமது உறவை முறித்துவிடும் என்று நாம் பயப்படத் தேவையில்லை.

---

[116] மத்தேயு 22:37-40; ரோமர் 13:8-10-ஐ வாசிக்கவும்.
[117] யாக்கோபு 4:17-ஐ வாசிக்கவும்.
[118] 1 யோவான் 1:7-ஐ வாசிக்கவும்.

*நாம் தற்செயலாக ஏதோ தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்ந்தால், மனந்திரும்ப வேண்டும், தேவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும், தேவன் விரும்புவதைப் போல நம் வாழ்க்கையை சரிசெய்ய வேண்டும் என்று லேவியராகமம் காண்பிக்கிறது.*

*நாம் தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது பரிசுத்த ஆவியைப் பின்பற்றும்போது, மற்ற விசுவாசிகளுடன் ஐக்கியங்கொள்ளும்போது, ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளரும்போது, நோக்கமில்லாமல் தேவனுடைய சித்தத்தை மீறும் நடத்தைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.*

► *நாம் ஏன் தேவனுடைய சித்தத்தை நன்றாக அறிந்து செய்ய வேண்டும்?*

*தேவனுடைய சித்தத்தை நாம் நன்றாகப் புரிந்துகொள்வதற்கும் அதை முழுமையாகப் பின்பற்றுவதற்கும் சில காரணங்கள் உள்ளன:*

1. *தேவனுக்குப் பிடிக்காத எதையும் செய்ய நாம் விரும்பவில்லை.*
2. *தவறான செயல்கள் வேண்டுமென்றே செய்யாமல் இருந்தாலும் அதனால் மோசமான விளைவுகள் ஏற்படும்.*
3. *கிறிஸ்தவர்களாக நாம் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.*
4. *நாம் தேவனுடைய சித்தத்தைத் தவிர்க்க முயற்சித்தால், நாம் வேண்டுமென்றே பாவம் செய்கிறோம்.*

*தேவனுடைய சித்தத்தைப் பற்றிய புரிதலில் நாம் வளரும்போது, நம் வாழ்க்கையில் தவறுகளை அவ்வப்போது அடையாளம் காண்கிறோம். நாம் செய்வது தவறு என்று உணர்ந்து, எப்படியும் அதைச் செய்யத் தேர்ந்தெடுத்தால், அது வெறும் அறியாமையால் ஏற்பட்ட பிழையாக இருக்காது. நாம் மாற மறுத்தால், அந்தத் தவறு மனப்பூர்வமாய் செய்யும் பாவமாகிவிடும்.*

## *வியாதி*

***வியாதிகள்*** *என்பது உடல் அல்லது மனதின் வரம்புகள் அல்லது குறைபாடுகள் ஆகும். ஒவ்வொரு நபருக்கும் மனித சரீர குறைபாடுகள் உள்ளன. ஆதாம் பாவத்தில் விழுந்தபடியினால், தொடர்ந்து பாவத்தின் மூலம் மனிதகுலத்தின் வீழ்ச்சியினாலும், தேவன் நம்மை வடிவமைத்ததை விட மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் பலவீனமாக இருக்கிறோம்.*

*பலவீனம் பாவம் அல்ல என்பதை நாம் அறிவோம், ஏனென்றால் இயேசுவுக்கு கூட பலவீனம் இருந்தது, ஆனால் அவருக்கு பாவம் இல்லை.[119] இயேசு மாம்சத்தில் வந்த மனித அவதாரத்தில் மனிதகுலத்தின் வரம்புகளை எடுத்துக் கொண்டார், மேலும் நாம் சோதிக்கப்படும் எல்லா வகையிலும் அவரும் சோதிக்கப்பட்டார். அவர் பசியாக இருந்தார், சோர்வடைந்தார், வேதனைப்பட்டார் என்று வேதம் கூறுகிறது. இயேசு மனித வரம்புகளை ஏற்றுக்கொண்டாலும், அவர் தனது தெய்வீக இயல்பு மற்றும் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டதால், பிதாவுக்கு வெறுப்பூட்டும் எதையும் அவர் ஒருபோதும் செய்யவில்லை.*

*அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய பலவீனம் தேவனுடைய வல்லமையைக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக இருந்தது என்று மகிழ்ச்சியடைந்தார், ஆனால் அவர் பாவத்தைப் பற்றி பேசவில்லை என்பதை நாம் அறிவோம், ஏனென்றால் அவர் தனது வாழ்க்கையில் தொடர்ந்து பாவம் செய்வதைப் பற்றி அவர் மகிழ்ச்சியடைய மாட்டார்.[120]*

*நாம் சரீரத்தில் இருக்கும் வரை நமக்கு உடல் ஊனம் இருக்கும். நமது புரிதலின் வரம்புகள் மனித தவறுகளை தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது. உடல்நலக்குறைவு வேண்டுமென்றே பாவத்தை ஏற்படுத்தாது. நாம் பாவம் செய்யத் தேர்ந்தெடுத்தால், நாம் குற்றமுள்ளவர்கள் மற்றும் நமது மனித இயல்பைக் குறை கூற முடியாது. தேவன் நம்மை மனிதனாக இருப்பதற்காக*

*[119] எபிரெயர் 4:15-ஐ வாசிக்கவும்.*
*[120] 2 கொரிந்தியர் 12:9-10-ஐ வாசிக்கவும்.*

நியாயந்தீர்க்கவில்லை, மாறாக நம் விருப்பங்களை அவருக்கு எதிராக அமைப்பதற்காக நியாயந்தீர்க்கிறார்.

► மனப்பூர்வமாய் செய்யும் பாவத்தை தற்செயலான மீறல்களிலிருந்து வேறுபடுத்துவது ஏன் முக்கியம்?

## தவிர்க்க வேண்டிய பிழை: மனப்பூர்வமாய் செய்த பாவத்தின் தெளிவற்ற வரையறை

*சிலர் மனப்பூர்வமாய் செய்த பாவம், பரம்பரை சீரழிவு, தற்செயலான மீறல்கள் மற்றும் பலவீனம் அனைத்தையும் ஒன்றாக இணைத்து, எந்த வேறுபாடும் இல்லாமல் "பாவம்" என்று அழைக்கிறார்கள்.*

*ஒரு பாவி தன் பாவங்களுக்காக வருந்தும்போது, அவற்றை விட்டுவிடத் தயாராக இருப்பான். அதாவது, அவர் மனப்பூர்வமாய் செய்த பாவத்திற்காக மனந்திரும்புகிறார், ஏனென்றால் அது தான் தேவனுடைய வல்லமையால் ஏற்படும் சித்தத்தின் மாற்றம்.*

*மனப்பூர்வமாய் செய்யும் பாவத்தை மற்ற வகைகளிலிருந்து வேறுபடுத்திப் பார்த்தால், ஒரு விசுவாசி பாவத்தின் மீது வெற்றி பெற்றான் என்று சொல்வதன் அர்த்தம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். வகைகளை வேறுபடுத்தாத ஜனங்கள் பாவத்தின் மீதான வெற்றி சாத்தியம் என்று நம்புவதில்லை.*

*இரட்சிப்பின் வேதப்பூர்வ விளக்கங்கள் மனித நிலையின் அம்சங்களுக்கிடையேயான இந்த வேறுபாடுகளுடன் மட்டுமே அர்த்தமுள்ளதாக இருக்கும். இரட்சிப்பைப் புரிந்து கொள்ள, நாம் பாவத்தை சரியாக வரையறுக்க வேண்டும்.*

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

## நம்பிக்கைகளின் அறிக்கை

*தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்க முதன்முதலில் உருவாக்கப்பட்ட ஜனங்களின் சுதந்திரமான முடிவிலிருந்து பாவம் உருவானது. இயேசுவைத் தவிர அனைத்து ஜனங்களும்*

*ஆதாமின் இழிநிலையை மரபுரிமையாகப் பெற்றுள்ளனர் மற்றும் பாவச் செயல்களுக்கும் குற்றமுள்ளவர்கள். மனிதத் தவறுகள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறலாம் ஆனால் தேவனுடனான நமது உறவை அது முறித்துவிடாது. ஒவ்வொரு பாவியும் கடைசி நியாயத்தீர்ப்புக்கு முன் தேவனுடைய மன்னிப்பைக் காணவில்லை என்றால் நித்தியமாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

### ***பாடம் 5 வீட்டுப்பாடங்கள்***

*(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *கலாத்தியர் 5:16-21*
- *எபேசியர் 5:1-8*
- *தீத்து 1:10-16*
- *ஜேம்ஸ் 4:1-4*
- *2 பேதுரு 2:9-17*
- *ரோமர் 1:21-32*
- *ரோமர் 3:10-20*

*(2) தேர்வு: பாடம் 5-க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

## *பாடம் 5 தேர்வு*

*(1) பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியதற்கான நான்கு காரணங்கள் யாவை?*

*(2) பாவம் தேவனின் தவறு அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்?*

*(3) பின்வருவனவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியத்தில் வரையறைத் தருக: பரம்பரை சீரழிவு, மனப்பூர்வமாய் செய்த பாவம், தற்செயலான மீறல்கள் மற்றும் வியாதிகள்.*

*(4) நாம் ஏன் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்?*

*(5) வியாதி பாவம் அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்?*

## பாடம் 6
## ஆவிகள்

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *தேவதூதர்களின் இயல்பு பற்றிய சில விவரங்கள்.*
- *விசுவாசிகளின் வாழ்க்கையில் தேவதூதர்களின் ஈடுபாடு.*
- *சாத்தான் மற்றும் பிற அசுத்த ஆவிகளின் வீழ்ச்சி.*
- *ஆவி உலகில் நிலவும் ஆவிக்குரிய மோதல்.*
- *தீய சக்திகளின் மீது தேவன் மற்றும் விசுவாசிகளின் இறுதி வெற்றி.*
- *ஆவிகள் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) மாணவர் ஆவி உலகின் மீதான தவறான ஆர்வத்தைத் தவிர்ப்பர்.*

**தேவதூதர்கள் எப்படிப்பட்டவர்கள்**

*மத்தேயு 4:1-11-ஐ ஒன்றாகப் படியுங்கள். அசுத்த ஆவிகளைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

ஜனங்கள் தேவதூதர்களைப் பற்றி பேசும்போது, முதல் கேள்வி, "தேவதூதர்கள் எப்படி இருக்கிறார்கள்?" பல கலைஞர்கள் அவற்றை விவரிக்க முயன்றனர்.

► *தேவதூதர்கள் எப்படியாக இருக்கிறார்கள்?*

தேவதூதர்களுக்கு இறக்கைகள் உண்டா? ஏசாயா பார்த்த சேராபீன்கள் ஆறு இறக்கைகள் கொண்டது.[121] உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கும்படி தேவன் மோசேயிடம் சொன்ன

[121] *ஏசாயா 6:2*

கேருபீன்களின் உருவம் இறக்கைகளைக் கொண்டிருந்தது.[122] எசேக்கியேல் கண்ட கேருபீன்களுக்கு நான்கு இறக்கைகள் இருந்தன.[123]

பொதுவாக தேவதூதர்களுக்கு இறக்கைகள் இருப்பது நமக்குத் தெரியாது. அவர்களுக்கு பயணத்திற்கு இறக்கைகள் தேவையில்லை, ஏனென்றால் அவை ஆவிகள் மற்றும் இறக்கைகளுடன் பறப்பதை விட அதிக வேகத்தில் பயணிக்கின்றன. ஆவிகளாக, அவர்களுக்கும் பௌதிக உடல் இருக்காது. தேவதூதர்களுக்கு, இறக்கைகள் தேவையற்றவை.

நாம் பார்க்கும் பெரும்பாலான கலைகளுக்கு மாறாக, தேவதூதர்களை பெண்கள் அல்லது குழந்தைகளைப் போல வேதாகமம் ஒருபோதும் விவரிக்கவில்லை. அவர்கள் ஆண் வடிவத்தில் தோன்றினர், ஆனால் மனித உணர்வில் பாலினம் இல்லை. அவர்களுக்கு திருமண உறவு, குடும்ப பந்தம் என எதுவும் இல்லை.[124] ஒவ்வொன்றும் தனித்தனியாக உருவாக்கப்பட்டவை.

தேவதூதர்கள் பொதுவாக ஜனங்களின் கண்ணுக்கு தெரியாதவர்கள், ஆனால் அவற்றிற்கு ஒரு நோக்கம் இருக்கும்போது அவை தோன்றலாம். சில நேரங்களில் ஒரு தேவதூதன் தோன்றியபோது, முதலில் அவர் ஒரு சாதாரண மனிதர் என்று ஜனங்கள் நினைத்தார்கள்.[125] மற்ற சமயங்களில் ஜனங்கள் பயந்து தரையில் விழும் அளவுக்கு தேவதூதர்கள் பிரகாசத்துடன் தோன்றினர்.[126] ஒரு தேவதூதன் ஒருவருக்கு தோன்றினால், அவர் வழக்கமாக "பயப்படாதே" என்ற வார்த்தைகளுடன் தொடங்கினார்.[127]

---

[122] யாத்திராகமம் 25:20
[123] எசேக்கியேல் 1:6, 10:15
[124] மத்தேயு 22:30-ஐ வாசிக்கவும்.
[125] ஆதியாகமம் 19:1-2
[126] மத்தேயு 28:2-4
[127] லூக்கா 1:13, 1:30, 2:10-ஐ வாசிக்கவும்.

*தேவதூதர்கள் ஆவிகளாக இருக்கிறார்கள்,[128] ஆனால் அதன் காரணமாக நாம் அவர்களை குறைந்தளவு மெய்யானவர்கள் என்று நினைக்கக்கூடாது. ஆவிகள் சரீரத்தை விட அதிக சக்தி வாய்ந்தவை என்று வேதாகமம் குறிப்பிடுகிறது.[129]*

*தேவதூதர்கள் தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்,[130] மேலும் தேவனுடைய இயல்பைக் கொண்டுள்ளனர், ஆனால் மனிதர்கள் செய்யும் அதே வழியில் இல்லை. இப்போது சக்தி மற்றும் புத்திசாலித்தனத்தில் மனிதர்களை விட தேவதூதர்கள் மிக உயர்ந்தவர்கள், ஆனால் மனிதர்கள் என்றாவது ஒரு நாள் தேவதூதர்களுக்கு மேலாக இருப்பார்கள்.[131]*

*தேவதூதர்களின் சிருஷ்டிப்புக் குறித்து ஆதியாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகப் சிருஷ்டிக்கப்பட்டார்கள், தேவன் பூமியைப் படைத்ததைக் கண்டு அவர்கள் ஆர்ப்பரித்து கொண்டாடினார்கள்.[132]*

*தேவதூதர்கள் சாவாமையுள்ளவர்கள்.[133] அவை பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே படைக்கப்பட்டன என்பதன் அர்த்தம், அனைத்து தேவதூதர்களும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து மனித வரலாற்றை அவதானித்துள்ளனர்.*

*தேவதூதர்களுக்கு ஆளுமை உண்டு. அவர்கள் பேசவும் தொடர்புகொள்ளவும் முடியும்.[134] அவர்கள் தேவனை ஆராதிக்கிறார்கள், அதாவது அவருடைய இயல்பைப் புரிந்துகொண்டு அதற்கு பயபக்தியுடன் அவர்களால் பதிலளிக்க முடியும்.[135] ஒரு பாவி மனந்திரும்பும்போது அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள், இது அவர்களுக்கு உணர்ச்சிகள்*

---

*[128] எபிரெயர் 1:14. மத்தேயு 8:16, 12:45 இல் பிசாசுகள் "ஆவிகள்" என்றும் அழைக்கப்படுகின்றன; அப்போஸ்தலர் 19:12; மற்றும் பல.*
*[129] ஏசாயா 31:3-ஐ வாசிக்கவும்.*
*[130] யோபு 1:6*
*[131] 1 கொரிந்தியர் 6:3-ஐ வாசிக்கவும்.*
*[132] யோபு 38:4-7*
*[133] லூக்கா 20:36*
*[134] லூக்கா 1:18-20*
*[135] எபிரெயர் 1:6*

இருப்பதைக் காட்டுகிறது.[136] அவர்கள் இரட்சிப்பின் திட்டத்தைப் புரிந்துகொள்வதில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள், இது அவர்களுக்கு அறிவுசார் திறன் இருப்பதைக் காட்டுகிறது.[137] இயேசுவின் பிறப்பு அறிவிப்பை கொண்டாடினார்கள்.[138]

தேவதூதர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல, ஏனென்றால் சில கேருபீன்கள் மற்றும் சேராபீன்கள் உள்ளன. தேவதூதர்களின் நிலைகளும் உள்ளன, ஏனென்றால் வேதாகமம் தேவதூதர்கள் குறித்துப் பேசுகின்றன மற்றும் குறைந்தபட்சம் ஒரு பிரதான தூதனைப் பற்றி பேசுகிறது, மேலும் "பிசாசு மற்றும் அவனுடைய தூதர்கள்" என்று குறிப்பிடுகிறது. சிங்காசனங்கள், ஆதிக்கங்கள் மற்றும் துரைத்தனங்கள் என குறிப்பிடப்படும் அதிகார அமைப்பு முறை அவர்களிடையே உள்ளது.[139]

யூத மற்றும் கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வேதத்திலிருந்து நாம் அறிந்ததைத் காட்டிலும் தேவதூதர்களைப் பற்றி அதிகம் எழுதப்பட்டிருக்கிறது,.

தேவதூதர்களுக்கு இடையிலான வேறுபாடுகளைப் பற்றி வேதத்தில் அதிகம் வெளிப்படுத்தப்படவில்லை. பிரதான தூதன் என்ற வார்த்தை வேதாகமத்தில் இரண்டு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகாவேல் ஒரு பிரதான தூதன் என்று அழைக்கப்படுகிறார், மேலும் இயேசுவின் வருகையில் ஒரு பிரதான தூதனின் சத்தம் இருக்கும்.[140] பிரதான தூதன் என்ற வார்த்தையின் அர்த்தம் "தலைமைத் தேவதூதன்" என்பதாகும். எத்தனை பிரதான தூதர்கள் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது.

ஏசாயா 6 இல் மட்டுமே சேராபீன்கள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆறு இறக்கைகள் இருந்தன. அவற்றின் இறக்கைகளைத் தவிர, அவை ஓரளவு

---

136 லூக்கா 15:10-ஐ வாசிக்கவும்.

137 1 பேதுரு 1:12-ஐ வாசிக்கவும்.


138 லூக்கா 2:13-14

139 கொலோசெயர் 1:16; எபேசியர் 6:12-ஐ வாசிக்கவும்.

140 யூதா 9; 1 தெசலோனிக்கேயர் 4:16

மனிதனாகத் தோன்றியிருக்கலாம், ஏனென்றால் அவை கைகள், கால்கள் மற்றும் முகங்களைக் கொண்டிருந்தன.

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு கேருபீன்கள் மற்றும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயம் வைக்கப்பட்டன.[141] இது தோட்டத்தை அணுக முடியாததாக இருந்தது. எசேக்கியேல் பார்த்த கேருபீன்களின் விளக்கம், நமக்குத் தெரிந்த மற்ற உயிரினங்களிலிருந்து மிகவும் வித்தியாசமானது. அவர்களுக்கு நான்கு இறக்கைகள், நான்கு முகங்கள் வித்தியாசமானவை, பல கைகள், அக்கினி போன்ற பிரகாசம், மின்னல்களின் சுடரொளியும், மின்னல் வேகமும் கொண்டிருந்தன.[142]



உடன்படிக்கைப் பெட்டியின் முனைகளில் இரண்டு கேருபீன்களின் உருவங்கள் வைக்கப்பட்டன, அவற்றுக்கிடையே கிருபாசனம் இருந்தது. வேதாகமத்தில் குறைந்தது எட்டு முறை தேவன் கேருபீன்களுக்கு மத்தியில் வாசம் பண்ணுகிறவர் என்று அழைக்கப்படுகிறார்.[143] இது அவரை இஸ்ரவேலின் தேவன் என்று அடையாளப்படுத்தியது, அவர் தேவாலயத்தில் வழிபடப்பட்டார், மேலும் அவர் வழிநடத்திய வழிகளைத் தவிர அவர் அணுக முடியாதவர் என்பதைக் காட்டுகிறது.

தேவனுடைய வல்லமையும் மகத்துவமும் அவருக்கு இருக்கும் வேலைக்காரர்களில் தெரிகிறது. கேருபீன்கள் அத்தகைய உயிரினங்கள், அவற்றில் ஒன்றை பார்க்கும் ஒருவர் தேவனைப் பார்க்கிறார் என்று நினைக்கலாம், மேலும் அதை ஆராதிக்கவும்

---

[141] ஆதியாகமம் 3:24

[142] ஆதியாகமம் 3:24

[143] எசேக்கியேல் 1:5-14, 10:15

தூண்டப்படலாம், ஆனால் அது தேவனுடைய வேலைக்காரன் மட்டுமே.

தேவனின் சமுகத்தில் பல தேவதூதர்கள் கலந்து கொண்டது அவரது மகத்துவத்தை காண்பிக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான், தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி தூதர்களின் கூட்டத்தைக் கண்டார், அதை அவர் "அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது"[144] என்று வெளிப்படுத்தினார்.

ஒரு தேவதூதனின் சக்தி வரம்பற்றது அல்ல, ஏனென்றால் தானியேலுக்கான செய்தியை எடுத்துச் செல்லும் போது ஒருவரின் மோதலால் தாமதப்படுத்தப்பட்டார் என்று நாம் படிக்கிறோம்.[145] அதேவேளையில் ஒரு தேவதூதன் 185,000 போர்வீரர்களைக் கொன்ற காலம் போன்ற எந்தப் பணிக்கும் தேவன் அவர்களுக்கு எவ்வளவுத் தேவையோ அவ்வளவு சக்தியைக் கொடுக்க முடியும்.[146]

தேவதூதர்களுக்கு வெளிப்படையாக பொறுப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இரட்சிப்பைப் பெறுபவர்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு அனுப்பப்பட்டவர்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது.[147] தேவனுக்குச் சேவை செய்யும் ஜனங்களை தேவதூதர்கள் சூழ்ந்து கொண்டு பாதுகாக்கிறார்கள்.[148] பல தேவதூதர்கள் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். குழந்தைகளுக்கு தேவதூதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இயேசு சொன்னார்.[149] பிரதான தூதனாகிய மிகாவேல் இஸ்ரேல் தேசத்தைப் பாதுகாக்கும் பிரபு என்று அழைக்கப்படுகிறார்.[150]

---

[144] வெளிப்படுத்தல் 5:11
[145] தானியேல் 10:12-13-ஐ வாசிக்கவும்.
[146] 2 ராஜாக்கள் 19:35
[147] எபிரெயர் 1:14-ஐ வாசிக்கவும்.
[148] சங்கீதம் 34:7
[149] மத்தேயு 18:10-ஐ வாசிக்கவும்.
[150] தானியேல் 12:1

*தேவதூதர்களிடம் ஜெபிக்க வேண்டும் என்று வேதாகமம் ஒருபோதும் கூறவில்லை. அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று அது ஒருபோதும் கூறவில்லை. அவர்கள் நமக்கும் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தர்கள் அல்ல. தேவதூதர்களை வழிபடுபவர்கள் மற்றும் ஆவி உலகில் தங்களுக்கு உண்மையில் புரியாத காரியங்களில் ஈடுபடுபவர்களைப் பற்றி ஒரு எச்சரிக்கை உள்ளது.[151] தேவன் விரும்பாத வகையில் நாம் தேவதூதர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தால், தேவனுடைய தூதர்களுக்குப் பதிலாக அசுத்த ஆவிகள் நமக்கு பதிலளிக்கும்.*

### சாத்தானும் விழுந்துபோன தேவதூதர்களும்

► *அசுத்த ஆவிகளின் தோற்றம் என்ன?*

*அசுத்த ஆவிகள் தேவனுக்கு எதிராக கலகம் செய்த தேவதூதர்கள் ஆவர். இது மனிதனை உருவாக்குவதற்கு முன்பே நிகழ்ந்தது, வேதாகமம் இதைப் பற்றி அதிகம் வெளிப்படுத்தவில்லை.*

*எல்லா தேவதூதர்களும் முதலில் நல்லவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் படைக்கப்பட்டனர், மேலும் வேதாகமம் அவர்களை "பரிசுத்த தூதர்கள்" என்று அழைக்கிறது.[152] சாத்தான் ஒரு கலகத்தின் தலைவன், மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர்.[153] யூதா தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களைப் பற்றி பேசுகிறார்.[154] அவர்கள் ஏற்கனவே தேவனுடைய நியாயத்தீர்ப்பால் கண்டனம் செய்யப்பட்டுள்ளனர்.[155]*

*தீர்க்கதரிசனப் புத்தகங்களில் சாத்தானின் வீழ்ச்சியைக் குறிக்கும் இரண்டு பகுதிகள் உள்ளன (ஏசாயா 14:12-17 மற்றும் எசேக்கியேல் 28:12-19). ஒவ்வொரு பகுதியும் ஒரு மனித,*

---

*[151] கொலோசெயர் 2:18-ஐ வாசிக்கவும்.*
*[152] மத்தேயு 25:31*
*[153] வெளிப்படுத்தல் 12:4*
*[154] யூதா 6*
*[155] யோவான் 16:11; 2 பேதுரு 2:4-ஐ வாசிக்கவும்.*

பூமிக்குரிய ராஜாவைப் பற்றி பேசுகிறது, பின்னர் ஒரு மனித ராஜாவிற்கும் அப்பாற்பட்ட ஒரு நபரைப் பற்றி பேசும் விஷயங்களைச் சொல்வது போல் தெரிகிறது. ஒரு ராஜாவின் வீழ்ச்சியை சாத்தானின் வீழ்ச்சியுடன் ஒப்பிடலாம்.

சாத்தான் பெருமிதம் கொண்டான், தேவனிடமிருந்து விலகி தன்னிச்சையாக இருக்கும்படிக்கு மாற விரும்பினான். ஒரு நபர் பெருமைப்பட்டு, பிசாசின் அதே கண்டனத்தில் விழக்கூடும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரித்தார்.[156] "நீங்கள் தேவர்களைப் போல் இருப்பீர்கள்" என்று ஆதாம் மற்றும் ஏவாளிடம் பிசாசு கூறியபோது கொடுத்த அதே சோதனை இதுதான். தேவனுடைய அதிகாரத்தை நிராகரித்து நீங்கள் உங்கள் சொந்த தேவனாக மாறுவதற்கான சோதனை இது.

► *சாத்தானைப் பற்றி நமக்குத் தெரிந்த சில காரியங்கள் யாவை?*

> *"பாவியின் இருதயம், கண்கள், நாக்கு ஆகியவற்றின் மீது சாத்தான் தன்னை எஜமானனாக ஆக்குகிறான். அவன் இருதயத்தை பாவத்தின் அன்பினால் நிரப்புகிறான்; அவன் கண்களை குருடாக்குகிறான், அதனால் அவனுக்கு காத்திருக்கும் குற்றத்தையும் அழிவையும் அவன் காணவில்லை; அவனுடைய நாவை அவன் ஜெபத்திலிருந்து தடுக்கிறான்.*
> - *Adam Clarke, Christian Theology, "Good and Bad Angels"*

சாத்தான் இன்னும் தேவனுக்கு எதிரான கலகத்தை வழிநடத்துகிறான். அவர் "ஆகாயத்து அதிகாரப் பிரபு"[157] என்று அழைக்கப்படுகிறான். சாத்தான் "இந்த உலகத்தின் அதிபதி" என்று அழைக்கப்படுகிறான், ஏனென்றால் இந்த உலக ஜனங்கள் பெரும்பாலும் தேவனுக்கு எதிராக கலகம் செய்கிறார்கள்.[158] அவன் உலகின் சாம்ராஜ்யங்களின் உரிமையைக் கோருகிறான், அவன் தேர்ந்தெடுத்தவருக்கு அவற்றை தற்காலிகமாக வழங்குகிறான்.[159] சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதபடி பாவிகளின் மனதைக்

[156] 1 தீமோத்தேயு 3:6-ஐ வாசிக்கவும்.
[157] எபேசியர் 2:2
[158] யோவான் 12:31
[159] லூக்கா 4:4-6

*குருடாக்குகிறான்.*[160] *பாவிகள் உண்மையிலேயே அவனுடைய அடிமைகள்.*[161] *அவன் தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் மனதில் இருந்து அகற்றுகிறான், அதனால் அது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.*[162] *அவன் திருச்சபையிடமும் பரிசுத்த ஆவியானவரிடமும் பொய் சொல்லும் திட்டத்தை அனனியா மற்றும் சப்பீராளின் இருதயங்களில் வைத்தான்,*[163] *மேலும் இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் விருப்பத்துடன் யூதாஸுக்குள் நுழைந்தான்.*[164] *அவன் தவறான மத உபதேசங்களை உருவாக்குகிறான், தேவனுடைய வார்த்தை "பிசாசுகளின் உபதேசங்கள்" என்று அழைக்கிறது மற்றும் அவற்றைக் கற்பிக்க ஜனங்களை ஊக்குவிக்கிறான்.*[165]

*சாத்தான் தேவனை வெறுக்கிறான், எனவே தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதனை வெறுக்கிறான், தேவனுடைய மிகப்பெரிய அனுகூலங்களைப் பெறுகிறான். தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யும்படி செல்வாக்கு செலுத்துவதன் மூலம் அவன் பெற்ற அதே கண்டனத்தின் கீழ் முடிந்தவரை பலரைக் கொண்டுவர முயற்சிக்கிறான்.*

*மனப்பூர்வமாக சாத்தானுக்கு சேவை செய்பவர்கள் உலகில் மிகவும் ஏமாற்றப்பட்ட ஜனங்கள், ஏனென்றால் அவர்கள் வெற்றிபெற முடியாத கலகத்தில் ஈடுபட்டுள்ளனர், மேலும் அவர்கள் அவர்களை வெறுக்கும் மற்றும் அவர்களை அழிக்க மட்டுமே ஆர்வமாக உள்ள எஜமானருக்கு சேவை செய்கிறார்கள். தன்னால் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்த வாக்குறுதிகளை அவன் அளிக்கிறான்.*

*மற்றவர்கள் பாவத்தில் வாழத் தேர்ந்தெடுக்கும் போது அறியாமலே சாத்தானைப் பின்பற்றுகிறார்கள். அதனால்தான் அவன் அதிக நேரத்தையும் சக்தியையும் சோதனைக்கும் ஏமாற்றத்திற்கும் செலவிடுகிறான். தேவன் மேலுள்ள*

---

[160] *2 கொரிந்தியர் 4:4-ஐ வாசிக்கவும்.*
[161] *2 தீமோத்தேயு 2:26*
[162] *மாற்கு 4:15-ஐ வாசிக்கவும்.*
[163] *அப்போஸ்தலர் 5:3*
[164] *லூக்கா 22:3*
[165] *1 தீமோத்தேயு 4:1-ஐ வாசிக்கவும்.*

நம்பிக்கையை ஜனங்கள் நிராகரிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான், தேவனை வணங்குவதற்குப் பதிலாக சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களின் சிலைகளை உருவாக்குகிறான். அவனது சோதனைகள் யாவும் ஏமாற்று வேலைகளாக இருக்கின்றன, ஏனென்றால் தேவன் உருவாக்கியவற்றின் வக்கிரங்களைத் தவிர வேறு எதுவும் அவனிடம் இல்லை. பிசாசு எந்த மகிழ்ச்சியையும் இன்பத்தையும் உருவாக்கவில்லை; தேவன் அவர்கள் அனைவரையும் படைத்தார். தேவனுடைய விருப்பத்திற்கு புறம்பாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வடிவங்களில் மட்டுமே பிசாசு இன்பங்களை வழங்க முடியும்.

சில அசுத்த ஆவிகள் குறிப்பிட்ட பூமியின் பகுதிகள் அல்லது ஜனங்கள் குழுக்களில் கவனம் செலுத்துகின்றன. மிகாவேல் தேவதூதன் இஸ்ரவேலைப் பாதுகாக்கும் பிரபு என்று அழைக்கப்பட்டது போல, பெர்சியா மற்றும் கிரேக்கு தேசத்து பிரபுக்கள் என்று அழைக்கப்படும் அசுத்த ஆவிகள் இருந்தன.[166] சில ஆவிகள் தேசங்களின் கடவுள்களாக மாறின.

சாத்தான் ஆராதனையை விரும்புகிறான்.[167] பொல்லாத ஆவிகள் பொய்யான மதங்கள் மூலம் வேலை செய்கின்றன. ஜனங்கள் சிலைகளை வணங்கும்போது அவர்கள் பேய்களை வணங்குகிறார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது.[168] எதை வணங்குகிறோம் என்று தெரியாத மனிதர்களின் ஆராதனைக்கு பேய்கள் பதிலளிக்கின்றன. தேவனை வழிபடுபவர் தேவனைப் போலாகி பரிசுத்தத்தில் மகிழ்வது போல, பொல்லாத ஆவிகளை வணங்குபவர் மேலும் பொல்லாதவராக மாறி தீமையில் மகிழ்ச்சியடைகிறார். ஜனங்கள் தங்கள் சொந்த குழந்தைகளை பேய்களுக்கு பலியிட்டபோது ஏற்பட்டதுதான் மிகவும் மோசமான ஆராதனையின் வடிவமாக இருக்கலாம்.[169]

சாத்தானும் மற்ற பேய்களும் ஜனங்களின் மனதையும் நடத்தையையும் முழுமையாகக் கட்டுப்படுத்த

---

[166] தானியேல் 10:13, 20
[167] மத்தேயு 4:9-ஐ வாசிக்கவும்.
[168] உபாகமம் 32:17; 1 கொரிந்தியர் 10:20-21-ஐ வாசிக்கவும்.
[169] சங்கீதம் 106:37-ஐ வாசிக்கவும்.

*முயற்சிக்கின்றனர். இது "பிசாசு பிடித்தல்" என்று அழைக்கப்படுகிறது. சிலர் இந்த வகையான உடைமைக்கு உணர்வுபூர்வமாக தங்களை ஒப்புக்கொடுத்துள்ளனர்; ஒருவேளை மற்றவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உணராமல் அனுமதித்திருக்கலாம். சிலர் தங்கள் சொந்த நோக்கங்களுக்காக அதிகாரங்களைப் பெறுகிறார்கள் என்று நினைத்து, இந்த நிலைக்கு படிப்படியாகச் சென்றுவிட்டனர். அவ்வாறு ஆட்கொள்ளப்பட்ட ஒரு நபர் பொல்லாத ஆவிகளுக்கு அடிமையாகி, சுய அழிவுக்கு உந்தப்பட்டு, மனம் மற்றும் உணர்ச்சிகளில் கொடூரமான வேதனைகளை அனுபவிக்கிறார்.[170] இந்த அடிமைத்தனத்திலிருந்து ஒருவரை இயேசுவால் மட்டுமே விடுவிக்க முடியும்.*

**தேவனின் வெற்றி**

*நற்செய்தி பரவலாகப் பிரசங்கிக்கப்பட்ட நாடுகளில், அசுத்த ஆவிகளின் செயல்பாடு பொதுவாக மாறுவேடத்தில் அதாவது வேறு வேஷத்தில் உள்ளது. முரண்பாடாக, இந்த "நாகரிக" நாடுகளில்தான் ஜனங்கள் மிகவும் மதச்சார்பற்றவர்களாக இருக்கிறார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட எதையும் கேலி செய்கிறார்கள் மற்றும் ஆவிகள் இருப்பதை மறுக்கிறார்கள். அத்தகைய சூழலில், அசுத்த ஆவிகள் வெளிப்படையாக செயல்படுவதில்லை, ஏனென்றால் அவை சுவிசேஷத்தைக் கேட்ட ஜனங்களைப் பயமுறுத்தினால், அவர்களில் பலர் விடுதலை மற்றும் பாதுகாப்பிற்காக தேவனிடம் திரும்புவார்கள்.*

*நற்செய்தி அதிகம் அறியப்படாத நாடுகளில், அசுத்த ஆவிகள் வெளிப்படையாக செயல்படுகின்றன. விடுதலைக்காக கிறிஸ்துவிடம் திரும்ப முடியும் என்று அங்குள்ள மக்களுக்குத் தெரியாது, எனவே பிசாசுகளின் சக்திகள் அவர்களை மிரட்டி அவர்களை அடிபணிய வைக்கின்றன. அவர்கள் ஆவிகளுக்கு சேவை செய்கிறார்கள், விருப்பத்துடன் மற்றும் மகிழ்ச்சியுடன் அல்ல, ஆனால் பயத்துடன் அப்படிச் செய்கிறார்கள். விடுதலை*

*[170] மாற்கு 5:2-5-ஐ வாசிக்கவும்.*

மற்றும் சுதந்திரத்தின் அற்புதமான செய்தியாக நற்செய்தி வருகிறது.

பிசாசின் தொடர்ச்சியான தாக்குதலின் காரணமாக, நாம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் இருக்கிறோம். நமது போராட்டம் ஆவி உலகில் உள்ளவைகளுக்கு எதிராக உள்ளது மற்றும் சரீரத்தில் உள்ள எதிரிகளுக்கு எதிராக அல்ல என்பதை நினைவில் கொள்ளுமாறு எச்சரிக்கப்படுகிறோம்.[171] ஆவிக்குரிய சர்வாயுத வர்க்கத்தை அணிந்து கொள்ளும்படிச் சொல்லப்படுகிறது, அதனால் நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.[172] நாம் வெற்றியில் உறுதியாக இருக்க முடியும், ஏனென்றால் நம்மில் இருக்கும் தேவனுடைய வல்லமையை பிசாசினால் எதிர்க்க முடியாது, மேலும் நாம் பிசாசை எதிர்க்கும்போது, அவன் நம்மை விட்டு ஓடிவிடுவான்.[173]

► *பிசாசு தேவனுக்கு எதிரானவனா?*

> *"நீங்கள் தொடர்ந்து எதிர்த்தால் பிசாசு உங்களை வெல்ல முடியாது. அவன் எவ்வளவு வலிமையானவனாக இருந்தாலும், அவனைத் தொடர்ந்து எதிர்க்கும் மனிதனை வெல்வதற்கு தேவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். அவர் மனித விருப்பத்தை கட்டாயப்படுத்த முடியாது.*
> *- Adam Clarke,*
> *Christian Theology,*
> *"Good and Bad Angels"*

பிசாசுக்கு மனிதர்களின் தற்போதைய, மரணத்திற்கேதுவான சரீர நிலையில் இருப்பதைவிட மிக அதிகமான சக்தி உள்ளது. இருப்பினும், தேவனுடைய வல்லமையுடன் ஒப்பிடும்போது அவனுடைய சக்தி ஒன்றும் இல்லை. அவன் அதிகாரத்தில் சமமானவன் என்பது போல, கடவுளுக்கு எதிரானவன் என்று நினைக்கக் கூடாது. உலகில் உள்ள நன்மைக்கும் தீமைக்கும் சமமான சக்திகள் இருப்பதாக சில தத்துவவாதிகள் நினைக்கிறார்கள். அது உண்மைக்கு வெகு தொலைவில் உள்ளது. சாத்தான் எல்லா இடங்களிலும் இல்லை, எல்லாவற்றையும் அறிந்திருக்கவில்லை, தவறு செய்கிறான். தேவன் ஆவிகளைப்

---

[171] எபேசியர் 6:12.
[172] எபேசியர் 6:13
[173] யாக்கோபு 4:7

*படைத்தவர், அவைகளால் அவரை வெல்ல முடியாது. மனிதனின் சோதனைக் காலம் முடிந்ததும், எல்லா பொல்லாத ஆவிகளும் பாவியான மனிதர்களுடன் சேர்ந்து இறுதியில் நியாயந்தீர்க்கப்படும், அடைத்து வைக்கப்பட்டு, தண்டிக்கப்படும்.*

*சாத்தானின் தோல்வி நீண்ட காலத்திற்கு முன்பே வாக்குறுதியளிக்கப்பட்டது. சர்ப்பத்தின் தலையை நசுக்க ஒரு இரட்சகரை அனுப்புவதாக தேவன் வாக்குறுதி அளித்தார்.*[174] *பிசாசின் கிரியைகளை அழித்து, பாவத்தின் மேல் நமக்கு வெற்றியைத் தர இயேசு வந்தார்.*[175] *இயேசு, அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், சாத்தானை மரணத்தின் மீது அதிகாரம் வைத்திருக்க அனுமதிக்கவில்லை.*[176] *சாத்தான் மற்றும் பிற பொல்லாத ஆவிகளின் கடைசி மற்றும் நித்திய விதி அக்கினிக்கடலாகும்.*[177]

*சாத்தான் என்ன செய்ய முடியும் என்பதற்கு தேவன் ஏற்கனவே வரம்புகளை வைத்துள்ளார்.*[178] *அதாவது சாத்தான் நமக்கு என்ன செய்துவிடுவான் என்ற பயத்தில் நாம் வாழ வேண்டியதில்லை. தேவன் அனுமதிக்காத வரை எதுவும் நடக்காது, மேலும் நாம் என்ன கையாள முடியும் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.*

*சாத்தானின் தாக்குதலுக்கு எதிராக நாம் பாதுகாக்கப்படுவது மட்டுமல்லாமல், சாத்தானின் ராஜ்யத்திற்கு எதிராக தேவனுடைய ராஜ்யத்தை முன்னெடுத்துச் செல்லும் சக்தியும் நமக்கு இருக்கிறது. பொல்லாத ஆவிகளைத் துரத்துவதற்கு இயேசு அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல தம்முடைய சீஷர்களுக்கும் அதிகாரம் கொடுத்தார்.*[179] *நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, தேவன் தம்முடைய சத்தியத்திற்கு வல்லமையைக் கொடுத்து, சுவிசேஷத்திற்குப் பதிலளிப்பவர்களை சாத்தானிடமிருந்து விடுவிக்கிறார்.*

---

[174] *ஆதியாகமம் 3:15*
[175] *1 யோவான் 3:8-ஐ வாசிக்கவும்.*
[176] *எபிரெயர் 2:14; வெளிப்படுத்தல் 1:18*
[177] *மத்தேயு 25:41-ஐ வாசிக்கவும்.*
[178] *யோபு 1:12, 2:6*
[179] *லூக்கா 10:17-ஐ வாசிக்கவும்.*

**தவிர்க்க வேண்டிய பிழை: ஆவி உலகில் தவறான வகையான ஆர்வம்**

*வகுப்புத் தலைவருக்கானக் குறிப்பு: வகுப்பின் ஒரு உறுப்பினர் இந்தப் பகுதியை விளக்கலாம்.*

சிலர் ஆவி உலகத்தால் ஈர்க்கப்படுகிறார்கள். அவர்கள் தேவதூதர்களைக் குறித்துப் படிக்கத் தொடங்குகிறார்கள், மற்றும் அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்யலாம். தேவதூதர்களிடம் ஜெபிக்க வேண்டும் அல்லது அவர்களுடன் உறவு கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று வேதாகமம் ஒருபோதும் சொல்லவில்லை. அவர்களை வணங்க வேண்டாம் அல்லது நம்மால் புரிந்துகொள்ள முடிந்ததை விட அதிகமாக தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டாம் என்று வேதாகமம் எச்சரிக்கிறது (கொலோசெயர் 2:18).

ஒரு நபர் பொல்லாத ஆவிகள் மீது அதிக ஆர்வம் காட்டினால் அது மிகவும் ஆபத்தானது. சிலர் அவைகளின் சக்தி மற்றும் அவைகள் செய்யும் செயல்களால் ஈர்க்கப்படுகிறார்கள். ஆவிகளுடன் தொடர்பு கொள்ளும் விளையாட்டுகள் உள்ளன. ஆவிகளிடமிருந்து தகவல்களைப் பெற ஜனங்கள் பயன்படுத்தும் முறைகள் உள்ளன. தேவனுடைய வல்லமையால் அவற்றை எதிர்க்க வேண்டுமே தவிர, பொல்லாத ஆவிகளுடன் நாம் ஒருபோதும் ஈடுபடக்கூடாது.

சிலர் ஆவி உலகம் மற்றும் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றிய சிக்கலான மற்றும் விரிவான விளக்கங்களை உருவாக்கியுள்ளனர். இருப்பினும், ஆவி உலகத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

**நம்பிக்கைகளின் அறிக்கை**

தேவன் எல்லா ஆவிகளையும் படைத்தார். பரிசுத்த தேவதூதர்கள் தேவனை வணங்குகிறார்கள் மற்றும்

*விசுவாசிகளைப் பாதுகாக்கிறார்கள். தேவதூதர்கள் அழியாமையுள்ளவர்கள், பேசவும், வழிபடவும், பகுத்தறியும் திறன் கொண்ட தனிப்பட்ட நபர்கள். அவர்கள் தார்மீக தேர்வுகளை மேற்கொண்டுள்ளனர். சாத்தானும் மற்ற தேவதூதர்களும் பாவத்தில் விழுந்து தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரிகளானார்கள். தேவன் சாத்தானின் வல்லமையைக் கட்டுப்படுத்துகிறார், மேலும் அவனை நித்திய தண்டனைக்குக் கண்டனம் செய்துள்ளார்.*

### ***பாடம் 6 வீட்டுப்பாடங்கள்***

*(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *1 பேதுரு 5:8-9*
- *அப்போஸ்தலர் 12:7-11*
- *மத்தேயு 12:43-45*
- *2 கொரிந்தியர் 11:13-15*
- *லூக்கா 8:27-35*

*(2) தேர்வு: பாடம் 6-க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

### ***பாடம் 6 தேர்வு***

*(1) தேவதூதர்கள் எப்போது சிருஷ்டிக்கப்பட்டார்கள்?*

*(2) தேவதூதர்கள் எவ்வளவு காலம் வாழ்கிறார்கள்?*

*(3) தேவதூதர்களுக்கு பொதுவாக சரீரங்கள் இல்லை என்பதை நாம் எப்படி அறிவோம்?*

*(4) தேவதூதர்களுக்கு ஆள்தன்மை இருக்கிறது என்பதற்கான சில காரணங்கள் யாவை?*

*(5) வேதாகமத்தில் தேவதூதர்களைக் குறிக்கும் சில வித்தியாசமான வார்த்தைகள் யாவை?*

*(6) விசுவாசிகளுக்கு தேவதூதர்கள் என்ன செய்கிறார்கள்?*

*(7) அசுத்த ஆவிகளின் தோற்றம் என்ன?*

*(8) விக்கிரகாராதனைக்காரர் உண்மையில் எதை வணங்குகிறார்கள்?*

*(9) சாத்தான் மற்றும் பிற அசுத்த ஆவிகளின் முடிவான விதி என்ன?*

## *பாடம் 7*

# கிறிஸ்து

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *இயேசு மேசியா என்பதன் அர்த்தம்.*
- *"கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்ற சொற்றொடரில் விசுவாச அறிக்கை.*
- *இயேசுவின் மனிதத் தன்மைக்கான ஆதாரம் மற்றும் முக்கியத்துவம்.*
- *இயேசுவின் தெய்வீகத் தன்மைக்கான ஆதாரம் மற்றும் முக்கியத்துவம்.*
- *பாவ மன்னிப்புக்கு கிறிஸ்துவின் மரணம் போதுமானது.*
- *கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்.*
- *கிறிஸ்துவைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) பிற மதங்களைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்துவைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்பதை மாணவர் கற்றுக்கொள்வர்.*

**முன்னுரை**

*வெளிப்படுத்துதல் 5:11-14-ஐ ஒன்றாகப் படியுங்கள். இந்தப் பகுதி இயேசுவைப் பற்றி நமக்கு என்ன சொல்லுகிறது?*

**கள்ளக்கிறிஸ்துக்கள்**

*கடைசி நாட்களில், கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் அநேகரை ஏமாற்றுவார்கள் என்று*

வேதாகமம் முன்னறிவிக்கிறது. பலர் தங்களை இரட்சிக்க முடியாத பொய்யான அல்லது கற்பனையான கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கின்றனர். மோர்மோன்கள் மற்றும் யேகோவாவின் சாட்சிகளால் உங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கள்ளக்கிறிஸ்துக்களில் இருவரை நீங்கள் சந்திக்கலாம்.

**மோர்மோன்களின் இயேசு**

ஒரு மோர்மோன் எப்போதாவது உங்கள் கதவைத் தட்டினால், அவர் லூசிபரின் ஆவி-சகோதரரான இயேசுவைக் கொண்டு வருவார். நமது "பரலோகத் தகப்பன்" மற்றும் நமது "பரலோகத் தாய்" இந்தப் பிரபஞ்சத்தில் கொண்டுவந்த கோடிக்கணக்கான ஆவிக் குழந்தைகளில் இந்த இயேசுவும் ஒருவர். மோர்மோன்களின் கூற்றுப்படி, இயேசு பூமியில் வாழ்ந்தபோது, அவருக்கு பல மனைவிகள் இருந்தனர், அவர்களில் ஒருவர் மகதலேனா மரியாள். அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர் இந்தியர்களுக்கு பிரசங்கிக்க அமெரிக்கா சென்றார்.

**யேகோவாவின் சாட்சிகளின் இயேசு**

முதலில் சிருஷ்டிக்கப்பட்ட பிரதான தூதன் மிகாவேலாகிய இயேசு ஒரு மனிதனாக மாறி, சிலுவைக்கு பதிலாக கழுமரத்தில் மரித்ததார் என்று யேகோவாவின் சாட்சிகள் உங்களுக்குச் சொல்வார்கள். அவர் ஒரு ஆவி-உயிரினமாக வளர்க்கப்பட்டார், மீண்டும் மிகாவேல் தூதர் ஆனார், அதே நேரத்தில் அவரது உடல் வாயுக்களில் கரைந்தது.

**மெய்யான கிறிஸ்து**

இந்த துருபதேசக்காரர்கள் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இயேசுவிலிருந்து வேறுபட்ட இயேசுவைக் கொண்டுள்ளனர் என்பதை நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன், ஆனால் உண்மையான, வேதாகம இயேசுவை உங்களால் விவரிக்க முடியுமா? பல அமெரிக்கர்களால் முடியாது. 80% அமெரிக்கர்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அழைத்தாலும், 40% பேர் மட்டுமே அவர்

*தேவன் என்றும், 40% பேர் மட்டுமே அவர் பாவமற்றவர் என்றும் ஒரு சமீபத்திய கணக்கெடுப்புக் காண்பிக்கிறது. மில்லியன் கணக்கான ஜனங்கள் தங்களை இரட்சிக்கத் திராணியில்லாத ஒரு பொய்யான கிறிஸ்துவைப் பற்றிய மனக் கருத்தைக் கொண்டுள்ளனர் என்பதை இது காட்டுகிறது.*

*நீங்கள் வஞ்சிக்கப்படாமல் இருக்க இயேசுவைப் பற்றிய உங்கள் நம்பிக்கைகளில் உறுதியாக இருப்பது முக்கியம், அதனால் நீங்கள் அவரை பிறருக்கு அறிமுகப்படுத்தலாம்.*

*பிற மதங்கள் இயேசுவைப் பற்றி என்ன கற்பிக்கின்றன என்பதைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பாடத்தின் முடிவில் உள்ள "பிற மதங்கள் என்ன சொல்லுகின்றன" என்ற பகுதியைப் பார்க்கவும்.*

**மேசியாவாகிய இயேசு**

*► மேசியாவைப் பற்றிய சில வேதாகம முன்னறிவிப்புகள் என்ன?*

*நான்கு நற்செய்தி நூல்களும் இயேசுவை இஸ்ரவேல் எதிர்பார்க்கும் மேசியாவாகக் காட்டுகின்றன. மேசியாவைப் பற்றி பல விஷயங்கள் முன்னறிவிக்கப்பட்டன. அவர் தாவீது ராஜாவின் வழித்தோன்றலாக இருப்பார், எனவே ராஜாவாக இருக்க தகுதியுடையவர். அவர் தமது ஜனங்களை அடக்குமுறை மற்றும் அடிமைத்தனத்திலிருந்து இரட்சிப்பார். அவர் தனது ஊழியத்தை நிறைவேற்ற தேவனால் விசேஷமாக அபிஷேகம் பண்ணப்படுவார். மேசியா என்ற வார்த்தைக்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள்.*

*பழைய ஏற்பாட்டில் உள்ள மேசியாவைப் பற்றிய சில முக்கியமான விவரங்கள் புதிய ஏற்பாடு எழுதப்படும் வரை தெளிவாக விளக்கப்படவில்லை. பாவத்திலிருந்து ஜனங்களை விடுவிப்பதே அவருடைய முன்னுரிமையாயிருந்தது.[180] அவருடைய ராஜ்யம் பூமியை அடிப்படையாகக் கொண்டது அல்ல, ஆனால் ஆவிக்குரியத் தன்மை கொண்டது மற்றும்*

[180] மத்தேயு *1:21;* லூக்கா *1:74-75*-ஐ வாசிக்கவும்.

பரலோகத்திற்குரியதாயிருந்தது,[181] இருப்பினும் இறுதியில் அவரது ராஜ்யம் முழு பூமியையும் உள்ளடக்கும்.[182]

*மேசியா* என்ற வார்த்தை எபிரேய வார்த்தை. கிரேக்க மொழியில் இதற்கு சமமான சொல் *கிறிஸ்டோஸ்* ஆகும், இதிலிருந்தே நாம் *கிறிஸ்து* என்ற வார்த்தையைப் பெறுகிறோம். "இயேசு கிறிஸ்து" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவது, இயேசுவே மேசியா என்று கூறுவதாகும்.

### இயேசு கர்த்தராயிருக்கிறார்

ஆரம்பகால திருச்சபை இயேசுவே உன்னத வல்லமை என்று கூற கர்த்தர் என்ற சொல்லைப் பயன்படுத்தியது. "இயேசுவே கர்த்தர்" என்று அவர்கள் சொன்னபோது, அவர் எல்லாவற்றின் கர்த்தர், பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர் மற்றும் தேவன் என்று சொன்னார்கள். இந்த விசுவாச அறிக்கை கிறிஸ்தவர்களை வேறுபடுத்தியது, ஏனென்றால் பூமியில் வாழ்ந்த மனிதனாகிய இயேசு எல்லாவற்றிற்கும் மேலாக ஒரே தேவன் என்று கிறிஸ்தவர்கள் மட்டுமே நம்பினர்.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்ற வார்த்தைகள் ஒரு சிறந்த அறிக்கையை உருவாக்குகின்றன. இயேசுவே மேசியா என்றும் அவர் தேவன் என்றும் சொல்கிறார்கள். மூன்று வார்த்தைகளும் பிலிப்பியர் 2:10-11 இல் உள்ளன. இயேசு கிறிஸ்து கர்த்தரென்று உலகில் உள்ள அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய காலம் வரும் என்று அந்த வசனங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

### மூன்று சிறப்பு நாட்கள்

இயேசுவைப் பற்றிய நமது அடிப்படை நம்பிக்கைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம், அவை மூன்று சிறப்பு நாட்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

---

[181] யோவான் 18:36-ஐ வாசிக்கவும்.

[182] பிலிப்பியர் 2:10-11; வெளிப்படுத்தல் 19:11-16; வெளிப்படுத்தல் 20:6

## மாம்சத்தில் வந்த அவதாரத்தின் காரணமாக நாம் கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறோம்

*கிறிஸ்துமஸ் ஒரு கன்னி தாய்க்கு இயேசு பிறந்ததைக் கொண்டாடுகிறது, ஏனென்றால் இயேசு பரிசுத்த ஆவியால் கருவுற்றார்.[183] இயேசு ஒரு பெண்ணால் பிறந்ததால் மனிதனாக இருந்தாலும், அவர் பிரவேசித்த இந்த உலகத்தைப் படைத்த தேவனாகவும் இருந்தார். இது ஆச்சரியமானது ஆனால் உண்மை: இயேசு ஒரு குழந்தையாக இருந்தபோது, அவரது தாய் மரியாள் தன்னைப் படைத்தவரை வைத்திருந்தார்.*

*தேவனுடைய குமாரன் என்ற வார்த்தை விசுவாசிகள் மற்றும் தேவதூதர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது,[184] ஆனால் இயேசு ஒரு தனித்துவமான வழியில் தேவனுடைய குமாரன்.[185] பிதாவின் இயல்பை முழுமையாகப் பகிர்ந்துகொள்பவர் அவர் மட்டுமே. அவர் பிதாவின் முழு உருவமாக இருக்கிறார், அவர் பிதாவைப் போலவே தேவன்.[186]*

*தேவனுடைய இயல்பும் மனித இயல்பும் இயேசுவின் ஆளுமையில் இணைந்தன. இது மாம்சத்தில் வந்த மனித அவதாரம் என்று அழைக்கப்படுகிறது, அதாவது தேவன் மனித மாம்சத்தை எடுத்து மனிதனாக மாறுகிறார். இயேசு மட்டுமே நம் இரட்சகராக இருக்க முடியும், ஏனென்றால் பிரபஞ்சத்தில் மனிதனும் தேவனுமாகிய ஒரே நபர் அவர் மட்டுமே.*

## இயேசு ஒரு மனிதன்

*புதிய ஏற்பாட்டின் இயேசுவை மெய்யான மனிதராக அங்கீகரிப்பது கடினம் அல்ல. அவர் ஒரு தாயின் வயிற்றில் கருவுற்றார், வளர்ந்தார், கற்றார் மற்றும் ஒரு நபராக வளர்ந்தார்.[187] அவர் சோர்வடைந்தார், தூங்கினார், சோதிக்கப்பட்டார், பாவத்தைத் தவிர மனிதர்கள் செய்யும் அனைத்தையும் செய்தார். அவர் மரிக்கவும் செய்தார். நம்மில்*

---

*[183] லூக்கா 1:34-35-ஐ வாசிக்கவும்.*
*[184] யோவான் 1:12; யோபு 1:6*
*[185] யோவான் 3:16*
*[186] எபிரெயர் 1:2-3-ஐ வாசிக்கவும்.*
*[187] லூக்கா 2:52-ஐ வாசிக்கவும்.*

*ஒருவராக மாறியதன் மூலம் அவர் மெய்யாகவே மனித இனத்தோடு தம்மை அடையாளம் காட்டினார்.*[188]

► *இயேசு ஒரு மனிதனாக இருப்பது ஏன் முக்கியம்?*

*இயேசு ஒரு மனிதராக இருப்பதினால்:*

***(1) அவர் ஒரு பலியாக சிலுவையில் பாடுபட்டு மரிக்கமுடியும்.***

***(2) அவருடைய நீதியான வாழ்க்கை நம்முடைய பாவ வாழ்க்கையின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியும்.*** முதல் ஆதாம் பாவம் செய்து தேவனிடமிருந்து பிரிந்தபோது அவன் அனைத்து மனிதகுலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தினான். இது எல்லா ஜனங்களுக்கும் மரணத்தை கொண்டுவந்தது. இயேசு பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து தேவனுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றினார். தம்மோடு அடையாளப்படுத்தும் அனைவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். அவர் வேதத்தில் கடைசி ஆதாம் என்று அழைக்கப்படுகிறார்.[189]

***(3) அவர் தேவனுக்கு நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நமது ஆசாரியராக இருக்கமுடியும்.*** நம்முடைய மத்தியஸ்தராக, அவர் நமக்காக தொடர்புகொள்வது மட்டுமல்ல, கூடுதலாக அவர் உண்மையிலேயே நம்மை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். நமக்கும் தேவனுக்கும் இடையில் ஒப்புரவாக்குதலை ஏற்படுத்த அவர் ஒரு மனிதனாக இருப்பது அவசியம்.[190] ஆசாரியராக அவரது பங்கு ஒரு நித்திய இரட்சிப்பை வழங்குகிறது.[191] இயேசுவின் மனிதத்தன்மை நற்செய்தியின் இன்றியமையாத பகுதியாகும்.[192]

*இயேசு ஒரு மனிதன் என்பதற்கான கூடுதல் வேதாகம ஆதாரங்களுக்கு, இந்த பாடத்தின் முடிவில் "இயேசுவின் மனிதத்தன்மைக்கான வேத ஆதாரம்" பகுதியைப் பார்க்கவும்.*

---

[188] யோவான் 1:14-ஐ வாசிக்கவும்.
[189] 1 கொரிந்தியர் 15:22, 45-49; ரோமர் 5:17-19
[190] எபிரெயர் 2:17-ஐ வாசிக்கவும்.
[191] எபிரெயர் 10:5-7
[192] 1 யோவான் 5:1-ஐ வாசிக்கவும்.

## இயேசு தேவன்

### *இயேசு தம்மைத் தேவன் என்று கூறிக்கொண்டார்.*

> *"... ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய ஒரேபேறான குமாரன்; அனைத்து உலகங்களுக்கும் முன்பாக அவரது பிதாவினால் பிறந்தவர், தேவாதி தேவன், ஒளியின் ஒளி, மிகவும் தேவனுடைய தேவனானவர், ஜெநிப்பிக்கப்பட்டவர், உருவாக்கப்படவில்லை; பிதாவுடன் அதாவது யாரால் எல்லாம் உண்டானதோ அவருடன் ஒரே பொருளாக இருப்பது; என்று நான் நம்புகிறேன்."*
> *-நைசியன் கோட்பாடு*

*வேதாகமத்தின் இயேசு வெறுமனே ஒரு மனிதர் அல்ல. அவர் பிரபஞ்சத்தின் ஒரே முடிவிலா (வரம்பற்ற) தேவன். இயேசு இந்த அறிக்கையை தானே முன்வைத்தார். "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றார்.*[193] *அவன் சொன்னதும் யூதர்கள் அவர் தம்மை தேவனுக்கு நிகரானவர் என்று அவர் சொல்வதைப் புரிந்து கொண்டதால் அவரை கல்லெறிய ஆரம்பித்தார்கள். இயேசு அவர்களிடம், "இல்லை, நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். நான் உண்மையில் கடவுள் இல்லை! என்று சொன்னாரா?" இல்லை, அவருடைய வார்த்தைகளுக்கு அவர்கள் அளித்த விளக்கத்தை இயேசு ஏற்றுக்கொண்டார். அவர் தாம் பிதாவாகிய தேவனுக்குச் சமம் என்று போதித்தார்.*

*"ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்"*[194] *என்று இயேசு கூறியபோது யாத்திராகமம் 3:14-ல் உள்ள இருக்கிறவராகவே இருக்கிறேன் நான் தான், அதாவது பிரபஞ்சத்தின் சுயமாக என்றென்றும் ஜீவித்திருக்கும் தேவன் என்று கூறிக்கொண்டார்.*[195] *இந்த அறிக்கைக்காக யூதர்கள் அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.*[196]

---

[193] *யோவான் 10:30*

[194] *யோவான் 8:58*

[195] *யாத்திராகமம் 3:14*

[196] *யோவான் 8:59*

## *இயேசு பூமியில் இருந்தபோது தெய்வீக செயல்களைச் செய்தார்.*

*இயேசு பூமியில் இருந்தபோது தெய்வீக செயல்களைச் செய்தார். நித்திய ஜீவனைக் கொடுத்தார்.*[197] *பாவங்களை மன்னித்தார்.*[198] இவை தேவனால் மட்டுமே செய்யக்கூடியவை.

*திமிர்வாதக்காரனின் பாவங்களை இயேசு மன்னித்தபோது, "பூமியில் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்" தனக்கு இருப்பதாக நிரூபிக்க அந்த மனிதனைக் குணப்படுத்தினார்.*[199] ஒரு செயல் மற்றொன்றுக்கு சான்றாக இருந்தது, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாக இயேசு குணப்படுத்தும் அற்புதத்தை செய்யவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது. மன்னிக்கவும் குணப்படுத்தவும் இயேசுவுக்கு தெய்வீக அதிகாரமும் வல்லமையும் இருந்தது.

*"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு இயேசுவும் லாசருவை உயிரோடு எழுப்பினார்.*[200] இது ஒரு தெய்வீகக் கோரிக்கையுடன் கூடிய மற்றொரு தெய்வீகச் செயலாகும். தேவன் மட்டுமே "உயிர்த்தெழுதல்" என்று உரிமை கோர முடியும், ஏனெனில் தேவனுடைய வல்லமை மட்டுமே யாரையும் மரித்தோரிலிருந்து எழுப்ப முடியும். இயேசு இந்த "ஜீவன் அளிப்பவர்" என்று கூறி, பின்னர் லாசருவுக்கு ஜீவனை நல்கினார், அதனால் அவர் தாம் யார் என்பதை நிரூபணம் செய்தார். இந்த நிகழ்வில், இயேசு தன்னை மற்ற தீர்க்கதரிசிகளிடமிருந்தும், தேவனுடைய வல்லமையால் மரித்தோரிலிருந்து எழுப்பிய அப்போஸ்தலர்களிடமிருந்தும் தன்னை வேறுபடுத்திக் காட்டினார். இவர்களில் எவரும் அற்புதங்களைச் செய்யும் ஆற்றல் தங்களுக்கு இருப்பதாகக் கூறவில்லை. அவை தேவனுடைய கருவிகளாக இருந்தன. யோவான் 5:21ல், பிதாவானவர் மரித்தோரை எழுப்பி

---

[197] யோவான் 10:28-ஐ வாசிக்கவும்.
[198] மாற்கு 2:10
[199] மாற்கு 2:10-12
[200] யோவான் 11:25

*உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார் என்று இயேசு கூறினார்.*

*இயேசு தம்முடைய அற்புதங்களைச் செய்தபோது, "தம்முடைய மகிமையை,"[201] "கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய், பிதாவின் ஒரே பேறானவருடைய மகிமையை வெளிப்படுத்தினார்."[202] இந்த அற்புதங்கள் தேவனுடைய குமாரனின் மகிமையான வல்லமையின் நிரூபணங்களாக இருந்தன, இது அவர் தெய்வீகமானவர் என்பதை நிரூபிக்கிறது.*

**இயேசு சிருஷ்டிகர் மற்றும் பராமரிப்பாளர்.**

*அப்போஸ்தலர்களான யோவான் மற்றும் பவுலின் கூற்றுப்படி, இயேசு எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் மற்றும் எல்லாவற்றையும் ஒன்றாகத் தாங்குகிறார், மேலும் அவருக்கு எல்லாம் ஜீவித்திருக்கிறது.[203] நிச்சயமாக இதை தேவனைத் தவிர வேறு யாராலும் சொல்ல முடியாது.*

► *இயேசு தேவன் என்பதை நாம் அறிவது ஏன் முக்கியம்?*

*இயேசு தேவன் என்பதால்,*

1. *அவரது சிலுவைப் பலிமரணம் எல்லையற்ற மதிப்புடையது - உலகத்தின் பாவங்களை மன்னிக்க போதுமானது.*
2. *நம்மை இரட்சிக்கும் வல்லமை அவருக்கு உண்டு; அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார்.*
3. *பிதாவை ஆராதிப்பது போல் அவரையும் ஆராதிக்க வேண்டும்.*

*நாம் இயேசுவைத் தேவனாகப் பார்க்கத் தவறினால், நாம் அவரை தேவனாகக் கனம்பண்ண மாட்டோம், ஆனால் இதை*

---

[201] *யோவான் 2:11*
[202] *யோவான் 1:14*
[203] *யோவான் 1:3; கொலோசெயர் 1:17-ஐ வாசிக்கவும்.*

நாம் செய்ய வேண்டும் என்று இயேசு கூறுகிறார். “எல்லோரும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல, குமாரனையும் கனம்பண்ண வேண்டும்” என்று சொன்னார்.[204] பிதா மற்றும் குமாரன் இருவரையும் தேவனாக மதிக்காவிட்டால் நாம் இரட்சிக்கப்பட முடியாது.

*"இருக்கிறவராக இருக்கிறேன் என்ற சொல்லைப் பிதா பயன்படுத்துவதைப் போல, கிறிஸ்துவும் பயன்படுத்துகிறார், ஏனெனில் இது காலத்தால் பாதிக்கப்படாமல் தொடர்ந்து இருப்பதைக் குறிக்கிறது."*
*- ஜான் கிறிசோஸ்டம்*

கிறிஸ்தவம் என்பது இயேசுவின் போதனைகள் மற்றும் செயல்களின் அடிப்படையில் மட்டுமல்ல, இயேசுவின் தனித்துவமான நபரின் அடிப்படையிலும் உள்ளது. அவர் இரட்சிப்பின் செய்தியை மட்டும் போதிப்பவர் அல்ல. அவரே இரட்சகர், அவர் மட்டுமே — தேவன்-மனிதன் — இரட்சகராக இருந்திருக்க முடியும்.

*இயேசு தேவன் என்பதற்கான கூடுதல் வேதாகமச் சான்றுகளுக்கு, இந்தப் பாடத்தின் முடிவில் உள்ள “இயேசுவின் தெய்வீகத்தின் வேதாகம ஆதாரம்” என்னும் பகுதியைப் பார்க்கவும்.*

### இயேசு ஒரு நபர்

இயேசுவானவர் தேவனுடைய அனைத்து இயல்புகளையும் மனிதனின் அனைத்து இயல்புகளையும் கொண்டிருந்தாலும், அவர் இரண்டு நபர்களை இணைக்கவில்லை. இரண்டு இயல்புகளும் ஒரு நபரை, சரியான இணக்கத்துடன் உருவாக்குகின்றன. இயேசு ஒரு தேவன்-மனிதன், இயேசுவின் ஒவ்வொரு செயலும் அவருடைய முழு மனிதத்தன்மை மற்றும் முழு தெய்வத்துவத்தின் வெளிச்சத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இயேசுவில் உள்ள இரண்டு இயல்புகளையும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியாது என்று திருச்சபை எப்போதும் கற்பித்துள்ளது, இருப்பினும் அவை இயற்கையின்

---

[204] *யோவான் 5:23*

பண்புகளை இழக்கச் செய்யும் வகையில் கலக்கப்படவில்லை.[205]

இயேசுவின் இயல்பை பரிசுத்த வேதாகமத்தின் இயல்புடன் ஒப்பிடுவது உதவியாக இருக்கும். இயேசுவைப் போலவே, வேதாகமமும் முற்றிலும் தெய்வீகமானது மற்றும் முழு மனிதத்தன்மையுள்ளது. மனிதப் புத்தகமாக இருப்பதால், இது தவறு இல்லாமல் இருப்பது ஒன்றைத் தவிர, மற்ற எந்த மனித புத்தகத்திற்கும் உள்ள பண்புகளைக் கொண்டுள்ளது. தெய்வீகமாக இருப்பதால், வேறு எந்த புத்தகமும் கொண்டிராத பண்புகளை இது காட்டுகிறது. அதே வழியில், இயேசு மனித மற்றும் தெய்வீக குணங்களைக் காட்டுகிறார். வேதாகமம் தெய்வீக குணாதிசயங்களைக் காட்டுகிறது என்ற உண்மை, அதை மனிதப் புத்தகமாகச் சிறிதும் குறைக்கவில்லை. அதேபோல், இயேசு தனது தெய்வத்துவத்தில் செயல்படுகிறார் என்பது அவரை எந்த விதத்திலும் குறைவான மனிதனாக மாற்றவில்லை. இயேசு தனது மனிதத்தன்மையில் செயல்படுகிறார் என்பது அவரை எந்த விதத்திலும் குறைவான தெய்வீகமாக ஆக்குவதில்லை.

**உபதேசத்தின் பொதுவான பிழைகள்**

கிறிஸ்துவைப் பற்றி பேசும் போது ஜனங்கள் செய்யும் உபதேசத்தின் பொதுவான பிழைகள் இவை:

- இயேசு தேவன் என்பதை மறுப்பது
- இயேசு மனிதன் என்பதை மறுத்தல்
- அவரது தெய்வத்துவம் அல்லது மனிதத்தன்மையை முக்கியமற்றது போல் குறைத்து மதிப்பிடுதல்
- கிறிஸ்துவின் நபரின் ஒற்றுமையை மறுப்பது

இந்த பிழைகளில் ஏதேனும் ஒன்று அவர் மாம்சத்தில் மனிதனாக வந்த அவதாரத்தை மறுப்பதாகும். நம்

[205] கிறிஸ்துவின் இரண்டு இயல்புகளும் மாறாதவை, பிரிக்க முடியாதவை, வகுக்க முடியாதவை, குழப்பமடையாதவை என்று சால்சிடோனியன் கோட்பாடு (கி.பி. 451) கூறுகிறது.

இரட்சிப்புக்கு மனித அவதாரம் அவசியம், எனவே ஒருவர் கிறிஸ்து மாம்சத்தில் வந்த மனித அவதாரத்தை மறுத்தால், அவர் தவறான நற்செய்தி மற்றும் இரட்சிப்புக்கான தவறான பாதையுடன் சென்றடைவார்.

### பிற மதங்கள் என்னச் சொல்லுகின்றன

*வகுப்புத் தலைவருக்குக்கான குறிப்பு: வகுப்பின் ஒரு உறுப்பினர் இந்தப் பகுதியை விளக்கலாம்.*

இயேசு ஒரு மனிதன் என்று யேகோவாவின் சாட்சிகள் சொல்லுகிறார்கள். அவர் இதுவரை வாழ்ந்தவர்களிலேயே மிகப் பெரிய மனிதர் என்று அவர்கள் நம்புகிறார்கள், ஆனால் அவர் வெறும் ஒரு மனிதன் மட்டுமே என்று நம்புகிறார்கள். அதனால்தான் அவருடைய மரணம் நமது இரட்சிப்புக்கு போதுமான பலி என்று அவர்கள் நம்பவில்லை. அவர்கள் கிரியைகளால் அடையும் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறுகின்றனர், ஆனால் அவர்கள் வேறு மதம்.

லூசிபரின் சகோதரனைப் போல, இயேசு முதலில் தேவனால் உருவாக்கப்பட்ட ஒரு ஆவி என்று மோர்மோன்கள் நம்புகிறார். அவர் மனிதனாகிய இயேசுவாக பூமியில் பிறக்க அனுப்பப்பட்டார். மோர்மோன்கள் இயேசுவை தேவன் என்று நம்புவதில்லை.

இயேசு தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். அவர் தேவன் என்றோ திரியேகத் தேவனாக இருப்பதாகவோ அவர்கள் நம்புவதில்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்றோ, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றோ அவர்கள் நம்புவதில்லை.

இந்துக்களும் புத்த மதத்தவரும் இயேசு அற்புதங்களைச் செய்த புனிதமான மனிதர் என்று நம்புகிறார்கள். அவர்களின் மதத்திற்கு அவர் முக்கியமில்லை. அவர்கள் சிருஷ்டிகர் மற்றும் கர்த்தர் என்கிறதான ஒரு தேவன் மீது நம்பிக்கை இல்லை, எனவே அவர்கள் இயேசு தேவனுடைய மானுட அவதாரம் என்று நம்பவில்லை.

## பாவப் பிராயச்சித்தத்தின் காரணமாக நாம் புனித வெள்ளியைக் கொண்டாடுகிறோம்

*புனித வெள்ளி என்பது இயேசு சிலுவையில் அறையப்பட்ட நாள். இந்த பயங்கரமான மற்றும் அற்புதமான நாளில், இயேசு நம்முடைய பாவங்களை சிலுவையில் சுமந்தார். நாம் மன்னிக்கப்படுவதற்கு அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒரு பலியாக மரித்தார்.*

### ஒரு பலி அவசியமாக இருந்தது

*தேவன் நம்மை மன்னித்து இன்னும் நீதியாகவும் பரிசுத்தமாகவும் இருக்க ஒரு பலி செய்ய வேண்டியிருந்தது. இந்தக் கொள்கை பழைய ஏற்பாட்டில் தேவன் ஏற்படுத்தின பலிகளால் கற்பிக்கப்பட்டது.[206] தேவன் எந்த அடிப்படையும் இல்லாமல் வெறுமனே பாவத்தை மன்னித்தால், அவர் நீதியுள்ளவர் அல்ல, அது பாவம் மிகவும் தீவிரமானது அல்ல என்பதைக் குறிக்கும். ஆனால், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மரணத்தைப் பார்த்து, பாவம் தீவிரமானதல்ல என்று யாராலும் சொல்ல முடியாது. அவருடைய பலி நமது மன்னிப்புக்கு அடிப்படையாக அமைந்தது.*

### இயேசு மட்டுமே போதுமான பலியாக இருக்க முடியும்

► *இயேசு ஒருவர் மட்டும் ஏன் பாவங்களுக்கான பலியாக இருக்க முடியும்?*

*தேவனுடைய நீதிக்கும் பாவத்தின் தீவிரத்தன்மைக்கும் சிருஷ்டிக்கப்பட்ட எதையும் விட பெரிய பலி தேவைப்பட்டது.[207] எல்லையற்ற முடிவிலா தேவனுக்கு எதிராக நாம் பாவம் செய்தோம், அது நம்மீது எல்லையற்ற குற்றத்தை கொண்டுவருகிறது. அதனால்தான் இயேசு மட்டுமே அதற்கான பலியாக இருக்க முடியும். அவர் தேவன் என்பதாலும், மனிதர் என்பதாலும் அவர் தகுதியானவர். அவருடைய தெய்வத்துவத்தின் காரணமாக, அவர் பாவமற்றவராக இருந்தார்,*

---

[206] *எபிரெயர் 9:22*
[207] *எபிரெயர் 10:4-ஐ வாசிக்கவும்.*

*அவருடைய பலிக்கு எல்லையற்ற மதிப்பு இருந்தது. அவருடைய மனிதத்தன்மையின் காரணமாக, அவர் நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நம் இடத்தில் நமக்காக மரிக்க முடியும்.*

### இயேசுவின் இரத்தம் அவருடைய பலி மரணத்தைக் குறிக்கிறது

*பலிகளை நிறுவுவதன் மூலம் பாவநிவாரணத்தைப் பற்றி தேவன் ஜனங்களுக்கு கற்பித்தார். ஆசாரியர்கள் மிருகங்களைக் கொன்று, அவற்றின் மரணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அவற்றின் இரத்தத்தை வழங்கினார்கள். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது என்று எபிரேயர் புத்தகம் கூறுகிறது.*[208]

*இரத்தத்தை ஒரு சிறப்பு வழியில் நடத்தும்படி தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார், ஏனெனில் அது உயிரினத்தின் ஜீவனைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.*[209] *"இரத்தம் சிந்துதல்" என்பது கொலை செய்வது என்று பொருள்.*[210] *தேவாலயத்தில் இரத்தம் பயன்படுத்தப்பட்டது என்பது ஒரு மிருகம் கொல்லப்பட்டது என்று அர்த்தம்.*

*கிறிஸ்துவின் மரணம் அனைவருக்கும் எல்லா நேரங்களிலும் இரட்சிப்பைக் கிடைக்கச் செய்த இறுதி பலியாகும்.*[211] *அவர் தமது பலி மரணத்தை குறிக்கும் வகையில் பரலோகத்தில் தமது இரத்தத்தை வழங்கினார்.*[212] *இயேசுவின் இரத்தம் நமக்கு இரட்சிப்பை அளிக்கிறது, ஏனென்றால் அவர் பலியாக மரித்தார், அதனால் நாம் இரட்சிக்கப்பட முடியும்.*

*வேறு வழியின்றி இயேசு ஏன் சிலுவையில் மரித்தார்? பழைய ஏற்பாட்டு காலத்தில், ஒரு நபர் மரத்தில் தூக்கிலிடப்படுவது தேவனுடைய சாபத்தின் அடையாளமாக இருந்தது.*[213] *இயேசு ஒரு மரத்தில் சிலுவையில் அறையப்பட்டதன் மூலம்*

---

[208] *எபிரெயர் 9:18-22*
[209] *லேவியராகமம் 17:11, 14*
[210] *ஆதியாகமம் 9:5-6*
[211] *எபிரெயர் 10:4, 12-ஐ வாசிக்கவும்.*
[212] *எபிரெயர் 9:12, 24-ஐ வாசிக்கவும்.*
[213] *உபாகமம் 21:23*

தேவனுடைய சாபத்தை தன்மீது ஏற்றுக்கொண்டதாக அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.

### இயேசு தேவனையும் மனிதனையும் ஒன்றாகக் கொண்டுவந்தார்

தேவன் மற்றும் மனிதன் - இரண்டு பிரிக்கப்பட்ட நபர்களை ஒப்புரவாக்க இயேசு வந்தார். மத்தியஸ்தராக, இயேசு இரு தரப்பினரையும் ஒரே நேரத்தில் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியிருந்தது. தேவனாக, அவர் தேவனை மனிதனுக்கு பிரதிநிதித்துவப்படுத்தினார். மனிதனாக, அவர் மனிதனை தேவனுக்கு பிரதிநிதித்துவப்படுத்தினார். இரண்டு பிரிவினரையும் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம், இயேசு மனிதனையும் தேவனையும் ஒன்றாக இணைத்தார். ஒப்புரவாக்குதலை ஏற்படுத்த ஒவ்வொரு தரப்பினரும் செய்ய வேண்டியதை அவர் செய்தார்.

### உயிர்த்தெழுதலின் காரணமாக நாம் ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்

ஈஸ்டரைக் கொண்டாட பல பாரம்பரிய வழிகள் உள்ளன, ஆனால் பலர் தாங்கள் செய்யும் காரியங்களின் அர்த்தத்தை உணரவில்லை, மேலும் இயேசுவின் உயிர்த்தெழுதலில் முக்கியமானது என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட மூன்றாம் நாள் ஈஸ்டர் காலை கல்லறையிலிருந்து எழுந்தார். பாவம், மரணம், பிசாசு ஆகியவற்றின் மீது தனக்கு அதிகாரம் இருப்பதை அவர் காண்பித்தார். அவர் நம்முடைய மரணத்தை எடுத்துக்கொண்டது மட்டுமல்ல, அதை அவர் தமது ஜீவனால் வென்றார். அவர் வெற்றி சிறந்ததால், நாமும் ஜெயங்கொள்ள முடியும்!

### இயேசு சரீரத்தில் உயிரோடு எழுந்தார்

இயேசு ஒருமுறை யூதர்களிடம், "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றார். ஏரோது கட்டிய ஆலயத்தை அவர் குறிப்பிடுகிறார் என்று யூதர்கள் நினைத்தாலும், இயேசு உண்மையில் அவருடைய சரீரத்தைக் குறிப்பிடுகிறார் என்று

*யோவான் நற்செய்தி விளக்குகிறது.*[214] *இயேசுவின் கல்லறையில் அவர் அடக்கம் பண்ணப்பட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு அவரது கல்லறை காலியாக இருந்தது என்ற உண்மையை அனைத்து நற்செய்திகளும் பதிவு செய்கின்றன. இயேசு தம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு சீடர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார், " நான்தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே"*[215] *என்றார். அவர் சரீரத்தில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தார்.*

► *இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவில்லை என்றால் அது என்ன வேறுபாட்டைக் கொண்டுவரும்?*

***(1) இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் பாவம் மற்றும் மரணத்தின் மீதான அவரது முழுமையான வெற்றியை நிரூபித்தது.***[216]

***(2) இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் அவர் தான் யாராக இருக்கிறார் என்று கூறிக்கொண்டார் என்பதை நிரூபித்தது.***[217] *இவ்வாறு அது சுவிசேஷத்தையும் நிரூபித்தது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை மறுக்கும் ஜனங்கள் நற்செய்தியையும் புறக்கணிக்கின்றனர்.*[218]

***(3) நாமும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவோம் என்ற உறுதியை இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு அளிக்கிறது.*** *மரித்தவர்களை உயிர்த்தெழச் செய்வதாக இயேசு வாக்குக் கொடுத்தார். அவரே மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தாலே அல்லாமல் அந்த வாக்குறுதி நம்ப முடியாததாக இருக்கும்.*[219]

---

*214 யோவான் 2:19-21*
*215 லூக்கா 24:39*
*216 வெளிப்படுத்தல் 1:17-18; கொலோசெயர் 2:14-15-ஐ வாசிக்கவும்.*
*217 யோவான் 2:18-21; மத்தேயு 17:22-23*
*218 1 கொரிந்தியர் 15:17-ஐ வாசிக்கவும்.*
*219 யோவான் 5:28-29*

*இயேசுவின் மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்தைப் போன்ற சரீரங்களைப் பெற நாம் உயிரோடு எழுப்பப்படுவோம்.*[220]

## இயேசு இன்னும் மனிதராகவே இருக்கிறார்

*மாம்சத்தில் மனிதனாக வந்த அவதாரம் நிரந்தரமானது என்பதை உயிர்த்தெழுதல் நமக்குக் காட்டுகிறது. இயேசு எப்போதும் மனிதராகவும் தெய்வீகமாகவும் இருப்பார். இயேசு, இன்னும் தேவன்-மனிதன், இப்போது நமக்காக பிதாவிடம் பரிந்து பேசுகிறார்,*[221] *மேலும் ஒருநாள் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார்.*[222]

## இயேசு யார் மற்றும் அவர் என்ன செய்தார் என்பதற்காக நாம் அவருக்கு அடிபணிகிறோம்

*விசுவாசிகளாக, நாம் கிறிஸ்துவுடன் அனுதின உறவில் வாழ்கிறோம். அவர் வரலாற்றின் ஒரு நபர் மட்டுமல்ல, பரலோகத்தில் இருக்கும் தேவன் மட்டுமல்ல, அவர் நம்முடன் இருக்கிறார். அவர் தமது சீடர்களுடன் எப்போதும் இருப்பேன் என்று வாக்குறுதியளித்தார்.*[223]

*அவர் திருச்சபையில் ஒரு சிறப்பு வழியில் இருக்கிறார். அவர் திருச்சபையின் தலைவர், மற்றும் திருச்சபை அவரது சரீரம் என்று அழைக்கப்படுகிறது.*[224] *அவர் திருச்சபையை வழிநடத்துகிறார், அதை ஒன்றாக வைத்திருக்கிறார், அதற்கு தேவையானவைகளை வழங்குகிறார்.*[225]

*இயேசுவைப் பற்றி நாம் பகிர்ந்துகொண்ட சத்தியங்களை ஏற்றுக்கொள்பவர் அந்த சத்தியத்திற்கு விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் பதிலளிக்க வேண்டும். கீழே உள்ளதைப் போன்ற ஒரு பிரார்த்தனை மூலம் நீங்கள் மற்றவர்களுக்கு விசுவாசிகளாக மாற உதவலாம்.*

---

[220] *1 யோவான் 3:2-ஐ வாசிக்கவும்.*
[221] *ரோமர் 8:34*
[222] *1 தெசலோனிக்கேயர் 4:16-17*
[223] *மத்தேயு 28:20*
[224] *எபேசியர் 1:22-23*
[225] *கொலோசெயர் 2:19-ஐ வாசிக்கவும்.*

*பிதாவே, எனக்காக உமது குமாரனாகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பும் அளவுக்கு என்னை நேசித்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பாவமற்ற தேவ-மனிதன் என்று நான் நம்புகிறேன், அதனால் நான் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டு உம்முடன் ஒரு உறவை மீட்டெடுக்க முடியும். நான் செய்த எல்லா பாவங்களுக்காகவும் நான் மிகவும் வருந்துகிறேன். என் பாவங்கள் இயேசுவை சிலுவையில் அறைந்ததை நான் அறிவேன். இப்போது நான் தவறு என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றிலிருந்தும் விலகிவிட்டேன், மேலும் நான் இயேசுவை என் இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்கிறேன். இனிமேல் என்னை வழி நடத்தும். உமக்காக என்றும் வாழப் போகிறேன்! என்னை மன்னித்ததற்கு நன்றி. நான் உம்மில் அன்பு கூறுகிறேன். ஆமென்.*

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

## *நம்பிக்கைகளின் அறிக்கை*

*இயேசு ஒரு கன்னிகையிலிருந்து பிறந்த தேவனுடைய குமாரன், மனிதத்தன்மை மற்றும் தெய்வீகத் தன்மை அனைத்தையும் ஒரே நபரில் கொண்டு அனைவருக்கும் மேசியா மற்றும் கர்த்தாராக இருக்கிறார். அவர் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து, நம் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று ஒரு பலியாக சிலுவையில் மரித்தார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், அவர் திரும்பி வரும்போது அனைத்து விசுவாசிகளையும் உயிரோடு எழுப்புவார். அவருடைய ராஜ்யம் உலகளாவியது மற்றும் முடிவற்றது.*

## *பாடம் 7 வீட்டுப்பாடங்கள்*

*(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *மாற்கு 1:1-12*
- *யோவான் 5:19-26*
- *யோவான் 6:44-51*
- *யோவான் 8:51-59*
- *வெளிப்படுத்துதல் 1:12-18*
- *அப்போஸ்தலர் 2:22-36*

*(2) தேர்வு: பாடம் 7-க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

## இயேசுவின் மனிதத்தன்மைக்கான வேத ஆதாரம்

*வகுப்புத் தலைவருக்கான குறிப்பு: இந்தப் பிரிவும் அடுத்த பிரிவும் விருப்பமானவை. இந்தக் குறிப்புகளுக்கு மேலும் வேதாகம் ஆதாரம் வேண்டுமானால் வகுப்பினர் அவற்றையும் கற்கலாம்.*

*இயேசு ஏவாளின் சந்ததி (ஆதியாகமம் 3:15), ஆபிரகாமின் வித்து (ஆதியாகமம் 22:18 - அப்போஸ்தலர் 3:25 உடன் ஒப்பிடவும்), ஒரு பெண்ணிலிருந்து பிறந்தார் (கலாத்தியர் 4:4), மரியாளிடமிருந்து பிறந்தார் (மத்தேயு 1:21) -25), மனுஷகுமாரன் (மத்தேயு 13:37) என்று அழைக்கப்படுகிறார், மேலும் சாதாரண*

*மனித முதிர்ச்சி செயல்முறையை கடந்து சென்றார் (லூக்கா 2:40, 52).*

*அவர் தனது சொந்த ஊருக்குச் சென்று பார்க்க வந்தபோது, அவரது குழந்தைப் பருவம் சாதாரணமாக இருந்தது என்பதை அந்த ஊர் ஜனங்களின் எதிர்வினையே காட்டுகிறது (மத்தேயு 13:54-56).*

*ஒரு மனிதனாகக் கீழ்ப்படிவதற்கு அவர் ஒரு சரீரத்தைக் கொண்டிருந்தார் (எபிரெயர் 10:5-9); அவர் மாம்சமாகவும் இரத்தமாகவும் ஆனார் (எபிரெயர் 2:14); அவரும் நம்மைப் போலப் படைக்கப்பட்டார், அதனால் அவர் நம்மைப் போல் துன்பம் அனுபவிக்க முடிந்தது (எபிரெயர் 2:10-18); அவர் பாடுகளின் மூலம் பூரணப்படுத்தப்பட்டார் (எபிரெயர் 2:9-10); மேலும் அவர் மனித சோதனைகளுக்கு உட்பட்டார் (எபிரேயர் 4:15).*

*அவர் மனித சாயலை எடுத்தார் (பிலிப்பியர் 2:6-8).*

*அவர் தேவனுடைய நித்திய வார்த்தையாக இருந்தார், மேலும் மாம்சமாகி பூமியில் வாழ்ந்தார் (யோவான் 1:14).*

*இயேசுவின் மனிதத்தன்மை கிறிஸ்தவ விசுவாசத்தின் இன்றியமையாத அறிக்கையாகும் (யோவான் 1:14; 1 யோவான் 4:2-3).*

## இயேசுவின் தெய்வீகத் தன்மைக்கான வேத ஆதாரம்

*இயேசு தேவன் என்று நிரூபிக்கப்படுவதற்கு மூன்று வழிகள் உள்ளன:*

1. *அவர் தேவன் என்று அழைக்கப்படுகிறார்.*
2. *அவர் தேவனின் பண்புகளைக் கொண்டவராகக் காண்பிக்கப்படுகிறார்.*
3. *தேவனின் பாத்திரங்களில் காண்பிக்கப்படுகிறார்.*

### இயேசு தேவன் என்று அழைக்கப்படுகிறார்

- *யோவான் 1:1, 14, நித்திய வார்த்தையாகிய தேவனாக இருந்தார் என்று கூறுகிறது.*
- *ஏசாயா இயேசுவைப் பார்த்ததாக யோவான் 12:41 சொல்கிறது.*
- *அப்போஸ்தலர் 20:28, தேவனுடைய சபை அவருடைய சொந்த இரத்தத்தால் வாங்கப்பட்டது என்று கூறுகிறது.*
- *ரோமர் 9:5 கிறிஸ்து வந்தார், அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும்மேலான தேவன்.*
- *தீத்து 2:13 அவரை நம்முடைய தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து என்று குறிப்பிடுகிறது.*
- *ஏசாயா 7:14 அவருடைய பெயரின் அர்த்தம் "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்று கூறுகிறது.*
- *ஏசாயா 9:6, அவருடைய நாமம் வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படும் என்று கூறுகிறது.*
- *1 தீமோத்தேயு 3:16 தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டு, புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டு, மற்றும் மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் என்று கூறுகிறது.*
- *யோவான் 10:30, 33 இல், இயேசு நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று கூறினார்.*
- *யோவான் 5:17-18 இல், அவர் தம்மை தேவனுக்கு சமமாக்கினார் என்று யூதர்கள் அறிந்திருந்தனர்.*
- *யோவான் 14:9ல், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று கூறினார்.*
- *யோவான் 20:28 இல், தோமா அவருடைய காயங்களைக் கண்டு, "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று கூறினார், மேலும் இயேசு விசுவாசிக்கிறவர்களை ஆசீர்வதித்தார்.*
- *யோவான் 8:58 இல், அவர் தம்மை நான் இருக்கிறேன் என்று அழைத்தார், அது தேவன் என்று யூதர்களுக்குத் தெரியும்.*

- *வெளிப்படுத்துதல் 1:8, 11, 17-18 இல், அவர் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார் என்று கூறினார், மேலும் ஏசாயா 44:6 இது தேவனுக்கான ஒரு சொல் என்பதைக் காட்டுகிறது.*
- *எபிரேயர் 1:2-3 அவர் பிதாவின் முழு உருவம் என்று கூறுகிறது.*
- *எபிரேயர் 1:8 இல், அவர் தேவன் என்று அழைக்கப்படுகிறார்.*

**இயேசுவுக்கு தேவனுடைய பண்புகள் உள்ளன**

***எல்லா இடங்களிலும் இருக்கிறார்.*** *மத்தேயு 18:20 இல், எங்கெல்லாம் இரண்டு அல்லது மூன்று விசுவாசிகள் ஒன்றாக கூடி இருக்கிறார்களோ அங்கெல்லாம் தாம் இருப்பதாக இயேசு கூறினார். மத்தேயு 28:20 இல், அவர் எப்போதும் விசுவாசிகளுடன் இருப்பதாக உறுதியளித்தார்.*

***சர்வ வல்லமையுள்ளவர்.*** *எபிரேயர் 1:3 கூறுகிறது, அவர் தமது வல்லமையால் எல்லாவற்றையும் தாங்குகிறார். பிலிப்பியர் 3:21 கூறுகிறது, தம்முடைய வல்லமையான செயலின்படியே அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளுகிறார்.*

***நித்தியமானவர்.*** *எபிரெயர் 13:8 அவர் நித்தியமாக மாறாதவர் என்று நமக்குச் சொல்கிறது. எபிரேயர் 1:12, அவர் என்றென்றும் ஒரே மாதிரியானவர் என்று தேவனைப் பற்றிய சங்கீதம் 102:25-27லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

***சகலத்தையும் அறிந்தவர்.*** *யோவான் 2:24-25 நமக்குச் சொல்லுகிறது, அவர் எல்லாரையும் அறிந்திருந்தார், மற்றும் மனுஷருள்ளத்திலிருப்பதையும் அவர் அறிந்திருந்தார். யோவான் 10:15 இல், பிதா அவரை அறிந்திருக்கிறதுபோல அவர் பிதாவை அறிந்திருப்பதாகக் கூறினார்.*

**இயேசு தேவனுடைய பாத்திரங்களைக் கொண்டுள்ளார்**

- *இயேசு சிருஷ்டிகர் (கொலோசெயர் 1:16; எபிரெயர் 1:10).*

- *இயேசு பாவத்தை மன்னித்தார் (லூக்கா 5:20-24; மாற்கு 2:10, 7:48).*
- *கடைசி நியாயத்தீர்ப்பில் இயேசு நியாயாதிபதியாக இருப்பார் (மத்தேயு 25:31-46; 2 கொரிந்தியர் 5:10).*
- *பிதாவைப் போலவே இயேசுவும் ஆராதிக்கப்படுகிறார் (யோவான் 5:22-23; எபிரேயர் 1:6; வெளிப்படுத்துதல் 5:12-13).*

**பாடம் *7* தேர்வு**

*(1) மேசியாவின் முன்னுரிமை என்ன?*

*(2) "இயேசுவே கர்த்தர்" என்று ஆரம்பகால திருச்சபை கூறியதன் அர்த்தம் என்ன?*

*(3) இயேசு எப்படி தனிப்பட்ட முறையில் தேவனுடைய குமாரனாக இருக்கிறார்?*

*(4) இயேசு மாம்சத்தில் வந்த ஒரு அவதாரம் என்பதன் அர்த்தம் என்ன?*

*(5) இயேசு ஒரு மனிதனாக இருப்பது ஏன் முக்கியம்? (மூன்று காரணங்கள்)*

*(6) இயேசு தேவன் என்பதை நாம் உணர வேண்டியது ஏன் முக்கியம்?*

*(7) ஒரு பலி ஏன் தேவைப்பட்டது?*

*(8) இயேசு ஏன் வேறு முகாந்தரத்தை தெரிந்துகொள்ளாமல் சிலுவையில் மரித்தார்?*

*(9) இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் என்ன?*

## *பாடம் 8*
# *இரட்சிப்பு*

### *பாடத்தின் நோக்கங்கள்*

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *சிலுவை ஏன் பலருக்கு ஒரு இடறலாக இருக்கிறது.*
- *பாவியின் நிலை.*
- *மன்னிப்புக்கான பாவப் பரிகாரத்தின் அவசியம்.*
- *மனந்திரும்புதல் என்பதன் பொருள்.*
- *இரட்சிக்கின்ற விசுவாசத்தின் கூறுகள்.*
- *ஏன் எல்லா ஜனங்களுக்கும் எல்லா பாவங்களுக்கும் பரிகாரம் போதுமானது.*
- *இரட்சிப்பின் தனிப்பட்ட உத்தரவாதத்தின் ஆதாரம்.*
- *பொதுவாக படைப்பின் மீட்பு.*
- *இரட்சிப்பு பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) மாணவர் மனந்திரும்புதல் இல்லாத மதத்தைக் குறித்த பிழையைப் புரிந்துகொள்வார்.*

### *முன்னுரை*

*சங்கீதம் 85-ஐ ஒன்றாகப் படியுங்கள். இரட்சிப்பைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

### *சிலுவை*

*மிக முக்கியமான கிறிஸ்தவ அடையாளச்சின்னம் சிலுவை. சிலுவை அனைத்து வரலாற்றின் மையமான நிகழ்வைக் குறிக்கிறது. இது கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் மற்ற அனைவருக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிக்கிறது.*

சிலுவை பலருக்கும் ஒரு மர்மமாக இருக்கிறது. இயேசு ஏன் மரித்தார் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அவர் நம்மை நேசிப்பதாலும், நம்மை இரட்சிக்க விரும்புவதாலும் அவர் மரித்தார் என்று அவர்கள் கேள்விப்பட்டாலும், அது ஏன் நடக்க வேண்டும் என்று அவர்களுக்குப் புரியவில்லை. "தேவன் நம்மை மன்னிக்க விரும்பினால், ஏன் அவரால் அதை செய்ய முடியவில்லை?" என்று அவர்கள் கேட்கிறார்கள்.

> "தேவனுக்கு முன்பாக ஒரு பாவி எப்படி நீதிமானாக்கப்பட முடியும் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமான ஒரு கேள்வி, ஏனென்றால் நாம் தேவனுக்கு சத்துருக்களாக இருக்கும்போது உண்மையான அமைதி அல்லது பாதுகாப்பான மகிழ்ச்சி இருக்க முடியாது, காலத்திலோ அல்லது நித்தியத்திலோ. இந்த முக்கியமான கேள்வி எவ்வளவு குறைவாகவே புரிந்து கொள்ளப்பட்டது! அதைப் பற்றி பலருக்கு என்ன குழப்பமான யோசனைகள் இருந்தன!
> - John Wesley, "Justification by Faith" என்னும் பிரசங்கத் தலைப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

சிலுவையைப் பற்றிய குழப்பம் ஆரம்பத்திலிருந்தே தொடங்கியது, ஆதிக் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்.[226] தேவன் தம்மை வல்லமையில் காண்பிப்பார் என்று யூதர்கள் நினைத்தார்கள். தங்களுக்குத் தேவையான இரட்சிப்பு அடிமைத்தனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதாக அவர்கள் நினைத்தார்கள், ஆனால் சிலுவை பலவீனத்தையும் தோல்வியையும் காட்டுவதாகத் தோன்றியது.

தேவன் தம்மை ஞானத்தில் காண்பிப்பார் என்று கிரேக்கர்கள் நினைத்தார்கள். தங்களுக்குத் தேவையான இரட்சிப்பு என்பது வாழ்க்கையிலிருந்து சிறந்ததைப் பெறுவது பற்றிய விளக்கம் என்று அவர்கள் நினைத்தார்கள், ஆனால் சிலுவையோ அவர்களுக்கு பைத்தியமாகவும் தோல்வியாகவும் தோன்றியது.

► சிலுவையால் சிலர் ஏன் இடறலடைகிறார்கள்?

[226] 1 கொரிந்தியர் 1:22-23-ஐ வாசிக்கவும்.

*சிலுவை பலருக்கு ஒரு இடறலாகும். பலர் மத நம்பிக்கையுடன் இருக்க தயாராக உள்ளனர். அவர்கள் சில விஷயங்களை நம்பவும், மத பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்கவும், ஆலோசனை பெறவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பாவமன்னிப்புக்கு சிலுவை அவசியம் என்று எண்ணும்போது கோபப்படுகிறார்கள். தேவன் தங்கள் செயல்களையோ அல்லது குணத்தையோ எதிர்க்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். சிலுவை அவர்களுக்கு இடறலாக இருக்கிறது, ஏனென்றால் அவர்கள் மன்னிப்பு தேவைப்படும் பாவிகள் என்கிற அர்த்தத்தைக் கொண்டுள்ளது.*

*சிலுவையில் இயேசுவின் பலி மரணத்தைப் புரிந்து கொள்ள, பாவமுள்ள மனிதனின் நிலையும் தேவனுடைய பரிசுத்த குணமும் ஒரு பெரிய இக்கட்டான நிலையை ஏற்படுத்தியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாவப்பரிகாரம் ஏன் தேவன் மன்னிக்கத்தக்கதாக செய்ய முடிந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

### மனித நிலை

*ஆதாமின் பாவத்தின் காரணமாக, ஒவ்வொரு நபரும் பிறக்கும்போதே தேவனிடமிருந்து பிரிந்திருக்கிறார்கள்.*[227] *அதாவது ஒவ்வொரு நபரும் சுயநலம் கொண்டவர்கள் மற்றும் அவரவர் வழியில் செல்கிறார்கள்.*

*ஒரு நபர் தேர்வு செய்யத் தொடங்கியவுடன், அவர் பாவம் செய்யத் தொடங்குகிறார்.* ***ஒவ்வொரு பாவியும் பல பாவச் செயல்களுக்குக் குற்றவாளியாகிறான்.***[228]

*பாவம் என்பது தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதாகும்.*[229] *தேவன் முற்றிலும் நீதியுள்ளவர் என்பதால், அவர் பாவத்தை மன்னிப்பதில்லை, மேலும் ஒவ்வொரு நபரும் அவர்கள் செய்ததற்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள்.*[230] *எந்தவொரு நபரின் குற்றம் குறித்து அல்லது அவர் அடையும்*

---

[227] *ரோமர் 5:12*

[228] *ரோமர் 3:23-ஐ வாசிக்கவும்.*

[229] *1 யோவான் 3:4; யாக்கோபு 2:10-11*

[230] *2 கொரிந்தியர் 5:10; வெளிப்படுத்தல் 20:12-13*

*தகுதியான நியாயத்தீர்ப்பு குறித்து எந்த கேள்வியும் இல்லை. ஒவ்வொரு பாவியும் ஏற்கனவே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருக்கிறான்.*[231]

***பாவி தேவனுடைய சத்துரு.***[232] *தேவனுக்கு எதிரான குற்றங்கள் நீக்கப்படாவிட்டால், ஒரு பாவி தேவனுடன் உறவு கொள்ள முடியாது.*

*பாவம் செய்தவனும் தேவனோடு உறவாட தகுதியற்ற நிலையில் இருக்கிறான்.* ***பாவி தன் இச்சைகளில் கெட்டுப்போகிறான்.***[233] *அவன் பாவத்திற்கு அடிமையாக இருப்பதால்,* ***பாவம் செய்தவன் தன் நிலையை மாற்றிக் கொள்ள முடியாதவன் ஆகிறான்.***[234]

*அப்படியானால் பாவிக்கு எப்படிப்பட்ட இரட்சிப்பு தேவையாயிருக்கிறது? பாவி குற்றவாளி என்பதால், இரட்சிப்பு என்பது மன்னிப்பு. அவன் தேவனுடைய சத்துரு என்பதால், இரட்சிப்பின் அர்த்தம் ஒப்புரவாகுதல். அவன் கெட்டுப்போனவன் என்பதால், இரட்சிப்பு என்பது சுத்திகரித்தல். அவன் சக்தியற்றவன் என்பதால், இரட்சிப்பு என்பது விடுதலை. இவை பாவிகளுக்குத் தேவையான இரட்சிப்பின் சில அம்சங்கள் மட்டுமே.*

**சிக்கல்**

*மனிதனால் தன் பாவத்திற்கான விலையைத் தானாக செலுத்த முடியவில்லை. ஒரு காரணம் என்னவென்றால், ஏற்கனவே நம்மிடம் உள்ள அனைத்தும் எப்படியும் தேவனுக்கு சொந்தமானது. மிக முக்கியமான காரணம் என்னவென்றால், பாவம் எல்லையற்ற தேவனுக்கு எதிரானது, மேலும் மனிதன் செலுத்துவதற்கு எல்லையற்ற மதிப்பு எதுவும் இல்லை.*

*மனிதன் தன் தேவைக்காக எதுவும் செய்ய முடியாது; எனவே, இரட்சிப்பை அடைய மனிதனுக்கு எந்த தேவையும் அமைக்க*

---

*[231] யோவான் 3:18-19-ஐ வாசிக்கவும்.*
*[232] ரோமர் 5:10*
*[233] எபேசியர் 2:3*
*[234] ரோமர் 5:20, 7:23-ஐ வாசிக்கவும்.*

முடியாது.[235] மனிதனால் தன் சொந்த இரட்சிப்பை நிறைவேற்ற முடிந்திருந்தால், இயேசு சிலுவையில் மரித்திருக்க வேண்டிய அவசியமில்லை.[236]

► தேவன் மன்னிப்பதற்கு விருப்பமுள்ளவராக இருந்தால், அவர் ஏன் சிலுவை இல்லாமல் மன்னிக்கவில்லை?

தேவன் பரிசுத்தமானவர் என்பதால், அவர் சத்தியம் மற்றும் நீதியின்படி நியாயத்தீர்ப்பளிக்க வேண்டும்.[237] *பாவப்பரிகாரம்* என்ற சொல், இயேசுவின் பலியே நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்படுவதற்கான வழி என்பதைக் குறிக்கிறது.

கிறிஸ்துவின் சிலுவைப் பலி நடக்கவில்லை என்றால் கற்பனை செய்து பாருங்கள். பாவப்பரிகாரம் இல்லாமல் தேவன் வெறுமனே பாவங்களை மன்னித்தால் என்னவாகும்?

பாவப்பரிகாரம் இல்லாமல் தேவன் பாவத்தை மன்னித்தால், பாவம் முக்கியமற்றது என்று தோன்றும். தேவன் அநியாயமானவர், பரிசுத்தமற்றவர் என்று தோன்றும். தேவனுடைய பார்வையில் ஒரு நபர் சரியானதைச் செய்வதற்கும் ஒரு நபர் தவறு செய்வதற்கும் சிறிய வித்தியாசம் மட்டுமே என்று தோன்றும்.

பாவமன்னிப்பு பாவப்பரிகாரம் இல்லாமல் இருக்குமானால், தேவனை நீதியும் பரிசுத்தமும் கொண்ட தேவனாக ஆராதிக்க முடியாது. பிராயச்சித்தம் இல்லாத பாவமன்னிப்பு இறுதியில் தேவனைக் கனப்படுத்துவதற்குப் பதிலாக அவரை அவமதிக்கும், ஆகவே அதைச் செய்யலாகாது.

ஆனால் தேவன் அன்பானவர், மன்னிக்க விரும்புகிறார். எல்லா மனித இனத்தையும் பாவ நிலையில் விட்டுவிடவும், நித்தியமாக இழக்கவும் அவர் விரும்பவில்லை, அந்த தண்டனைக்கு அவர்கள் தகுதியுடையவர்களாக இருந்தாலும் கூட தேவன் அவர்களை இழக்க விரும்பவில்லை.

---

[235] கலாத்தியர் 3:21-ஐ வாசிக்கவும்.

[236] கலாத்தியர் 2:21-ஐ வாசிக்கவும்.

[237] ரோமர் 2:5-6

*சிலுவையில் இயேசுவின் பலி தேவையானது என்று எல்லையற்ற மதிப்புள்ள பலி வழங்கியது. **(1) பாவமில்லாதவராக இருப்பதன் மூலம்***[238] *(பூரணமானவர் மற்றும் அவருக்கு இரட்சிப்புத் தேவையில்லை), மற்றும் **(2) தேவனாகவும் மனிதராகவும் இருப்பதன் மூலம் இயேசு தகுதியானவர்**.*

*பாவப்பரிகாரம் பாவமன்னிப்புக்கு அடிப்படையாகத் தேவையானதை வழங்குகிறது. இப்போது மனந்திரும்பி, அவருடைய வாக்குத்தத்தத்தை நம்பும் நபரை தேவன் மன்னிக்க முடியும். சிலுவையின் பலியைப் புரிந்துகொள்ளும் எவரும் பாவம் தேவனுக்குப் பெரியதல்ல என்று நினைக்க முடியாது.*

*வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிற பாவியை நீதியுள்ள தேவன் நீதிமான் என்று எண்ணுகிற வழியைப் பாவப்பரிகாரம் வழங்குகிறது.*[239] *ரோமர் 3:20-26 பரிகாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கான தர்க்கரீதியான விளக்கத்தை அளிக்கிறது.*

*தேவன் அளித்த இரட்சிப்பின் வழி முற்றிலும் ஒரே வழி என்று வேதாகமம் சொல்லுகிறது. ஒரு நபர் கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலம்*

> *தேவனுடைய கிருபையை விவரிக்கும் ஒரு அழகான பகுதி பாவப்பரிகாரம் நிகழ்வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இது சங்கீதம் 85. தேவன் எவ்வாறு பாவத்தை மன்னிக்கிறார் என்பதை இது விவரிக்கிறது. அவரது கோபம் முடிவுக்கு வந்ததைப் பற்றி பேசுகிறது. பின்னர் அது மிகவும் சுவாரஸ்யமான அறிக்கைக்கு வருகிறது. அது கூறுகிறது "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்." பரிகாரத்தின் மூலம் இரட்சிப்பைப் பற்றிய அற்புதமான சித்திரம் இது. பாவப்பரிகாரம் இல்லாவிட்டால், நாம் குற்றவாளிகள் என்கிற சத்தியத்தால் தேவனுடைய இரக்கமானது மட்டுப்படுத்தப்படும். தேவனுடைய நீதி சமாதானத்தை அனுமதிப்பதற்குப் பதிலாக நம்மை அவருடைய சத்துருக்களாக்கும்.*

[238] *2 கொரிந்தியர் 5:21*
[239] *ரோமர் 3:26-ஐ வாசிக்கவும்.*

கிருபையால் கிடைக்கப்பெறும் இரட்சிப்பை நிராகரித்தால், அவர் இரட்சிக்கப்பட முடியாது.[240]

இதனாலேயே, கிருபையால் மட்டுமே இரட்சிப்பு என்னும் கோட்பாட்டை அறிந்து கொள்வது முக்கியம், அது விசுவாசத்தால் மட்டுமே அடையப்படுகிறது. இரட்சிப்பு என்பது கிருபையால் மட்டுமே, ஏனென்றால் அதை சம்பாதிப்பதற்கோ அல்லது அதை அடைய தகுதி பெறுவதற்கோ நாம் எதுவும் செய்ய முடியாது. அது விசுவாசத்தினால் மட்டுமே, ஏனென்றால் அதை நிறைவேற்றுவதற்கு நாம் எதுவும் செய்ய முடியாது. தேவனுடைய வாக்குத்தத்தத்தை மட்டுமே நாம் நம்ப முடியும்.

► ஒரு நபரின் இரட்சிப்பை நோக்கிய முதல் படியை வைப்பது யார், தேவனா அல்லது அந்த நபரா?

## முதல் கிருபை

பாவியை இரட்சிப்புக்குக் கொண்டுவருவதற்கான முதல் படிகளை தேவன் எடுத்துள்ளார். சிலுவையில் இயேசுவின் பலியை வழங்குவதன் மூலம் அவர் பாவத்தை மன்னிக்கும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார். இப்போது தேவனுடைய கிருபை பாவியின் இருதயத்தை அடைந்து, அவனது பாவங்களைக் குறித்து அவனைக் கண்டித்து உணர்த்தி, பாவமன்னிப்பை விரும்பும்படிச் செய்கிறது.[241] பாவம் செய்பவர் தேவனுடைய உதவி இல்லாமல் தனது பாவங்களை விட்டுவிட சக்தியற்றவராக இருப்பார்.[242] தேவன் பாவிக்கு நற்செய்திக்கு பதிலளிக்கும் திறனைக் கொடுக்கிறார். ஒரு நபர் இரட்சிக்கப்படவில்லை என்றால், அது அவருக்கு கிருபை இல்லாததால் அல்ல, ஆனால் தேவன் அவருக்குக் கொடுத்த கிருபைக்கு அவர் பதிலளிக்காததால் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

---

[240] மாற்கு 16:15-16; அப்போஸ்தலர் 4:12; எபிரெயர் 2:3-ஐ வாசிக்கவும்.
[241] தீத்து 2:11; யோவான் 1:9; ரோமர் 1:20-ஐ வாசிக்கவும்.
[242] யோவான் 6:44

*முழு உலகத்தின் பாவங்களுக்காக இயேசு மரித்தார், மேலும் ஒவ்வொரு நபரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*[243] *தேவனுடைய கிருபை ஒவ்வொரு நபருக்கும் பதிலளிக்கும் திறனை அளிக்கிறது, ஆனால் அவர் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. அதனால்தான் தேவன் பாவியை மனந்திரும்பவும் விசுவாசிக்கவும் தேர்ந்தெடுக்கிறார்.*[244]

### மனந்திரும்புதல்

► *மனந்திரும்புதல் என்றால் என்ன?*

*மனந்திரும்புதல் என்றால், ஒரு பாவி தன்னை குற்றவாளியாகவும், தண்டனைக்கு தகுதியானவராகவும் பார்க்கிறான், மேலும் அவன் தனது பாவங்களை விட்டுவிட தயாராக இருக்கிறான்.*

> *துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார் (ஏசாயா 55:7).*

*மனந்திரும்புதல் என்பது ஒரு பாவி தன் வாழ்க்கையை சரிசெய்து, தேவன் தன்னை மன்னிக்கும் முன் தன்னை நீதிமானாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமல்ல. அது சாத்தியமற்றது, ஆனால் பாவி தனது பாவங்களிலிருந்து அவனை விடுவிக்க தேவன் தயாராக இருக்க வேண்டும்.*

► *இரட்சிப்பு கிருபையால் பெறப்படுகிறது, எனவே இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் ஏன் அவசியம்?*

*மன்னிப்புக்கு விசுவாசம் மட்டுமே தேவை, ஆனால் இரட்சிப்புக்கான விசுவாசம் மனந்திரும்பாமல் இருக்க முடியாது. ஒருவன் மனந்திரும்ப விரும்பவில்லை என்றால், அவன் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட விரும்புவதில்லை.*

---

*[243] 2 பேதுரு 3:9; 1 யோவான் 2:2; 1 தீமோத்தேயு 4:10-ஐ வாசிக்கவும்.*
*[244] மாற்கு 1:15*

*மனந்திரும்பாமல் பாவத்தில் தொடரும் ஜனங்களைக் தேவன் மன்னித்தால், அது அவரை பூமியின் நீதியுள்ள நியாயாதிபதியாக இருப்பதற்கு அவமதிப்பைக் கொண்டுவரும். மனந்திரும்புதல் அவசியம், ஏனென்றால் ஒருவர் மனந்திரும்பவில்லை என்றால், அவர் தனது பாவத்தின் தீமையை ஒப்புக்கொள்ளவில்லை என்றர்த்தமாகும். அவர் ஏன் பாவத்தை விட்டுவிட வேண்டும் என்று அவர் பார்க்கவில்லை என்றால், அவருக்கு ஏன் பாவமன்னிப்பு தேவை என்பதையும் அவர் பார்க்கிறதில்லை.*

*ஒரு நபர் தன்னை உண்மையான குற்றவாளியாகவும், சாக்குப்போக்கு இல்லாமல், தண்டனைக்கு தகுதியானவராகவும் பார்க்கவில்லை என்றால், அவர் மனந்திரும்பவில்லை. அவர் ஒரு பாவி என்று ஒப்புக்கொண்டாலும், தொடர்ந்து பாவம் செய்ய அனுமதிக்கும் ஒரு மதத்தை விரும்பினால், அவர் மனந்திரும்பவில்லை என்றர்த்தமாகும், ஏனென்றால் அவர் எது அவரை குற்றவாளியாக்கியதோ அதையேத் தொடர்ந்து செய்ய விரும்புகிறார்.*

## இரட்சிக்கிற விசுவாசம்

► *ஒருவருக்கு இரட்சிக்கிற விசுவாசம் இருந்தால், அவர் விசுவாசிக்கிறார் என்பதற்கு என்ன அர்த்தம்?*

***(1) அவர் தன்னை நியாயப்படுத்த எதுவும் செய்ய முடியாது என்று பார்க்கிறார்.***

> *கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபேசியர் 2:8-9).*

*தன்னால் செய்ய முடியாத எதுவும் (செயல்படுவது) ஓரளவு கூட இரட்சிக்கப்படுவதற்குத் தகுதியுடையவனாகிவிடாது என்பதை அவன் உணர்கிறான்.*

***(2) கிறிஸ்துவின் பலி அவருடைய மன்னிப்புக்கு போதுமானது என்று அவர் நம்புகிறார்.***

> *நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார் (1 யோவான் 2:2).*

*கிருபாதாரபலி* என்பதன் அர்த்தம் நமது பாவமன்னிப்பை சாத்தியமாக்கும் பலி என்பதாகும். நம்முடைய மன்னிப்புக்காக கிறிஸ்துவின் பலிக்கு கூடுதலாக எதுவும் தேவையில்லை.

***(3) இயேசு பாவத்தையும் மரணத்தையும் வென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று அவர் நம்புகிறார்.***

> *... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் (ரோமர் 10:9).*

பாவமும் மரணமும் தோற்கடிக்கப்படக்கூடிய ஒரே வழி இயேசு உயிர்த்தெழுப்பப்படுவதன் மூலம் மட்டுமே. இயேசு மீண்டும் உயிர்த்தெழுந்தார், இரண்டின் மீதும் தனது முழுமையான வெற்றியை நிரூபித்தார்.

***(4) தேவன் விசுவாசத்தினுடைய நிபந்தனையின் பேரில் மட்டுமே அவரை மன்னிப்பார் என்று அவர் நம்புகிறார்.***

> *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9).*

வேறு நிபந்தனைகள் இருப்பதாக அவர் நினைத்தால், அவர் கிருபையால் முழுமையாக இரட்சிக்கப்படுவதற்குப் பதிலாக, ஓரளவு கிரியைகளால் இரட்சிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கிறார்.

***உத்திரவாதம்***

► *தான் இரட்சிக்கப்பட்டதை ஒரு நபர் எப்படி உறுதியாக அறிந்து கொள்ள முடியும்?*

*சிலர் தங்கள் உணர்வுகளைச் சார்ந்து இருக்கிறார்கள், ஆனால் உணர்வுகள் மாறக்கூடியவை மற்றும் தவறாக வழிநடத்தும்.*

*நாம் இரட்சிக்கப்பட்டோம் என்பதை உறுதியாக அறிந்துகொள்ள முடியும் என்று வேதாகமம் சொல்லுகிறது. தேவன் நம்மை ஏற்றுக்கொண்டார் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கலாம். நாம் பயத்தில் வாழ வேண்டியதில்லை, ஏனென்றால் நாம் தேவனுடைய சுவிகாரபுத்திரர்கள் என்று தேவனுடைய ஆவி நமக்கு உறுதியளிக்கிறது.*[245]

*இந்த உத்தரவாதம் மிகவும் முழுமையானது ஆகவே நியாயத்தீர்ப்பு நாளுக்கு நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை.*[246] *சிலர் தாங்கள் பரலோகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்று நம்புகிறார்கள் என்று கூறுகிறார்கள், ஆனால் அதைவிட சிறந்த உறுதியை நாம் பெற முடியும். பொதுவாக மனிதகுலத்திற்கு இரட்சிப்பு வழங்கப்படுகிறது என்று நம்புவது மட்டும் போதாது; ஒரு நபர் தாமே இரட்சிக்கப்பட்டதை அறிந்திருக்க வேண்டும்.*

*மாற்றப்பட்ட வாழ்க்கை ஒரு நபர் இரட்சிக்கப்படுவதற்கான சான்று, ஆனால் அந்த ஆதாரம் முதல் கணத்தில் இருப்பதில்லை. இரட்சிப்பின் முடிவுகள் தோன்றுவதற்கு நேரம் கிடைக்கவில்லை. எனவே, மனந்திரும்புதலின் போது, மாற்றப்பட்ட வாழ்க்கை உறுதிப்பாட்டின் அடிப்படை அல்ல.*

*விசுவாசி இரட்சிப்புக்கான வேத வழியைப் பின்பற்றியிருப்பதை அறிந்துகொள்வதன் மூலம் தனது இரட்சிப்பைப் பற்றி உறுதியாக இருக்க முடியும். ஒருவர் உண்மையிலேயே மனந்திரும்பி, வேதாகமம் சொல்லுகிறபடி விசுவாசித்தால், தேவன் அவரை மன்னிக்கிறார் என்று*

---

*[245] ரோமர் 8:15-16*

*[246] 1 யோவான் 4:17-ஐ வாசிக்கவும்.*

*நம்புவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஒருவர் மனந்திரும்பி விசுவாசிக்கும்போது, அவர் தேவனுடைய பிள்ளையாகிவிட்டார் என்று தேவன் அவருடைய ஆவியால் சாட்சியை அளிக்கிறார்.*

*ஒரு நபர் உண்மையில் மனந்திரும்பாமல் இருக்கும் போது தான் இரட்சிக்கப்பட்டதாக உணர முயற்சித்தால், அவர் குழப்பமடைந்து தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளலாம்.*

*ஒரு நபர் (1) மெய்யாகவே மனந்திரும்பி, (2) வேதத்திலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தை நம்பி, (3) ஆவியியானவரின் சாட்சியைப் பெற்றால், அவர் ஏமாற்றப்பட மாட்டார். இந்த உறுதியானது தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது, இது முற்றிலும் நம்பகமானது. தேவன் எப்போதும் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார்.*

### ***இரட்சிப்பின் அம்சங்களுக்கான 10 வார்த்தைகள்***

***ஒப்புரவாக்குதல்**: இந்த வார்த்தையின் அர்த்தம் எதிரிகளாக இருந்தவர்கள் மீண்டும் சமாதானம் செய்துகொள்ளுவதைக் குறிக்கிறது. இரட்சிப்பில், நாம் தேவனுடன் சமாதானம் கொண்டிருக்கிறோம்.*[247]

***பரிகாரம்**: இந்த வார்த்தையின் அர்த்தம் ஒரு பதிவு குறிப்பு அழிக்கப்பட்டது. இரட்சிப்பில், நம்முடைய பாவங்களின் பதிவு குறிப்பு அழிக்கப்படுகிறது.*[248]

***கிருபாதாரபலி**: இந்த வார்த்தை ஒருவரின் கோபத்தைத் தணிக்க கொடுக்கப்பட்ட ஒன்றைக் குறிக்கிறது. இரட்சிப்பில், இயேசுவின் பலியானது நமக்கு எதிராக இருந்த தேவனுடைய நீதியான கோபத்தைத் தணிக்கிறது.*[249]

***விடுதலை**: இந்த வார்த்தையின் அர்த்தம் ஒருவர் மற்றொருவரின் சக்தியிலிருந்து மீட்கப்படுகிறார். இரட்சிப்பில்,*

---

*[247] 2 கொரிந்தியர் 5:19; ரோமர் 5:1-ஐ வாசிக்கவும். (இந்த வசனங்கள் நீதிமானாக்கப்படுதல் மற்றும் ஒப்புரவாகுதல் ஆகிய இரண்டையும் பற்றி பேசுகின்றன.)*

*[248] எபிரெயர் 8:12-ஐ வாசிக்கவும்.*

*[249] 1 யோவான் 2:2-ஐ வாசிக்கவும்.*

*நாம் சாத்தான் மற்றும் பாவத்தின் வல்லமையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளோம்.*[250]

***மீட்பு***: *இந்த வார்த்தையின் அர்த்தம் யாரோ ஒருவர் சுதந்திரமாக இருக்கத்தக்கதாக ஒரு விலை கொடுக்கப்பட்டது. இரட்சிப்பில், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் நாம் விடுபடுவதற்கு இயேசுவின் மரணம் விலையாக கொடுக்கப்பட்டது.*[251]

***நீதிமானாக்கப்படுதல்***: *இந்த வார்த்தையின் அர்த்தம் ஒருவர் நீதிமான் அல்லது குற்றமற்றவர் என்று அறிவிக்கப்படுகிறார். இரட்சிப்பில், ஒரு குற்றவாளியான பாவி நீதியுள்ளவனாக எண்ணப்படுகிறான், ஏனென்றால் இயேசு அவனுடைய இடத்தில் பாடுபட்டார்.*[252]

***பரிசுத்தமாக்குதல்***: *இந்த வார்த்தையின் அர்த்தம் ஒருவர் பரிசுத்தமாக்கப்படுகிறார். இரட்சிப்பில், ஒரு பாவி தேவனுடைய பரிசுத்த பிள்ளையாக மாற்றப்படுகிறார்.*[253]

***புத்திரசுவிகாரம்***: *இந்த வார்த்தையின் அர்த்தம் ஒருவர் மற்றொருவரின் சட்டப்பூர்வ பிள்ளையாக மாறுகிறார். இரட்சிப்பில் நாம் தேவனுடையப் பிள்ளைகளாக மாறுகிறோம்.*[254]

***மறுஜென்மம்/புதிய பிறப்பு***: *இந்த வார்த்தையின் அர்த்தம் ஒருவர் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குகிறார். இரட்சிப்பில் விசுவாசி ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குகிறார்.*[255]

---

[250] *லூக்கா 1:74; ரோமர் 6:6, 12-18-ஐ வாசிக்கவும்.*

[251] *எபேசியர் 1:7; தீத்து 2:14-ஐ வாசிக்கவும்.*

[252] *2 கொரிந்தியர் 5:19; ரோமர் 5:1-ஐ வாசிக்கவும். (இந்த வசனங்கள் நீதிமானாக்கப்படுதல் மற்றும் ஒப்புரவாகுதல் ஆகிய இரண்டையும் பற்றி பேசுகின்றன.)*

[253] *பல நிருபங்கள் விசுவாசிகளை "பரிசுத்தவான்கள்" என்று குறிப்பிடுகின்றன.” (எபேசியர் 1:1, கொலோசெயர் 1:1, பிலிப்பியர் 1:1. -ஐ வாசிக்கவும்)*

[254] *யோவான் 1:12; ரோமர் 8:15-ஐ வாசிக்கவும்.*

[255] *எபேசியர் 2:1; யோவான் 7:38-39; கலாத்தியர் 4:29; யோவான் 3:5-ஐ வாசிக்கவும்.*

***முத்திரையிடுதல்***: இந்த வார்த்தையின் பொருள் யார் அதைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறார் என்பதைக் காண்பிக்க ஏதாவது அடையாளப்படுத்தப்படுகிறது. இரட்சிப்பில், நம்மில் உள்ள பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவனுக்கு சொந்தமானவர் என்று அடையாளப்படுத்துகிறார்.[256]

### தவிர்க்க வேண்டிய பிழை: மனந்திரும்புதல் இல்லாத மதம்

*வகுப்புத் தலைவருக்கான குறிப்பு: வகுப்பின் ஒரு உறுப்பினர் இந்தப் பகுதியை விளக்கலாம்.*

விசுவாசத்தின் மூலம் கிருபையால் இரட்சிப்பு என்று கேட்கும் போது, தான் இரட்சிக்கப்பட்டதாக எளிதில் நினைக்கும் ஒரு வகை நபர் உண்டு. அவர் உண்மையிலேயே மனந்திரும்பவில்லை, ஏனென்றால் அவர் தனக்குத் தேவையானதைக் காணவில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தகுதியான ஒரு பாவியாக அவர் தன்னை ஒருபோதும் பார்க்கவில்லை. கிருபை என்பது தன் வழியே தனது இஷ்டப்படிச் செல்லலாம் என்று நினைக்கிறார். அவர் கிறிஸ்தவத்தின் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதால், அவர் ஒரு கிறிஸ்தவர் என்று நினைக்கிறார், ஆனால் அவருக்குள் எந்த மாற்றமும் இல்லை. அவர் தனது சொந்த விருப்பத்தை ஒருபோதும் சமர்ப்பிக்கவில்லை; மாறாக, அவர் தேவனை தனது வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டார், இன்னும் பெரும்பாலும் தனது சொந்த விருப்பத்தின்படியே வாழ்கிறார். இது வேத விளக்கத்தின்படி, தேவனுடன் ஒரு இரட்சிப்பு உறவின் ஆரம்பம் அல்ல.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

### நம்பிக்கைகளின் அறிக்கை

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை உலகின் பாவங்களுக்கு பரிகாரம் அளிக்கின்றன. ஒவ்வொரு நபரும் பாவத்தின் குற்றவாளி

---

[256] *எபேசியர் 1:13-ஐ வாசிக்கவும்.*

*மற்றும் தன்னை இரட்சித்துக்கொள்ள இயலாது. மனந்திரும்பும் ஒவ்வொரு பாவியும் விசுவாசத்தால் தேவனுடைய கிருபையைப் பெற முடியும். விசுவாசி மன்னிக்கப்பட்டு பாவத்தின் வல்லமை மற்றும் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் விசுவாசியை ஒரு பாவி என்பதிலிருந்து தேவனுடைய பரிசுத்த வழிபாட்டாளராக மாற்றுகிறார். இரட்சிப்புக்கு வேறு வழி இல்லை. பொதுவாக படைப்பு மீட்கப்பட்டு இறுதியில் தேவனால் மீட்டெடுக்கப்படும்.*

### *பாடம் 8 வீட்டுப்பாடங்கள்*

*(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *எபேசியர் 2:1-10*
- *ஏசாயா 1:11-18*
- *சங்கீதம் 51*
- *ரோமர் 8:19-25*
- *ரோமர் 3:20-26*

*(2) தேர்வு: பாடம் 8-க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

## பழைய ஏற்பாட்டில் இரட்சிப்பு

*வகுப்புத் தலைவருக்கான குறிப்பு: இந்தப் பிரிவும் அடுத்த பிரிவும் விருப்பமானவை. இந்த தலைப்புகளில் உறுப்பினர்கள் ஆர்வமாக இருந்தால் வகுப்பு அவற்றை கற்கலாம்.*

பழைய ஏற்பாட்டில், தேவன் பலிகளுடன் கூடிய ஆராதனை முறையை வழங்கினார். இயேசுவின் மரணம் கொடுத்தது போல் பலிகள் இரட்சிப்பை அளிக்கவில்லை. *"காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே"*[257] என்று வேதாகமம் சொல்லுகிறது. அப்படியென்றால் ஏன் பலி கொடுக்கப்பட்டது? அவை எதிர்காலத்தில் இருக்கும் கிறிஸ்துவின் பலியை அடையாளப்படுத்தும் ஆராதனையின் வடிவங்களாக இருந்தன.[258]

புதிய ஏற்பாட்டு காலம் வரை இரட்சிப்பு கிடைக்கவில்லை என்று அர்த்தமல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசத்தின் மூலம் கிருபையால் நீதிமானாக்கப்படுதல் என்ற கோட்பாட்டை விளக்கியபோது, அது ஒரு புதிய யோசனையல்ல என்பதைக் காட்ட ஆபிரகாம் மற்றும் தாவீதின் உதாரணங்களைக் கொடுத்தார்.[259] நிக்கோதேமு பழைய ஏற்பாட்டின் போதகராக இருந்ததால், புதிய பிறப்பைப் பற்றி ஏற்கனவே அறிந்திருக்க வேண்டும் என்று இயேசு கூறினார்.[260] பழைய ஏற்பாட்டு வசனங்கள் இரட்சிப்பைக் குறித்து அவரை ஞானமுள்ளவனாக மாற்றும் என்று பவுல் தீமோத்தேயுவிடம் கூறினார்.[261] எனவே பழைய ஏற்பாட்டிலும் நற்செய்தி இருந்தது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் கிருபையைப் புரிந்துகொண்ட சிலர் இருந்தனர். பரிகாரத்தின் விவரங்கள் அல்லது அது எவ்வாறு செயல்படும் என்பது அவர்களுக்குத் தெரியாது, ஆனால் மன்னிப்புக்கான ஒரு அடிப்படையை தேவன்

---

[257] *எபிரெயர் 10:4*
[258] *எபிரெயர் 10:1*
[259] *ரோமர் 4:1-8*
[260] *யோவான் 3:10*
[261] *2 தீமோத்தேயு 3:15*

வழங்குகிறார் என்று அவர்கள் நம்பினர். இன்று நாம் ஆராதனை முறைகளைப் போலவே (உதாரணமாக, கர்த்தருடைய இராப்போஜனம்) அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் வடிவமாக பலிகள் இருந்தன. விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் வராவிட்டால் பலிகள் பயனற்றவை, அதே போல் நம் ஆராதனை முறைகள் தேவனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இருதயம் மற்றும் வாழ்க்கையின் வெளிப்பாடுகளாக இல்லாவிட்டால் அவை பயனற்றவை. சங்கீதம் 51 மற்றும் ஏசாயா 11:1-18 ஆகியவை பழைய ஏற்பாட்டு காலங்களில் மனந்திரும்புதலும் விசுவாசமும் முக்கியமானவை என்பதைக் காட்டுகின்றன.

### சகல சிருஷ்டிப்பின் இரட்சிப்பு

முதல் ஜனங்கள் பாவம் செய்த போது, அனைத்து சிருஷ்டிகள் மீது ஒரு சாபம் வந்தது.[262] இரட்சிப்பு முடிந்ததும், சிருஷ்டிப்பு மீட்டெடுக்கப்படும்.

இரட்சிப்பு ஆவிக்குரிய புதுப்பித்தலுடன் தொடங்குகிறது. விசுவாசிகள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள், அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தில் வாழ்கிறார்கள். இருப்பினும், பாவத்தினுடைய சாபத்தின் சரீர அம்சங்களிலிருந்து அவர்கள் இன்னும் விடுதலையை அனுபவிக்கவில்லை. அவர்கள் இன்னும் வயதாகின்ற மற்றும் மரிக்கும் சரீரங்களையேக் கொண்டுள்ளனர்.

இயற்கை இன்னும் பாவத்தின் சாபத்தில் உள்ளது. தேவன் முதலில் படைத்த விதத்தில் நாம் உலகைப் பார்க்கவில்லை. தீங்கு விளைவிக்கும் உயிரினங்கள் மற்றும் ஒன்றோடொன்று முரண்படும் உயிரினங்களின் இயற்கையை நாம் காண்கிறோம். நம் உலகில், மற்றவர்கள் வாழ பல உயிரினங்கள் மரிக்க வேண்டும்.

[262] ஆதியாகமம் 3:17

*அனைத்து சிருஷ்டிப்புகளும் புதுப்பிக்கப்படும் காலம் வருகிறது.*[263] *ரோமர் 8:18-25 பாவத்தின் சாபத்திலிருந்து விடுபட்ட உலகத்தின் கிறிஸ்தவ நம்பிக்கையை விவரிக்கிறது.*

### பாடம் 8 தேர்வு

*(1) சிலுவை ஏன் பலருக்கு ஒரு இடறலாக இருக்கிறது?*

*(2) ஒரு பாவியினுடைய நிலையின் நான்கு அம்சங்கள் யாவை?*

*(3) பரிகாரம் இல்லாமல் மன்னிப்பது ஏன் தேவனை அவமதிக்கிறதாய் இருக்கிறது?*

*(4) மனந்திரும்புதல் என்றால் என்ன?*

*(5) ஒருவருக்கு இரட்சிப்பின் விசுவாசம் உண்டெனில், அவர் விசுவாசிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?*

*(6) எந்த இரு வழிகளில் பலியாக இருக்கத்தக்கதாக இயேசு தனித்துவமாக தகுதி பெற்றார்?*

*(7) தான் இரட்சிக்கப்பட்டதை ஒரு நபர் எப்படி உறுதியாக அறிந்துகொள்ள முடியும்?*

*(8) இரட்சிப்பின் சொற்களை சரியான சொற்றொடர்களுடன் பொருத்துக:*

| | | | |
|---|---|---|---|
| __ | மீட்பு | அ | விலை கொடுக்கப்பட்டது |
| __ | பரிசுத்தமாக்குதல் | ஆ | நீதிமான்களாக எண்ணப்பட்டனர் |
| __ | பரிகாரம் | இ | அடையாளச் சின்னம் |
| __ | விடுதலை | ஈ | சமாதானம் |
| __ | முத்திரையிடுதல் | உ | கோபம் திரும்பியது |

[263] வெளிப்படுத்தல் *21:1;* எபிரெயர் *1:10-12*

| | | | |
|---|---|---|---|
| __ | ஒப்புரவாக்குதல் | ஊ | சுத்தமான பதிவு |
| __ | கிருபாதாரபலி | எ | மீட்கப்பட்டது |
| __ | புத்திரசுவிகாரம் | ஏ | பரிசுத்தப்படுத்தினார் |
| __ | மறுஜென்மம்/புதிய பிறப்பு | ஐ | மகனாக மாறுதல் |
| __ | நீதிமானாக்கப்படுதல் | ஒ | புதிய வாழ்க்கை |

## பாடம் 9

# இரட்சிப்பின் பிரச்சினைகள்

### பாடத்தின் நோக்கங்கள்

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *பாவத்தின் மீது ஒரு விசுவாசியின் வெற்றியின் தனிச்சலுகை மற்றும் முக்கியத்துவம்.*
- *வெற்றிகரமான வாழ்க்கைக்கு தேவன் அருளும் கிருபை.*
- *கிறிஸ்துவுடனான உறவில் இருந்து வரும் ஆவிக்குரிய வாழ்க்கை.*
- *கிருபையிலிருந்து விழுதல் குறித்ததான வேத எச்சரிக்கைகள்.*
- *குறிப்பிட்ட இரட்சிப்பின் பிரச்சனைகளைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) பாவத்தின் மீதான வெற்றியில் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மாணவருக்கு இருக்கும்.*

### முன்னுரை

*ரோமர் 6-ஆம் அதிகாரத்தை ஒன்றாகப் படியுங்கள். இரட்சிப்பின் விளைவுகளைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

### இரட்சிப்பின் சான்று

இரட்சிப்பின் தனிப்பட்ட உத்தரவாதம் *1* யோவான் நிருபத்தின் முக்கிய கருப்பொருள்களில் ஒன்றாகும். இந்த கடிதத்தை எழுதுவதற்கான காரணத்தை யோவான் இவ்வாறு கூறினார்; "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும்,

*தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (5:13).*

► *ஒரு நபர் இரட்சிக்கப்பட்டிருக்கிறாரா என்பதில் சந்தேகம் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?*

*ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டதற்கான உறுதி தேவைப்படும் நேரங்கள் இருக்கும் என்பதை அப்போஸ்தலன் அறிந்திருந்தார். ஒரு விசுவாசி தனது உறுதியை ஆதாரமாகக் கொண்ட சான்றைத் தேடுவது சரியானது என்று அவர் காண்பிக்கிறார். நிருபம் முழுவதும், "அதினாலே அறிந்திருக்கிறோம்"[264] என்று கூறி, சில சான்றுகளின் உதாரணங்களைக் கொடுத்தார். விசுவாசிகள் தங்கள் இருதயங்களுக்கு உறுதியளிக்க இந்த ஆதாரத்தைப் பயன்படுத்தலாம் என்று அவர் கூறினார்.[265]*

*1 யோவானின் நிருபம் முழுவதும் மிகவும் வலியுறுத்தப்படும் ஒரு விசுவாசியின் பண்பு பாவத்தின் மீதான வெற்றியாகும். ஒரு விசுவாசியின் இயல்பான நிலை மனப்பூர்வமாய் பாவத்திலிருந்து விடுதலையான வாழ்க்கை. அப்போஸ்தலன் இவ்வாறு கூறினார், "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" (2:1). இக்கூற்றின் மூலம், அப்போஸ்தலன், விசுவாசி மனப்பூர்வமாய் பாவம் செய்யாமல் வாழ வேண்டும் என்பதைக் காட்டுகிறார், மேலும் வெற்றிகரமான வாழ்க்கையின் முக்கியத்துவத்தை அவர்களுக்குக் காண்பிக்கவே எழுதுவதாகக் கூறுகிறார்.*

> *ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின்*

[264] *1 யோவான் 2:3, 2:5, 2:29, 3:10, 3:14, 3:19, 3:24, 5:2, 5:18*
[265] *1 யோவான் 1:9*

*பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார் (2:1b-2) .*

தேவை இல்லாவிட்டாலும், பாவம் ஏற்படலாம் என்பதை இங்கே அவர் அங்கீகரிக்கிறார். ஒரு விசுவாசி பாவம் செய்தால், கிறிஸ்துவின் பலி அந்த பாவத்திற்கு பரிகாரம் செய்யும் என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். ஒரு விசுவாசி மீண்டும் பாவத்திற்குச் சென்று மனந்திரும்பாமல் தானாகவே மன்னிக்கப்பட முடியும் என்று அர்த்தமல்ல. இந்த வசனம் பாவப்பரிகார பலியானது உலகம் முழுவதற்கும் கிடைக்கும் என எளிமையாகச் சொல்லுகிறது. முழு உலகமும் தானாக இரட்சிக்கப்படுவதில்லை என்பதை நாம் அறிவோம். பாவம் செய்தவர் ஒரு காலத்தில் விசுவாசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் மன்னிக்கப்படுவதற்கு மனந்திரும்புதல் அவசியம். ஒரு விசுவாசி பாவம் செய்தால், அவர் தேவனுடனான தனது உறவுக்காக வருந்த வேண்டும்.

1 யோவானின் பின்வரும் வசனங்கள், மனப்பூர்வமாய் செய்த பாவத்தின் மீதான வெற்றியே ஒரு விசுவாசியின் பெரிய வேறுபாடு என்பதைக் காட்டுகிறது. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்றொடர்கள் சேர்க்கப்பட்ட கருத்துகள்.

> *அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம் [தேவனுக்கு கீழ்ப்படியாத ஒருவருக்கு இந்த ஆதாரம் இல்லை]. அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை (2:3-4).*
>
> *பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும்*

*அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை (3:4-6).*

*பிள்ளைகளே நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போலத் [ஒருவர் தொடர்ந்து பாவம் செய்யும்போது எப்படியோ நீதிமான்களாக எண்ணப்படவில்லை] தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (3:7-8).*

> *"பாவத்தால், இந்த வார்த்தையின் பொதுவான பயன்பாட்டின்படி, வெளிப்புற பாவத்தை நான் இங்கே குறிப்பிடுகிறேன்: வெளிப்படுத்தப்பட்ட, எழுதப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தை தானாக முன்வந்து மீறுதல்; தேவனுடைய எந்தவொரு கட்டளையும், அந்த நேரத்தில் அது மீறப்பட்டதாக அறியப்படுகிறது. 'தேவனால் பிறந்தவர்,' அவர் நம்பிக்கையிலும் அன்பிலும், ஜெபம் மற்றும் நன்றி உணர்விலும் வாழும் போது, இந்த வழியில் பாவம் செய்யாமல் இருப்பதோடு அல்லாமல், ஆனால் அவரால் செய்ய முடியாது. கிறிஸ்து மூலம் தேவனை நம்பி, அவரை நேசித்து, அவர் முன் தனது இருதயத்தை ஊற்றும் வரை, அவர் தேவனுடைய எந்தக் கட்டளையையும் தானாக முன்வந்து மீற முடியாது."*
> *- John Wesley, "The Great Privilege of Those That Are Born of God"*

*தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான் (3:9).*

*அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; [கிறிஸ்துவில் நிலைத்திருப்பதை*

*நிறுத்தினால், அவன் பாவம் செய்வான். அவன் பாவம் செய்தால், அவன் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதை நிறுத்திவிட்டான்]. அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம் (3:24).*

*நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (5:2-3). [உண்மையான அன்பு கீழ்ப்படிதலைத் தூண்டுகிறது. கீழ்ப்படியாமை அன்பின் பற்றாக்குறையைக் காட்டுகிறது.]*

*தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; [அதன் சோதனையையும் ஆவியையும்] நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (5:4).*

*தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான் [பாதுகாக்கிறான்], பொல்லாங்கன் அவனைத் தொடான் (5:18).*

► *இந்த வசனங்களில் ஒரு விசுவாசியின் என்ன தனித்துவமான பண்பு தெளிவாக உள்ளது?*

*இந்த வசனங்களிலிருந்து, விசுவாசிகளின் தனித்துவமான பண்பு, அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. பாவத்தின் மீதான வெற்றி விசுவாசிகளின் பெரும் பாக்கியம்.*

### *1 யோவான் 1:8 மீதான குறிப்பு*

*சில சமயங்களில், ஒரு விசுவாசி மனப்பூர்வமாய் பாவத்தின் மீது வெற்றியுடன் வாழ முடியும் என்பதை மறுக்கும் ஜனங்கள் 1 யோவான் 1:8 ஐ மேற்கோள் காட்டுகிறார்கள்: "நமக்குப்*

*பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது." ஆனால் "பாவம் இருக்கிறது" என்றால் என்ன? விசுவாசிகள் கூட மனப்பூர்வமாய் பாவம் செய்கிறார்கள் என்று அர்த்தமா? இது மேலே மேற்கோள் காட்டப்பட்ட அதிகாரம் மூன்றில் உள்ள அறிக்கைகளுடன் ஒத்துப்போகாது. "ஒவ்வொரு விசுவாசியும் உட்பட ஒவ்வொருவரும் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள்" என்று யோவான் முன்பு கூறியிருந்தால், மூன்றாம் அதிகாரத்தில் அந்த அறிக்கைகளை யோவான் எவ்வாறு கூறியிருக்க முடியும்? அது அர்த்தமுள்ளதாக இருக்காது.*

*சந்தர்ப்ப சூழல் அர்த்தத்தைக் காட்டுகிறது. ஏழாவது வசனத்தில், பாவத்திற்கு ஒரு சுத்திகரிப்பு வாக்களிக்கப்பட்டுள்ளது. இந்த சுத்திகரிப்பு "ஒளியில் நடப்பவர்களுக்கு" ஆகும், அதாவது தேவனுக்குக் கீழ்ப்படிந்து சத்தியத்தின்படி நடப்பது. இப்போது தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்பவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் தங்கள் கடந்தகால பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படுகிறார்கள்.*

*ஆனால், தாங்கள் பாவம் செய்துவிட்டதை மறுத்தவர்கள் சிலர், சுத்திகரிப்பு தேவைப்படுபவர்களாக இருக்கலாம். "தங்களுக்குப் பாவம் இல்லை" என்றும், தங்களைத் தாங்களே "வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்றும் கூறுபவர்கள். தாங்கள் ஒருபோதும் பாவம் செய்யவில்லை அல்லது கிறிஸ்து இல்லாமல் தங்கள் பாவப் பிரச்சினையை தீர்த்துக்கொண்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.*

*மீண்டும் ஒன்பதாவது வசனத்தில், மன்னிப்பும் சுத்திகரிப்பும் வாக்களிக்கப்பட்டுள்ளன. பத்தாம் வசனத்தில், "பாவம் செய்யவில்லை" என்று கூறுபவர்கள் தேவனுக்கு முரண்படுகிறார்கள் என்று அவர் மீண்டும் கூறுகிறார்.*

*கிறிஸ்து வழங்கிய சுத்திகரிப்பு மற்றும் மன்னிப்பு தங்களுக்குத் தேவை என்று நினைக்காதவர்களின்–தாங்கள் இரட்சிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று நினைத்தவர்களின் பிழையைத் திருத்த யோவான் எழுதினார். விசுவாசிகள் கூட தொடர்ந்து பாவம் செய்கிறார்கள் என்று அவர் கூறவில்லை,*

*ஏனென்றால் இந்த நிருபத்தில் அவரது முக்கிய வலியுறுத்தல் மற்றும் நேரடி அறிக்கைகள் முரண்படும்.*

### வெற்றியுள்ள வாழ்க்கைக்கு தேவனின் கிருபை

*பரம்பரை சீரழிவு மற்றும் மனித பலவீனம் காரணமாக ஜெயங்கொண்டு வாழ்வது எப்போதும் எளிதானது அல்ல. இதன் காரணமாக, மனப்பூர்வமாய் பாவம் செய்யாமல் வாழ்வது சாத்தியமில்லை என்று பலர் நம்புகிறார்கள். ஆனால் கர்த்தருடைய கிருபையால் இரண்டு பிரச்சனைகளுக்கும் பதில் இருக்கிறது.*

► *பரம்பரை சீரழிவு என்றால் என்ன?*

***பரம்பரை சீரழிவு*** *என்பது மனிதனின் தார்மீக இயல்பின் ஏற்பட்டிருக்கும் சிதைவு ஆகும், இது பிறப்பிலிருந்தே அவனை பாவத்தை நோக்கி இட்டுச் செல்கிறது. மனமாற்றத்திற்குப் பிறகு, ஒரு விசுவாசி பாவத்தை நோக்கிய இந்தப் போக்கோடு போராடுகிறார். ஆனால் தேவன் தினசரி வெற்றிக்கு கிருபை அளிப்பது மட்டுமில்லாமல், ஆனால் பரம்பரை சீரழிவையும் சுத்திகரிக்கிறார்.*[266]

*பாவ சுபாவம் என்பது பூமிக்குரிய வாழ்நாள் முழுவதும் நாம் வாழ வேண்டிய ஒரு நிபந்தனை அல்ல. வெற்றியோடு வாழ, ஒரு விசுவாசி எந்த தனிப்பட்ட ஒதுக்கீடும் இல்லாமல், தன் இருதயத்தை தேவனிடம் அர்ப்பணிக்கும் நிலைக்கு வர வேண்டும். அந்த நேரத்தில், தேவன் அவரது இருதயத்தை சுத்திகரிக்கிறார், அதனால் அவர் தேவனை முழுமையாக நேசிக்க முடியும்.*

► *வியாதி என்றால் என்ன?*

***வியாதிகள்*** *என்பது உடல் அல்லது மன வரம்புகள் அல்லது குறைபாடுகள் ஆகும். ஆதாம் பாவத்தில் வீழ்ந்ததாலும், தொடர்ச்சியான பாவத்தின் மூலம் மனிதகுலத்தின் வீழ்ச்சியினாலும், தேவன் நம்மை வடிவமைத்ததை விட*

---

[266] *1 தெசலோனிக்கேயர் 5:23; 1 யோவான் 1:7; அப்போஸ்தலர் 15:9*

*மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் மற்றும் உணர்ச்சி ரீதியாகவும் நாம் பலவீனமாக இருக்கிறோம்.*

*உடல்நலக்குறைவு என்றால் நாம் தவறு செய்வோம் என்பதை தெரிவிக்கிறது. ஒரு சூழ்நிலையில் சரியானதைச் செய்வது நமக்குத் தெரியாமல் இருக்கலாம். சில வகை ஜனங்கள் அல்லது இனக்குழுக்கள் பற்றி நாம் தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். ஒரு நபர் இரட்சிக்கப்படும்போது தவறான எண்ணங்கள் தானாகவே சரி செய்யப்படுவதில்லை. தவறான எண்ணங்கள் தவறான செயல்களை ஏற்படுத்துகின்றன, ஏனென்றால் ஒரு நபர் என்ன செய்ய வேண்டும் என்பதில் தவறாக இருந்தால், அவர் தவறான செயலையேச் செய்வார்.*

*உடல்நலக்குறைவு ஒரு நபரை பல காரணங்களுக்காக போராடும்படிச் செய்யும். வேதப் பிரமாணங்களை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதை அவர் கற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஒருவேளை அவர் தனது தூண்டுதல்களை எதிர்க்க உதவும் ஒழுக்கங்களை உருவாக்கவில்லை. ஒருவேளை அவரை வலுவாக வைத்திருக்க உதவும் தினசரி பழக்கங்கள் அவரிடம் இல்லை. ஆவியில் நடப்பதன் முக்கியத்துவத்தை அவர் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.*

*மற்றவர்களை நாம் துரிதமாக நியாயந்தீர்க்கக்கூடாது, ஏனென்றால் அவர்கள் எப்போது வேண்டுமென்றே பாவம் செய்கிறார்கள் என்பது நமக்கு எப்போதும் தெரியாது. அறிவு மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லாததால் ஜனங்கள் பெரும்பாலும் தவறான செயல்களைச் செய்கிறார்கள்.*

*வேறு யாருக்கும் இருந்ததில்லை என்று நீங்கள் நினைத்த ஒரு சோதனை உங்களுக்கு எப்போதாவது இருந்ததா? பாவத்தின் மீது முழுமையான வெற்றியுடன் வாழ்வது உண்மையில் சாத்தியமா என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? சோதனையில் நமது பலவீனத்தை ஈடுசெய்வதை விட கிருபையை செயல்படுத்துவதாக தேவன் வாக்குறுதி அளித்துள்ளார்:*

*மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரிந்தியர் 10:13).*

► *இந்த வசனத்திலிருந்து நமக்குத் தெரிந்த சில காரியங்கள் யாவை?*

*இந்த வசனம் பல முக்கியமான காரியங்களை நமக்கு சொல்கிறது.*

1. **சோதனை நம் மனிதத்தன்மையின் காரணமாக வருகிறது**. *அதாவது உங்கள் போராட்டங்கள் உங்களுக்கு மட்டுமேயானவை அல்ல.*
2. **தேவன் நம் எல்லைகளை அறிந்திருக்கிறார்**. *நாம் எவ்வளவு தாங்க முடியும் என்பதை அவர் புரிந்துகொள்கிறார். நாம் எவ்வளவு சகித்துக்கொள்ள முடியும் என்று நமக்குத் தெரியாது, ஆனால் அவருக்குத் தெரியும்.*
3. **தேவன் நமக்கு வரும் சோதனைகளை மட்டுப்படுத்துகிறார்**. *நாம் வெற்றியுடன் வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இந்த வசனத்தின்படி, எல்லா நேரத்திலும் வெற்றி சாத்தியமாகும்.*
4. **வெற்றிக்குத் தேவையானதை தேவன் வழங்குகிறார்**. *அவர் "தப்பிக்க ஒரு வழியை" உருவாக்குகிறார். நாம் வெற்றியுடன் வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். வெற்றி வாழ்வுக்கு கிருபை அருளுகிறார்.*

## ஆவியில் ஜீவன்

*மாணவர்கள் ரோமர்கள் 8 ஆம் அதிகாரத்திற்கு திருப்பி, இந்த பகுதியில் பயன்படுத்தப்படும் வசனங்களைப் பார்க்க வேண்டும்.*

ரோமர் 8 ஆம் அதிகாரம் விசுவாசியின் வாழ்க்கையில் ஆவியானவரின் கிரியையைப் பற்றிய அற்புதமான விளக்கத்தை அளிக்கிறது. நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கூட நமக்குத் தெரியாது, ஆனால் பரிசுத்த ஆவியானவர் நம் மூலமாக ஜெபிக்கிறார் என்று வேதாகமம் சொல்லுகிறது.

வெற்றிகரமான வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதை இந்த அதிகாரம் சொல்லுகிறது. மாம்சத்திற்குப் பதிலாக ஆவியானவரைப் பின்பற்றினால் நாம் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக மாட்டோம் (வசனம் 1). தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் நீதியை நாம் நிறைவேற்ற முடியும், ஏனென்றால் ஆவியின் வல்லமை நம்மில் செயல்படுகிறது (வசனம் 4).

ஒரு நபர் பாவ சுபாவத்தால் கட்டுப்படுத்தப்பட்டால், அவர் தேவனைப் பிரியப்படுத்த முடியாது (வசனம் 8), ஆக்கினைத்தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுகிறார் (வசனம் 1), தேவனால் நியாயந்தீர்க்கப்படுகிறார் (வசனம் 13 இல் "சாவீர்கள்"). ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமை மற்றும் வழிகாட்டுதலால், நாம் பாவச் செயல்களுக்கு முடிவுகட்ட முடியும் (வசனங்கள் 13-14).

## பாவத்தின் மீதான வெற்றியின் அவசரம்

சில நேரங்களில் பின்வருவனப் போன்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன:

1. ஒரு கிறிஸ்தவர் பாவத்தின் மீது வெற்றியுடன் வாழ்வது உண்மையில் அவசியமா?
2. ஒரு விசுவாசி சோதனைக்கு அடிபணிந்தால் தேவனுடனான உறவில் என்ன சம்பவிக்கும்?

*3. ஒருவர் இரட்சிப்பைப் பெற்ற பிறகு அதை இழப்பது சாத்தியமா?*

ஒரு நபர் வேண்டுமென்றே தேவனுக்கு எதிராக கலகம் செய்தால் இரட்சிப்பிலிருந்து விழுவார் என்பது ஆதித் திருச்சபையின் ஒருமித்த கருத்து. வேதாகமத்தில் இதுபோன்ற பல எச்சரிக்கைகள் இருப்பதால், ஆரம்பகால போதகர்கள் தங்கள் ஜனங்களை விசுவாசத்தால் வெற்றிகரமான வாழ்வில் நிலைத்திருக்குமாறு எச்சரித்தனர்.

ஒரு பாவி மனமாற்றம் அடையும் நேரத்தில், தான் செய்த பாவங்களை உணர்ந்து வருந்துகிறான். அவன் தேவனுடன் உறவில் வாழும்போது, அவன் செய்ய வேண்டிய மற்ற மாற்றங்களைக் காண்கிறான். இவை தேவனைப் பிரியப்படுத்தாத செயல்கள், பழக்கங்கள், பொழுதுபோக்குகள் அல்லது வார்த்தைகளாக இருக்கலாம். “மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்” என்று வேதாகமம் சொல்லுகிறது.[267]

ஒரு விசுவாசி தான் தவறு என்று இப்போது பார்க்கும் ஒன்றை மாற்ற விரும்பவில்லை என்று முடிவு செய்தால் என்ன செய்வது? அவர் இரட்சிக்கப்பட்டபோது அவர் மனந்திரும்பிய பாவங்களுக்கு மீண்டும் செல்ல முடிவு செய்தால் என்ன செய்வது?

சில நேரங்களில் ஜனங்கள் இதுபோன்ற காரியங்களைச் சொல்லுகிறார்கள்:

- "நித்திய ஜீவன் மெய்யாகவே நித்தியமானதாக இருந்தால், அதை ஒருபோதும் இழக்க முடியாது."
- "நாம் செய்த எந்த காரியத்தினாலும் இரட்சிக்கப்படாமல், கிருபையால் மட்டுமே இரட்சிக்கப்பட்டோமானால், நிச்சயமாக நாம் செய்யும்

[267] 2 கொரிந்தியர் 7:1

எந்த காரியத்தினாலும் நாம் நம்முடைய இரட்சிப்பை இழக்க முடியாது."

- "கெட்ட குமாரன், தொலைதூர நாட்டிற்குச் சென்று தன் தகப்பனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோதும், அவன் தன தகப்பனுடைய குமாரனாகவே இருந்தான்."
- "தேவன் இரட்சிப்பை இலவச பரிசாகக் கொடுத்திருப்பதால், அவர் அதை ஒருபோதும் திரும்பப் பெறமாட்டார்."

இப்படிப்பட்ட எண்ணம், பாவத்தின் மீது வெற்றி பெறாமல் தங்கள் இரட்சிப்பில் பாதுகாப்பாக இருப்பதாக எண்ணி, ஆயிரக்கணக்கான ஜனங்கள் மனமாற்றத்திற்குப் பிறகு மீண்டும் பாவத்திற்குச் செல்வதை எளிதாக்கியுள்ளது. விசுவாசிகளின் பாதுகாப்பைக் குறித்து வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம்.

## கிறிஸ்துவில் ஜீவன்

யோவான் 15:2-10 இல் திராட்சச்செடி மற்றும் கொடிகளின் புகழ்பெற்ற உருவகம் உள்ளது. இது சில முக்கியமான கேள்விகளுக்கு பதிலளிக்கிறது.

நாம் எப்படி கிறிஸ்துவில் நிலைத்திருப்போம்? "நீங்கள் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (வசனம் 10). கிறிஸ்துவில் நிலைத்திருப்பதை நிறுத்துவது என்றால், ஒரு நபர் அவருக்குக் கீழ்ப்படிவதை நிறுத்திவிட்டார் என்று அர்த்தம். பிறகு என்ன நடக்கும்?

“ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்” (வசனம் 6). ஒரு நபர் கீழ்ப்படிவதை நிறுத்தி, கிறிஸ்துவில் நிலைத்திருப்பதை நிறுத்தினால், அவர் நிராகரிக்கப்படுகிறார். எரிக்கப்பட்ட கொடிகளின் விளக்கம் முழுமையான நிராகரிப்பைக் காட்டுகிறது.

*“என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்” (வசனம் 4). "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்" (வசனம் 2). நாம் கீழ்ப்படிதலினால் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லை என்றால், நாம் கனி கொடுக்க முடியாது. பலன் தருவது என்பது தேவனுடைய கிருபையால் மாற்றப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட, மற்றும் வழிநடத்தப்பட்ட வாழ்க்கையை வாழ்வதாகும். ஒரு நபர் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை என்றால், அவர் தேவன் வழங்கும் வாழ்க்கை ஓட்டத்திலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்கிறார், மேலும் தேவனுடைய கிருபையின் படியாக இனி வாழ முடியாது. கனி கொடுக்காதவர் நிராகரிக்கப்படுகிறார்.*

*இரட்சிப்பு என்பது கிருபையினால் பெறும் இலவச பரிசு, ஆனால் அது கொடுப்பவருடனான உறவைத் தவிர பெற்ற ஒரு பரிசு அல்ல. சாலி வில்லிக்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்தால், அது உண்மையிலேயே அவருடையது என்றால், வில்லி அதை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவன் அதைப் படிக்க வேண்டும் என்று அவள் விரும்புகிறாள், ஆனால் அவன் படிக்காவிட்டாலும் அவளால் அதைத் திரும்பப் பெற முடியாது. அவர் அதை மழையில் நனைய விடலாம், அல்லது கிழிக்கலாம் அல்லது பூச்சிகளைக் கொல்ல பயன்படுத்தலாம். சாலி அதைத் திரும்பப் பெற முடியாது, ஏனென்றால் அவள் அதை அவனிடம் கொடுத்துவிட்டாள். வில்லி புத்தகத்தை வைத்திருப்பது சாலியுடனான அவரது உறவைப் பொறுத்தது அல்ல. அவன் சாலியின் எதிரியாக மாறினாலும் அவனிடம் புத்தகம் இருக்கிறது.*

*கொடியின் உருவகம் இரட்சிப்பு என்பது ஒரு நபர் கொடுப்பவருடன் உறவு இல்லாமல் வைத்திருக்கக்கூடிய ஒரு பரிசிலிருந்து வேறுபட்டது என்பதைக் காட்டுகிறது. கிறிஸ்து*

நமக்கு வாழ்வளிக்கும் திராட்சைக் கொடியைப் போன்றவர்.[268] உறவின் மூலம் இரட்சிப்பு பெறப்படுகிறது. நாம் என்ன செய்தாலும் இரட்சிப்பைக் காத்துக்கொள்வோம் என்று வேதாகமம் எங்கும் சொல்லவில்லை. கிறிஸ்துவிடமிருந்து பிரிக்கப்படுவது இரட்சிப்பிலிருந்து பிரிக்கப்படுவதாகும். தேவனை நம்பி கீழ்ப்படிவதன் மூலம் இந்த இரட்சிப்பின் உறவைப் பேணுகிறோம்.[269]

ஒரு நவீன விளக்கப்படத்தை எடுத்துக்கொள்வோமானால், ஒரு விளக்கு மற்றும் மின்சாரம். மின்சாரத்தின் சக்தி அதில் பாயும் போது விளக்கில் ஒளி உள்ளது. விளக்கை அதன் சக்தி மூலத்திலிருந்து பிரிக்கப்பட்டால் அதன் ஒளியை வைத்திருக்க முடியாது. அவ்வாறே, கிறிஸ்துவோடுள்ள உறவினால் நமக்கு நித்திய ஜீவன் உண்டு. அவருடைய ஜீவன் நமக்குள் பாய்கிறது. அவரைப் பிரிந்தால் அந்த ஜீவனை நாம் காக்க மாட்டோம்.

### வேத எச்சரிக்கைகள்

ஜீவபுஸ்தகத்தில் ஒருவரது பெயர் எழுதப்பட்ட பிறகு அதை எடுக்க முடியாது என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் ஒரு பெயரை அகற்ற குறைந்தபட்சம் ஒரு வழி உள்ளது:

> ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (வெளிப்படுத்துதல் 22:19).

வெளிப்படுத்துதல் புத்தகத்தின் ஒரு பகுதியை உண்மையில் நீக்கியதற்காக குற்றவாளிகள் ஆக்கப்பட்டவர்கள் மிகக் குறைவு. இருப்பினும், ஜீவபுஸ்தகத்திலிருந்து ஒருவரின் பெயரை நீக்குவது சாத்தியம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

---

[268] யோவான் 15:6

[269] யோவான் 15:10

*ஒருமுறை இரட்சிக்கப்பட்ட ஒருவர் இறுதியில் பாவத்தால் தோற்கடிக்கப்படுவதன் மூலம் இரட்சிப்பை இழக்க நேரிடும் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடமாட்டேன்" (வெளிப்படுத்துதல் 3:5). வெளிப்படுத்தலில் உள்ள சபைகளுக்கு பல வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் பல இரட்சிப்பையே குறிப்பிடுகின்றன (2:11 ஐப் பார்க்கவும்), இருப்பினும் அனைத்து வாக்குறுதிகளும் விசுவாசியின் வெற்றியைப் பொறுத்தது. இவர்கள் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள், ஆனாலும் அவர்கள் பாவத்தால் வெல்லப்பட்டால் அவர்களின் இரட்சிப்பு இழக்கப்படும்.*

*ஒரு சமயம், தெசலோனிக்காவில் உண்டாயிருந்த தனது மனமாற்றம் அடைந்த விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை கைவிட்டிடக்கூடும் என்று பவுல் கவலைப்பட்டார். அப்படி நடந்திருந்தால், அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்த அவருடைய உழைப்பு வீணாகியிருக்கும் என்றார்.[270] ஒரு விசுவாசி தனது நம்பிக்கையிலிருந்து முற்றிலும் வீழ்ச்சியடைவது சாத்தியம் என்பதை இது காட்டுகிறது, அவருடைய முதல் மனமாற்றம் பயனற்றது.*

*2 பேதுரு 2:18-21 இல், "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பின" சில விசுவாசிகளை வஞ்சிக்கும் கள்ளப்போதகர்கள் இருப்பதைக் காண்கிறோம். இந்த முன்னாள் விசுவாசிகள் "நீதியின் வழியை அறிந்திருந்தனர்" ஆனால் அதை விட்டுவிட்டார்கள். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் என்று இந்த பகுதி கூறுகிறது. ஒரு நபர் மீண்டும் பாவத்திற்குச் செல்வதன் மூலம் தனது இரட்சிப்பை இழக்க நேரிடும்*

*[270] 1 தெசலோனிக்கேயர் 3:5*

என்பதை இது காட்டுகிறது. ஒரு நபர் தனது இரட்சிப்பை இழப்பது சாத்தியமில்லை என்றால், ஒரு நபர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு இருந்ததை விட மோசமாக இருக்க முடியாது.

புத்திர பாக்கியம் மாறலாம். நாம் ஒரு காலத்தில் பிசாசின் பிள்ளைகளாகவும்[271] கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்,[272] ஆனால் நாம் தேவனால் புத்திர சுவிகாரம் எடுக்கப்படும்போது அந்த புத்திர பாக்கியம் மாறுகிறது. கெட்ட குமாரன் தன் தகப்பனிடமிருந்து பிரிந்து அந்நியப்பட்டபோது, குமாரனின் அனைத்து நன்மைகளையும் இழந்தான். அவர் திரும்பி வந்ததும், அவனது தகப்பன் அவன் மரித்துவிட்டதாகக் கூறினார்.[273]

> "விசுவாசத்திலிருந்து வீழ்வது சாத்தியம் என்று நம்புகிறவன், விழுந்துவிடுவோமோ என்று பயப்படுகிறானோ, அவனுக்குத் தேவையான ஆறுதல் குறையாது, மனக் கவலையால் வேதனைப்படுவதில்லை. ஏனென்றால், அவன் விருப்பத்துடன் சோதனைக்கு அடிபணிந்து புறக்கணித்தால் ஒழிய, சாத்தானின் பலத்தாலோ, பாவத்தினாலோ, உலகத்தினாலோ, தன் மாம்சத்தின் பலவீனத்தினாலோ, விசுவாசத்தை விட்டு விழ மாட்டான் என்பதை அவன் அறிந்தால், ஆறுதல் அளித்து கவலையை விலக்கினால் போதும். அவனுடைய இரட்சிப்பை மனசாட்சியின்படி வாழவேண்டும்."
> - James Arminius, "On the Assurance of Salvation" என்னும் சில கட்டுரைகளில் இருந்து சுருக்கப்பட்டது.

விசுவாசிகள் பாதுகாப்பாக உணர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், ஆனால் அவர்கள் தங்களை உண்மையான ஆபத்தில் ஆழ்த்தும் ஒரு தவறான உத்தரவாதத்தின் அடிப்படையில் அவர்களின் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. தேவன் வாக்குறுதி அளிக்காத ஒன்றை நாம் விசுவாசிகளுக்கு வாக்களிக்கக் கூடாது. நாம் என்ன செய்தாலும் நம் இரட்சிப்பை இழக்காமல் பாதுகாப்பாக இருப்போம் என்று அவர் வாக்குறுதி அளிக்கவில்லை. அவர் நம்மை வழிநடத்துவதாகவும்,

[271] யோவான் 8:44
[272] எபேசியர் 2:2
[273] லூக்கா 15:32

*பாவத்தின் மீதான வெற்றியில் வாழவும் உதவுவதாக அவர் உறுதியளிக்கிறார். பயத்தில் இருந்து விடுபட அதுவே போதுமான உத்திரவாதமாக இருக்கிறது.*

*சில சமயங்களில் விசுவாசிகள் தங்கள் இரட்சிப்பைப் பற்றி சந்தேகம் கொள்கிறார்கள். தாங்கள் ஒருமுறை இரட்சிக்கப்பட்டோம் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கலாம், ஆனால் அவர்கள் இன்னும் தேவனுடன் இரட்சிக்கும் உறவில் இருக்கிறார்களா என்று சந்தேகிக்கலாம். இந்த முக்கியமான கேள்வியில் வேதாகமம் நமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. விசுவாசி தனது இரட்சிப்பைப் பற்றி மிகவும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்,[274] அவர் தேவனுடைய தேர்வில் தேர்ச்சி பெறுவாரா இல்லையா என்று யோசிக்காமல் "நியாயத்தீர்ப்பு நாளில் தைரியமாக" இருப்பார்.*

*ஒரு விசுவாசிக்கு சந்தேகம் இருக்கும்போது, அவன் ஒருமுறை இரட்சிக்கப்பட்டான் என்பதில் உறுதியாக இருப்பதால், அவற்றை வெறுமனே புறக்கணிக்கக் கூடாது. "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்"[275] அது பொருத்தமானதாக இருக்கிறது. ஒரு நபர் இரட்சிப்புக்கான வேதத்தின் படிகளைப் பின்பற்றி இரட்சிக்கப்பட்டார் என்பதையும், கிறிஸ்துவுடன் கீழ்ப்படிதலுடன் நடந்துகொள்வதன் மூலம் அவர் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதையும் அறிந்தால், அவர் ஆவிக்குரிய வாழ்வைப் பெற்றிருப்பதை உறுதியாக நம்பலாம்.*

### தவிர்க்க வேண்டிய பிழை: குறைந்த எதிர்பார்ப்புகள்

*வகுப்புத் தலைவருக்கான குறிப்பு: வகுப்பின் இரு உறுப்பினர்கள் இந்தப் பகுதியையும் அடுத்த பகுதியையும் விளக்கலாம்.*

*இரண்டு காரியங்களால் பாவத்தின் மீதான வெற்றி ஜனங்களுக்கு சாத்தியமற்றதாக தோன்றுகிறது: பலவீனம்*

---

[274] *1 யோவான் 4:17*

[275] *2 கொரிந்தியர் 13:5*

மற்றும் பரம்பரை சீரழிவு. மனித வரம்புகளைக் கொண்டிருப்பதற்காக தேவன் நம்மைக் கண்டிக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்படி தேவன் அவருடைய ஆவியின் மூலம் வல்லமையைக் கொடுக்கிறார். உடல் நலக்குறைவு இருப்பது பாவம் அல்ல, உடல் நலக்குறைவால் யாரும் பாவம் செய்ய வேண்டியதில்லை.

பரம்பரை சீரழிவின் செல்வாக்கு மனமாற்றத்திற்குப் பிறகும் தொடர்கிறது, ஆனால் தேவன் சுத்திகரிப்புக்கான கிருபையை வழங்குகிறார். பரம்பரையாகப் பிறந்ததற்காக நாம் குற்றம் சாட்டப்படுவதில்லை, ஆனால் அதைக் கடைப்பிடித்தால் அது நம் தவறு. எனவே, உடல் நலக்குறைவு அல்லது பரம்பரை சீரழிவு ஆகியவை வெற்றியில் வாழும் வாழ்க்கையின் நம்பிக்கையை இழக்கச் செய்யக்கூடாது.

கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம், நாம் அவருடன் ஒன்றுபட்டுள்ளோம். அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் அவருடன் அடையாளப்படுத்துகிறோம், மேலும் நமக்கு அது பாவத்திற்கு மரணம் மற்றும் ஒரு புதிய ஜீவனுக்கு உயிர்த்தெழுதல் என்று பொருள்படுகிறது. அவர் நம்மில் இருக்கிறார், நாம் அவரில் இருக்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவது மட்டுமல்ல, நம்மால் முடிந்ததைச் செய்வதும் ஆகும். கிறிஸ்தவ வாழ்க்கை நமக்குள் கிறிஸ்துவால் வாழப்படுகிற வாழ்வாகும். அவர் பூமியில் வாழ்ந்தபோது பாவத்தின் மீது வெற்றி பெற்றார், அவர் இன்னும் நம்மில் வெற்றியுடன் வாழ்கிறார்.

## இது ஏன் முக்கியமாயிருக்கிறது

ஒரு பெரிய நகரத்தின் தெருவின் ஓரத்தில் ஒரு ஏழை பெண் கந்தல் உடையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவளது தலைமுடி அழுக்கால் சிக்குண்டு சடையாக இருக்கிறது. அவளுடைய தோல் அழுக்கு மற்றும் தூசு படிந்த அழுக்குடன் இருக்கிறது. அவள் நம்பிக்கையற்ற விரக்தியில் அமர்ந்திருக்கிறாள். திடீரென்று, ஒரு பெரிய ஜனக்கூட்டத்தின்

திறள் சத்தம் கேட்கிறது மற்றும் ஒரு மூலையில் ராஜ்யத்தின் பெரிய இளவரசன் தனது பிரபுக்களுடன் சவாரி செய்கிறார். இளவரசர் மிகவும் அழகானவர், வலிமையானவர், கனிவானவர்! அவரது வாகனம் அந்த அழுக்குப் பெண் அமர்ந்திருக்கும் இடத்தைக் கடக்கும்போது, இளவரசர் தனது ஓட்டுநரை “நிறுத்துங்கள்!” என்று சொல்லுகிறார்.

வாகனம் நின்றவுடன், இளவரசன் தன் வேலையாட்களிடம், “அந்த விளிம்பில் அமர்ந்திருக்கும் பெண் நான் திருமணம் செய்துகொள்ள விரும்பும் பெண்!” என்று கூறுகிறார்.

இப்போது காட்சி மாறுகிறது. நாம் திருமண நாளில் இருக்கும் அரண்மனையைப் பார்க்கிறோம். நாம் என்ன பார்க்கிறோம்? ஒரு அழுக்கான பெண் இன்னும் மெலிந்த மற்றும் அழுக்கு முடியுடன் தனது கந்தலான ஆடைகளை அணிந்துள்ளார். அவளைச் சுற்றி திருமண கவுன், சோப்புகள் மற்றும் வாசனை திரவியங்களை கையில் வைத்திருக்கும் அவளது பணிப்பெண்கள் காத்திருக்கிறார்கள், ஆனால் மணமகள் தனது திருமண நாளுக்கு தன்னை தயார்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. பெண்களில் ஒருவர், “அம்மா, நீங்கள் திருமணத்திற்கு ஆயத்தமாக வேண்டாமா?” என்று கேட்கிறாள். அதற்கு மணமகள் பதிலளிக்கிறார், "அவர் என்னைப் பார்த்ததும் என்னை திருமணம் செய்து கொள்ள விரும்பியபோது நான் பார்த்த விதம் இதுதான், எனவே நான் இப்போது எப்படி இருக்கிறேன் என்பது முக்கியமில்லை என்று நினைக்கிறேன்."

அந்த மனப்பான்மையைக் கண்டு நாம் அதிர்ச்சியடைவோம். இளவரசன் அவளை நேசிப்பதால், அவள் அந்த நிலையிலேயே இருக்க விரும்பவில்லை. அவள் கவர்ச்சியாக இல்லாதபோது இளவரசன் அவளை நேசித்ததால், அவள் அவனுக்கு அழகாக இருக்க வேண்டும்.

நாம் பாவிகளாக இருக்கும்போது தேவன் நம்மை நேசிக்கிறார், ஆனால் பாவம் ஒரு பொருட்டல்ல என்று அர்த்தமல்ல. அவர் நம்மை நேசிப்பதால், அவர் நம் நிலையை மாற்ற விரும்புகிறார். அவர் நம்மை நேசிப்பதால், அவருக்குப்

*பிடித்தமான உருவத்தையும் குணத்தையும் நாம் எடுக்க வேண்டும்.*

**வெற்றியோடு வாழ்வதற்கான நடைமுறை நடத்துதல்கள்**

*உலகம் முழுவதும் கிறிஸ்தவ சத்தியம் மூடநம்பிக்கையுடன் கலக்கப்படுகிறது. சிலர் மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற ஜெபத்தின் மூலம் பாவத்தின்மேல் வெற்றிக்கொள்ளலாம் என்று போதிக்கிறார்கள், உணர்ச்சிபூர்வமான அனுபவங்கள், அசுத்த ஆவிகளைக் கண்டித்தல் (அவை சில பாவங்களுக்குக் காரணம் என்று கருதப்படுகிறது), தனக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ளும் வலி, சில அலகுகட்டுதல், வீட்டைச் சுற்றி ஆவிக்குரிய சின்னங்களை வைப்பது, அல்லது விசேஷ எண்ணெயால் சரீரத்தில் அபிஷேகம் செய்தல். இது "ஆவிக்குரிய மந்திரம்" மூலம் கிடைத்த வெற்றி!*

*சிலர் பாவத்தின் மீதான வெற்றியை மிக எளிமையாக கற்பிக்கின்றனர். இரட்சிப்பு மற்றும் ஆவியின் முழுமையின் அனுபவங்கள் பாவத்தின் சக்தியை நிரந்தரமாக அழித்துவிடும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆவிக்குரிய வளர்ச்சி, ஒழுக்கம் மற்றும் நிலையான கண்காணிப்பு ஆகியவற்றின் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தத் தவறிவிடுகிறார்கள்.*

*உலகம் மற்றும் பாவத்தின் மீது நிலையான வெற்றியைப் பெறத் தவறியவர்கள் பின்வரும் கேள்விகளை தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்:*

***(1) நான் உண்மையிலேயே மறுபடியும் பிறந்திருக்கிறேனா?***

*என் பழைய வாழ்க்கைக்கு நான் மரித்துவிட்டேனா; நான் மனந்திரும்பி அதை விட்டுவிட்டேனா? கிறிஸ்துவில் எனக்கு புதிய வாழ்க்கை இருக்கிறதா-புதிய மனப்பான்மைகள், புதிய ஆசைகள், தேவனுடைய காரியங்களுக்கான புதிய தாகம் (2 கொரிந்தியர் 5:17)? கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியின் மூலமாக என் இருதயத்தில் வாசமாயிருப்பதற்கு வந்தாரா? நான் மனித சித்தத்தின் மூலம் பாவத்தை வெல்ல முயற்சிக்கிறேனா, அல்லது எனக்குள் குடியிருக்கும் தேவனுடைய வல்லமையை நான் சார்ந்திருக்கிறேனா (கலாத்தியர் 2:20)?*

***(2) நான் தேவனுடைய வார்த்தையை என்னிருதயத்தில் வைத்து வைக்கிறேனா?***

*"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் " (சங்கீதம் 119:11) என்று சங்கீதக்காரன் சாட்சி கூறுகிறான். புதிதாகப் பிறந்த குழந்தை தனது தாயின் பாலை பசியுடன் பருகுவது போல நாம் தேவனுடைய வார்த்தையை பருக வேண்டும் (1 பேதுரு 2:2).*

***(3) நான் உண்மையிலேயே பாவத்திற்கு மரித்தவனாகவும், தேவனுக்கு பிழைத்திருக்கிறவனாகவும் எண்ணுகிறேனா?***

*"அப்படியே நீங்களும், உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" (ரோமர் 6:11). சோதனையை அதற்கு என்மீது அதிகாரம் இல்லை என்ற நம்பிக்கையுடன் நான் நிராகரிக்கிறேனா?*

***(4) நான் ஜெயங்கொள்வதற்காக தேவனைச் சார்ந்திருக்கிறேனா?***

*“தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்” என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார் (1 யோவான் 5:4). இயேசுவின் சிலுவையைத் தவிர எதிலும் நம்பிக்கை வைக்க மாட்டேன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார், ஏனென்றால் சிலுவையின் மூலம் உலக காரியங்கள் என்னை ஈர்க்கும் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தியை இழக்கின்றன என்றார் (கலாத்தியர் 6:14). எல்லா நீதியின் மூலாதாரமான இயேசுவை மறந்தால், வெற்றியின் நிலையான வாழ்க்கை வாழ்வது சாத்தியமற்றது ஆகிவிடும்.*

***(5) நான் நாள்தோறும் கர்த்தராகிய இயேசுவை விசுவாசத்தினாலே அணிந்துகொண்டு, பாவத்திற்கு இடமளிக்காமல் இருக்கிறேனா?***

*நமது கிறிஸ்தவ பயணத்தில் நாம் எங்கிருந்தாலும், வெற்றி தானாக வருவதில்லை. பாவத்தைப் பற்றிய இயேசுவின்*

*அணுகுமுறையை நான் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டு அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். (ரோமர் 13:14; எபேசியர் 4:24)*

***(6) நான் தேவனுடைய ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தை அணிந்திருக்கிறேனா?***

*வாழ்க்கையின் போர்க்களத்தில், பல விசுவாசிகள் சாத்தானின் எறியப்படும் ஈட்டிகளால் காயப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் தங்கள் ஆவிக்குரிய பாதுகாப்பைப் பற்றி கவனக்குறைவாக இருக்கிறார்கள் (எபேசியர் 6:11).*

***(7) நான் சுய ஒழுக்கத்தை கடைபிடிக்கிறேனா?***

*நம் நம்பிக்கையில் நாம் எவ்வளவு முதிர்ச்சியடைந்தாலும், சுய ஒழுக்கம் எப்போதும் தேவையாக இருக்கும். நான் என் சரீரத்தைப் பயிற்றுவித்து அதை ஒழுக்கத்தின் கீழ் கொண்டு வருகிறேனா? இயற்கையான, தேவன் கொடுத்த பசிகள் (உணவு, உறக்கம் அல்லது உடலுறவு போன்ற ஆசைகள்) கட்டுப்படுத்தப்பட வேண்டும், எனவே அவை புதிதாகப் பிறந்த எனது ஆத்துமாவின் நோக்கங்களுக்குச் சேவை செய்கின்றன. என் சரீரம் பாவத்தால் சிதைக்கப்பட்டதால், அதன் ஆசைகள் சமநிலையில் இல்லை. சரீரத்தை ஆட்சி செய்ய அனுமதிக்கக் கூடாது; அது ஆவிக்கு சேவை செய்ய வேண்டும். பவுல் தன் சரீரத்தை ஒழுங்குபடுத்தி அதை தனக்குக் கீழ்ப்படியச் செய்தான், அதனால் அவன் ஆவிக்குரிய நிலையில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறவில்லை (1 கொரிந்தியர் 9:25-27). இந்த ஒழுக்கம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவசியம்.*

***(8) நான் கீழ்ப்படிதலில் வாழ்கிறேனா?***

*“ஒளியிலே நடக்கவேண்டும்” என்பது அப்போஸ்தலனாகிய யோவானின் அறிவுரை (1 யோவான் 1:7). பரலோகத்திற்குச் செல்லும் பாதையில் பல கண்ணிகளும், இடறல்களும், ஆபத்தான இடங்களும் இருப்பதால், நாம் எப்போதும் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தினாலும் (சங்கீதம் 119:105) பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தினாலும் (யோவான் 14:26) நடக்க வேண்டும். கீழ்ப்படிதல் இயேசுவின் இரத்தம் நம்மைச்*

சுத்தமாக வைத்திருக்கும் என்ற வாக்குறுதியைக் கொண்டுள்ளது. இருளில் நடப்பது தடுமாறி விழுவதோடு இறுதியில் மரணத்திற்கு வழி வகுக்கும்.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

**நம்பிக்கைகளின் அறிக்கை**

பாவத்தின் மீது வெற்றி பெற்று வாழ்வது ஒவ்வொரு விசுவாசியின் பாக்கியமும் கடமையும் ஆகும். விசுவாசி கிறிஸ்துவுடன் கொண்ட உறவிலிருந்து உயிர் பெறுகிறான். தேவனுடைய விருப்பத்தை நிராகரித்து பாவத்திற்குத் திரும்பும் விசுவாசி, தேவனுடன் வைத்திருக்கும் இரட்சிப்பின் உறவை முறித்துக் கொள்கிறான். தேவன் பெலனை அளிக்கும் கிருபையை வழங்குகிறார், எனவே விசுவாசி ஒவ்வொரு சோதனையையும் ஜெயிக்க முடியும்.

**பாடம் 9 வீட்டுப்பாடங்கள்**

(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.

- *2 பேதுரு 1:1-11*
- *எபிரெயர் 10:23-39*
- *வெளிப்படுத்துதல் 3:14-22*
- *யாக்கோபு 1:21-27*
- *மத்தேயு 13:18-23*

(2) தேர்வு: பாடம் 9க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

### ***பாடம் 9 தேர்வு***

*(1) 1 யோவானின் முக்கிய கருப்பொருள் என்ன?*

*(2) ஒரு விசுவாசியில் காணப்படுகின்ற எந்தப் பண்பை 1 யோவான் மிகவும் வலியுறுத்துகிறது?*

*(3) 1 கொரிந்தியர் 10:13 -லிருந்து எந்த நான்கு காரியங்களை நாம் அறிந்திருக்கிறோம்?*

*(4) ஒரு விசுவாசி எவ்வாறு கிறிஸ்துவில் தொடர்ந்து நிலைத்திருக்கிறார்?*

*(5) தொடர்ச்சியான இரட்சிப்புக்கு என்ன அவசியம்?*

# பாடம் 10
# பரிசுத்த ஆவியானவர்

### பாடத்தின் நோக்கங்கள்

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதைக் காட்டும் பண்புகள்.*
- *பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மை மற்றும் தெய்வீகத்திற்கான வேதாகம ஆதாரம்.*
- *பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மை மற்றும் தெய்வீகம் ஏன் இன்றியமையாத உபதேசங்கள்.*
- *பரிசுத்த ஆவியானவரின் வரலாற்று மற்றும் தற்போதைய செயல்பாடு.*
- *பரிசுத்த ஆவியானவருடன் விசுவாசிக்கு உள்ள உறவின் நடைமுறை அம்சங்கள்.*
- *பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) மாணவர் ஆவியானவரின் வரங்களைப் பற்றிய சில கொள்கைகளைப் பயன்படுத்துவார்.*

### முன்னுரை

*சங்கீதம் 139-ஐ ஒன்றாகப் படியுங்கள். தேவனுடைய ஆவியானவரைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

*சிலர் பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள்தன்மையற்ற ஒரு சக்தியாக அல்லது வெறுமனே ஒரு பிரசன்னம் என்று நினைக்கிறார்கள். உதாரணமாக, ஒரு யேகோவாவின் சாட்சியைச் சேர்ந்தவர் இப்படிச் சொல்வார்: "பரிசுத்த ஆவி ஒரு நபர் அல்ல, அது*

*திரித்துவத்தின் ஒரு பகுதியும் அல்ல. பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய கிரியைகளில் உள்ள சக்தியாகும், அது அவருடைய சித்தத்தை நிறைவேற்ற அவர் பயன்படுத்துகிறார். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, அதை மின்சாரத்திற்கு ஒப்பிடலாம்.''*[276]

► *பரிசுத்த ஆவியானவர் பற்றிய யேகோவாவின் சாட்சியின் கருத்தில் என்ன தவறு இருக்கிறது?*

யேகோவாவின் சாட்சி பரிசுத்த ஆவியானவரை ஆள்தன்மையற்ற சக்தியாகப் பார்க்கிறார்கள். அவர்கள் தேவனைப் பற்றிய வேதாகமத்தின் புரிதல் இல்லாததால், அவருடன் சரியான உறவைப் பெற முடியாது.

> *''நியாயப்பிரமாணத்தில் பேசின, தீர்க்கதரிசிகளால் போதித்த, யோர்தானுக்குள் இறங்கி, அப்போஸ்தலரால் பேசப்பட்டு, பரிசுத்தவான்களில் வாழும் பரிசுத்த ஆவியானவரை நாம் விசுவாசிக்கிறோம்; எனவே நாம் அவரை நம்புகிறோம்: அவர் பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஆவி, பரிபூரண ஆவி, ஆவியானவர் தேற்றரவாளன், உருவாக்கப்படாதவர், பிதாவிடமிருந்து வருபவர் மற்றும் நாம் நம்பும் குமாரனைப் பெறுகிறார்.''*
> *- எப்பிபானியஸின் கோட்பாடு, கி.பி. 374*

பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய அனைத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஆவியானவரின் வேலை காற்றைப் போன்றது என்று இயேசு கூறினார்; நீங்கள் அதைக் கேட்கிறீர்கள், ஆனால் அது எங்கிருந்து வந்தது, எங்கு செல்கிறது என்று உங்களுக்குத் தெரியாது.[277] ஆனால் ஆவியானவரைப் பற்றி நாம் தெரிந்துகொள்ளக்கூடிய சில விஷயங்கள் உள்ளன, மேலும் அவை தேவனுடனான நமது உறவுக்கு முக்கியமானவை.

பரிசுத்த ஆவியானவருக்கும் திருச்சபைக்கும் இடையிலான தொடர்பு பற்றிய மிகத் தெளிவான விளக்கத்தை நமக்குத் தரும் வேதத்தின் பகுதி அப்போஸ்தலர் புத்தகம். திருச்சபை அதன்

---

[276] *Should You Believe in the Trinity? (New York: The Watchtower Bible and Tract Society, 1989)*
[277] *யோவான் 3:8*

தொடக்கத்தில் பரிசுத்த ஆவியானவருக்கு எவ்வாறு பதிலளித்தது என்பதற்கான மாதிரியை நாம் அங்கு காண்கிறோம்.

1. அவர்கள் பரிசுத்த ஆவியானவரை அவருடைய தெய்வத்துவத்தில் கனம்பண்ணினார்கள்.[278]

2. பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம், வழிகாட்டுதல் மற்றும் செயல்பாடு குறித்து அவர்கள் அறிந்திருந்தனர்.[279]

3. பரிசுத்த ஆவியானவருக்குப் பதிலளிப்பதில் தங்களுடைய சார்பு மற்றும் பொறுப்பை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.[280]

பரிசுத்த ஆவியானவரோடு அப்படிப்பட்ட உறவைப் பெறுவதற்கு, அவர் ஒரு நபர் என்பதையும் அவர் தேவன் என்பதையும் நாம் உணர வேண்டும். அப்போது அவருடனான நமது உறவை வழிநடத்தும் கொள்கைகளை நாம் தேடமுடியும்.

## பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர்

> "பிதா மற்றும் குமாரனிடமிருந்து வரும் கர்த்தரும் ஜீவனைக் கொடுப்பவருமான பரிசுத்த ஆவியானவரை நான் நம்புகிறேன்; அவர் பிதாவுடனும் குமாரனுடனும் சேர்ந்து ஆராதிக்கப்பட்டு மகிமைப்படுத்தப்படுபவர் ஆவார்; அவரே தீர்க்கதரிசிகள் மூலம் பேசியவர்."
> - நைசியன் கோட்பாடு, கி.பி. 325

பரிசுத்த ஆவியானவருக்கு இயேசுவைப் போல ஒரு சரீரம் இல்லை, ஆனால் அவர் ஒரு நபர். மனம், சித்தம் மற்றும் உணர்ச்சிகள் அடங்கும் ஆளுமையின் பண்புகளைக் கொண்டிருக்கிற ஒரு உண்மையான நபர். பரிசுத்த ஆவியானவருக்கு சித்தம் உள்ளதா? கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய பரிசுகளை "அவருக்கு சித்தமானபடி"

---

[278] அப்போஸ்தலர் 5:3-4-ஐ வாசிக்கவும்.
[279] அப்போஸ்தலர் 15:28-ஐ வாசிக்கவும்.
[280] அப்போஸ்தலர் 4:24, 31-ஐ வாசிக்கவும்.

*விநியோகிக்கிறார்.*[281] *பரிசுத்த ஆவிக்கு மனம் இருக்கிறதா? அவர் "தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" மற்றும் அவற்றை அறிவார்.*[282] *பரிசுத்த ஆவியானவருக்கு உணர்ச்சிகள் உள்ளதா? "பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.*[283] *பரிசுத்த ஆவியானவர் துக்கப்பட முடியுமானால், அவருக்கு உணர்ச்சிகள் உள்ளன என்றர்த்தமாகிறது. பரிசுத்த ஆவியானவருக்கு மனம், சித்தம் மற்றும் உணர்ச்சிகள் இருப்பதால், அவர் ஒரு நபர் என்பதை நாம் அறிவோம்.*

► *பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதை நாம் அறிவது ஏன் முக்கியம்?*

*பரிசுத்த ஆவியானவர் ஆள்தன்மையற்ற சக்தியாக இருந்தால், அவருடன் நாம் உறவு கொள்ள முடியாது. சிலர் பரிசுத்த ஆவியானவர் தங்கள் உணர்ச்சிகளைத் தூண்டும் ஒன்று அல்லது அவர்கள் பயன்படுத்த முயற்சிக்கும் ஒரு சக்தி என்று நினைக்கிறார்கள்.*

*ஒரு நபருக்கு மற்றவர்களுடன் உறவு கொள்ளும் திறன் உள்ளது. பிலிப்பியர் 2:1-ன்படி, ஆவியானவர் நம்முடன் ஐக்கியங் கொள்ள முடியும். 2 கொரிந்தியர் 13:14ன் படி, பரிசுத்த ஆவியானவர் நம்முடன் ஒற்றுமையாக இருக்க முடியும். ஒருவருடன் தொடர்பு கொள்ளவும், ஐக்கியங் கொள்ளவும் முடியும், அதற்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்க வேண்டும்.*

*பரிசுத்த ஆவியின் ஆள்தன்மைப் பற்றிய கூடுதல் வேதாகமச் சான்றுகளுக்கு, இந்தப் பாடத்தின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ள "பரிசுத்த ஆவியின் ஆள்தன்மைக்கான வேதாகமச் சான்றுகள்" என்ற தலைப்பில் உள்ள பகுதியைப் பார்க்கவும்.*

---

[281] *1 கொரிந்தியர் 12:11*
[282] *1 கொரிந்தியர் 2:10*
[283] *எபேசியர் 4:30*

## *பரிசுத்த ஆவியானவர் தேவன்*

*பரிசுத்த ஆவியானவர் அனைத்தையும் அறிந்தவர், அனைத்தையும் காண்கிறவர், எல்லா இடங்களிலும் இருக்கிற தேவன். அனனியா மற்றும் சப்பீராளின் கதை நினைவிருக்கிறதா? அனனியா மரிப்பதற்கு முன், பேதுரு அவனிடம், "பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? ... நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்."[284] இதிலிருந்து, பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்வதும் தேவனிடம் பொய் சொல்வதும் ஒன்று என்பதை நாம் காண்கிறோம்; ஆகையால், பரிசுத்த ஆவியானவர் தேவன்.*

*பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். 1 கொரிந்தியர் 2:10-11 ல் பார்க்கிறோம், அவர் தேவனுடைய எல்லா காரியங்களையும் அறிந்திருக்கிறார். அது எல்லையற்ற மனதை எடுத்துக்கொள்ளும். எல்லா அறிவும் தேவைப்படும் தீர்க்கதரிசனம் உட்பட பழைய ஏற்பாட்டு வேதங்களை அவர் ஏவினார்.[285] பரிசுத்த ஆவியானவரைக் தேவன் என்று அடையாளப்படுத்தும் வேதவசனங்கள்,[286] தேவனால் ஏவப்பட்டவை என்று நமக்குச் சொல்லப்படுகிறது.*

*பரிசுத்த ஆவியானவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார். சங்கீதம் 139:7, தேவனுடைய ஆவியின் பிரசன்னத்திலிருந்து தப்பித்து ஒரு நபர் எங்கும் செல்ல முடியாது என்று கூறுகிறது. அவர் ஒவ்வொரு விசுவாசியுடனும் இருக்கிறார், ஏனென்றால் ஒருவருக்கு கிறிஸ்துவின் ஆவி இல்லையென்றால், அவர் கிறிஸ்துவுக்கு சொந்தமானவர் அல்ல என்று வேதாகமம் கூறுகிறது. கிறிஸ்துவின் ஆவியானவர் பரிசுத்த ஆவியானவர் என்பதை பின்னணி காட்டுகிறது.*

*பரிசுத்த ஆவியானவருக்கு எல்லா வல்லமையும் உண்டு. தேவன் மட்டுமே செய்யக்கூடிய காரியங்களை அவர் செய்கிறார். பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவற்றை உலகுக்கு*

---

*[284] அப்போஸ்தலர் 5:3-4*
*[285] 2 பேதுரு 1:21-ஐ வாசிக்கவும்.*
*[286] 2 தீமோத்தேயு 3:16*

கண்டித்து உணர்த்துகிறார்.[287] அதைச் செய்ய, அவர் ஒவ்வொரு நபரின் மனசாட்சியையும் அணுக வேண்டும் மற்றும் சில சத்தியங்களை அவர்களின் மனதை நம்ப வைக்க முடியும். ஒவ்வொரு விசுவாசிக்கும் உள்ளான பலத்தையும் கொடுக்க வல்லவர்.[288] ஆவியின் கனி அன்பு, சந்தோசம், சமாதானம் மற்றும் பல.[289] தெய்வீக வல்லமையைத் தவிர வேறு எதுவும் எந்த நபரின் வாழ்க்கையிலும், குறிப்பாக உலகில் எல்லா இடங்களிலும் உள்ள ஒவ்வொரு விசுவாசியிலும் இதை உருவாக்க முடியாது.

லூக்கா 12:10ல் பரிசுத்த ஆவியானவர் தூஷிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. தேவனை மட்டுமே நிந்திக்க முடியும். பரிசுத்த ஆவியானவர் நித்தியமானவர்.[290] பரிசுத்த ஆவியானவர் வசிப்பதால் நம் சரீரங்கள் தேவனுடைய ஆலயம் என்று அழைக்கப்படுகின்றன.[291] பரிசுத்த ஆவியானவர் தெய்வீக திரித்துவத்தின் மூன்றாவது நபரான தேவன் என்பதை வேதாகமத்தின் ஆதாரங்களிலிருந்து நாம் அறிவோம்.

► பரிசுத்த ஆவியின் தெய்வத்துவத்தை நாம் நம்புவது ஏன் முக்கியம்?

பரிசுத்த ஆவியானவரின் தெய்வத்துவத்தை நம்புவது முக்கியம், அதனால் நீங்கள் அவருக்கு தகுதியான கனத்தையும் மரியாதையையும் கொடுக்க முடியும். பரிசுத்த ஆவியானவரை ஆராதிக்கத் தவறினால் அது ஒரு முக்கியமான காரியம். உண்மையில், ஒருவரை இரட்சிப்புக்கு இழுக்க முயல்பவரின் தெய்வத்துவத்தை மறுக்கும் வேளையில் ஒருவரைக் இரட்சிக்க முடியுமா என்பது சந்தேகமே.

---

[287] யோவான் 16:8

[288] எபேசியர் 3:16-ஐ வாசிக்கவும்.

[289] கலாத்தியர் 5:22-ஐ வாசிக்கவும்.

[290] எபிரெயர் 9:14

[291] 1 கொரிந்தியர் 3:16

## பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனிலிருந்து வேறுபட்டவர்

*பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனிடமிருந்து வேறுபட்டவர் என்று கூறுவது, அவர்கள் மனிதர்களைப் போன்ற அதே அர்த்தத்தில் வேறுபட்ட தனிநபர்கள் என்று அர்த்தமல்ல. திரித்துவத்தின் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் உள்ளடக்கியிருக்கிறார்கள், அனைவரும் ஒரே தேவன், ஆனால் ஒருவருக்கொருவர் பேசுவதற்கும், ஒருவரையொருவர் நேசிப்பதற்கும், ஒருவருக்கொருவர் மற்றும் நம்முடன் உண்மையான தனிப்பட்ட உறவுகளை வைத்திருக்கும் அளவுக்கு வேறுபட்டவர்கள்.*

*திரித்துவ நபர்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை வேதம் கற்பிக்கிறது. உதாரணமாக, யோவான் 14-16 இல் மீண்டுமாய், இயேசு பிதாவிடம் திரும்பிச் செல்லும்போது அனுப்பும் ஒரு தேற்றரவாளரைக் குறிப்பிட்டார்.[292] இந்த தேற்றரவாளர் சீடர்களுக்கு வழிகாட்டி கற்பிப்பார். இயேசுவும் பரிசுத்த ஆவியும் ஒரே நபராக இருந்தால், பரிசுத்த ஆவியானவரை வேறொரு தேற்றரவாளர் என்று இயேசு குறிப்பிடுவது அர்த்தமற்றது. இயேசு தன்னிலிருந்து வேறுபட்ட மற்றொரு நபரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.*

*பரிசுத்த ஆவியானவர் தன்னைப் பற்றி பேசமாட்டார், ஆனால் கிறிஸ்துவின் காரியங்களை அதாவது அவர் பிதாவினிடத்திலிருந்து பெற்ற காரியங்களை வெளிப்படுத்துவார் என்று இயேசு கூறினார், கிறிஸ்து பிதாவினால் எடுத்துக்கொள்ளப்பட்டார்.[293] இயேசுவும் பிதாவும் பரிசுத்த ஆவியானவராக இருந்திருந்தால், அந்த அறிக்கை அர்த்தமுள்ளதாக இருக்காது.*

*இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, "ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார். அன்றியும், நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம்*

---

*[292] யோவான் 14:16-17, 26, 15:26, 16:7, 13-15-ஐ வாசிக்கவும்.*
*[293] யோவான் 16:13-15*

உண்டாயிற்று.''[294] திரித்துவத்தின் மூன்று உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் இங்கு ஈடுபட்டுள்ளனர், ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்கள்.

ஒரு தனித்துவமான நபராக, பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனுடன் நித்தியமாக அன்பான உறவில் வாழ்ந்து வருகிறார். அந்த உறவில் பங்கு கொள்ள தேவன் நம்மை படைத்தார். திரித்துவத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் காலத்தின் தொடக்கத்திற்கு முன்பே மற்றவர்களுடன் ஐக்கியத்தை அனுபவித்து மகிழ்ந்ததைப் போல,[295] நாம் அவருடன் ஐக்கியத்தை அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.[296]

## பரிசுத்த ஆவியானவர் செயலில் இருக்கிறார்

சிருஷ்டிப்பின் காலத்திலிருந்து, பரிசுத்த ஆவியானவர் உலகில் செயல்பட்டுக் கொண்டிருந்தார். பூமி படைக்கப்பட்டபோது அவரும் அங்கெ இருந்தார் மற்றும் அதில் உடன்பட்டிருந்தார்.[297] சிறப்பு பணிக்கு அழைக்கப்பட்ட ஜனங்களுக்கு அவர் சிறப்பு திறன்களை வழங்கினார்.[298] அவர் தீர்க்கதரிசிகளுக்கு தீர்க்கதரிசன செய்திகளை வழங்கினார்.[299] அவர் வேதத்தை ஏவினார்.[300] பழைய ஏற்பாட்டின் காலத்தில், அவர் ஜனங்களின் இதயங்களில் கிரியைச் செய்தார், அவர்களை தேவனிடம் திருப்ப முயன்றார்.[301] அவர்கள் முழு இருதயத்தோடும் தேவனை நேசிக்கும்படி செய்யும் ஒரு கிருபையின் வேலையை அவர் வழங்கினார்.[302]

அவர் ஜீவனுள்ள ஆவி என்று அழைக்கப்படுகிறார். அவர் நம்மைப் படைத்து, நமக்கு ஜீவனை அளித்த ஆவியானவர்.

[294] மாற்கு 1:10-11
[295] 1 யோவான் 1:4
[296] யோவான் 17:22-23-ஐ வாசிக்கவும்.
[297] ஆதியாகமம் 1:3
[298] நியாயாதிபதிகள் 3:9-10, 15:14-15; யாத்திராகமம் 35:30-31
[299] ஏசாயா 61:1
[300] 2 பேதுரு 1:21
[301] அப்போஸ்தலர் 7:51
[302] உபாகமம் 30:6-ஐ வாசிக்கவும்.

அவர் உலகத்தை விட்டு எடுக்கப்பட்டால், எல்லா உயிர்களும் நின்றுவிடும், மேலும் மனிதன் மண்ணுக்குத் திரும்புவான்.[303]

புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் புதிய அம்சத்தை அறிமுகப்படுத்தியது. இயேசு பரிசுத்த ஆவியால் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானகன் கூறினார்.[304] பெந்தெகொஸ்தே நாளில் நடந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமான "பிதாவின் வாக்குத்தத்தத்தை" எதிர்பார்க்கும்படி இயேசு தம் சீடர்களிடம் கூறினார்.[305] அந்த நிகழ்வில் பல நிகழ்வுகள் காணப்பட்டாலும், அவர்களின் இருதயங்கள் சுத்தமாக்கப்பட்டதே முக்கியமான காரியம் என்று பேதுரு பின்னர் கூறினார்.[306]

பரிசுத்த ஆவியானவர் அவர்களுடன் இருப்பார் என்று இயேசு சீடர்களுக்கு வாக்குறுதி அளித்தார், இயேசு கற்பித்த காரியங்களை அவர்களுக்கு நினைவூட்டி அவர்களை சத்தியத்திற்குள் அழைத்துச் சென்றார்.[307] பரிசுத்த ஆவியானவர் வேறொரு தேற்றரவாளனாக இருப்பார் என்று இயேசு கூறினார்.[308] இந்த வார்த்தை நம்முடன் இருப்பவரை, ஊக்குவித்து உதவி செய்பவரைக் குறிக்கிறது. இது ஒரு பிரதிநிதியையும் குறிக்கலாம். பரிசுத்த ஆவியானவர் இயேசுவை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் மற்றும் அவருடைய வார்த்தைகளை நமக்கு நினைவூட்டுகிறார்.[309]

► பரிசுத்த ஆவியானவர் செய்யும் சில காரியங்கள் யாவை?

உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் வேலையை முழுமையாக விளக்க முடியாது, ஆனால் அவரது சில செயல்பாடுகளின் பட்டியல் இதோ இங்கே.

---

303 ரோமர் 8:2; யோபு 33:4, 34:14-ஐ வாசிக்கவும்.

304 மத்தேயு 3:11

305 அப்போஸ்தலர் 1:4-5, 8

306 அப்போஸ்தலர் 15:8-9-ஐ வாசிக்கவும்.

307 யோவான் 14:26, 16:13

308 யோவான் 14:16, 26, 15:26, 16:7

309 அதே வார்த்தை 1 யோவான் 2:1 இல் உள்ளது, அங்கு இயேசு பிதாவின் பிரதிநிதி என்று கூறப்படுகிறது.

1. *அவர் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார்*[310] *(இல்லையெனில் ஒரு நபர் மனந்திரும்பி மன்னிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர இயலாது).*
2. *பாவத்தில் மரித்தவனுக்கு ஜீவனைக் கொடுத்து, மீண்டும் பிறக்கும்படிச் செய்கிறார்.*[311]
3. *அவர் விசுவாசிக்கு இரட்சிக்கப்பட்டதாக தனிப்பட்ட உறுதியளிக்கிறார்.*[312]
4. *அவர் ஒவ்வொரு விசுவாசியிலும் வாழ்கிறார் (ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட நபருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார்).*[313]
5. *அவர் தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொள்ளும்படி உதவிச் செய்கிறார்.*[314]
6. *அவர் ஜனங்களை சிறப்பு ஊழியத்திற்கு அழைக்கிறார் மற்றும் ஊழியத்தில் முடிவுகளை எடுக்க வழிநடத்துகிறார்.*[315]
7. *அவர் விசுவாசியை பரிசுத்தப்படுத்துகிறார், அவரை பரிசுத்தமாக்குவதற்காக அவருடைய இருதயத்தை சுத்திகரிக்கிறார்.*[316]
8. *பாவத்தின் மீது வெற்றி பெற்று வாழ்வதற்கு அவர் பெலனை அளிக்கிறார்.*[317]
9. *விசுவாசியின் வாழ்க்கையில் அவர் ஆவியின் கனியைக் கொடுக்கிறார்.*[318]
10. *அவர் ஊழியத்திற்காக ஆவியின் வரங்களைக் கொடுக்கிறார்.*[319]

---

[310] *யோவான் 16:8; 1 கொரிந்தியர் 2:4; 1 தெசலோனிக்கேயர் 1:5*
[311] *தீத்து 3:5; எபேசியர் 2:1; யோவான் 7:38-39; கலாத்தியர் 4:29; யோவான் 3:5*
[312] *ரோமர் 8:16*
[313] *அப்போஸ்தலர் 2:4; 1 கொரிந்தியர் 6:19; ரோமர் 8:9*
[314] *1 கொரிந்தியர் 2:9-10, 13-14; எபேசியர் 6:17; 2 கொரிந்தியர் 3:14-17*
[315] *அப்போஸ்தலர் 13:2-4, 15:28, 16:6-10*
[316] *1 பேதுரு 1:2; Acts 15:8-9; 1 தெசலோனிக்கேயர் 5:23*
[317] *ரோமர் 8:1, 5, 13; கலாத்தியர் 5:16*
[318] *கலாத்தியர் 5:22-23*
[319] *1 கொரிந்தியர் 12:4-10, 28-30; ரோமர் 12:6-8*

11. அவர் ஊழியத்திற்காக விசேஷித்த அதிகாரத்துடன் அபிஷேகம் செய்கிறார்.[320]
12. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க அவர் விசுவாசிக்கு உதவுகிறார்.[321]
13. அவர் திருச்சபையின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் உருவாக்குகிறார்.[322]

## ஆவியின் வரங்கள் குறித்த சில கோட்பாடுகள்

*வகுப்புத் தலைவருக்கான குறிப்பு: வகுப்பின் ஒரு உறுப்பினர் இந்தப் பகுதியை விளக்கலாம்.*

1. ஆவியானவர் வெவ்வேறு வரங்கள், செயல்பாடுகள் மற்றும் நிர்வாகங்கள் மூலம் செயல்படுகிறார் (1 கொரிந்தியர் 12:4-6).
2. ஆவிக்குரிய வரங்கள் தேவனுடைய சித்தத்தின் விநியோகிக்கப்படுகின்றன, ஆவிக்குரியத் தன்மையின்படி அல்ல (1 கொரிந்தியர் 12:11, 4:7).
3. ஒவ்வொரு நபருக்கும் ஆவியானவரால் கொடுக்கப்பட்ட சில திறன்கள் உள்ளன (1 கொரிந்தியர் 12:7).
4. ஒவ்வொரு விசுவாசியிடமும் எந்த ஒரு குறிப்பிட்ட வரத்தையும் எதிர்பார்க்க முடியாது (1 கொரிந்தியர் 12:8-11, 14-30).
5. வரங்கள் எப்போதும் தேவனுடைய மகிமைக்காக மற்றவர்களுக்கு சேவை செய்ய பயன்படுத்தப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 12:21-22, 25, 1 பேதுரு 4:10-11).

## பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடன் உறவில் இருக்கிறார்

நீங்கள் தேவனுடன் உறவில் இருந்தால், நீங்கள் பரிசுத்த ஆவியுடன் உறவில் இருப்பீர்கள். திரித்துவத்தில் மற்றவர்களை

[320] அப்போஸ்தலர் 1:8, 13:9; கலாத்தியர் 3:5; 1 பேதுரு 2:12
[321] ரோமர் 8:26-27; எபேசியர் 6:18
[322] எபேசியர் 4:3; 1 கொரிந்தியர் 12:13

அறியாமல் ஒருவரை மட்டும் தெரிந்து கொள்வது சாத்தியமில்லை.[323]

ஒரு நபர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு பரிசுத்த ஆவியானவரின் உபதேசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. சீஷர்களுக்கு ஆவியானவரைப் பற்றி அதிகம் தெரியாது, ஆனால் அவர்கள் ஆவியானவரை அறிந்திருப்பதாகவும் அவர் அவர்களுடன் ஏற்கனவே இருப்பதாகவும் இயேசு அவர்களிடம் கூறினார்.[324]

பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய சரியான உபதேசத்தை அறிந்துகொள்வது, அவருடன் சரியான வழியில் தொடர்புகொள்வதற்கு உதவுகிறது, மேலும் அவர் நம் வாழ்க்கையில் அதிகமாக கிரியைச் செய்ய உதவுகிறது. அவர் ஒரு நபர் என்பதை அறிந்துகொள்ளுதல் மூலமாக, அவருடன் நாம் உறவு கொள்ள முடியும் என்பதையும் அறிந்துகொள்ளலாம். நாம் அவருடன் பேசலாம், அவர் நம்மிடம் பேசுவார். அவர் பொதுவாக நம்மிடம் கேட்கக்கூடிய சத்தத்தில் பேசுவதில்லை, ஆனால் அவர் தேவனுடைய விருப்பத்தையும் தேவனுடைய அன்பையும் புரிந்துகொள்ள உதவுகிறார். நாம் உண்மையிலேயே தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்பினால், நாம் எப்போதும் பரிசுத்த ஆவியானவரை உணராவிட்டாலும் அவர் நம்மை வழிநடத்துவார்.

அவர் ஒரு நபர் என்பதை அறிந்துகொள்ளுதல், அவர் வெறுமனே ஒரு சக்தியாகவோ அல்லது உணர்வாகவோ எண்ணி நாம் செயல்படுவதில்லை என்பதை குறிக்கிறது. நாம் தேவனை ஆராதிக்கும்போது அவர் யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதைப் பற்றி சிந்திக்கிறோம், மனமற்ற உணர்வை மட்டும் அனுபவிப்பதில்லை. நாம் ஜெபிக்கும்போது நாம் புத்தியோடுப் பேசுகிறோம், மற்ற மதத்தினரைப் போல வார்த்தைகளை ஆள்தன்மையற்ற, மாயாஜால வழியில் பயன்படுத்துவதை விட, அவர் நமக்கு

---

[323] எபேசியர் 2:18; John 6:44-ஐ வாசிக்கவும்.
[324] யோவான் 14:17-ஐ வாசிக்கவும்.

என்ன காண்பிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதை அறிந்திருப்பது, பயபக்தியுடன் ஆராதிக்கும் மனப்பான்மையை நமக்குக் கொடுக்க வேண்டும். நாம் ஜெபித்து, அவருடைய வழிகாட்டுதலை உணரும்போது, அவர் நம்மை நேசிக்கிற, நம்மை முழுமையாக அறிந்திருக்கிற, நம்முடைய எதிர்காலத்தை அறிந்திருக்கிற தேவன் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் முழு அதிகாரமும் உடையவர், அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

அவர் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார். நாம் ஆவியில் வாழ்கிறோம், மற்றும் ஆவியில் நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது.[325] நாம் அவருடைய பிரசன்னத்தில் இருப்பதைப் போல வாழ வேண்டும், திருச்சபையில் மட்டுமே அவருடைய முன்னிலையில் வருகிறோம் என்று நினைக்கக்கூடாது. அவர் நம்மோடு மட்டுமல்ல, நமக்குள்ளும் வாழ்கிறார். நாம் சுத்தமான மற்றும் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ இது ஒரு காரணம்.[326]

பாவத்தின் மீது நமக்கு வெற்றியைக் கொடுப்பதும், நம் இருதயங்களைச் சுத்திகரிப்பதும்தான் ஆவியானவரின் மிக உயர்ந்த முன்னுரிமை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.[327] முதல் முன்னுரிமையை நிறைவேற்ற நாம் அவரை அனுமதிக்கவில்லை என்றால், மற்ற காரியங்களுக்காக நாம் ஜெபிக்கக்கூடாது. அவர் உங்கள் இருதயத்தைச் சுத்தப்படுத்தி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவார் என்று விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.[328]

வாழ்க்கைப் போராட்டங்களில், அவர் நமக்கு உள்ளான வலிமையைத் தருகிறார்.[329] அவர் நம்மைப் புரிந்துகொள்கிறார்,

[325] கலாத்தியர் 5:25
[326] 1 கொரிந்தியர் 6:19-ஐ வாசிக்கவும்.
[327] ரோமர் 8:13; கலாத்தியர் 5:16; அப்போஸ்தலர் 15:8-9
[328] 1 தெசலோனிக்கேயர் 5:23-ஐ வாசிக்கவும்.
[329] எபேசியர் 3:16

நம் சூழ்நிலைகளைப் புரிந்துகொள்கிறார், மேலும் நமக்குத் தேவையானதை அவர் சரியாகக் கொடுக்க முடியும்.

ஊழியத்தில், நமக்கு வழிநடத்துதலைக் கொடுக்கவும், அவருடைய வார்த்தைக்கு வல்லமையைக் கொடுக்கவும், மற்றவர்களின் இருதயங்களில் ஆவிக்குரிய முடிவுகளை நிறைவேற்றவும் நாம் அவரையேச் சார்ந்திருக்க வேண்டும். எந்த மனித திறமையும் பெலனும் ஆவியானவரின் செயலுக்கு மாற்றாக முடியாது.

நீங்கள் ஏற்கனவே ஆவியானவரால் நிரப்பப்பட்டிருந்தாலும், அவருடன் உறவை வைத்துக் கொள்ள மறக்கக் கூடாது. ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்ற கட்டளை கிரேக்க வினைச்சொல்லில் உள்ளது, அதாவது அது ஒரு தொடர்ச்சியான செயல்.[330] நாம் தொடர்ந்து நிரப்பப்பட வேண்டும், அது அவருடனான நமது உறவின் மூலம் மட்டுமே நிகழ்கிறது.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

**நம்பிக்கைகளின் அறிக்கை**

பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் மூன்றாவது நபர், பிதா மற்றும் குமாரனுடன் முழுமையாக தெய்வீகத்தன்மையுள்ளவராக இருக்கிறார். அவர் பாவத்தை கண்டித்து உணர்த்துகிறார, ஒவ்வொரு விசுவாசியிலும் மீண்டும் பிறக்கும்படிச் செய்து அவர்களுக்குள் வாழ்கிறார், பாவத்தின் மீது வெற்றியைக் கொடுக்கிறார் மற்றும் இருதயத்தை சுத்தப்படுத்துகிறார். அவர் திருச்சபையின் ஒருங்கிணைக்கும் வாழ்க்கையில், அவர் ஆவியின் கனியையும், ஊழியத்திற்கான ஆவிக்குரிய வரங்களையும் அளித்து ஆசீர்வதிக்கிறார்.

**பாடம் 10 வீட்டுப்பாடங்கள்**

(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள்

[330] எபேசியர் 5:18-ஐ வாசிக்கவும்.

*வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *அப்போஸ்தலர் 1:4-8*
- *1 கொரிந்தியர் 2:9-16*
- *ரோமர் 8:1-14*
- *1 கொரிந்தியர் 12:1-13*
- *கலாத்தியர் 5:22-26*

*(2) தேர்வு: பாடம் 10க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

## பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மைக்கான வேதாகமச் சான்றுகள்

*வகுப்புத் தலைவருக்கானக் குறிப்பு: இந்தப் பிரிவு விருப்பமானது மற்றும் இந்தக் கருத்துக்கு மேலும் வேதாகமச் சான்றுகள் தேவை என வகுப்பினர் உணர்ந்தால் அதையும் குறிப்பிடலாம்.*

- *மத்தேயு 28:19 இல், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் பெயரில் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது, இது மூவருக்கும் அதிகாரம் இருப்பதைக் குறிக்கிறது.*
- *2 கொரிந்தியர் 13:14 பரிசுத்த ஆவியின் ஒற்றுமையைக் குறிப்பிடுகிறது, இது அறிவார்ந்த தொடர்புகொள்ளுதலைக் குறிக்கிறது.*
- *மாற்கு 13:11ல், உபத்திரவக் காலங்களில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மூலம் பேசுவார் என்று விசுவாசிகளுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.*

- *யோவான் 14:17, 26 இல், பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார், அவர் கற்பித்து நினைவூட்டுவார்.*
- *யோவான் 16:7-11 இல், பரிசுத்த ஆவியானவர் பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றை உலகிற்கு கண்டித்து உணர்த்துவார் என்று இயேசு வாக்குறுதி அளித்தார், இதற்கு அறிவார்ந்த தொடர்புகொள்ளுதல் தேவைப்படுகிறது.*
- *யோவான் 16:13-15, பரிசுத்த ஆவியானவர் தன்னைப் பற்றி பேசாமல், கிறிஸ்துவின் காரியங்களைப் பற்றி பேசுவார் என்று கூறுகிறது.*
- *1 கொரிந்தியர் 12:11ன் படி, ஆவிக்குரிய வரங்கள் எப்படி கொடுக்கப்பட வேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவர் தேர்ந்தெடுக்கிறார்.*
- *நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் (ரோமர் 8:16).*
- *அவர் நமக்காக பிதாவிடம் பரிந்து பேசுகிறார் மேலும் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய மனதைக் கொண்டிருக்கிறார் (ரோமர் 8:26-27).*
- *எபேசியர் 4:30-ன் படி, அவர் துக்கப்படலாம்; அதாவது, அவருக்கு நம் பதில்களை அவர் புரிந்துகொள்கிறார் மற்றும் உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறார்.*
- *அவருக்கு எதிராகப் பொய் சொல்லலாம், அதாவது அவர் தகவல்தொடர்புகளை புரிந்துகொள்கிறார் (அப்போஸ்தலர் 5:3).*
- *அவர் பேசுகிறார், வழிகாட்டுகிறார், ஜனங்கள் பின்பற்ற வேண்டும் என்று ஒரு விருப்பத்தை கொண்டிருக்கிறார் (அப்போஸ்தலர் 13:2-4).*
- *அவர் அப்போஸ்தலர்களை அவர்களின் மிஷனரி பயணங்களில் வழிநடத்தினார் மற்றும் சில சமயங்களில் ஒரு இடத்திற்கு செல்ல வேண்டாம் என்றும் கூறினார் (அப்போஸ்தலர் 16:6).*

*சிலர் ஆவியானவரின் ஆள்தன்மையை மறுத்து, அவர் மின்சாரம் போன்ற சக்தி அல்லது புவியீர்ப்பு போன்ற ஒரு ஆள்தன்மையற்ற சக்தி என்று கூறுகிறார்கள். இருப்பினும், பரிசுத்த ஆவியானவரை வேதாகமம் விவரிப்பது போல ஒரு ஆள்தன்மையற்ற சக்தியை விவரிப்பதென்பது கூடாத காரியம். மின்சாரம் பேசாது, பகுத்தறியுமில்லை; புவியீர்ப்புக்கு எதிராக பொய் சொல்ல முடியாது. மனமற்ற சக்தியால் தேவனுடைய விருப்பத்தை புரிந்து கொள்ள முடியாது.*

*சிலர் இந்த வேதவசனங்கள் வெறுமனே உருவகமாக மனிதப் பண்புகளை மனிதர் அல்லாதவைகளுக்கு ஏற்றிச் சொல்லுதல் என்று கூறுகிறார்கள், அது உண்மையில் அர்த்தமில்லாமல் ஒரு நபரைப் போல் பேசுகிறது. இருப்பினும், வேதாகமம் ஆவியானவரைப் பற்றி தனிப்பட்ட சொற்களுடன் பேசுகிறது, மேலும் ஜனங்கள் அவருக்கு ஒரு நபராக பதிலளித்தனர். ஒரு சில இடங்களில், ஆவியானவர் "ஊற்றப்படுகிறார்" (அப்போஸ்தலர் 2:17) என்று வேதாகமம் கூறுவதைப் போல, அவர் ஒரு பொருளாக இருப்பது போல் அடையாளப்பூர்வமாக பேசப்படுகிறது. அவை உருவகமாகக் கருதப்பட வேண்டும் காரணம் வேதாகமம் பொதுவாக ஆவியானவரை ஒரு நபராகப் பேசுகிறது.*

***பாடம் 10 தேர்வு***

*(1) பரிசுத்த ஆவிக்கு ஆரம்பகால திருச்சபையின் மாறுத்திரமான மூன்று பண்புகளை பட்டியலிடுக.*

*(2) பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதை ஆள்தன்மையின் எந்த பண்புகள் காட்டுகின்றன?*

*(3) பாராகிலேட் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

*(4) ஆவியானவரின் சில நடவடிக்கைகள் யாவை? கொடுக்கப்பட்ட 13ல் 9ஐப் பட்டியலிடுக.*

*(5) நம் வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைக்கு அவர் எதற்கு அதிக முன்னுரிமை கொடுக்கிறார்?*

# பாடம் 11
# கிறிஸ்தவப் பரிசுத்தம்

## பாடத்தின் நோக்கங்கள்

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *கிறிஸ்தவ பரிசுத்தத்திற்கு அடிப்படையான தேவனுடைய பரிசுத்தம்.*
- *ஆராதனை மற்றும் தேவனுடனான உறவுக்கான பரிசுத்தத்தின் முக்கியத்துவம்.*
- *ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் பரம்பரை சீரழிவின் தாக்கம்.*
- *ஒரு விசுவாசியை பரிசுத்தமாகுதலுக்கு கொண்டுவரும் செயல்முறை.*
- *பரிசுத்தமாகுதலின் அனுபவங்களின் வேதாகம உதாரணங்கள்.*
- *முழுமையான பரிசுத்தமாகுதலின் வரையறை.*
- *ஆவியின் ஞானஸ்நானம் பற்றிய வேதாகமக் கருத்து.*
- *கிறிஸ்தவ பரிசுத்தத்தைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) தேவனுடைய கிருபை அவரை தற்போதைய உலகில் பரிசுத்தமாக்கும் என்று மாணவர் நம்பிக்கை கொண்டிருப்பார்.*

## முன்னுரை

*சங்கீதம் 119:33-40-ஐ ஒன்றாகப் படியுங்கள். தேவன் ஒரு விசுவாசியை மறுரூபமாக்கும் விதத்தைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

தேவன் தன்னை வெளிப்படுத்தத் தொடங்கியபோது, அவர் எப்படிப்பட்ட தேவன் என்பதைக் காண்பிப்பதே அவருடைய

*முதல் நோக்கமாக இருந்தது. தேவன் தம்மை முதன்மையாக பரிசுத்தமானவர் என்று விவரித்தார். பரிசுத்தத்திற்கான எபிரேய வார்த்தை (காடோஷ்) பழைய ஏற்பாட்டில் 600 தடவைகளுக்கு மேல் இந்த சொல் வருகிறது. உதாரணமாக, ஏசாயா அடிக்கடி தேவனை ''இஸ்ரவேலின் பரிசுத்தர்'' என்று குறிப்பிட்டார்.*

*தேவனுடைய பரிசுத்தம் என்பது ஆராதனையின் கருப்பொருளாக இருந்தது:*

> *மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக; அது பரிசுத்தமுள்ளது. நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர் (சங்கீதம் 99:3, 5).*

*தேவனுடைய பரிசுத்தம் மனிதனுக்கான அவரது தேவையின் அடிப்படையாகும். அவர் பரிசுத்தமானவராக இருப்பதால், தம்மை ஆராதிப்பவர்கள் பரிசுத்தமாக இருக்கும்படி அழைக்கிறார். அவர், "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்"[331] என்றார்.*

*இஸ்ரவேலின் தேவன் புறஜாதிகளின் பொய்க் கடவுள்களிலிருந்து வேறுபட்டவர் மற்றும் வேறுபட்ட ஆராதனையின் தேவையை ஏற்படுத்தினார்.*

> *யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே (சங்கீதம் 24:3-4).*

*இங்கே கேள்வி என்னவென்றால், "யாருடைய ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்கிறார்?" என்பதாகும் வெளிப்படையாக, எல்லோரும் தேவனை ஆராதிப்பவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.*

---

[331] *லேவியராகமம் 11:44-45, 19:2, 20:26, 21:8*

*தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தம் வெறும் சடங்கு அல்லது பாசாங்கு காண்பிப்பது அல்ல; அது உண்மையான பரிசுத்தம். தேவனுடைய வழிபாட்டாளர்களுக்கான பரிசுத்தத்தின் தரநிலை புதிய ஏற்பாட்டில் அடிக்கடி கூறப்பட்டுள்ளது: "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்."[332] உரையாடல் என்பது நடத்தை, ஒழுக்கம், மொத்த வாழ்க்கை முறை ஆகியவற்றைக் குறிக்கும் சொல் ஆகும். தேவன் தம்மை ஆராதிப்பவர்களை சம்பிரதாய ரீதியில் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று மட்டும் கேட்கவில்லை, அல்லது அவர்கள் உண்மையில் பரிசுத்தமாக இல்லாதபோது அவர்கள் பரிசுத்தர் என்று அழைக்கப்படுவார்கள் என்பதும் அல்ல. தன்னை ஆராதிப்பவர்கள் பரிசுத்தமாக வாழ வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.*

*நாம் கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம், கிறிஸ்துவின் பலியின் காரணமாக நாம் பாவிகளாக இருக்கும்போது தேவன் நம்மை ஏற்றுக்கொள்கிறார். அவர் நம்மை பாவிகளாக ஏற்றுக்கொள்கிறார், ஆனால் நாம் பாவிகளாக இருப்பதில்லை. பாவம் தேவனுக்கு எதிரான குற்றம், நாம் அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறோம்.*

► *ஆராதனையுடன் பரிசுத்தம் இணைக்கப்பட்டதற்கான சில காரணங்கள் யாவை?*

***நாம் தேவனை நேசிப்பதாலும், அவரைப் பிரியப்படுத்த விரும்புவதாலும் பரிசுத்தமானது ஆராதனையுடன் இணைக்கப்பட்டுள்ளது.** உண்மையில் ஆராதனை என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொண்டால், தேவனுடைய எதிர்பார்ப்பு நம்மை ஆச்சரியப்படுத்தாது. பயத்தின் காரணமாக நாம் அவரை ஆராதிப்பதில்லை. அவர் நம்மை ஆசீர்வதிப்பதால் மட்டுமே நாம் அவரை ஆராதிப்பதில்லை.*

---

[332] *1 பேதுரு 1:15-16*

*தேவனை ஆராதிப்பதென்றால், அவர் ஜீவித்திருக்கிற மிகவும் அற்புதமான ஜீவன் என்று பார்க்க வேண்டும். ஆராதிப்பதென்றால் அவர் உள்ளபடியே அவரை போற்றுவதாகும். அவருடைய இயல்பின் பண்புகளைப் போற்றுவதே ஆராதனை.*

*தேவனுடைய இயல்பு அடிப்படையில் பரிசுத்தமுள்ளது, எனவே நாம் தேவனுடைய இயல்பை உண்மையில் போற்றினால், பாவத்தையும் அசுத்தத்தையும் அதை நம்மில் கண்டாலும் கூட நாம் அதை வெறுப்போம்.* ***நாம் தேவனை நேசிப்பதாலும், அவரைப் போல இருக்க விரும்புவதாலும் பரிசுத்தமானது ஆராதனையுடன் இணைக்கப்பட்டுள்ளது.***

*நாம் முதன்முதலில் தேவனை சந்திக்கும் போது, பாவம் அவருடனான நமது உறவுக்கு தடையாக இருக்கிறது. அதனால்தான் நாம் மனந்திரும்பி, மன்னிக்கப்படும் வரை, புதிய இருதயம் கொடுக்கப்படும் வரை தேவனுடனான நமது உறவைத் தொடங்க முடியாது.*

*நாம் தேவனுடன் ஒப்புரவாகும் அதே நேரத்தில், நாம் மறுரூபமாக்கப்படுகிறோம். ஆவிக்குரிய ரீதியில், நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாக ஆக்கப்பட்டுள்ளோம். நாம் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம், மேலும் தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறோம். ஒரு நபர் இரட்சிக்கப்படும்போது கிறிஸ்தவ பரிசுத்தம் தொடங்குகிறது.*

*இரட்சிப்பு உடனடியாக பரிசுத்த வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. "இரட்சிப்பைக் கொண்டுவரும் தேவனுடைய கிருபை", "இந்த உலகில் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும், நீதியுள்ளவர்களாகவும், பயபக்தியுள்ளவர்களாகவும் வாழ வேண்டும்" என்று நமக்குக் கற்பிக்கிறது.''*[333] *இரட்சிப்பின் நோக்கம் நம்மை பாவத்திலிருந்து விடுவித்து நம்மை*

---

*[333] தீத்து 2:11-12*

*பரிசுத்தமாக்குவதே ஆகும், எனவே நாம் தேவனுடன் உறவில் வாழ முடியும்.*[334]

*நாம் தேவனுடன் உறவில் வாழ்கையில், அவருடைய சத்தியத்தைப் பற்றி அதிகம் புரிந்துகொள்வதால், நாம் தொடர்ந்து பரிசுத்தத்தில் வளர்கிறோம். "ஒளியில் நடப்பது" என்பது தேவனுடைய சத்தியத்தைப் பற்றி நாம் அதிகம் தெரிந்துகொள்ளும்போது தொடர்ந்து அவருக்குக் கீழ்ப்படிவதாகும்.*[335] *எது அவருக்குப் பிரியமானது, எது அவருக்குப் பிரியமில்லாதது என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளும்போது, அவருடைய சத்தியத்தாலும், நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலும் நாம் மறுரூபமாக்கப்படுகிறோம். இது ஆவிக்குரிய வளர்ச்சியின் ஒரு அம்சமாகும்.*

*தேவனை நேசிக்கும் ஒரு நபர் முற்றிலும் பரிசுத்தமாக இருக்க விரும்புவார். அவர் தனது செயல்களை மட்டும் மாற்ற விரும்பவில்லை. அவர் தனது நோக்கங்கள் முற்றிலும் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். தாவீது பாவத்தின் மீது முழுமையான வெற்றியுடன் வாழ முடியும் என்று ஜெபித்தார், பின்னர் அவருடைய வாயின் வார்த்தைகளும், அவருடைய இருதயத்தின் தியானமும், தேவனுடைய சமுகத்தில் பிரீதியாயிருக்க வேண்டும் என்று ஜெபித்தார்.*[336]

*ஆனால், மனமாற்றத்தைத் தொடர்ந்து வரும் பரிசுத்தத்தின் வளர்ச்சியின் செயல்முறையைத் தவிர, விசுவாசிகளுக்குத் தேவையான வேறொன்றும் உள்ளது. விசுவாசிகள் தங்கள் இருதயங்களில் எஞ்சியிருக்கும் அசுத்தத்தை உணர்ந்து கொள்கிறார்கள். இது படிப்படியான வளர்ச்சியால் குணப்படுத்த முடியாத ஒன்று. அவர்கள் இரட்சிக்கப்பட்டு,*

---

*[334] இரட்சிப்பின் நோக்கம் என்னவென்றால், நாம் ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாக கடவுளுக்கு சேவை செய்ய முடியும் (லூக்கா 1:74-75). விசுவாசிகளாகிய நாம் பாவத்திற்கு மரித்தவர்கள், அதில் தொடர்ந்து இருக்க முடியாது (ரோமர் 6:2, 11-16).*

*[335] 1 யோவான் 1:7*

*[336] சங்கீதம் 19:12-14. சங்கீதம் 119:7, 34, 36, 69, 80, மற்றும் 112 ஆகிய வசனங்களையும் பார்க்கவும்.*

தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தாலும், சில சமயங்களில் அவர்கள் பாவத்திற்குத் திரும்பும் போக்கை உணர்கிறார்கள்.

***பரம்பரை சீரழிவு*** என்பது மனிதனின் தார்மீக இயல்பின் சிதைவு ஆகும், அது பிறப்பிலிருந்தே அவனை பாவத்தின் பக்கம் இட்டுச் செல்லுகிறது. இறையியலாளர்கள் சில சமயங்களில் அதை "முதல் பாவம்" என்று அழைக்கிறார்கள், ஏனென்றால் ஆதாமின் பாவத்தின் காரணமாக நாம் பிறக்கும் நமது இயற்கையின் பாவ சுபாவத்தோடு பிறக்கிறோம்.

ஒவ்வொரு நபரும் சுயநலம் மற்றும் பாவத்தை நோக்கி வளைந்த விருப்பத்துடன் பிறக்கிறார்.[337] தேவன் நமக்கு விருப்பத்தையும் பலத்தையும் தராத வரையில் நமது விருப்பங்கள் சரியானதைத் தேர்ந்தெடுக்க சுதந்திரமாக இருக்காது.[338] பரம்பரை சீரழிவு அகங்காரம், பொறாமை, வெறுப்பு மற்றும் மன்னியாமை போன்ற உள் பாவங்களைத் தூண்டுகிறது. பாவத்தின் செயல்களையும் தூண்டுகிறது.

> *“அந்த வரம்பற்ற வாக்குத்தத்தம் முழு சுவிசேஷ யுகத்தையும் ஆளுகிறது, ‘நான் என் பிரமாணங்களை அவர்கள் மனதில் வைத்து, அவர்கள் இருதயங்களில் எழுதுவேன்,’ எல்லா கட்டளைகளையும் வாக்குறுதிகளாக மாற்றுகிறது; இது உட்பட, ‘கிறிஸ்து இயேசுவில் இருந்த இந்த சிந்தை உங்களுக்குள்ளும் இருக்கட்டும்.’ இந்த கட்டளை ஒரு வாக்குறுதிக்கு சமமானது, மேலும் அவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறாரோ அதை அவர் நம்மில் செய்வார் என்று எதிர்பார்ப்பதற்கான காரணத்தை அளிக்கிறது.”*
> *- John Wesley, “On Perfection” என்னும் பிரசங்கத்திலிருந்து பொழிப்புரையாக்கப்பட்டது.*

► ஒரு நபர் இரட்சிக்கப்பட்ட பிறகு, அவருக்கு இன்னும் பரம்பரை சீரழிவு இருக்கிறதா?

இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் இனி பரம்பரை சீரழிவின் கட்டுப்பாட்டில் இல்லை. அவர் இன்னும் அதன் கட்டுப்பாட்டில் இருந்தால், அவர் பாவத்தில் வாழ்ந்து இரட்சிக்கப்படாமல் இருப்பார். “மாம்ச புத்தியால்” கட்டுப்படுத்தப்படும் ஒரு நபர் ஆக்கினைக்குள்ளாகத்

[337] பிலிப்பியர் 3:19
[338] ரோமர் 6:16-17

*தீர்க்கப்படுகிறார் என்று வேதாகமம் சொல்கிறது.*[339] *இரட்சிக்கப்பட்ட நபர் பரம்பரை சீரழிவின் கட்டுப்பாட்டில் இல்லை, மேலும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பாவத்தின் மீது வெற்றி பெற்று வாழ முடியும்.*[340]

*இருப்பினும், இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் அதைச் சுத்திகரிக்கப்படும் வரை அவருக்குள் பரம்பரை சீரழிவின் செல்வாக்கு உள்ளது. கொரிந்து சபை விசுவாசிகளிடம் அவர்கள் இன்னும் "மாம்சத்திற்குரியவர்கள்" என்றும், அவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், உலக ஜனங்களைப் போன்ற மனப்பான்மைகள் கொண்டவர்கள் என்றும் பவுல் கூறினார்.*[341] *ஒரு புதிய கிறிஸ்தவர் அந்த நிலையில் இருப்பது இயல்பானது என்றும் அவர் மறைமுகமாகக் கூறினார். "மாம்சத்திற்குரியவர்களாக" இருப்பதென்றால், "கிறிஸ்துவில் ஒரு குழந்தையாக" இருப்பது என்று அவர் கூறினார்.*

*இந்த நிலையில் உள்ள ஒரு விசுவாசி தேவனை நேசிக்கிறார், ஆனால் அவரது முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் மற்றும் பெலத்தொடும் தேவனை நேசிக்க முடியாது. பவுலைப் போல, தேவனுடைய அழைப்பைப் பின்பற்றுவதற்கு அவருக்கு ஒரு நோக்கம் இருப்பதாக அவர் கூற முடியாது.*[342] *அவருடைய இருதயத்தின் சில தியானங்கள் தேவனுக்கு ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதை அவர் அறிவார்.*

*தேவன் நம்மை இந்த நிலையில் விடுவதில்லை. பண்டைய காலங்களிலும் அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். தம்மை முழு மனதோடு நேசிக்கும்படி செய்யும் கிருபையின் கிரியையைச் செய்வேன் என்றார்.*[343]

*மன்னிப்புக்கு அப்பாற்பட்ட கிருபையின் கிரியைக்காக தாவீது ஜெபித்தார். அவர் பாவத்தில் விழுந்துவிட்டார், அது அவரது*

---

[339] *ரோமர் 8:6-8, 13*

[340] *ரோமர் 8:1, 9, 13*

[341] *1 கொரிந்தியர் 3:1-3-ஐ வாசிக்கவும்.*

[342] *பிலிப்பியர் 3:13-15*

[343] *உபாகமம் 30:6-ஐ வாசிக்கவும்.*

இருதயத்தில் ஒரு பிரச்சனையால் நடந்தது என்பதை உணர்ந்தார். அவர் தேவனிடம் ஜெபம் செய்தார், "நான் பாவத்தில் உருவானேன் ... ஆனால் சத்தியம் என்னுள் இருக்க வேண்டும் என்று நீர் விரும்புகிறீர்." பாவம் தனது இயல்பில் இருப்பதை அவர் அறிந்திருந்தார், ஆனால் தேவன் தன்னை முற்றிலும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று நம்பினார். அவர் ஒரு முழுமையான சுத்திகரிப்புக்காக ஜெபித்தார்.[344]

புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் மனமாற்றத்திற்குப் பிறகு மற்றொரு சிறப்பு நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டனர். நற்செய்தியை ஏற்று, விக்கிரகங்களை விட்டுத் திரும்பிய, பாடுகளைச் சகித்து, பரிசுத்த ஆவியில் மகிழ்ச்சி அடைந்து, இயேசுவின் வருகைக்காகக் காத்திருந்த விசுவாசிகளுக்கு தெசலோனிக்கப் பட்டணத்து விசுவாசிகள் அற்புதமான உதாரணங்களாக இருந்தனர்.[345] ஆனாலும் அவர்களின் நம்பிக்கையில் ஏதோ குறை இருந்தது. இது ஒரு நீண்ட செயல்முறையிலோ அல்லது மரணத்திலோ வழங்கப்படும் ஒன்று அல்ல, ஏனென்றால் பவுல் அவர்களைச் சந்திக்கும்போது அது நடக்கலாம் என்று கூறினார்.[346] அவர்களை முழுமையாக (சரீரம், ஆத்துமா மற்றும் ஆவி) பரிசுத்தமாகும்படி அவர் ஜெபித்தார், அதனால் அவர்கள் கிறிஸ்துவின் வருகையில் பரிசுத்தமாக காணப்படுவார்கள்.[347]

பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவின் சீடர்கள் ஒரு விசேஷித்த கிருபையை அனுபவித்தனர். அந்த நேரத்திற்கு முன்பே அவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டதை நாம் அறிவோம், ஏனென்றால் அவர்கள் உலகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும், அவர்கள் இயேசுவுக்கும் பிதாவுக்கும் சொந்தமானவர்கள் என்று இயேசு சொன்னார், மேலும் அவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன.[348] அவர்களிடம் ஏற்கனவே பரிசுத்த ஆவியானவர் இருந்தார்,[349]

---

344 சங்கீதம் 51:5-10-ஐ வாசிக்கவும்.

345 1 தெசலோனிக்கேயர் 1:6-10

346 1 தெசலோனிக்கேயர் 3:10-ஐ வாசிக்கவும்.

347 1 தெசலோனிக்கேயர் 5:23-ஐ வாசிக்கவும்.

348 யோவான் 17:14, 9-10; லூக்கா 10:20

349 யோவான் 14:17-ஐ வாசிக்கவும்.

ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிரப்பி அவர்களுக்குள் விசேஷமான ஒன்றை நிறைவேற்றினார். ஆவியானவர் அவர்களுடைய இருதயங்களைச் சுத்தமாக்கியதுதான் அத்தியாவசியமான காரியம் என்று பேதுரு பின்னர் கூறினார்.[350] அவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு அவசரமாக இந்த இருதய சுத்திகரிப்பு தேவைப்பட்டது.[351]

ஏற்கனவே இரட்சிக்கப்பட்ட ஒருவருக்கு நிகழும் இந்த விசேஷ நிகழ்வை "முழு பரிசுத்தமாகுதல்" என்று அழைக்கலாம். முழுப் பரிசுத்தமாகுதல் என்பது பரம்பரைச் சீரழிவைச் சுத்தப்படுத்துவதாகும். இது மனமாற்றத்திற்குப் பிறகு ஒரு கட்டத்தில் விசுவாசியில் பரிசுத்த ஆவியால் நிறைவேற்றப்படுகிறது.

விசுவாசி தேவனுடைய இந்த கிரியையை விசுவாசத்தினால் பெறுகிறான். அவர்களுடைய இருதயம் "விசுவாசத்தினால் சுத்தமாக்கப்பட்டது" என்று பேதுரு கூறினார். அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கப் பட்டணத்து விசுவாசிகளின் முழு பரிசுத்தத்திற்காக ஜெபித்த பிறகு, "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்"[352] என்று கூறினார்.

சுருக்கமாக, நாம் சொல்கிறோம்

1. மனமாற்றத்திற்குப் பிறகும் பரம்பரைச் சீரழிவு விசுவாசியில் இருக்கும்.
2. தேவன் நம்மை முற்றிலும் பரிசுத்தமாக இருக்க அழைக்கிறார்.
3. தேவன் பரம்பரை சீரழிவை சுத்தப்படுத்துகிறார்.
4. விசுவாசி விசுவாசத்தினால் முழு பரிசுத்தமாகுதலையும் பெறுகிறான்.

---

[350] அப்போஸ்தலர் 15:8-9
[351] மாற்கு 9:33-34; மாற்கு 10:35-41; லூக்கா 9:54-55-ஐ வாசிக்கவும்.
[352] 1 தெசலோனிக்கேயர் 5:24

ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடம் இந்த இருதய சுத்திகரிப்பு இன்னும் தேவைப்படுகிறதா என்று கேட்க வேண்டும், பின்னர் தேவன் அவரை முழுமையாக பரிசுத்தப்படுத்த விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். ஒவ்வொரு போதகரும் இந்த கிருபையில் முன்னேறத் தம் ஜனங்களுக்குப் போதித்து அறிவுரை வழங்க வேண்டும்.

## அந்நியப்பாஷை வரம்

*வகுப்புத் தலைவருக்கானக் குறிப்பு: வகுப்பின் ஒரு உறுப்பினர் இந்தப் பகுதியை விளக்கலாம்.*

அந்நியப்பாஷை வரத்தைக் குறித்த காரியத்தில் கிறிஸ்தவர்கள் அனைவரும் உடன்படுவதில்லை. அந்நியப்பாஷையைக் குறித்த கருத்து வேறுபாடுகள் சில வகையான ஊழியங்களில் ஒன்றாக வேலை செய்வதிலிருந்து நம்மைத் தடுக்கலாம், ஆனால் ஒருவரை கிறிஸ்தவர் என்று நிராகரிக்க வைக்கக்கூடாது. அந்நியப்பாஷையைப் பற்றிய ஒரு கோட்பாடு கூட்டுறவுக்கு தடையாக இருக்கிறது. அந்நியபாஷை பேசாத ஒருவருக்கு பரிசுத்த ஆவி இல்லை என்று சிலர் நம்புகிறார்கள், அவர் மனம் மாறியதற்கான ஆதாரம் இருந்தாலும் கூட. பரிசுத்த ஆவியைப் பெற்றதன் சான்றாக அந்நியப்பாஷை வரத்தை நாம் எதிர்பார்க்கக் கூடாது என்பதற்கான காரணங்களை பின்வரும் குறிப்புகள் வழங்குகின்றன.

(1) பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கான ஒரே அத்தாட்சி அந்நியப்பாஷையில் பேசுவது என்று வேதாகமம் கூறவில்லை. ஜனங்கள் ஆவியானவரால் நிரப்பப்பட்டபோது, அப்போஸ்தலர் புத்தகத்தில் இது பலமுறை நடந்தது. அதற்காக அது எப்போதும் அவரைப் பெறுவதற்கான அடையாளம் என்பதை நிரூபிக்க போதாததாய் இருக்கிறது.

(2) வேதாகமத்தின்படி, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்றாலும், ஒவ்வொருவரும் எதிர்பார்க்கும் ஒரு ஆவிக்குரிய வரம் அல்ல. வரங்களை எவ்வாறு விநியோகிக்க வேண்டும் என்று தேவன் முடிவு

*செய்கிறார் மற்றும் வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு வரங்களைக் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 12:4-11). சொல்லாட்சிக் கேள்விகளின் தொடர், எல்லாருக்கும் "இல்லை" என்று பதிலளிக்க வேண்டும், ஒவ்வொரு விசுவாசியிடமும் குறிப்பிட்ட ஆவிக்குரிய வரம் எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதைக் காட்டுகிறது (12:29-30).*

*(3) ஒவ்வொரு விசுவாசியிடமும் தேவனுடைய ஆவியானவர் இருக்கிறார் (ரோமர் 8:9) எனவே ஆவிக்குரிய வரங்களைப் பெற முடியும். கொரிந்தியர்களுக்கு இன்னும் இருதய சுத்திகரிப்பு தேவைப்பட்டது ஆனால் ஆவிக்குரிய வரங்களில் சிறந்து விளங்கினார்கள் (1 கொரிந்தியர் 1:7, 3:3).*

*(4) வேதாகமத்தின்படி, அந்நியப்பாஷை வரம் விசுவாசிகளுக்கு ஒரு அடையாளம் அல்ல, எனவே ஒரு விசுவாசி தன்னிடம் பரிசுத்த ஆவியானவர் இருப்பதை நிரூபிக்க முடியாது. இது அவிசுவாசிகளுக்கு, அந்நியப்பாஷையில் சுவிசேஷத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் தேவனுடைய வல்லமையின் அடையாளம் (1 கொரிந்தியர் 14:22). நிரூபிக்க கொடுக்கப்படாத ஒன்றை ஆதாரமாகப் பயன்படுத்துவது குழப்பத்திற்கு வழிவகுக்கிறது.*

*(5) அந்நியப்பாஷையின் வரம் ஆவியானவரின் நிரப்புதலால் சந்திக்கப்படும் முதன்மைத் தேவையுடன் தொடர்பில்லாதது. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை சுத்தப்படுத்தவும், ஊழியத்திற்கு அதிகாரமளிக்கவும் வருகிறார். அந்த வரம் தேவையில்லாத சூழ்நிலையில் அந்நியப்பாஷை வரத்தால் அந்த நோக்கம் நிறைவேறாது. பரிசுத்த ஆவியானவரின் வேலை ஆவிக்குரிய வெற்றி மற்றும் ஊழியத்திற்கான அபிஷேகம்.*

*எந்த ஒரு ஆவிக்குரிய அனுபவத்தையும் ஒருவர் மனமாற்றம் செய்யும்போது என்ன நடக்கும் என்பதை ஒப்பிடலாம். மனமாற்றம் வேதாகமத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது, அது விசுவாசத்தால் நிகழ்கிறது, பரிசுத்த ஆவியானவர் அதை உறுதிப்படுத்துகிறார், மற்ற நிகழ்வுகளை அனுபவிக்காமல், விசுவாசி தனது தேவையை பூர்த்தி செய்வதை அறிவார். ஆவியானவரின் நிரப்புதலிலும் இதுவே உண்மை.*

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

### நம்பிக்கைகளின் அறிக்கை

ஒரு பாவி மனந்திரும்பி தேவனுடைய கிருபையால் மாறும்போது கிறிஸ்தவ பரிசுத்தம் தொடங்குகிறது. தேவனுடைய சித்தத்தைப் பற்றிய புரிதலில் வளர்ந்து தொடர்ந்து கீழ்ப்படிவதால், விசுவாசி ஆவிக்குரிய ரீதியில் வளர்கிறான். மனமாற்றத்திற்குப் பிறகு நிகழும் முழுப் பரிசுத்தமாக்கப்படுதலும் தேவனுடைய செயலாகும், அதில் அவர் பரம்பரை சீரழிவிலிருந்து விசுவாசியை சுத்தப்படுத்துகிறார்.

### பாடம் 11 வீட்டுப்பாடங்கள்

*(1)* வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.

- *அப்போஸ்தலர் 2:1-18*
- *1 தெசலோனிக்கேயர் 5:14-24*
- *ஏசாயா 6:1-8*
- *தீத்து 2:11-14*
- *1 கொரிந்தியர் 10:1-13*

*(2)* தேர்வு: பாடம் 11-க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

## *பாடம் 11 தேர்வு*

*(1) ஆராதனையின் முதன்மைக் கருப்பொருள் என்ன?*

*(2) பரிசுத்தம் ஏன் ஆராதனையுடன் இணைக்கப்பட்டுள்ளது?*

*(3) கிறிஸ்தவ பரிசுத்தம் எப்போது தொடங்குகிறது?*

*(4) வெளிச்சத்தில் நடப்பது என்றால் என்ன?*

*(5) தெசலோனிக்க திருச்சபை விசுவாசிகளுக்காக பவுல் என்னத்தை ஜெபித்தார்?*

*(6) பெந்தெகொஸ்தே நாளில் நடந்த மிக முக்கியமான காரியம் என்ன?*

*(7) பரம்பரை சீரழிவு என்றால் என்ன?*

*(8) முழு பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன?*

# *பாடம் 12*
# *திருச்சபை*

## *பாடத்தின் நோக்கங்கள்*

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *திருச்சபையின் தோற்றம்.*
- *திருச்சபை ஒரு ஜீவனுள்ள நிறுவனமாக.*
- *திருச்சபை ஒரு ஜீவனுள்ள, உள்ளூர் அமைப்பு.*
- *உலகளாவிய திருச்சபையின் ஒற்றுமையின் அடிப்படை.*
- *திருச்சபையின் உள்ளூர் ஒற்றுமையின் அடிப்படை.*
- *திருச்சபையின் சடங்குகள்.*
- *திருச்சபையின் நோக்கங்கள்.*
- *திருச்சபையைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) மாணவர் உள்ளூர் திருச்சபையில் ஈடுபடுவதற்கான தனது பொறுப்பைக் காண்பார்.*

## *முன்னுரை*

*எபேசியர் 3:3-10-ஐ ஒன்றாகப் படியுங்கள். இந்த வசனம் திருச்சபையைப் பற்றி நமக்கு என்ன சொல்லுகிறது?*

## *திருச்சபையின் தோற்றம்*

புதிய ஏற்பாட்டிற்கு முந்தைய நூற்றாண்டுகளில், திருச்சபை முழுமையாக வெளிப்படுத்தப்படாத ஒரு இரகசியமாக இருந்தது.[353] தேவனுடைய கிருபையை அனுபவித்து அவருடன்

[353] எபேசியர் *3:3-10*-ஐ வாசிக்கவும்.

*உறவில் வாழ்ந்தவர்கள் இருந்தனர்,[354] ஆனால் திருச்சபை இன்னும் நிறுவப்படவில்லை.*

► *திருச்சபை எப்போது ஆரம்பமானது?*

*இயேசுவின் வாழ்க்கையும் ஊழியமும் திருச்சபையைத் தொடங்கியது, அது அவர் வழங்கிய இரட்சிப்பின் மீது கட்டப்பட்டது.[355] திருச்சபையின் யுகம் பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கியது. அன்று முதல், திருச்சபை பூமியில் கிறிஸ்துவின் சரீரம் மற்றும் புலப்படும் தலைமை இல்லாமல், பரிசுத்த ஆவியின் வல்லமையில் செயல்படும்.[356]*

*இயேசு தம்முடைய சீஷர்களுக்கு உலகமெங்கும் தம்முடைய உபதேசங்களைப் பரப்பவும் நிறுவவும் அதிகாரம் கொடுத்தார்[357] மேலும் பரிசுத்த ஆவியானவர் அவர்களை எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் என்று வாக்குறுதி அளித்தார்.[358] திருச்சபையை "அப்போஸ்தலிக்" என்று அழைக்கலாம், ஏனென்றால் அப்போஸ்தலர்களின் போதனைகள் திருச்சபையின் அடிப்படைக் உபதேசங்கள். அந்த அடிப்படை உபதேசங்களுக்கு முரணான எந்த நம்பிக்கையும் கிறிஸ்தவம் என்று அழைக்கப்படக்கூடாது.*

*திருச்சபை பின்வரும் காரியங்களில் தோன்றியது:*

1. *இயேசுவின் ஊழியம்*
2. *கிறிஸ்துவால் வழங்கப்பட்ட இரட்சிப்பு*
3. *பெந்தெகொஸ்தே நாளில் நடந்த நிகழ்வு*
4. *அப்போஸ்தலருடைய உபதேசங்களின் வளர்ச்சி*

## திருச்சபை ஒரு ஜீவனுள்ள நிறுவனமாக

*திருச்சபை ஒரு குடும்பத்துடன் ஒப்பிடப்படுகிறது, அதில் தேவன் தகப்பன் மற்றும் உறுப்பினர்கள் சகோதர*

---

[354] *ரோமர் 4:1-8*
[355] *மத்தேயு 16:16-18*
[356] *யோவான் 16:7*
[357] *மத்தேயு 28:18-20*
[358] *யோவான் 14:26*

*சகோதரிகள்.*[359] *திருச்சபை எந்த ஒரு இனம் அல்லது இயற்கை தோற்றம் இல்லாத ஒரு நாடு என்று அழைக்கப்படுகிறது.*[360] *திருச்சபை ஒரு பௌதிக சரீரத்துடன் ஒப்பிடப்படுகிறது, அதில் கிறிஸ்து தலையாக இருக்கிறார், மேலும் உறுப்பினர்கள் ஒன்றாக வேலை செய்கிறார்கள் மற்றும் ஒருவரையொருவர் கவனித்துக்கொள்கிறார்கள்.*[361]

*கிறிஸ்தவர் திருச்சபையின் உறுப்பினர். திருச்சபை கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுவது போல, கிறிஸ்தவர்கள் அவருடைய மாம்சம் மற்றும் எலும்புகளின் உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது.*[362] *திருச்சபையிலிருந்து தனித்தனியாக இருப்பது, கிறிஸ்து பூமியில் என்ன செய்கிறார் என்பதிலிருந்து தனித்தனியாக இருக்க வேண்டும். திருச்சபையை மதிக்காமல், நேசிக்காமல் இருப்பது கிறிஸ்துவை மதித்து அன்பு கூறாமல் இருப்பதாகும்.*

*சரீரத்தின் ஒரு உறுப்பினராக, ஒரு கிறிஸ்தவர் திருச்சபையிலிருந்து சுதந்திரமான அணுகுமுறையைக் கொண்டிருக்கக்கூடாது. அவருக்கு மற்ற உறுப்பினர்கள் தேவை, அவர்களுக்கும் அவர் தேவை.*[363] *ஒரு கிறிஸ்தவர் திருச்சபை இல்லாமல் ஆவிக்குரிய ரீதியில் தன்னிறைவு பெற்றவராக வாழ்வது தவறு.*

### திருச்சபை ஒரு ஜீவனுள்ள, உள்ளூர் அமைப்பாக

*ஒரு உலகளாவிய திருச்சபை உள்ளது, இருப்பினும் திருச்சபை உள்ளூரிலும் இருக்க வேண்டும். சரீரத்தின் உறுப்புகள் ஒரே இடத்தில் ஒன்றாக இருந்தால் மட்டும் செயல்பட முடியாது. பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு அவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்று எழுதினார்,*[364] *இது ஒரு உள்ளூர்*

---

[359] *எபேசியர் 3:15; கலாத்தியர் 6:10*
[360] *1 பேதுரு 2:9-10*
[361] *1 கொரிந்தியர் 12:14, 26*
[362] *எபேசியர் 5:30*
[363] *1 கொரிந்தியர் 12:21*
[364] *1 கொரிந்தியர் 12:27*

திருச்சபை அந்த இடத்திற்கு கிறிஸ்துவின் சரீரம் என்பதைக் குறிக்கிறது.

தேவன் உள்ளூர் திருச்சபையை விசுவாச குடும்பமாக வடிவமைத்துள்ளார், ஆவிக்குரிய வரங்களைக் கொண்ட ஒரு அமைப்பாகச் செயல்படும்படிச் செய்திருக்கிறார், மனித வளங்களைக் கொண்டு, ஐக்கியங் கொண்டிருக்கிறவர்களுக்கு ஒவ்வொரு வகையான தேவைகளைப் பூர்த்தி செய்ய தெய்வீக வளங்களைக் கண்டுபிடித்து, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் தேவனுடைய ஞானத்தை உலகுக்கு நிரூபிக்கிறார், மற்றும் இரட்சிக்கப்படாதவர்களை மனமாற்றம் செய்து குடும்பத்திற்குள் பிரவேசிக்க அழைப்பு விடுக்கிறோம்.

உண்மையான ஐக்கியம் என்பது பொருளாதாரத்தை உள்ளடக்கியது, ஏனெனில் ஐக்கியத்தில் உள்ளவர்கள் ஒன்றாக வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்கிறார்கள் மற்றும் ஒருவருக்கொருவர் தேவைகளைப் பற்றி அக்கறை கொள்கிறார்கள்.[365] கிறிஸ்துவில் ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் தேவையை சந்திப்பது திருச்சபையின் பொறுப்பாகும், அந்த உறுப்பினர் திருச்சபையின் வாழ்க்கையில் பங்கேற்று தன்னால் முடிந்தவரை பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.

உள்ளூர் திருச்சபையைப் பலப்படுத்தவும் கட்டியெழுப்பவும் தேவன் ஆவிக்குரிய வரங்களையும், ஊழியத்திற்கான விசேஷ அழைப்புகளையும் தருகிறார்.[366]

உள்ளூர் திருச்சபை அதன் சமூகத்திற்கு சேவை செய்கிறது. முதல் முன்னுரிமை ஆவிக்குரிய வாழ்க்கை, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் மற்றும் எல்லா பிரச்சினைகளிலும் சத்தியத்தைப் பாதுகாத்தல். திருச்சபை சமூகத்தில் உள்ள பொருள் தேவைகளை நிறைவேற்றுகிறது, ஆனால் திருச்சபையின் ஆவிக்குரிய ஐக்கியத்திலுள்ள ஜனங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

---

[365] யாக்கோபு 2:15-16, 1:27
[366] எபேசியர் 4:11-12

## திருச்சபையின் பரிபூரணம்

*திருச்சபையைப் பரிசுத்தமாகவும், எந்தக் குறையும் இல்லாமல் இருக்கும்படிக்குச் செய்ய இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்தார்.[367] திருச்சபை ஒருபோதும் பாவத்தை பொறுத்துக்கொள்ளக்கூடாது, இருப்பினும் அது மன்னிக்க தயாராக இருக்க வேண்டும். தலைவர்கள் பரிசுத்த வாழ்க்கைக்கு உதாரணமாக இருக்க வேண்டும்.[368] திருச்சபையின் ஒரு உறுப்பினர் பாவம் செய்தால், அவர் மனந்திரும்பவில்லை என்றால், அவர் எதிர்கொள்ளப்பட வேண்டும் மற்றும் ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.[369]*

► *தேவாலயம் ஏன் பரிபூரணமற்றது?*

*திருச்சபையின் ஜனங்கள் எல்லா வகையிலும் சரியானவர்களாக இருக்க மாட்டார்கள். திருச்சபை சுவிசேஷம் அறிவிப்பதால், சபையில் இன்னும் பாவத்திலிருந்து மனந்திரும்பாதவர்கள் இருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்களிடையே கூட, அவர்களின் வாழ்க்கையில் முரண்பாடுகள் இருக்கும், ஏனென்றால் அவர்கள் தங்கள் வாழ்க்கையின் அனைத்து விவரங்களுக்கும் சத்தியத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களிடையே கூட, முரண்பாடுகள் மற்றும் தவறான அணுகுமுறைகள் இருக்கலாம், ஏனென்றால் முதிர்ந்த கிறிஸ்தவர் கூட இன்னும் ஆவிக்குரிய வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருக்கிறார். ஜனங்களை ஆவிக்குரிய முதிர்ச்சிக்குக் கொண்டுவருவது, தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து கற்பிப்பதும் நடைமுறைப்படுத்துவதும் திருச்சபையின் வேலையின் ஒரு பகுதியாகும்.[370]*

## திருச்சபையை வரையறுத்தல்

***உலகளாவிய திருச்சபையின்** ஒரு குறுகிய வரையறை என்னவென்றால், அது எல்லா காலங்களிலும் எல்லா*

---

*[367] எபேசியர் 5:27*
*[368] 1 தீமோத்தேயு 3:2-3*
*[369] 1 கொரிந்தியர் 5:11-13*
*[370] 1 தீமோத்தேயு 3:16*

இடங்களிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய ஒரு நிறுவனம் ஆகும். இது சில நேரங்களில் "கண்ணுக்கு தெரியாத" திருச்சபை என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் உலகளாவிய திருச்சபையை நிர்வகிக்கும் அல்லது அதன் உறுப்பினர்களின் பட்டியலைக் கொண்டிருக்கும் பூமிக்குரிய அமைப்பு இல்லை.

**உள்ளூர் திருச்சபையின்** ஒரு குறுகிய வரையறை என்னவென்றால், அது திருச்சபையின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்ற ஒரு இடத்தில் உள்ள கிறிஸ்தவர்களின் குழுவாகும். ஒரு குழு மிகவும் வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டால் அது ஒரு திருச்சபை அல்ல.

“கிறிஸ்து, தம்முடைய அப்போஸ்தலர்கள் மூலம், தமக்கென்று ஒரு திருச்சபையைக் கூட்டிச் சேர்த்து, இரட்சிக்கப்படுகிறவர்களைத் தொடர்ந்து சேர்த்துக்கொண்டார் என்று நான் நம்புகிறேன்; இந்த கத்தோலிக்க அல்லது உலகளாவிய திருச்சபை, அனைத்து நாடுகளுக்கும், எல்லா காலத்திற்கும் விரிவடைந்து, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியங்கொண்ட அதன் அனைத்து உறுப்பினர்களிலும் பரிசுத்தமானது.
- *John Wesley, “A Letter to a Roman Catholic”* என்பதிலிருந்து சுருக்கப்பட்டது.

உள்ளூர் திருச்சபையை மற்ற வகை குழுக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்ட உதவும் ஒரு விரிவான வரையறை இங்கே கொடுக்கப்பட்டுள்ளது: “ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளின் ஒரு குழு ஆராதனை, ஆவிக்குரிய வாழ்வில் கட்டடப்படுதல், சேவை செய்தல், ஐக்கியம் மற்றும் வெளி ஊழியம் ஆகியவற்றிற்காக ஒன்றிணைந்துள்ளது; ஆவிக்குரியத் தலைமையை ஏற்றுக்கொள்வது, உடலில் உள்ள பல்வேறு வரங்கள் மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சேவை செய்யத் தயாராக உள்ளது, மேலும் ஆசரிப்புகளை தவறாமல் கடைப்பிடிப்பது ஆகும்.”[371]

[371] David Dockery, *Southern Baptist Consensus and Renewal: A Biblical, Historical, and Theological Proposal* (Nashville: B&H Publishing Group, 2008), 127

## உலகளாவிய திருச்சபையின் ஒற்றுமை

*எல்லா இடங்களுக்கும் காலங்களுக்கும் ஒரு திருச்சபை உள்ளது. இயேசு சொன்னார், "நான் என் சபையைக் கட்டுவேன்," என்று சொன்னார், "சபைகளைக் கட்டுவேன்" என்றுச் சொல்லவில்லை. ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, மற்றும் ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் இருப்பதாக அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்.*[372]

*ஆரம்பகால கிறிஸ்தவ கோட்பாடுகள் "கத்தோலிக்க திருச்சபை" என்று குறிப்பிடப்படுகின்றன. "கத்தோலிக்கம்" என்ற வார்த்தை ரோமன் கத்தோலிக்க திருச்சபையைக் குறிக்கவில்லை, ஆனால் அனைத்து உண்மையான கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய உலகளாவிய திருச்சபையைக் குறிக்கிறது.*

*உலகளாவிய திருச்சபையின் ஒற்றுமை என்பது ஒரு மைய நிர்வாகத்தின் கீழ் ஒரே அமைப்பாக இருப்பதில் இல்லை. கிறிஸ்துவின் வருகைக்கு முன் அது நடக்காது. சிலர் அது நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், ஆனால் வெளிப்படையாக அது தேவனுடைய சித்தம் அல்ல, ஏனென்றால் ஒரு நபர் தங்கள் அமைப்பிலிருந்து பிரிந்து ஊழியம் செய்யக்கூடாது என்று சீடர்கள் நினைத்தபோது இயேசு அவர்களைத் திருத்தினார்.*[373] *அனைத்து உலகளாவிய திருச்சபையின் மீதும் ஒரு மைய நிர்வாகம் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பியிருந்தால், அதை வழிநடத்த அவர் சரீரப்பிரகாரமாக பூமியில் தங்கியிருக்க முடியும். இருப்பினும், ஒரு உலகளாவிய தலைமையகம் இருந்தால், பரிசுத்த ஆவ.யின் பல்வேறு கிரியைகள் உலகம் முழுவதும் நடக்காது என்பதை இயேசு கண்டார்.*

► *உலகளாவிய திருச்சபையின் ஒற்றுமை எதை அடிப்படையாகக் கொண்டது?*

*உலகளாவிய திருச்சபையின் ஒற்றுமை பின்வரும் காரியங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது*

---

[372] *எபேசியர் 4:4-6*

[373] *லூக்கா 9:49-50*

1. அப்போஸ்தலருடைய உபதேசங்கள்
2. கிறிஸ்துவுடன் மறுரூபமாகும் உறவு

கோட்பாட்டு ஒற்றுமை என்பது கிறிஸ்தவர்கள் எல்லாவற்றிலும் உடன்படுகிறார்கள் என்று அர்த்தமல்ல, எல்லா முக்கியமான கோட்பாடுகளிலும் கூட. கடவுள் மற்றும் கிறிஸ்துவின் இயல்பு மற்றும் சுவிசேஷத்தின் அத்தியாவசியங்கள் பற்றிய அத்தியாவசிய கோட்பாடுகளை அவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று அர்த்தம். அவர்கள் இல்லாமல், அவர்கள் ஒரே கடவுளை வணங்கவோ அல்லது அவருடைய அருளை அனுபவிக்கவோ மாட்டார்கள்.

> *"என்னுடைய இருதயம் உங்கள் இதயத்துடன் இருப்பது போல், உங்கள் இதயம் சரியாக இருந்தால், ஒரு சகோதரனை விட நெருங்கிய நண்பராக என்னை மிகவும் மென்மையான பாசத்துடன் நேசிக்கவும்; கிறிஸ்துவில் ஒரு சகோதரனாக, புதிய எருசலேமின் சக குடிமகனாக, நமது இரட்சிப்பின் அதே அதிபதியின் கீழ் அதே போரில் ஈடுபட்ட ஒரு சக போர்வீரன். இயேசுவின் ராஜ்யத்தில் ஒரு தோழனாகவும், பொறுமையான சகிப்புத்தன்மையுள்ளவனாகவும், அவருடைய மகிமையின் கூட்டு வாரிசாகவும் என்னை நேசியுங்கள்."*
> *- John Wesley, "Catholic Spirit" என்னும் பிரசங்கத் தலைப்பிலிருந்து சுருக்கப்பட்டது.*

கிறிஸ்தவ ஒற்றுமைக்கு கோட்பாடு மட்டும் தேவை இல்லை. கிறிஸ்துவுடனான உறவை மாற்றியமைப்பதால், கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உறவைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் பாவத்திற்காக மனந்திரும்பி, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதால், அவர்களுக்கு ஒரு சிறப்பு உறவு இருக்கிறது. எல்லாவற்றிலும் வித்தியாசமாக இருந்தாலும், கிறிஸ்தவர்கள் உலகம் முழுவதும் ஒருவரையொருவர் அங்கீகரிக்கிறார்கள்.

## உள்ளூர் திருச்சபையின் ஒற்றுமை

அத்தியாவசியமான கிறிஸ்தவ உபதேசங்களைக் கடைப்பிடித்து, கிறிஸ்துவுடன் மறுரூபமாகும் உறவில் இருப்பதாகத் தோன்றும் எந்தவொரு நபரையும் நாம் ஒரு கிறிஸ்தவராக

ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் உள்ளூர் சபையின் உபதேச ஒப்பந்தம் மிகவும் விரிவானதாக இருக்க வேண்டும்.

ஒரு உள்ளூர் திருச்சபை என்பது ஒன்றாக ஆராதிப்பதற்கும், சுவிசேஷம் அறிவிப்பதற்கும், சீடர்களாக மாறியவர்கள் மற்றும் வாலிபர்களுக்கும், கிறிஸ்தவ வாழ்க்கையின் நடைமுறை விவரங்களைக் கற்பிப்பதற்கும் உறுதியளிக்கும் ஒரு குழுவாகும். ஜனங்கள் ஒன்றாக அந்த நோக்கத்தை நிறைவேற்ற, அவர்கள் உபதேசத்தின் பல விவரங்களை ஒப்புக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு உள்ளூர் திருச்சபையில் உள்ள ஒருவர், ஒவ்வொரு வாலிபரிடமும், புதிதாக மனம் மாறியவர்களிடமும் அந்நியப்பாஷையின் வரத்திற்காக ஜெபிக்கச் சொல்கிறார். ஆனால் அந்த திருச்சபையில் உள்ள மற்ற தலைவர்கள் ஒவ்வொரு விசுவாசிக்கும் அந்நியபாஷையின் வரம் வாக்களிக்கப்பட்டதாக நம்பவில்லை. தேவனுடைய சித்தமில்லாத ஒன்றை அனுபவிக்க முயன்றால், ஜனங்கள் ஆவிக்குரியக் குழப்பத்தில் சிக்கிவிடுவார்கள் என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். வெளிப்படையாக, இந்த ஜனங்கள் ஒரு உள்ளூர் திருச்சபையில் ஒன்றாக வேலை செய்ய முடியாது. தலைவர்கள் அந்த நபரை கிறிஸ்தவராகக் கருதினாலும், தீங்கு விளைவிக்கும் உபதேசங்களைப் போதிக்க அனுமதிக்கக் கூடாது.

ஒரு உள்ளூர் திருச்சபை அவர்கள் ஒன்றாக வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்வதையும் ஊழியத்தை நடைமுறைப்படுத்துவதையும் பாதிக்கும் உபதேசங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, ஒரு திருச்சபை அவர்கள் பகிர்ந்து கொள்ளும் உபதேசங்களின் எழுத்துப்பூர்வ அறிக்கையை வைத்திருப்பது தவறல்ல. உடன்படாத எவரும் கிறிஸ்தவர் அல்ல என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. எழுதப்பட்ட உபதேச அறிக்கையின் நோக்கம், விசுவாசிகளின் குழு ஒன்று சேர்ந்து செயல்படுவதற்குத் தேவையான உபதேசங்களைக் காட்டுவதாகும்.

## திருச்சபையின் ஆசரிப்புகள்

இயேசு சபைக்கு கைக்கொள்ளும்படி இரண்டு சடங்குகளைக் கொடுத்தார். அவை ஆசரிப்புகள் அல்லது புனித சடங்குகள் என்றும் அழைக்கப்படலாம்.

ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் அடையாளமாகும்.[374] ஞானஸ்நானம் என்பது ஒரு விசுவாசி கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது அதாவது பாவத்திற்கு மரித்து மற்றும் கிறிஸ்துவில் உயிர்த்து புதிய வாழ்க்கையை அனுபவித்தார் என்பதற்கான ஒரு பகிரங்க சாட்சியாகும். ஞானஸ்நானம் என்பது ஒரு நபர் கிறிஸ்தவராக மாறும் நேரம் அல்ல. ஞானஸ்நானம் என்பது மனமாற்றம் நடந்தது என்பதற்கான பொதுவான சாட்சியாகும்.[375]



இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு சீடர்களுடன் கடைசியாக உணவருந்தியபோது கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டது.[376] அப்பமும் திராட்சரசமும் நமது இரட்சிப்புக்காக கொடுக்கப்பட்ட இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் குறிக்கிறது. பௌதிக வாழ்க்கைக்காக நாம் உணவை உண்பது போல, நமது ஆவிக்குரிய வாழ்விற்காக அவருடைய பலியை சார்ந்து இருக்கிறோம்.[377] ஆசரிப்புகளை "கிருபையின் வழிமுறைகள்" என்றும் அழைக்கலாம். விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இல்லாமல் செய்தால் அவை கிருபையை வழங்காது. அவை தேவன் நாம் கைக்கொள்ளும்படிக்கு நமக்குக் கொடுத்த பயிற்சிகள், விசுவாசத்துடன் செய்தால்,

---

*[374] ரோமர் 6:3-4*
*[375] யோவான் 3:7-8*
*[376] 1 கொரிந்தியர் 11:23-25. Image: "The Lord's Supper" taken by Allison Estabrook on Oct. 14, 2022, retrieved from https://www.flickr.com/photos/sgc-library/52476662295/, licensed under CC BY 4.0.*
*[377] யோவான் 6:53-58*

*அவை தேவனுடைய கிருபையைப் பெறுவதற்கான வழிமுறையாகும்.*

► *திருச்சபையின் சில நோக்கங்கள் என்ன?*

**புதிய ஏற்பாட்டில் காணப்படும் உள்ளூர் திருச்சபையின் சில நோக்கங்கள்**

1. *சுவிசேஷம் அறிவித்தல் (மத்தேயு 28:18-20)*
2. *ஒரு சபையாக கூடிவந்து ஆராதித்தல் (1 கொரிந்தியர் 3:16)*
3. *உபதேசத்தை பராமரித்தல் (1 தீமோத்தேயு 3:15; யூதா 3)*
4. *போதகர்களுக்கு பணஉதவி செய்தல் (1 தீமோத்தேயு 5:17-18)*
5. *மிஷனரிகளை அனுப்புதல் மற்றும் ஆதரித்தல் (அப்போஸ்தலர் 13:2-4; ரோமர் 15:24)*
6. *தேவைப்படும் சபை உறுப்பினர்களுக்கு உதவுதல் (1 தீமோத்தேயு 5:3)*
7. *பாவத்தில் விழும் சபை உறுப்பினர்களை ஒழுங்குபடுத்துதல் (1 கொரிந்தியர் 5:9-13)*
8. *ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல் (மத்தேயு 28:19; 1 கொரிந்தியர் 11:23-26)*
9. *விசுவாசிகளை ஆவிக்குரிய முதிர்ச்சியடையச் செய்தல் (எபேசியர் 4:12-13)*

*இவற்றில் பெரும்பாலானவற்றை ஒருவரால் தனிப்பட்ட முறையில் சுயாதீனமாகச் செய்ய முடியாது. இந்த நோக்கங்கள் விசுவாசிகளின் குழுவின் ஒத்துழைப்பையும் தலைமையின் கட்டமைப்பையும் சார்ந்துள்ளது.*

*ஒவ்வொரு விசுவாசியையும் ஒரு உள்ளூர் திருச்சபைக்கு அர்ப்பணித்து, அந்த திருச்சபை உலகில் அதன் நோக்கத்தை நிறைவேற்ற உதவுமாறு தேவன் அழைக்கிறார். ஒரு திருச்சபை அங்கத்தினர் திருச்சபையில் சேவை செய்யாவிட்டால், அவர் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அங்கமாக தனது நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை.*

## தவிர்க்க வேண்டிய பிழை: ஆவிக்குரிய தனித்துவம்

*வகுப்புத் தலைவருக்கானக் குறிப்பு: வகுப்பின் ஒரு உறுப்பினர் இந்தப் பகுதியை விளக்கலாம்.*

சிலர் உண்மையில் உள்ளூர் திருச்சபையில் ஈடுபட மாட்டார்கள். அவர்கள் எந்த ஞாயிற்றுக்கிழமையானாலும் எந்த திருச்சபையிலும் தங்கள் விருப்பம் போல கலந்துகொள்ளவே விரும்புகிறார்கள். இந்த பாடத்தில் பட்டியலிடப்பட்டுள்ள திருச்சபையின் எந்த நோக்கத்திற்கும் அவர்களால் உதவ முடியாது, ஏனெனில் திருச்சபை அவர்களைச் சார்ந்திருக்க முடியாது. ஆவிக்குரிய பொறுப்புணர்வை அனுமதிக்கும் உறவுகள் அவர்களிடம் இல்லை. எல்லா கிறிஸ்தவர்களும் இதையே செய்தால், திருச்சபைகள் இருக்காது.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறையாவது படிக்க வேண்டும்.*

## நம்பிக்கைகளின் அறிக்கை

*கிறிஸ்து ஒரு பரிசுத்தமான, உலகளாவிய திருச்சபையை நிறுவியுள்ளார், இது உள்ளூர் திருச்சபைகளில் கிறிஸ்துவின் சரீரமாக வெளிப்படுத்தப்படுகிறது. திருச்சபை அப்போஸ்தலர்களின் உபதேசங்களை கொண்டிருக்கிறது மற்றும் அனைத்து சத்தியங்களையும் பாதுகாக்கிறது. திருச்சபை தேவனுடைய குடும்பம், அனைத்து தேவைகளுக்கும் ஊழியம் செய்யும் ஐக்கியத்தைக் கொண்டது. திருச்சபை தேவனை ஆராதிக்கிறது, உலகத்திற்கு சுவிசேஷம் அறிவிக்கிறது, விசுவாசிகளை சீடர்களாக்குகிறது.*

## பாடம் 12 வீட்டுப்பாடங்கள்

*(1)* வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.

- *1 கொரிந்தியர் 12:14-31*
- *யாக்கோபு 2:1-9*
- *எபேசியர் 4:11-16*
- *1 கொரிந்தியர் 6:1-8*
- *1 கொரிந்தியர் 5:1-13*

*(2) தேர்வு: பாடம் 12க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

### *பாடம் 12 தேர்வு*

*(1) திருச்சபையின் யுகம் எப்போது தொடங்கியது?*

*(2) திருச்சபையை ஏன் "அப்போஸ்த்தலிக்க" திருச்சபை என்று அழைக்கலாம்?*

*(3) திருச்சபைத் தோற்றத்தின் நான்கு அம்சங்கள் யாவை?*

*(4) உலகளாவிய திருச்சபையின் குறுகிய வரையறை என்ன?*

*(5) உள்ளூர் திருச்சபையின் குறுகிய வரையறை என்ன?*

*(6) "கத்தோலிக்க திருச்சபை" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

*(7) திருச்சபையின் உலகளாவிய ஒற்றுமைக்கு அடிப்படையான இரண்டு காரியங்கள் யாவை?*

*(8) எழுதப்பட்ட உபதேச அறிக்கையின் நோக்கம் என்ன?*

*(9) உள்ளூர் திருச்சபையின் ஆறு நோக்கங்களைப் பட்டியலிடுக.*

# பாடம் 13
# நித்திய விதி

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *பரலோகத்தின் முதன்மை செயல்பாடு.*
- *வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பரலோகத்தின் சிறப்பியல்புகள்.*
- *வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நித்திய தண்டனையின் சிறப்பியல்புகள்.*
- *நித்திய தண்டனையின் உண்மையை மறுக்கும் மதங்களின் சில எடுத்துக்காட்டுகள்.*
- *நித்திய தண்டனையின் நீதி.*
- *நித்திய விதி பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) சில செயல்கள் ஒருபோதும் மாறாத நித்திய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை மாணவர் நினைவில் கொள்வார்.*

**பகுதி 1: விசுவாசிகளின் நித்திய விதி**

*வெளிப்படுத்துதல் 21-ஐ ஒன்றாகப் படியுங்கள். விசுவாசிகளின் எதிர்காலத்தைப் பற்றி இந்தப் பகுதி என்ன சொல்லுகிறது?*

*எல்லா சிருஷ்டிப்புகளும் தேவனுடைய மகிமைக்காக உள்ளன, ஆனால் பரலோகம் பிரபஞ்சத்தின் மையக் காட்சியாகும், அங்கு தேவன் தமது சாயலில் உருவாக்கிய உயிரினங்களால் உயர்ந்த நிலையில் ஆராதிக்கப்படுகிறார்.*[378] *தேவனுடைய மகிமை பரலோகத்தில் வெளிப்படும், அது நகரத்தின் வெளிச்சமாக*

---

[378] *வெளிப்படுத்தல் 5:11-14-ஐ வாசிக்கவும்.*

இருக்கும்.[379] நாம் தேவனை அறிந்துகொள்ளும் இடம் அதுவே, ‘‘அவருடைய முகத்தைக் காண்போம்’’.[380]

> *"இந்த உலகில் எந்த அனுபவமும் திருப்திப்படுத்த முடியாத ஒரு ஆசையை நான் என்னுள் கண்டால், மிகவும் சாத்தியமான விளக்கம் என்னவென்றால், நான் வேறொரு உலகத்திற்காக உருவாக்கப்பட்டேன். ஒருவேளை பூமிக்குரிய இன்பங்கள் ஒருபோதும் அதைத் திருப்திப்படுத்துவதற்காக அல்ல, ஆனால் அதைத் தூண்டுவதற்காக மட்டுமே, உண்மையான விஷயத்தைப் பரிந்துரைக்க வேண்டும்.... அந்த மற்ற தேசத்திற்கு அழுத்தம் கொடுப்பதையும் மற்றவர்களுக்கும் அதைச் செய்ய உதவுவதையும் நான் வாழ்க்கையின் முக்கியப் பொருளாக மாற்ற வேண்டும்.’’*
> - C.S. Lewis, *Mere Christianity*

ஆராதனை என்பது பரலோகத்தில் நடைபெறும் பரலோகத்திற்குரிய செயல். மகிழ்ச்சி என்பது ஆராதனையின் மறுபக்கம். ஒரு சங்கீத எழுத்தாளர், ‘‘உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.’’[381] மகிழ்ச்சியும் ஆராதனையும் ஒன்றோடொன்று இணைந்திருப்பது பொருத்தமானது. தேவன் நம்மை அவருடைய சாயலில் படைத்தார், அதனால் அவர் யார் என்பதற்காக அவரை ஆராதிப்பதற்கு போதுமான அவரது இயல்பை நாம் புரிந்து கொள்ள முடியும். நம்முடைய உணர்ச்சிகள், அன்பு செலுத்தும் திறன் மற்றும் புத்திசாலித்தனம் ஆகியவை தேவனுக்கு மிக உயர்ந்த ஆராதனையைக் கொடுக்க முடியும்.

இயேசு தம் சீடர்களிடம் இவ்வாறு கூறினார்:

> உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான்

[379] வெளிப்படுத்தல் 21:23
[380] வெளிப்படுத்தல் 22:4
[381] சங்கீதம் 16:11

போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவான் 14:1-3).

இயேசுவின் வார்த்தைகள் பரலோகத்தைப் பற்றிய சில விஷயங்களைச் சொல்லுகிறது. மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், பரலோகம் தேவனுடைய வீடு. இயேசு அதை தம் பிதாவின் வீடு என்று அழைத்தார். இன்னொரு முக்கியமான உண்மை என்னவென்றால், நாம் ஒரு நாள் அங்கே தேவனுடன் வாழலாம்.

பரலோகத்தின் வாக்குத்தத்தம் நாம் பூமியில் வாழும் விதத்தை வழிநடத்த வேண்டும். நித்திய மதிப்புகளைக் கடைப்பிடிப்பவர் பூமியில் மிகவும் நல்ல காரியங்களைச் செய்வார். பரலோக வெகுமதியை எதிர்பார்க்கும் நபர், கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற பாடுபடுவதற்கு ஊக்கமளிப்பார். துன்பப்படுத்தப்பட்டவர்களிடம் இயேசு, "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்"[382] என்று கூறுகிறார்.

**பரலோகத்தின் சிறப்பியல்புகள்**

► பரலோகத்தைப் பற்றி நமக்குத் தெரிந்த சில விவரங்கள் என்ன?

சில சமயங்களில் பூமியில் உள்ளவர்கள் தாங்கள் விரும்பும் வீட்டை வாங்க முடியாமல் போகலாம் அல்லது அவர்கள் விரும்பும் அனைத்தையும் உட்படுத்தி தங்கள் வீட்டை உருவாக்க முடியாமல் போகலாம். ஆனால் தேவனுக்கு எல்லையற்ற ஆற்றல் மற்றும் வளங்கள் உள்ளன, எனவே அவருடைய வீடு அவர் விரும்பியபடியே இருக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். எனவே, பரலோகம் தேவனுடைய இயல்புடன் முழுமையாக ஒத்துப்போகிறது.

[382] மத்தேயு 5:12

*பரலோகத்தில் பாவம் இருக்காது. பரலோகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும், தேவதூதர்கள் அல்லது மனிதர்கள் அல்லது பிற உயிரினங்கள், முற்றிலும் பரிசுத்தமாக இருக்கும்.*[383]

*வலி, துக்கம், மோதல்கள் மற்றும் ஆபத்து உட்பட பாவத்தின் அனைத்து விளைவுகளிலிருந்தும் பரலோகம் விடுபட்டு இருக்கும்.*[384] *நோய், முதுமை மற்றும் மரணம் உட்பட சிருஷ்டிப்பின் மீது சாபம் இனி இருக்காது.*[385]

*பரலோகத்தின் அழகு விவரிக்க முடியாதது. நம்மிடம் கொடுக்கப்பட்ட விவரங்களில் அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்தபளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது. நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன ஆகியவை அடங்கும்.*[386]

***யார் மற்றும் எப்போது?***

*பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை இரட்சகராகவும் கர்த்தராகவும் நம்புபவர்களுக்காக பரலோகம் ஆயத்தமாக உள்ளது.*[387] *நாம் நித்திய மதிப்புகளின்படி வாழ்ந்தால், பரலோகத்தில் நித்தியமான மற்றும் பாதுகாப்பான பொக்கிஷத்தில் முதலீடு செய்யலாம் என்று வேதாகமம் சொல்லுகிறது.*[388] *மில்லியன் கணக்கான இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் மற்றும் தேவதூதர்களால் பரலோகம் உள்ளது.*[389]

*ஒருவர் எப்போது பரலோகம் செல்வார்? சிலுவையில் மரிக்கும் கள்ளனிடம் இயேசு அவர்கள் அன்று பரதீசுவில் ஒன்றாக இருப்பார்கள் என்று கூறினார்.*[390] *தேகத்தைவிட்டுப்பிரிந்து,*

---

*[383] வெளிப்படுத்தல் 21:8, 27-ஐ வாசிக்கவும்.*
*[384] வெளிப்படுத்தல் 21:4-ஐ வாசிக்கவும்.*
*[385] வெளிப்படுத்தல் 22:3-ஐ வாசிக்கவும்.*
*[386] வெளிப்படுத்தல் 21:18-21-ஐ வாசிக்கவும்.*
*[387] யோவான் 3:16*
*[388] மத்தேயு 6:20-ஐ வாசிக்கவும்.*
*[389] வெளிப்படுத்தல் 5:8-11*
*[390] லூக்கா 23:43*

கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு[391] என்று பவுல் கூறினார். எனவே, விசுவாசி மரணத்தின் போது பரலோகம் செல்கிறார் என்பதை நாம் அறிவோம். இயேசுவின் வருகையில் இன்னும் உயிருடன் இருக்கும் விசுவாசிகள் மரணத்தை கடக்காமல் பரலோகத்திற்கு செல்வார்கள்.[392]

## பகுதி 2: அவிசுவாசிகளின் நித்திய விதி

பூமியில் உள்ள தண்டனைகள் எப்பொழுதும் எப்போதாவது ஒருமுறை முடிவடையும், அது தண்டிக்கப்படுபவரின் மரணத்தில் இருந்தாலும் கூட. ஆனால் இயேசு நித்தியமான தண்டனையைக் குறித்து விவரித்தார். அவன் சொன்னார்,

> சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத்தேயு 25:41, 46).

இயேசுவும் அப்போஸ்தலர்களும் நரகம், அக்கினிக்கடல் மற்றும் நித்திய தண்டனை இருப்பதை உறுதிப்படுத்தினர். சொல்லப்போனால், இயேசு சொர்க்கத்தை விட நரகத்தைக் குறித்து அதிகம் குறிப்பிட்டார். இந்த பயங்கரமான இடத்தை தவிர்க்குமாறு எச்சரித்தார். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அறிக்கைகள் இங்கே.

> உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில்

---

[391] 2 கொரிந்தியர் 5:8

[392] 1 கொரிந்தியர் 15:51-52-ஐ வாசிக்கவும்.

> *ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும் (மத்தேயு 5:29-30).*

> *இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார் (மத்தேயு 13:49-50).*

இயேசு பரிசேயர்களிடம் பேசுகையில், *"சர்ப்பங்களே, விரியன்பாம்புக்குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?" (மத்தேயு 23:33).*

> *பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான் (லூக்கா 16:23-24).*

இயேசு இப்படியாக இருப்பார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்

> *....தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).*

> *பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி*

> நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து *(2 பேதுரு 2:4).*
>
> மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் *(வெளிப்படுத்துதல் 20:10, 15).*

இந்த இடத்தை விவரிக்க பயன்படுத்தப்படும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: அக்கினி, வேதனை, பழிவாங்குதல், அழிவு, இருள், சங்கிலிகள், நியாயத்தீர்ப்பு, அழுகை, அலறல் மற்றும் பற்கடிப்பு.

கண்ணும் கையுமாக நரகத்தில் தள்ளப்படுவதை விட, உங்கள் வலது கண்ணைப் பிடுங்கி, வலது கையை தரித்துப் போடுவது நலமாயிருக்கும் என்று இயேசு சொன்னார். இயேசு சரீரத்தை சிதைப்பதை ஊக்குவிக்கவில்லை, ஆனால் பூமியில் எவ்வளவு விலைமதிப்பற்றதாக தோன்றினாலும், பாவம் மற்றும் நரகத்திற்கு நம்மை வழிநடத்தும் எந்தவொரு செயலையும் நிறுத்த வேண்டும்.

► *நரகம் பற்றிய தங்கள் கோட்பாட்டில் தவறாக இருக்கின்ற சில மதங்கள் யாவை?*

மரணம் மனிதனின் சோதனைக் காலத்தை முடிவுக்குக் கொண்டுவருகிறது என்றும், நரகம் (1) நித்தியமானது, (2) மீளமுடியாதது, மற்றும் (3) வேதனையானது என்றும் வேதாகமம் சொல்கிறது. மரணத்திற்குப் பின் எதுவும் இல்லை என்று கூறும் நாத்திகர்களாலும், நரகம் இல்லை என்று கூறும் யேகோவாவின் சாட்சிகளாலும், மோர்மோன்களாலும், உலகளாவிய வாதிகளாலும் இந்த வேதாகமச் சத்தியம் நிராகரிக்கப்படுகிறது. மரணம் மனிதனின் சோதனைக் காலத்தை முடிக்கிறது என்ற உண்மை ரோமன்

கத்தோலிக்கர்களால் மறுக்கப்படுகிறது, அவர்கள் மரணத்திற்குப் பிறகு மனிதனின் நிலை சரிசெய்யப்படலாம் என்று நம்புகிறார்கள்.

நரகத்தை அநியாயம் என்று கருதி அதை மறுப்பவர்களும் உண்டு. ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் பாவம் நடந்தால், தண்டனை நிரந்தரமாக இருக்க முடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். புனித அகஸ்டின் இந்த ஆட்சேபனைக்கு குற்றவியல் சட்டத்தின் உதாரணத்துடன் பதிலளித்தார். ஒரு சில நிமிடங்களில் ஒரு கொள்ளை நடந்தால், ஒரு சில நிமிட தண்டனை மட்டும் வேண்டுமா? ஒரு நொடியில் நடக்கும் கொலை, ஈடுசெய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்துகிறது. வேதத்தில், நித்தியமான மற்றும் எல்லையற்ற தேவனுக்கு எதிரான பாவம் ஒரு வரையறுக்கப்பட்ட வாழ்நாளில் செய்யப்பட்டாலும், நித்திய தண்டனையில் விளைகிறது என்பதை நாம் காண்கிறோம்.

► *நரகம் ஏன் நித்தியமானது?*

நரகம் நித்தியமானது, ஏனெனில்

1. பாவம் என்பது எல்லையற்ற தேவனுக்கு எதிரான குற்றமாகும்.
2. பாவிகள் தேவனுக்கு தாங்கள் செய்ய வேண்டிய நித்திய சேவையை மறுக்கின்றனர்.
3. நாம் தேவனிடமிருந்து பிரிந்திருப்பதைத் தேர்ந்தெடுத்தால் வேறு எங்கும் செல்ல முடியாத நித்திய ஜீவராசிகள் நாம்.

பூமியில், நாம் நமது முடிவுகளை மாற்றிக்கொள்ள விரும்புகிறோம். ஒரு தேர்வு நித்திய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது மிகவும் கடுமையானதாகத் தெரிகிறது. நாம் இப்போது வேண்டுமென்றே தேர்வு செய்தாலும், எதிர்காலத்தில் இரண்டாவது வாய்ப்பு இருக்கும் என்று நினைக்க விரும்புகிறோம். ஆனால் தேவன் நம் சோதனைக் காலத்தை வாழ்நாள் முழுவதும் மட்டுப்படுத்துவார் என்பது நியாயமற்றது அல்ல.

சிலர் நரகத்தை நம்ப மறுக்கிறார்கள், ஏனென்றால் இந்த வசனங்கள் விவரிக்கும் ஒரு பயங்கரமான இடத்திற்கு அன்பான தேவன் ஒருவரை எப்படி அனுப்ப முடியும் என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஒருவரும் கெட்டுப்போவதை தேவன் விரும்புவதில்லை, ஆனால் அனைவரும் மனந்திரும்புதலுக்கும் இரட்சிப்புக்கும் வர வேண்டும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இதை வேதாகமம் பல இடங்களில் கூறுகிறது.[393]
நரகத்திற்குச் செல்பவர்கள் இந்த பயங்கரமான இடத்தில் அவர்களை வைக்கும் தேர்வுகளை செய்துள்ளனர். யாரும் தற்செயலாக நரகத்தில் விழுவதில்லை. செல்பவர்கள் தேவனையும், நீதியையும், இரட்சிப்பையும் புறக்கணித்து அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

நன்மையானவை அனைத்தும் தேவனிடமிருந்து வருவதால், தேவனை நிராகரிப்பது இறுதியில் நன்மையானது அனைத்தையும் நிராகரிப்பதாகும். அமைதி, பயம் மற்றும் வலியிலிருந்து பாதுகாப்பு மற்றும் வசதியான இடம் ஆகியவை தேவன் மட்டுமே வழங்கக்கூடிய நல்ல விஷயங்கள். தேவனிடமிருந்து முழுமையாகப் பிரிவது என்பது நன்மையான அனைத்தும் இல்லாதது ஆகும், அது நரகம்.

> *"இறுதியில் நரகத்தினுடைய உபதேசத்தின் மீதான ஆட்சேபனைகள் இந்த கேள்விக்கு வர வேண்டும்: 'நீங்கள் தேவனிடம் வேறு என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள்?' அவர்களின் கடந்தகால பாவங்களை துடைத்து, ஒரு புதிய தொடக்கத்தை கொடுக்க, அதன் சிரமத்திற்கு அதிசயமான உதவியுடன் உதவ வேண்டுமா? ஆனால் அவர் ஏற்கனவே அவ்வாறு செய்ய முன்வந்துள்ளார். அவர்களை மன்னிப்பதா? ஆனால் அவர்கள் மன்னிக்கப்பட விரும்பாமல் இருக்கிறார்கள். அவர்களை அப்படியே விட்டுவிடுவதா? ஐயோ, அவர் அதைத்தான் செய்கிறார் என்று நான் பயப்படுகிறேன்."*
> *- C.S. Lewis, The Problem of Pain என்பதிலிருந்து பொழிப்புரையாக்கப்பட்டது.*

இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியின் மூலம், அவருடைய அன்பு "வரவிருக்கும் தேவ கோபத்திலிருந்து தப்பிக்க" நமக்குச் சாத்தியமாக்கியதற்கு தேவனுக்கு நன்றி. நரக

---

[393] 1 தீமோத்தேயு 2:4; 2 பேதுரு 2:9; அப்போஸ்தலர் 17:30-ஐ வாசிக்கவும்.

வேதனைகளுக்குப் பதிலாக, இரட்சிப்பின் மகிழ்ச்சியிலும், சொர்க்கத்தின் அதிசயங்களிலும் நாம் பங்குகொள்ளலாம். "தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும்" தேர்ந்தெடுக்கும்போது, நம்முடைய விதிக்கு பரலோககத்தைத் தேர்ந்தெடுக்கிறோம்.[394]

## தவிர்க்க வேண்டிய பிழை: நித்திய விளைவுகளை மறப்பது

பூமிக்குரிய வாழ்க்கையில், பல முடிவுகள் இறுதியானதாகத் தெரியவில்லை. போதுமான கால அவகாசம் இருந்தால், பல தவறுகளை சரி செய்து விடலாம். பல முடிவுகள் நித்திய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மரணத்திற்குப் பிறகு, நம்முடைய சொந்த நித்திய விதியை பாதித்த செயல்களையோ அல்லது மற்றவர்களின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்திய செயல்களையோ மாற்ற முடியாது.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறை படிக்க வேண்டும்.*

## நம்பிக்கைகளின் அறிக்கை

ஒவ்வொரு நபரும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ நிரந்தரமாக இருப்பார்கள். பரலோகம் என்பது தேவனின் வீடு, அங்கு விசுவாசிகள் தேவனுடன் வாழ்வார்கள், அவரை மகிழ்ச்சியுடன் ஆராதிப்பார்கள். பரலோகத்தில் எந்த பாவமும் இல்லை, அதனால் ஏற்படும் துன்பங்களும் இல்லை. நரகம் என்பது கிறிஸ்துவால் தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படாத அனைவருக்கும் நித்தியமான, மாற்ற முடியாத மற்றும் வேதனையான தண்டனையுள்ள ஒரு இடமாகும். எல்லையற்ற தேவனுக்கு எதிராக மனப்பூர்வமாய் செய்த பாவத்திற்கான நியாயமான தண்டனை நரகம்.

---

[394] அப்போஸ்தலர் 20:21

## *பாடம் 13 வீட்டுப்பாடங்கள்*

*(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *வெளிப்படுத்துதல் 22:1-5*
- *வெளிப்படுத்துதல் 22:10-17*
- *லூக்கா 16:19-31*
- *ஏசாயா 5:11-16*
- *மத்தேயு 5:27-30*

*(2) தேர்வு: பாடம் 13க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

## *பாடம் 13 தேர்வு*

*(1) பரலோகத்தின் முதன்மை செயல்பாடு என்ன?*

*(2) பரலோகத்தில் இல்லாத சில விஷயங்கள் யாவை?*

*(3) யார் பரலோகம் செல்வார்கள்?*

*(4) விசுவாசிகள் எப்போது பரலோகம் செல்வார்கள்?*

*(5) நரகத்தைப் பற்றி வேதாகமம் எந்த மூன்று விஷயங்களைச் சொல்கிறது?*

*(6) ஒருவன் தனது கை அவனுக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போட வேண்டும் என்று இயேசு சொன்னதன் அர்த்தம் என்ன?*

*(7) நரகம் ஏன் நித்தியமானது?*

# பாடம் 14
# கடைசிக்கால சம்பவங்கள்

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *கடைசிக்கால சம்பவங்கள் பற்றிய தலைப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த நிலைகள்.*
- *கிறிஸ்துவின் வருகை மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான அதன் அர்த்தம்.*
- *அனைத்து ஜனங்களின் உயிர்த்தெழுதல் மற்றும் சரீரத்தின் மதிப்பு.*
- *அனைத்து தார்மீக உயிரினங்களின் கடைசி நியாயத்தீர்ப்பு.*
- *தேவனுடைய நித்திய ராஜ்யம்.*
- *கடைசிக்கால சம்பவங்கள் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) நித்தியத்தின் கண்ணோட்டத்தில் பூமிக்குரிய வாழ்க்கையைப் பார்ப்பதன் முக்கியத்துவத்தை மாணவர் அறிவார்.*

**முன்னுரை**

*தானியேல் 7:9-14ஐ ஒன்றாகப் படியுங்கள். இந்த வசனம் எதிர்காலத்தைப் பற்றி நமக்கு என்ன சொல்லுகிறது?*

*மிருகத்தின் முத்திரை, எக்காளங்கள், மகா உபத்திரவம், அந்திக்கிறிஸ்து, 1,000 ஆண்டுகள், 7 ஆண்டுகள், பெரிய வெள்ளை சிங்காசனம், கீழே இறங்கிவரும் நகரம், அக்கினிக்கடல் - இவை வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் உள்ளவை.*

► *வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் நீங்கள் எந்த பிரச்சினைகளை நினைக்கிறீர்கள்?*

## முக்கியத்துவ நிலைகள்

தீர்க்கதரிசன விவாதங்கள் பெரும்பாலும் முக்கிய சத்தியங்களுக்குப் பதிலாக சிறிய கேள்விகளில் கவனம் செலுத்துகின்றன. தீர்க்கதரிசனத்தில் உள்ள தலைப்புகள் அனைத்தும் சமமாக முக்கியமானவை அல்ல. இந்த பாடத்தில் தீர்க்கதரிசனம் பற்றிய அனைத்தையும் உட்படுத்தி கற்றுக்கொள்ள முயற்சிக்க மாட்டோம்.

சில சமயங்களில் மிருகத்தின் முத்திரை எப்படி இருக்கும், அந்திக்கிறிஸ்து எந்த நாட்டிலிருந்து வருவான், அந்த இரண்டு சாட்சிகள் யார் என்று ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இவை வேதாகமம் தெளிவாக பதிலளிக்காத கேள்விகள், அவற்றைப் பற்றி வாதிடுவது மதிப்புக்குரியது அல்ல.

வேதாகமம் அதிகமாக விளக்குகிற மற்ற தலைப்புகளும் உள்ளன. உபத்திரவ காலத்தின் தொடக்கத்தில், நடுவில் அல்லது முடிவில் இயேசு திரும்பி வருவார்; மற்றும் ஆயிரமாண்டு அரசாட்சி என்பது எழுத்தியல் பூர்வமான ஆயிரம் வருடமா இல்லையா போன்றவை சில உதாரணங்கள். இருப்பினும், இந்த உபதேசங்கள் சுவிசேஷத்திற்கு அவசியமானவை அல்ல. இந்தக் கேள்விகளில் ஒன்றின் கருத்தை நீங்கள் ஏற்காததால், ஒருவருடனான உறவை நீங்கள் ஒருபோதும் முறித்துக் கொள்ளக்கூடாது.

வேதாகம தீர்க்கதரிசனத்தில் தேவையான சில சத்தியங்கள் உள்ளன. வேதாகமத்தை நம்புகிற ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்குத் தெளிவான சத்தியங்கள் இவை. இந்த உபதேசங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் கிறிஸ்தவ உபதேசத்தின் முழு அமைப்பையும் பாதிக்கிறது. கடைசிக்கால சம்பவங்களைப் பற்றி வேதாகமம் தீர்க்கதரிசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவையான நான்கு சத்தியங்களைப் பார்ப்போம்.

## இயேசுவின் சரீரத் திரும்பிவருதல்

இயேசு எல்லோரும் காணும்படியாக இந்த பூமிக்குத் திரும்பி வருவார். அவர் ஆவிக்குரிய ரீதியில் இப்போது பூமியில் விசுவாசிகளுடன் இருக்கிறார் என்றாலும், அவர் தனது மகிமைப்படுத்தப்பட்ட, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த ரூபத்தில் பூமியிலுள்ளோர் காணத் திரும்புவார்.[395]

► இயேசு திரும்பி வரும்போது நடக்கும் சில காரியங்கள் யாவை?

கிறிஸ்துவின் வருகை பூமிக்குரிய வரலாற்றின் உச்சக்கட்டமாக இருக்கும். உலகின் ராஜ்யங்கள் கிறிஸ்துவின் ராஜ்யங்களாக மாறும். அவருக்கு விசுவாசமாக இருப்பவர்களுக்கு வெகுமதியும் மரியாதையும் கிடைக்கும். அவருக்கு எதிராக கலகம் செய்தவர்கள் வீழ்த்தப்படுவார்கள், எல்லா எதிர்ப்புகளையும் முறியடிக்கும் வல்லமை அவருக்கு இருக்கும்.[396] ஒவ்வொரு முழங்காலும் வணங்கும், ஒவ்வொரு நாவும் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்யும்.[397]

கிறிஸ்துவுக்குள் மரித்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடன் ஆட்சி செய்ய உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.[398] அவர்களும் உயிரோடுள்ள விசுவாசிகளும் கர்த்தர் தோன்றும்போது அவரைச் சந்திக்க எழுவார்கள்.[399]

இயேசுவின் வருகை அனைத்து கிறிஸ்தவர்களும் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியமாகும்.[400] அவர் திரும்பிவருவது நமக்கு என்ன அர்த்தம் என்பதை நினைத்துப் பாருங்கள்: துன்புறுத்தல், துன்பம் மற்றும் உபத்திரவத்தின் முடிவு; பரிசுத்தவான்கள் மற்றும் கிறிஸ்தவ அன்பானவர்களுடன் மீண்டும் இணைதல்; நமது நம்பிக்கை வீண் போகவில்லை என்பதற்கான ஆதாரம்; இயேசுவின்

[395] வெளிப்படுத்தல் 1:7-ஐ வாசிக்கவும்.
[396] மத்தேயு 26:64-ஐ வாசிக்கவும்.
[397] பிலிப்பியர் 2:10
[398] 2 தீமோத்தேயு 2:12
[399] 1 தெசலோனிக்கேயர் 4:16-17
[400] தீத்து 2:13-ஐ வாசிக்கவும்.

*பார்வை; மற்றும் பரலோகத்தின் பிரவேசம் மற்றும் தேவனுடன் நித்திய வாழ்வின் முழுமை. இந்த காரியங்கள் எதுவும் அவர் திரும்பும் நேரத்தைச் சார்ந்தது அல்ல, ஆனால் அவர் வாக்குறுதியளித்தபடி அவர் திரும்புவார் என்ற உண்மையைப் பொறுத்தது.*

*இயேசு வல்லமையோடும் மகிமையோடும் திரும்பி வருவேன் என்று கூறினார்.[401] அவர் வந்து தம் ஜனங்களை தன்னுடன் வாழ அழைத்துச் செல்வதாக உறுதியளித்தார்.[402] அவர் பரலோகத்திற்கு ஏறிச் சென்றது போலவே மீண்டுமாய் திரும்புவார் என்று தேவதூதர்கள் சொன்னார்கள்.[403] இந்த உலகத்திற்கான தேவனுடைய கடைசித் திட்டத்தை நிறுவுவதற்கு கிறிஸ்து திரும்பி வருவார் என்று காத்திருந்தபோது அப்போஸ்தலர்கள் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தனர்.[404] இயேசு மீண்டும் வல்லமையோடும் மகிமையோடும் இந்தப் பூமிக்குத் திரும்புவார் என்று புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் கற்பிக்கப்படுகிறது.[405]*

*இரண்டாம் வருகைக்கு முந்தைய அடையாளங்கள் இருந்தாலும், அவர் எப்போது திரும்புவார் என்பதை நம்மால் சரியாக அறிய முடியாது. விசுவாசிகள் இயேசுவின் வருகையை எப்போதும் எதிர்பார்த்து அதன்படி வாழ்வது நல்லது.[406]*

► *இயேசு ஏன் திரும்பி வருகிறார்?*

*பெரும்பாலான ஜனங்கள் தேவனுக்கு எதிராக கலகம் செய்யும் உலகில் நாம் வாழ்கிறோம். முழு சிருஷ்டிப்பும் பாவத்தின் சாபத்தால் தவிக்கிறது. அரசியல் நடவடிக்கை, சமூக சீர்திருத்தம், மேம்பட்ட கல்வி அல்லது வளமான பொருளாதாரம் ஆகியவற்றால் உலகம் ஒருபோதும் பரிபூரணமாக மாறாது.*

---

[401] *மத்தேயு 24:30*

[402] *யோவான் 14:3*

[403] *அப்போஸ்தலர் 1:11*

[404] *அப்போஸ்தலர் 3:19-21-ஐ வாசிக்கவும்.*

[405] *1 தெசலோனிக்கேயர் 4:15-16; 2 தெசலோனிக்கேயர் 1:7, 10; தீத்து 2:13; எபிரெயர் 9:28; யாக்கோபு 5:7-8; 1 பேதுரு 1:7, 13; 2 பேதுரு 1:16, 3:4, 12; 1 யோவான் 2:28*

[406] *மாற்கு 13:33-37-ஐ வாசிக்கவும்.*

அதைச் சரிசெய்வதற்காகத் திரும்பும் ராஜாவாக இயேசு திடீரென்று தம் சிருஷ்டிப்பில் பிரவேசிப்பார்.

எல்லா ஜனங்களும் பாவிகளே, ஆனால் அவர்கள் இப்போது விருப்பத்துடன் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்ந்தால், அவர்கள் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியும். மனந்திரும்பி விசுவாசிக்கிறவர்களிடையே தேவனுடைய ராஜ்யம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.[407] இயேசுவின் வருகையில் அந்த ராஜ்யம் முழுமையாகவும் வெளிப்படையாகவும் வரும்.

► இயேசு திரும்பி வருவதை அறிந்திருப்பதால் நாம் எப்படி வாழ வேண்டும்?

ஆரம்பகால கிறிஸ்தவர்களின் முன்னுரிமைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும், "முடிவுபரியந்தம் நிலைத்திருக்கவும்" நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்பங்களும் உலக காரியங்களும் நம்மை அவரது வருகையை மறந்துவிடச் செய்யக்கூடாது என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம்.[408] இவ்வுலகின் பொருள்கள் அழிந்து போகும் என்பதால் நாம் நித்திய மதிப்புகளின்படி வாழ்கிறோம். அவருடைய தோன்றுதலுக்காக வானத்தை அண்ணார்ந்து உற்றுப் பார்ப்பதன் மூலம் அல்ல, மாறாக அவருடைய வருகை நம்மை ஆயத்தமில்லாமல் பிடிக்காமல் இருக்க, ஆவிக்குரிய ரீதியில் காத்திருப்பதன் மூலம் "பார்க்க" வேண்டும் என்று நமக்குச் சொல்லப்படுகிறது.[409] நாம் அவரைப் போல இருக்க விரும்புவதால் சுத்திகரிப்பிற்காக ஜெபிக்கிறோம், தூய்மையான வாழ்க்கை வாழ்கிறோம்.[410]

அவர் வரவில்லை என இன்று வாழ்பவர்கள் அவர் திரும்பிவரும் வருகைக்காக ஆயத்தமாக இருக்க

---

[407] மாற்கு 1:14-15, 9:1
[408] லூக்கா 21:34-36
[409] மாற்கு 13:33-37. “கண்காணிப்பு” என்பதற்குப் பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல் எதையாவது தேடுவதைக் குறிக்கவில்லை, மாறாக பாதுகாப்பில் இருப்பதைக் குறிக்கிறது.
[410] 1 யோவான் 3:3

மாட்டார்கள்.[411] இயேசுவின் வருகை மின்னலைப் போல் இருக்கும்,[412] அதனால் அவர் தோன்றிய பிறகு எதையும் மாற்ற யாருக்கும் நேரம் இருக்காது.

அவர் வருகைக்காக பின்வருபைகளோடு காத்திருக்கிறோம்

1. நித்திய முன்னுரிமைகளை வைத்திருத்தல்
2. பரிசுத்தமாக வாழ்தல்
3. ஜெபத்தால் ஆவிக்குரிய ரீதியில் நம்மைக் காத்துக்கொள்ளுதல்

## சகல ஜனங்களின் சரீர உயிர்த்தெழுதல்

எல்லா மனிதர்களின் உயிர்த்தெழுதலையும் குறித்து வேதாகமம் போதிப்பதால், சரீரத்திற்கு நித்திய மதிப்பு உண்டு என்பதை நாம் அறிவோம். உயிர்த்தெழுதல் உபதேசம் அவசியம்.[413] அப்போஸ் தலனாகிய பவுல் விளக்கினார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே.[414] இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவில்லை என்றால், நற்செய்தி

> *"மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், நீங்கள் ஒழிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், பிசாசுகள் கீழே தள்ளப்பட்டன. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், தேவதூதர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், மற்றும் ஜீவன் விடுவிக்கப்பட்டது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், மற்றும் கல்லறை மரித்தவர்களிடமிருந்து காலியாகிவிட்டது: கிறிஸ்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, நித்திரைச் செய்கிறவர்களின் தலைவராகவும், உயிர்ப்பிப்பவராகவும் ஆனார். அவருக்கே சதாகாலமும் மகிமையும் வல்லமையும் உண்டாவதாக. ஆமென்."*
> *- Chrysostom, "Easter Homily"*

---

[411] *1 தெசலோனிக்கேயர் 5: 1-6 இருளில் இருப்பவர்கள், இந்த உலகத்திற்காக வாழ்பவர்கள், கர்த்தரின் வருகையால் திகிலடைந்தவர்களாக இருப்பார்கள் என்று காண்பிக்கிறது. நம்மைப் பொறுத்தவரை, அவர் "திருடனைப்போல்" திரும்ப மாட்டார்.*

[412] *மத்தேயு 24:27; 1 கொரிந்தியர் 15:52*

[413] *உயிர்த்தெழுதல் கோட்பாட்டைப் பாதுகாத்து பவுல் 58 வசனங்களை (1 கொரிந்தியர் 15) எழுதியதன் மூலம் இது காண்பிக்கப்படுகிறது.*

[414] *1 கொரிந்தியர் 15:3*

*உண்மையாக இருக்க முடியாது, உண்மையில் யாரும் இரட்சிக்கப்படவில்லை.*[415]

*ஒவ்வொரு நபரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள், ஆனால் எல்லா ஜனங்களும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுப்பப்படுவதில்லை. இயேசுவின் வருகையில், அவர் மரித்தவர்களை உயிரோடு எழுப்பி, அனைத்து கிறிஸ்தவர்களையும் எடுத்துக்கொள்வார்.*[416] *தங்கள் பாவங்களில் மரித்தவர்கள் முதல் உயிர்த்தெழுதலுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவர்கள் நியாயத்தீர்ப்புக்காக பிற்காலத்தில் உயிரோடு எழுப்பப்படுகிறார்கள்.*[417]

*கிறிஸ்தவர்கள் இயேசுவைப் போல மகிமைப்படுத்தப்பட்ட சரீரங்களில் எழுப்பப்படுவார்கள்.*[418] *பாவிகள் நித்திய தண்டனைக்காக வேறு ஏதாவது வடிவத்தில் எழுப்பப்படுவார்கள்.*[419]

► *சரீரம் உயிர்த்தெழுப்பப்படும் என்று நீங்கள் நம்பவில்லை என்றால், அது உங்களுக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்?*

*என்றாவது ஒரு நாள் உயிர்த்தெழுப்பப்படுவோம் என்ற நம்பிக்கை நம் வாழ்க்கை முறையை பாதிக்கிறது. இந்த உபதேசத்தை மறுக்கும் நபர்களின் உதாரணங்களைப் பார்ப்பதன் மூலம் அதன் நடைமுறை விளைவுகளை நாம் காணலாம். மனித சரீரம் உயிர்த்தெழுப்பப்படும் என்று கொரிந்து சபையில் இருந்த சிலர் மறுத்தனர். இந்த பிழையை நம்பியவர்கள் இரண்டு நிலைகளாகப் பிரிந்தனர்.*

*சிலர், "சரீரம் எழுப்பப்படாது என்பதால், ஆவிதான் முக்கியம். அதாவது சரீரத்தால் நாம் செய்யும் பாவங்கள் தீவிரமானவை*

---

415 *1 கொரிந்தியர் 15:17*
416 *1 தெசலோனிக்கேயர் 4:16-17; வெளிப்படுத்தல் 20:6*
417 *வெளிப்படுத்தல் 20:13*
418 *1 யோவான் 3:2*
419 *யோவான் 5:28-29*

*அல்ல. நாம் விபச்சாரம் கூட செய்யலாம், ஏனென்றால் சரீரம் எப்படியும் அப்புறப்படுத்தப்படும்.''*[420]

> *நித்திய தேவனுக்கு ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாள் போன்றது. எனவே, "அவர் நீடியபொறுமையுள்ளவர்:" தனக்கு எந்த இடையூறும் இல்லாமல், மனந்திரும்புவதற்கு அவர் நமக்கு இடம் தருகிறார். ஒரு வார்த்தையில், தேவனுடன் நேரம் அவருக்கும் அவரது பொருளாதாரத்திற்கும் ஏற்றதை விட மெதுவாகவோ அல்லது வேகமாகவோ கடந்து செல்கிறது; எல்லாவற்றின் முடிவையும் தாமதப்படுத்துவது அல்லது விரைவுபடுத்துவது அவருக்கு அவசியமானதற்கு எந்த காரணமும் இருக்க முடியாது.''*
> *- John Wesley, Notes on the New Testament, 2 பேதுரு 3 பற்றிய குறிப்புகள்*

*வேறு சிலர், ''சரீரம் எழுப்பப்படாது என்பதால், அது பயனற்றதாகவும் தீயதாகவும் இருக்க வேண்டும். நாம் அனைத்து சரீர ஆசைகளையும் அடக்க வேண்டும், சந்தோஷத்தை அளிக்கும் திருமணத்தை அல்லது இனிமையான சுவையைத்தரும் எதையும் சாப்பிடக்கூடாது.*

*இந்த இரண்டு பிழைகளும் உயிர்த்தெழுதலை மறுப்பதால் வந்தவை. உயிர்த்தெழுதல் பற்றிய கிறிஸ்தவ உபதேசம் சரீரத்துக்கு மதிப்பு அளிக்கிறது. கிறிஸ்தவர்களின் சரீரங்கள் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் ஆலயங்கள், கிறிஸ்துவின் அங்கத்தினர்கள், உயிர்த்தெழுப்பப்பட்டு மகிமைப்படுத்தப்படும் என்பதில் மதிப்பு காட்டப்படுகிறது.*[421]

*உயிர்த்தெழுதல் உபதேசம் அவசியமானது, ஏனென்றால் அது கீழ்காணும் பொருள்படுகிறது*

1. *இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார்.*
2. *சகல ஜனங்களும் எழுப்பப்படுவார்கள்.*

---

*[420] 1 கொரிந்தியர் 6:13-14 ஐப் பார்க்கவும், அங்கு சிலர் "வயிற்றுக்கு உணவுகள் மற்றும் உணவுகளுக்கு வயிறு" என்ற முழக்கம் இருப்பதாகத் தோன்றியது, அதாவது உடல் என்பது ஆசைகளின் ஈடுபாட்டிற்கு மட்டுமே. பவுல் சொன்னார், "ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார்" என்று சரீரத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கான நியாயத்தீர்ப்பைப் பற்றி பேசுகிறார். அவர் தொடர்ந்து, ''சரீரமோ ... கர்த்தருக்கே உரியது; தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்'' சொன்னார்.*

*[421] 1 கொரிந்தியர் 6:14, 15, 19, 20 -ஐ வாசிக்கவும்.*

*3. சரீரத்துக்கு நித்திய மதிப்பு உண்டு.*
*4. சுவிசேஷம் உண்மை.*

## *நியாயத்தீர்ப்பு*

*ஜீவப் புஸ்தகத்தில் பெயர் இல்லாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்மையிலேயே முடிவாக இருக்கிறது. இது அவர்களின் இருப்பின் முடிவு அல்ல, ஆனால் அது அவர்களின் தேர்வுகளின் முடிவு. தொடர்ந்து வரும் நித்தியம், ஒருபோதும் மாற்ற முடியாத முடிவுகளின் முடிவில்லாத விளைவுகளாக இருக்கும்.*

*இந்த நியாயத்தீர்ப்பு நமது தேர்வுகளுக்கு அவற்றின் உடனடி முடிவுகளுக்கு அப்பால் முக்கியத்துவத்தை அளிக்கிறது. சிலர் தங்கள் செயல்களின் முடிவுகளைக் கட்டுப்படுத்தும் வரை, கவலைப்பட வேறு எதுவும் இல்லை என்று நினைக்கிறார்கள். தங்கள் பாவம் உண்மையில் எந்தத் தீங்கும் செய்யாவிட்டால் அது தீயதல்ல என்று அவர்கள் நம்ப விரும்புகிறார்கள். உண்மையில், எல்லா பாவங்களும் தீங்கு விளைவிக்கும். ஆனால் அது இந்த வாழ்க்கையில் தீங்கு விளைவிக்கவில்லை என்றாலும், நியாயத்தீர்ப்பின் காரணமாக பாவம் கடுமையானது. மக்கள் தங்கள் செயல்களுக்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.[422]*

*நியாயத்தீர்ப்பின் போது சிலர் நித்திய தண்டனைக்கும், மற்றவர்கள் நித்திய புகழ்ச்சிக்கும் அனுப்பப்படுவார்கள். உயிர்த்தெழுப்பப்படும் பாவிகள் தங்கள் பாவச் செயல்களுக்காக கண்டனத்தை எதிர்கொள்வதற்கான நியாயத்தீர்ப்பின் ஒரு காட்சியை வேதம் விவரிக்கிறது.[423] கிறிஸ்தவர்களுக்கு மற்றொரு நியாயத்தீர்ப்பு உள்ளது, அங்கு பயனுள்ள, நீடித்த பலன்களைக் கொண்ட அந்த வேலைகளுக்காக அவர்கள் வெகுமதி பெறுவார்கள்.[424]*

---

*[422] 2 கொரிந்தியர் 5:10; ரோமர் 2:6-11-ஐ வாசிக்கவும்.*
*[423] வெளிப்படுத்துதல் 20:11-15ஐப் பார்க்கவும்.*
*[424] 1 கொரிந்தியர் 3:14-15 -ஐ வாசிக்கவும்.*

நியாயத்தீர்ப்பு என்பது ஒரு நாள் பாவம் முடிவுக்கு வரும் என்று அர்த்தம். பாவம் இல்லாத உலகத்தை கற்பனை செய்வது கடினம், ஆனால் ஒரு நாள் தேவனுக்கு எதிரான அனைத்து கிளர்ச்சிகளும் முடிவுக்கு வரும்.

நாம் தொடர்ந்து பயத்தில் வாழ வேண்டும் அல்லது பயம் சரியாக வாழ்வதற்கான நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. எவ்வாறாயினும், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் நினைவு நம் வாழ்க்கையை வழிநடத்தும் பொறுப்புணர்வின் உணர்வைத் தருகிறது.

நியாயத்தீர்ப்பைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள பின்வருபனவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்

1. பாவத்தின் முக்கியத்துவம்
2. தேவனுக்குள்ள நம் பொறுப்பு
3. நமது தேர்வுகளின் முக்கியத்துவம்
4. சகல பாவங்களுக்குமுள்ள முடிவு

## தேவனின் நித்திய ராஜ்யம்

சில தத்துவங்கள் மற்றும் மதங்களின் படி, காலம் என்றென்றும் சுழற்சியில் செல்கிறது, ஆரம்பம் அல்லது முடிவு இல்லாமல், மற்றும் காரியங்களை என்றென்றுமாய் மாற்றும் நிகழ்வுகள் இல்லை. ஆனால் வேதாகமத்தின் கூற்றுப்படி, காலத்திற்கு ஒரு ஆரம்பம் உள்ளது மற்றும் ஒரு முடிவுக்கு முன்னேறும் நிகழ்வுகளின் தொடர் உள்ளது. சிருஷ்டிப்பு, பின்னர் மனிதனின் துயரமான வீழ்ச்சி, பின்னர் பல நூற்றாண்டுகள் மனித வரலாற்றில் தேவன் செயல்படுத்தி வரும் இரட்சிப்பின் திட்டம் ஆகியவற்றை வேதாகமம் விவரிக்கிறது.

ஆதியாகமத்தில் பாவத்தின் ஆரம்பத்தைக் காண்கிறோம். வெளிப்படுத்தலில் பாவம் தேவனுடைய நித்திய நகரத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளது.[425] ஆதியாகமத்தில் ஜீவ விருட்சத்தின் இழப்பையும் மரண தண்டனையையும் காண்கிறோம். வெளிப்படுத்தலில், ஜீவ விருட்சத்தின்

[425] வெளிப்படுத்துதல் 21:27

*மறுசீரமைப்பு, ஜீவ புஸ்தகத்தில் உள்ள பெயர்கள் மற்றும் ஜீவத் தண்ணீரின் நதிக்கான அழைப்பைப் பார்க்கிறோம்.*[426]

தேவனின் முழுமையான மற்றும் நித்திய ராஜ்யத்தின் வருகை தேவனின் திட்டத்தை நிறைவேற்றும். தேவன் எப்போதும் அவருடைய பிரபஞ்சத்தின் ராஜாவாக இருந்து வருகிறார், ஆனால் மனிதனின் வீழ்ச்சியிலிருந்து, பெரும்பாலான மனிதகுலம் தேவனின் ராஜ்யத்திற்கு எதிராக கிளர்ச்சியில் உள்ளது. அது திடீரென்று முடிவுக்கு வரும், தேவன் ஒரு போட்டியில்லாமல் நித்தியமாக ஆட்சி செய்வார். பரலோகம் எப்படி இருக்கிறது என்று தேவன் விரும்புவது போல் உலகம் பூரணமாக இருக்கும்.

### தவிர்க்க வேண்டிய பிழை: பூமிக்குரிய கவனம்

பூமிக்குரிய வாழ்க்கையை என்றென்றும் வாழ்வது போல் வாழும் மனிதப் போக்கு உள்ளது. நம் நிலைமைகளை மேம்படுத்தவும், நம் பிரச்சினைகளைத் தீர்க்கவும், நம்மை உள்ளடக்கிய சூழலை உருவாக்கவும் முயற்சிக்கிறோம். ஆபிரகாம் கூடாரங்களில் வாழ்ந்து, அடிக்கடி இடம் பெயர்ந்தபோது, நித்திய வீட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆபிரகாமைப் போல நாம் இருக்க வேண்டும் (எபிரெயர் *11:8-10, 14-16*). நாம் கட்டும் பொருட்கள், நம்மிடம் உள்ள விஷயங்கள் மற்றும் நாம் உருவாக்கும் நிலைமைகள் அனைத்தும் தற்காலிகமானவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நித்திய மதிப்புள்ள காரியங்களுக்காக நாம் உழைக்க வேண்டும்.

*வகுப்பானது "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறை படிக்க வேண்டும்.*

### நம்பிக்கைகளின் அறிக்கை

இயேசு அவர் வாக்குறுதியளித்தபடி திரும்பி வருவார், கடந்த கால விசுவாசிகளை உயிர்த்தெழச் செய்வார், மேலும் அனைத்து விசுவாசிகளையும் தனது ராஜ்யத்தில் ஆட்சி செய்ய அழைத்துச் செல்வார். ஒவ்வொரு நபரும் தனது செயல்களுக்காக

---

[426] வெளிப்படுத்துதல் *22:1, 2, 19*

*நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ள மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார்கள். அவருக்கு நித்திய வெகுமதி வழங்கப்படும் அல்லது நித்திய தண்டனை விதிக்கப்படும். தேவனுடைய ராஜ்யம் முழுமையாக வரும், தேவன் என்றென்றும் ஆட்சி செய்வார்.*

### ***பாடம் 14 வீட்டுப்பாடங்கள்***

*(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.*

- *மத்தேயு 25:31-46*
- *2 பேதுரு 3:1-14*
- *1 கொரிந்தியர் 15:51-58*
- *வெளிப்படுத்துதல் 20:11-15*
- *தானியேல் 2:31-45*

*(2) தேர்வு: பாடம் 14க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

### ***பாடம் 14 தேர்வு***

*(1) வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கடைசிக்கால சம்பவங்கள் பற்றிய தேவையான நான்கு சத்தியங்கள் யாவை?*

*(2) இயேசு மீண்டும் திரும்பி வரும்போது கிறிஸ்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?*

*(3) இயேசுவின் வருகைக்காக நாம் எவ்வாறு காத்திருக்க வேண்டும்?*

*(4) உயிர்த்தெழுதல் உபதேசம் ஏன் அவசியம்?*

*(5) நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் தெரிந்துகொள்வது ஏன் முக்கியம்?*

# *பாடம் 15*
# *பண்டைய சமயக் கோட்பாடுகள்*

**பாடத்தின் நோக்கங்கள்**

*(1) இந்த பாடத்தின் முடிவில் மாணவர் பின்வருபனவற்றை விளக்க முடியும்:*

- *நம்பிக்கைகளின் அறிக்கையாக ஒரு மதத்தின் நோக்கம் மற்றும் பயன்பாடு.*
- *சமயக் கோட்பாடுகளின் சில வேதாகம எடுத்துக்காட்டுகள்.*
- *மூன்று வரலாற்று சமயக் கோட்பாடுகளின் தோற்றம் மற்றும் உள்ளடக்கம்.*
- *நவீன கிறிஸ்தவர்கள் ஏன் வரலாற்றுக் கிறிஸ்தவத்தை கடைபிடிக்க வேண்டும்.*
- *சமயக் கோட்பாடுகளைக் குறித்த கிறிஸ்தவ நம்பிக்கைகளின் அறிக்கை.*

*(2) மாணவர் ஆதித் திருச்சபையின் அடிப்படை நம்பிக்கைகளை முதல் கிறிஸ்தவமாக மதிப்பார்.*

**முன்னுரை**

*2 யோவானை ஒன்றாகப் படியுங்கள். திருச்சபையின் மூலக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி இந்தப் பகுதி நமக்கு என்ன சொல்லுகிறது?*

> *"நித்திய இரட்சிப்புக்கு அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தில் வந்த அவதாரத்தை சரியாக நம்புவது அவசியம். ஏனென்றால், தேவனுடைய குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனும் மனிதனுமாக இருப்பதை நாம் நம்புவதும் அறிக்கைப்பண்ணுவதும் சரியான விசுவாசமாகும்."*
> *- அத்தனாசியன் கோட்பாடு*

**சமயக் கோட்பாடுகளின் தோற்றம்**

ஒரு சமயக் கோட்பாடு

*என்பது அத்தியாவசிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் சுருக்கம். ஆரம்பகால திருச்சபை வேதாகமக் கோட்பாட்டைச் சுருக்கமாகக் கூற வேண்டியதன் அவசியத்தைக் கண்டது.*

► *திருச்சபைக்கு சமயக் கோட்பாடுகள் ஏன் தேவைப்பட்டன? வேதாகமம் போதுமானது இல்லையா?*

*வேதாகமத்தை நம்புவதாகக் கூறும் ஜனங்கள் எப்போதும் இருக்கிறார்கள், ஆனால் வேதாகமத்திற்கு முரணான உபதேசங்களை கற்பிக்கிறார்கள். உண்மையான கிறிஸ்தவத்தை தவறான உபதேசங்களிலிருந்து வேறுபடுத்தும் வேதாகம உபதேசத்தின் அறிக்கைகளை திருச்சபை உருவாக்கியது.*

*உபதேசத்தின் முதல் அறிக்கைகளில் ஒன்று "**இயேசு கர்த்தராயிருக்கிறார்**", அதாவது இயேசு தேவனாயிருக்கிறார். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்ற வார்த்தைகளும், இயேசுவே மேசியா (கிறிஸ்டோஸ்) என்றும் அவர் தேவன் என்றும் ஒரு அறிக்கையை வெளியிட்டது. இயேசுவை கர்த்தர் என்று கூற மறுத்தவர் அல்லது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வார்த்தைகளைப் பயன்படுத்த மறுத்தவர் கிறிஸ்தவர் அல்ல.*

*பிற்காலத்தில் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்ட ஜனங்கள் இருந்தனர், ஆனால் அவர்கள் **இயேசுவை உண்மையான மனிதர்** என்று நம்பவில்லை. அதனால்தான் 1 யோவானின் நிருபத்தில், "மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல"[427] என்ற கோட்பாட்டு அறிக்கையைக் காண்கிறோம். ஒரு நபர் கிறிஸ்துவின் அடிப்படை உபதேசங்களை மறுதலித்தால், அவர் பாவம் செய்கிறார், அவர் தேவனுடையவர் அல்ல என்றும் அப்போஸ்தலன் கூறினார்.[428]*

*1 தீமோத்தேயு 3:16 இல் பல அறிக்கைகளை முன்வைக்கும் ஆரம்பகால சமயக் கோட்பாடு உள்ளது:*

---

*[427] 1 யோவான் 4:3*

*[428] 2 யோவான் 9*

*தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.*

*1 தீமோத்தேயுவில் உள்ள மசமயக் கோட்பாடு கையாளும் அனைத்துக் காரியங்களையும் நாம் அறிந்திருக்கவில்லை, ஆனால் தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என்று கூறுவதிலிருந்து அது இயேசுவின் தெய்வத்துவத்தையும் மனிதத்தன்மையையும் வலியுறுத்துகிறது.*

*இந்த குறுகிய சமயக் கோட்பாட்டு அறிக்கைகள் ஒரு நோக்கத்திற்காக உதவியது. ஆரம்பகால கிறிஸ்தவர் ஒருவர் இயேசுவை நம்புவதாகக் கூறும் மற்றொரு நபரை சந்தித்தால், "இயேசுவை கர்த்தர் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" அல்லது "இயேசு மாம்சத்தில் வந்த தேவன் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று ஒரு கிறிஸ்தவர் கேட்கலாம். அந்த நபர் "இல்லை" என்று சொன்னால், அந்த நபர் வேதாகமம் கற்பிப்பதை உண்மையில் அறியவில்லை அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை கிறிஸ்தவர் அறிந்திருந்தார்.*

*பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு முதல் சில நூற்றாண்டுகளில், திரித்துவம், கிறிஸ்துவின் மனித அவதாரம் மற்றும் பரிசுத்த ஆவியின் அடையாளம் ஆகியவற்றைப் பற்றிய தெளிவான அறிக்கைகளை திருச்சபை அவசியம் என்று கண்டறிந்தது. சமயமதக் கோட்பாட்டிற்கு எதிராகத் தற்காப்பாக அவர்கள் கோட்பாட்டு தரநிலைகளை நிறுவினர். ஒவ்வொரு கிறிஸ்தவனும் நம்பும் அடிப்படை சத்தியங்களின் சுருக்கமாக சமயக் கோட்பாடுகள் கருதப்பட்டன.*

*சமயக் கோட்பாடுகள் ஒவ்வொரு பிரச்சினையையும் உட்படுத்த முடியாது, ஆனால் அந்த ஆரம்பகால கோட்பாடுகளில் எதையும் மறுத்திருந்தால் ஒரு நபர் ஒரு கிறிஸ்தவராக கருதப்பட மாட்டார். அவை கிறிஸ்தவ விசுவாசத்தை வரையறுக்கும் முயற்சியாக இருந்தன.*

*திருச்சபையின் ஆரம்பகால கோட்பாடுகளில் மூன்று இங்கே.*

## ***அப்போஸ்தலர்களின் கோட்பாடு***

*அப்போஸ்தலரின் கோட்பாடு அப்போஸ்தலர்களால் எழுதப்படவில்லை, ஆனால் இது இரண்டாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களின் உபதேசங்களை வெளிப்படுத்த எழுதப்பட்டது.*

> *வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை நான் நம்புகிறேன்;*
>
> *அவருடைய ஒரே பேறான குமாரன் மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில்; கன்னி மரியாளுக்கு பிறந்த பரிசுத்த ஆவியானவரால் கருத்தரிக்கப்பட்டவர்; பொந்தியு பிலாத்துவின் கீழ் துன்பப்பட்டார்; சிலுவையில் அறையப்பட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டார்; அவர் நரகத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்; அவர் பரலோகத்திற்கு ஏறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் அமர்ந்தார்; அங்கிருந்து அவர் சீக்கிரமாக மரித்தவர்களை நியாயந்தீர்க்க வருவார் என்றும் நான் நம்புகிறேன்.*
>
> *பரிசுத்த ஆவியானவரை; பரிசுத்த கத்தோலிக்க திருச்சபை; பரிசுத்தவான்களின் ஐக்கியம்; பாவ மன்னிப்பு; சரீர உயிர்த்தெழுதல்; மற்றும் நித்திய ஜீவனை நான் நம்புகிறேன். ஆமென்.*

*இயேசு உண்மையிலேயே மனிதராகவும் கன்னிகைக்குப் பிறந்தவர் என்று மறுதலித்தவர்களின் தவறுகளை அம்பலப்படுத்துவதே இந்த நம்பிக்கைக் கோட்பாடு என்று தெரிகிறது. இயேசு உண்மையில் மரித்தார் அல்லது அவர் சரீரத்தில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று மறுதலித்தவர்களும் இருந்தனர்.*

*பரிசுத்த ஆவியைப் பற்றி அப்போஸ்தலர்களின் கோட்பாட்டில் மிகக் குறைவாகவே கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் யார் என்று சபைக்குத் தெரியாததால் அல்ல; ஏனென்றால், அவருடைய அடையாளத்தைப் பற்றிய தவறான மதக்கொள்கைகளைக் கொண்டவர்கள் இன்னும் திருச்சபைக்கு சவால் விடவில்லை. கத்தோலிக்கம் என்ற சொல் "உலகளாவியம்" என்று பொருள்படும் மற்றும் ஒரு உண்மையான திருச்சபை உள்ளது என்று பொருள். "பாவ மன்னிப்பு" என்பது கிரியைகள் அல்லது சடங்குகளால் அல்லாமல் கிருபையின் மூலம் மட்டுமேயுள்ள இரட்சிப்பைக் குறிக்கிறது.*

## நைசியன் கோட்பாடு



*நைசியன் கோட்பாடு கி.பி. 325 இல் ஒரு திருச்சபை ஆலோசனை சங்கத்தில் நிறுவப்பட்டது. இதன் நோக்கம் கிறிஸ்துவின் தெய்வத்துவம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் உபதேசங்களைப் பாதுகாப்பதாகும். கி.பி. 381 இல் மற்றொரு திருச்சபை ஆலோசனை சங்கத்தில் சில அறிக்கைகள் சேர்க்கப்பட்டன. இதற்கு முன் வராத சில பிரச்சனைகளை இந்த கோட்பாடு கையாளுகிறது.*[429]

> *நான் ஒரே ஒரு தேவனை நம்புகிறேன், அவர் சர்வவல்லமையுள்ள பிதா, வானத்தையும் பூமியையும், மேலும் காணக்கூடிய மற்றும் கண்ணுக்கு தெரியாத அனைத்தையும் படைத்தவர்.*
>
> *மேலும் ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில், தேவனுடைய ஒரே பேறான குமாரன்; அனைத்து உலகங்களுக்கும் முன்பாக அவரது பிதாவினால் பிறந்தவர், தேவாதி தேவன், ஒளியின் ஒளி, மிகவும்*

---

[429] *Image: "S. Athanasius", retrieved from Bibliothèque Sainte-Geneviève Images, https://archive.org/details/EST84RESP8A, public domain.*

*தேவனின் தேவன், ஒரே பேறானவர், உருவாக்கப்படவில்லை; பிதாவுடன் ஒரே பொருளாக இருப்பவர்; அவராலே சகலமும் உண்டானது; மனிதர்களாகிய நமக்காகவும் நமது இரட்சிப்பிற்காகவும் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, கன்னி மரியாளுக்கு பரிசுத்த ஆவியானவரால் மனிதனாக மாம்சத்தில் அவதரித்து, மனிதனாக ஆக்கப்பட்டவர்; பொந்தியு பிலாத்துவின் கீழ் நமக்காக சிலுவையில் அறையப்பட்டார்; அவர் துன்பப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டார்; மூன்றாம் நாள் வேதவாக்கியங்களின்படி எழுந்தார்; மற்றும் பரலோகத்திற்கு ஏறிப்போனார்; மற்றும் பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்; அவர் மகிமையுடன் மீண்டும் வருவார், விரைவில் மரித்தவர்களை நியாயந்தீர்ப்பார்: அவருடைய ராஜ்யத்திற்கு முடிவே இருக்காது என்று நான் நம்புகிறேன்.*

*நான் பரிசுத்த ஆவியானவர், கர்த்தர் மற்றும் உயிர் கொடுப்பவர், பிதா மற்றும் குமாரனிடமிருந்து புறப்பட்டு வருவதை; பிதாவும் குமாரனும் சேர்ந்து ஆராதிக்கப்பட்டு மகிமைப்படுத்தப்படுபவர்; தீர்க்கதரிசிகள் மூலம் பேசியவர் என்று நம்புகிறேன்; நான் ஒரு கத்தோலிக்க மற்றும் அப்போஸ்தலிக்க திருச்சபையை நம்புகிறேன்; பாவ மன்னிப்புக்கான ஒரே ஞானஸ்நானத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்; மரித்தவர்களின் உயிர்த்தெழுதலுக்காக; மற்றும் இந்த உலகத்திற்கு பிறகுள்ள வாழ்க்கைக்காக நான் காத்திருக்கிறேன். ஆமென்.*

► *இந்த கோட்பாட்டில் அப்போஸ்தலர்களின் கோட்பாட்டில் காணப்படாத சில காரியங்கள் என்ன?*

திரித்துவத்தின் மூன்று நபர்களைப் பற்றிய கூற்றுகள் விரிவாக கூறப்படுவதை இங்கே காண்கிறோம். கிறிஸ்துவின் முழு தெய்வத்துவம் இயேசுவை தேவன் என்று விசுவாசித்து ஆனால்

*அவரது தெய்வத்துவத்தை மட்டுப்படுத்தி விசுவாசிப்பவர்களிடமிருந்து பாதுகாக்கும் வகையில் வலியுறுத்தப்படுகிறது. அவர் நித்தியமானவர் ("எல்லா உலகங்களுக்கும் முந்தினவர்"), சிருஷ்டிக்கப்படவில்லை, மேலும் பிதா எதைக் கொண்டிருக்கிறாரோ அதையேக் கொண்டிருக்கிறார். பிதா தேவன் என்று அழைக்கப்பட வேண்டிய அதே காரணங்களுக்காக இயேசுவும் தேவன் என்று அழைக்கப்படுகிறார்.*

*பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனைப் போலவே ஆராதிக்கப்பட வேண்டும், அது அவர் தேவனாக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.*

**கால்செதோனிய கோட்பாடு**

*கால்செதோனிய கோட்பாடு கி.பி. 451 இல் எழுதப்பட்டது. கிறிஸ்துவின் மானுட அவதாரம் பற்றிய உபதேசங்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கம். இதில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. கிறிஸ்துவின் முழு தெய்வத்துவம் மற்றும் முழு மனிதத்தன்மை என்கிற கோட்பாட்டைப் பாதுகாப்பதே எழுத்தாளர்களின் அக்கறையாக இருந்தது, இதில் குறைத்து மதிப்பிட்டு ஒரு அம்சம் இல்லாவிட்டாலும் முற்றிலும் அர்த்தமற்றதாகிவிடும்.*

*இறுதியில், எழுத்தாளர்கள் இந்த உபதேசங்களை திருச்சபையில் வேதப்பூர்வ மற்றும் பாரம்பரியமானவை என்று கருதினர். அவர்கள் புதிய யோசனைகளை உருவாக்கவில்லை, ஆனால் திருச்சபை எப்போதும் விசுவாசித்ததையேப் பாதுகாத்தனர்.*

> *நாம், பரிசுத்த பிதாக்களைப் பின்பற்றி, அனைவரும் ஒரே மனச் சம்மதத்துடன், ஒரே குமாரனை, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, தெய்வீகத்திலும், மனிதத்தன்மையிலும் பூரணமானவர் என்று அறிக்கைப்பண்ணும்படி மனிதர்களுக்குக் கற்பிக்கிறோம். மெய்யான தேவன் மற்றும் மெய்யாயான மனிதன், ஒரு நியாயமான ஆத்துமா*

*மற்றும் சரீரம்; தெய்வீகத்தின்படி அடிப்படையில் பிதாவுடன் நிகரானவர், மற்றும் மனிதத்தன்மையின்படி அடிப்படையில் நம்மைப்போலவே உள்ளவர்; நம்மைப் போன்ற எல்லாவற்றிலும், பாவம் இல்லாமல்; தெய்வீகத்தின்படி பிதாவின் ஒரே பேறானவர் எல்லா யுகங்களுக்கும் முந்தினவர், மேலும் இந்த கடைசி நாட்களில், நமக்காகவும், நமது இரட்சிப்பிற்காகவும், கன்னி மரியாள், தேவனின் தாய்க்கு, மனிதத்தன்மையின்படி பிறந்தார்; ஒரே கிறிஸ்து, குமாரன், கர்த்தர், ஒரே பேறானவர், குழப்பமில்லாமல், மாற்றமில்லாமல், பிரிக்க முடியாதபடி, வேறுபடுத்த முடியாத வகையில் இரண்டு தன்மைகளில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்; இயற்கைகளின் வேறுபாட்டை எந்த வகையிலும் கூறுகளால் அகற்ற முடியாது, மாறாக ஒவ்வொரு இயற்கையின் பண்புகளும் பாதுகாக்கப்பட்டு, ஒரே நபர் மற்றும் ஒரே ஜீவாதாரத்தில் ஒத்துப்போகின்றன, பிரிந்து அல்லது இரண்டு நபர்களாகப் பிரிக்கப்படவில்லை, ஆனால் ஒரே குமாரன், மற்றும் மட்டுமே பிறந்தவர், வார்த்தையாகிய தேவன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து; அவரைப் பற்றி ஆரம்பத்திலிருந்தே தீர்க்கதரிசிகளாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே நமக்குக் கற்பித்தார், மேலும் பரிசுத்த பிதாக்களின் நம்பிக்கை நமக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.*

► *இந்த கோட்பாட்டில் சில காரியங்கள் குறிப்பாக வலியுறுத்தப்படுவதை நீங்கள் காண்கிறீர்களா?*

*கிறிஸ்துவின் தெய்வத்துவம் என்பது இயேசுவுக்கு பரலோகத்தில் மட்டும் இருந்த ஒன்று அல்ல, ஆனால் பூமியிலும் இருந்தது. ஆரம்பகால கிறிஸ்தவர்கள் இயேசு உண்மையில் மாம்சத்தில் வந்த தேவன் என்று நம்பினர். பூமியில் இருந்தபோது தேவன் மற்றும் மனிதனின் பண்புகளை அவர் முழுமையாகக் கொண்டிருந்தார். கிறிஸ்துவின் இந்த தன்மையை இரட்சகராக அவருடைய தனித்துவமான தகுதியாக அவர்கள் கருதினர்.*

## கோட்பாடுகள் இன்று

*திருச்சபை தொடங்கி பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. உலகம் பல வழிகளில் மாறிவிட்டது. பல மத நம்பிக்கைகள் உருவாகியுள்ளன.*

*ஒரே மாதிரியாக இருக்க வேண்டிய உபதேசங்கள் என்று எதுவும் இல்லை என்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் எதை வேண்டுமானாலும் நம்பலாம் என்கிற கொள்கையைக் கொண்டிருந்து, இன்னும் தங்களை கிறிஸ்தவர்கள் என்றும் அழைத்துக்கொள்கிறார்கள்.*

► *திருச்சபையின் ஆரம்பகால கோட்பாடுகளை நாம் நம்புவது அவசியமா?*

*ஆரம்பகால கோட்பாடுகளில் விவரிக்கப்பட்டுள்ள வேதாகமத்தின் தேவன் மாறுவதில்லை. ஆரம்பகால கிறிஸ்தவர்கள் தேவன்மேல் வைத்த நம்பிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் தேவன் அவர்களை இரட்சித்தார் என்பதை அறிந்திருந்தார்கள். தேவனின் இயல்பு மற்றும் இரட்சிப்பின் வழிமுறைகள் பற்றிய இந்த அறிக்கைகள் ஆரம்பத்திலிருந்தே அடிப்படை கிறிஸ்தவமாய் இருந்தன.*

*ஒரு நபர் தனது எல்லா உபதேசங்களிலும் சரியாக இருந்தால் ஒழிய இரட்சிக்கப்படவில்லை என்று அர்த்தமல்ல. எல்லா உபதேசங்களும் சுவிசேஷத்திற்கு அவசியமில்லை. ஒரு நபர் தனக்குத் தெரிந்ததை உண்மை என்று மறுக்க முடியாது, ஆனால் சில விஷயங்களில் அவர் தவறாக இருக்கலாம்.*

*இந்த பாடத்தில் உள்ள பண்டைய சமயக் கோட்பாடுகள் அத்தியாவசிய உபதேசங்களைப் பற்றி மட்டுமே பேசுகின்றன. ஒரு திருச்சபை இந்த இன்றியமையாதவைகளிலிருந்து வேறுபட்ட தேவனைப் பற்றிய பார்வையைக் கொண்டிருந்தால், அவர்கள் இரட்சிப்பின் வேறு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும், இது வேறொரு நற்செய்தியாகும். அப்படிச் செய்தால், அவர்கள் புதிய மதத்தை உருவாக்குகிறார்கள் என்பதற்காக தங்களைத் தாமே கிறிஸ்தவர்கள் என்று சொல்லக்கூடாது.*

*நிச்சயமாக ஒவ்வொரு நபரும் அவர் விரும்புவதைச் சிந்திக்க சுதந்திரமாக இருக்கிறார்கள், ஆனால் அவருக்கு கிறிஸ்தவ நம்பிக்கைகள் இல்லையென்றால், அவர் ஒரு கிறிஸ்தவர் அல்ல. அவர் வேறு ஒன்றாக இருக்கிறார்.*

*முதல் சில நூற்றாண்டுகளில் இன்று இருப்பது போல் திருச்சபைப் பிரிவுககள் இல்லை. ஒரே திருச்சபை இருந்தது. எனவே கோட்பாடுகள் முழு திருச்சபையின் அறிக்கைகளாக இருந்தன. இன்று, வேதாகமத்தின் அதிகாரத்தை மதிக்கும் திருச்சபைகள் மற்ற பல கருத்துக்களில் உடன்படவில்லை என்றாலும், கோட்பாடுகளின் நம்பிக்கைகளைக் கொண்டுள்ளன.*

*தேவனுடனான உறவு மிக முக்கியமான விஷயம் என்பதை ஆரம்பகால திருச்சபை அறிந்திருந்தது. தேவனுடனான உறவின் மூலம் தாங்கள் இரட்சிக்கப்பட்டதை அவர்கள் அறிந்திருந்தனர். அதனால்தான் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அவர்கள் அறிந்திருப்பதை உறுதிப்படுத்துவது அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது.*

*திருச்சபைக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும் என்று யூதாவின் புத்தகம் நம்மை எச்சரிக்கிறது.[430] சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும், விசுவாசிகளை சீஷராக்கி, ஊழியத்திற்கு அவர் அழைப்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் நாம் உண்மையாக ஊழியம் செய்யும்போது, தேவன் அவருடைய சத்தியத்தை அபிஷேகம்பண்ணுவார்.*

> *"ஆனால் எந்த உபதேசம் புதியதாக இருந்தாலும் அது தவறாக இருக்க வேண்டும்; ஏனெனில் பழைய உபதேசம் ஒன்றே மெய்யானது; மேலும் ஆரம்பத்தில் இருந்த உபதேசத்தையல்லாமல் வேறே எந்த உபதேசமும் சரியானதாக இருக்க முடியாது.'"*
> *- John Wesley, "On Sin in Believers"*
> *என்னும் பிரசங்கத் தலைப்பிலிருந்து எடுக்கப்பட்டது.*

*[430] யூதா 3*

## தவிர்க்க வேண்டிய பிழை: சபைப்பிரிவின் பிரத்தியேகவாதம்

திருச்சபைகளின் குழு ஒரு அமைப்பாக ஒன்றுபட்டது ஒரு சபைப்பிரிவு என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் என்று கூறும் ஆயிரக்கணக்கான சபைப்பிரிவுகள் உள்ளன. சபைப்பிரிவின் ஒரு பகுதியாக இல்லாத ஆயிரக்கணக்கான சுயாதீன திருச்சபைகள் உள்ளன.

சில சமயங்களில் சபைப்பிரிவுகள் சுவிசேஷத்தில் தொடங்குகின்றன. ஒரு பிராந்தியத்தில் பல மதம் மாறியவர்கள் இருந்தால், அவர்களைக் கவனித்துக் கொள்ள எந்தப் பிரிவினரும் இல்லை என்றால், ஒரு புதிய சபைப்பிரிவு உருவாகலாம். ஒரு தேசத்தில் ஒரு ஊழிய அமைப்பின் வேலையிலிருந்து ஒரு சபைப்பிரிவு தொடங்கலாம்.

சில சமயங்களில் ஒரு சபைப்பிரிவு அவர்கள் இருக்கும் திருச்சபையால் ஒரு முக்கியமான உபதேசம் மறுக்கப்படுகிறது அல்லது புறக்கணிக்கப்படுகிறது என்று நம்பும் நபர்களின் குழுவிலிருந்து உருவாகிறது. அவர்கள் உபதேச ரீதியாக சரியானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு புதிய பிரிவைத் தொடங்குகிறார்கள். காலப்போக்கில், அவர்கள் தொடர்ந்து தங்கள் உபதேசங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் மற்ற கிறிஸ்தவ குழுக்களில் இருந்து வித்தியாசமாக வேதாகமத்தைப் புரிந்துகொள்வதால், அவர்களின் உபதேசங்கள் மற்ற சபைப்பிரிவுகளிலிருந்து வேறுபட்டவை.

ஆராதனைக்கான சரியான வடிவம் மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கையின் விவரங்கள் பற்றிய மரபுகளையும் சபைப்பிரிவுகள் உருவாக்குகின்றன. சபைப்பிரிவுகள் அவற்றின் மரபுகளில் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

பெரும்பாலான கிறிஸ்தவ சபைப்பிரிவுகள் தங்களை மட்டுமே மெய்யான திருச்சபை என்று கூறவில்லை. ஒரு அமைப்பு பூமியில் உள்ள தேவனின் முழு திருச்சபை என்று கூறினால், அதை நம்பக்கூடாது.

அவிசுவாசிகள் கிறிஸ்தவத்தை அதன் பிரிவுகள் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக எதிர்க்கிறார்கள். கிறிஸ்தவத்தின்

பல்வேறு பிரிவுகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாக அவிசுவாசிகள் நினைக்கிறார்கள். உலகிலுள்ள பலர் கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமை இல்லை என்று நினைக்கிறார்கள்.

மெய்யாகவே கிறிஸ்தவராக இருக்கக்கூடிய ஒரு சபைப்பிரிவு அல்லது உள்ளூர் திருச்சபை ஆரம்பகால கிறிஸ்தவ உபதேசங்களின் கோட்பாடுகளை நம்புகிறது. இதுவே அனைத்து கிறிஸ்தவ அமைப்புகளுக்கும் இடையே உள்ள உபதேச ஒற்றுமை. சிறிய உபதேசப் பிரச்சினைகள் மற்றும் பாரம்பரியத்தில் பெரும் வேறுபாடுகள் உள்ளன, ஆனால் அந்த வேறுபாடுகளின் காரணமாக ஒரு திருச்சபை கிறிஸ்தவம் அல்ல என்று நாம் கூறக்கூடாது.

**தவிர்க்க வேண்டிய பிழை: தனிப்பட்ட நம்பிக்கைகளைத் தவறாகப் புரிந்துகொள்வது**

ஒரு கிறிஸ்தவர் தேவனுடன் நல்ல உறவில் வாழ்கின்றபோது, வேதாகமத்தின் சத்தியத்தைப் பற்றிய தனது புரிதலை வளர்த்துக் கொள்கிறார். மற்றவர்கள் எடுக்கும் அதே முடிவுகளுக்கு அவர் எப்போதும் வரமாட்டார். அவர் அன்றாட வாழ்க்கையில் சத்தியத்தைப் பயன்படுத்துகையில், மற்ற கிறிஸ்தவர்கள் செய்வதிலிருந்து வித்தியாசமாக இருக்கும் விதிகளை அவர் தனக்கென உருவாக்கிக் கொள்வார்.

ஒரு நபர் தனது நம்பிக்கைகளைப் பற்றி சிந்திக்கும்போது, அவர் இனி ஒரு கிறிஸ்தவர் அல்ல என்று தீர்மானிக்காத பட்சத்தில், ஆரம்பகால கிறிஸ்தவத்தின் அத்தியாவசிய உபதேசங்களை நிராகரிக்கத் துணியக்கூடாது.

ஒரு கிறிஸ்தவர் தனது திருச்சபையின் நிறுவப்பட்ட உபதேசங்களை நம்பவும் முடியும். அவருடைய திருச்சபையின் உபதேசங்கள் தவறானவை என்று அவர் நம்பினால், அவர் உண்மையிலேயே திருச்சபையில் உறுப்பினராக இருக்க முடியாது.

ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவர் தனது திருச்சபையின் போதனைகளால் வழிநடத்தப்படுவார், ஆனால் அவர் தனது

திருச்சபையின் மற்ற உறுப்பினர்களிடமிருந்தும் வேறுபட்ட தனிப்பட்ட நம்பிக்கைகளைக் கொண்டிருப்பார். தனிப்பட்ட நம்பிக்கை என்பது வேதாகமத்தில் நேரடியாகக் கூறப்பட்ட ஒன்றல்ல; வேதாகமத்தின் சத்தியத்தை சில பிரச்சினைகளுக்குப் பயன்படுத்துவதற்கான ஒருவரின் முயற்சி இது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் வேதாகமத்தின் சத்தியத்தை தன் சூழ்நிலைகளுக்கு நேர்மையாகப் பொருத்த வேண்டும், ஆனால் தன் சொந்த முடிவுகளால் மற்றவர்களை விரைவாக மதிப்பிடக் கூடாது. எல்லா கிறிஸ்தவர்களும் ஆரம்பகால சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது சரியானது, மேலும் திருச்சபை உறுப்பினர்கள் தங்கள் திருச்சபையின் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியானது, ஆனால் அவரது தனிப்பட்ட நம்பிக்கைகள் அனைத்திற்கும் மற்றவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று ஒரு கிறிஸ்தவர் எதிர்பார்ப்பது சரியல்ல.

*வகுப்பு மாணவர்கள் "நம்பிக்கைகளின் அறிக்கையை" குறைந்தபட்சம் இரண்டு முறை படிக்க வேண்டும்.*

**நம்பிக்கைகளின் அறிக்கை**

கிறிஸ்தவத்தின் மூலக் கோட்பாடுகளைப் பற்றிக்கொண்டு காக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. ஆரம்பகால கிறிஸ்தவர்கள் நற்செய்தி மற்றும் தேவனுடனான நமது உறவுக்கு இன்றியமையாத விசுவாசக் கோட்பாடுகளைக் குறிப்பிட்டனர். அந்த அறிக்கைகள் இன்னும் அத்தியாவசிய கிறிஸ்தவத்தை வரையறுக்கின்றன.

**பாடம் 15 வீட்டுப்பாடங்கள்**

(1) வேதப்பகுதி வீட்டுப்பாடம்: ஒவ்வொரு மாணவருக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேதப்பகுதிகளில் ஒன்று ஒதுக்கப்படும். அடுத்த வகுப்பின் அமர்வுக்கு முன், நீங்கள் வேதப்பகுதியைப் படித்து, இந்த பாடத்தின் விஷயத்தைப் பற்றி இது என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி ஒரு பத்தியை எழுத வேண்டும்.

- *தீத்து 1:7-14*
- *யூதா 3-13*
- *1 தீமோத்தேயு 4:1-7*
- *1 தீமோத்தேயு 3:16*
- *1 யோவான் 4:1-3, 14-15, மற்றும் 5:12*

*(2) தேர்வு: பாடம் 15க்கு உள்ள ஒரு தேர்வுடன் அடுத்த வகுப்பைத் தொடங்குவீர்கள். ஆயத்தத்தின்போது தேர்வுக் கேள்விகளை கவனமாகப் படிக்கவும்.*

*(3) கற்பித்தல் வீட்டுப்பாடம்: உங்கள் வகுப்பிற்கு வெளியே கற்பிக்கும் நேரங்களைத் திட்டமிடவும், அறிக்கையளிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்.*

***பாடம் 15 தேர்வு***

*(1) சமயக் கோட்பாடு என்றால் என்ன?*

*(2) ஆரம்பகால கிறிஸ்தவர்களுக்கு இயேசுவைப் பற்றிய எந்த இரண்டு கூற்றுகள் தேவையாயிருந்தன?*

*(3) வேதாகமத்தில் பல கூற்றுக்களை முன்வைக்கும் முதல் சமயக் கோட்பாட்டிற்கான குறிப்பு என்ன?*

*(4) அப்போஸ்தலர்களுடைய கோட்பாட்டின் நோக்கம் என்ன?*

*(5) நைசீன் கோட்பாட்டின் நோக்கம் என்ன?*

*(6) கால்செதோனிய கோட்பாட்டின் நோக்கம் என்ன?*

# பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள்

**இந்த புத்தகத்தில் விவாதிக்கப்பட்ட தலைப்புகளைக் குறித்து மேலும் படிக்க, பின்வரும் ஆதார நூல்களைப் பார்க்கவும்.**


### தேவனுடைய புத்தகம்

Dockery, David S. *Christian Scripture*. Nashville: Broadman and Holman, 1995.

### தேவனுடைய பண்புகள்

Purkiser, W.T., ed. *Exploring Our Christian Faith*. Kansas City, MO: Beacon Hill Press, 1960.

Tozer, A. W. *The Knowledge of the Holy*. New York: Harper and Row, 1961.

### திரித்துவம்

Morey, Robert. *The Trinity: Evidence and Issues*. Iowa Falls: Word Bible Publishers, 1996.

White, James. *The Forgotten Trinity: Recovering the Heart of Christian Belief*. Minneapolis: Bethany House Publishers, 1998.

### மனிதக்குலம்

Purkiser, W.T., ed. *Exploring Our Christian Faith*. Kansas City, MO: Beacon Hill, 1978. (See Chapter 10: "What is Man?")

### பாவம்

Wesley, John. "The Doctrine of Original Sin," in *The Complete Works of Wesley. Vol. 9*.

Wilcox, Leslie. *Profiles in Wesleyan Theology*. Salem, OH: Schmul Publishing, 1985. (See Chapter 7: "Origin and Nature of Sin," 141-170.)

**ஆவிகள்**

Lewis, C. S. *The Screwtape Letters*. New York: Macmillan Co., 1968.

Wesley, John. "Satan's Devices." *Wesley's 52 Standard Sermons*. Salem, OH: Schmul Publishing, 1988.

**கிறிஸ்து**

Strobel, Lee. *The Case for Christ*. Grand Rapids: Zondervan, 1998.

Zacharias, Ravi. *Jesus Among Other Gods*. Nashville: Word Publishing, 2000.

**இரட்சிப்பு**

Purkiser, W. T., ed. *Exploring Our Christian Faith*. Kansas City, MO: Beacon Hill Press, 1960. (See Chapter XI and XII: "Man's Predicament," and "The Doctrine of Atonement.")

Wilcox, Leslie. *Profiles in Wesleyan Theology*. Salem, OH: Schmul Publishing, 1985. See Chapters 9-10: "Atonement" and "Conditions of Reconciliation," 171-214.

Wiley, H. Orton and Culbertson, Paul T. *Introduction to Christian Theology*. Kansas City, MO: Beacon Hill Press, 1946.

Shank, Robert. *Life in the Son*. Minneapolis: Bethany House Publishers, 1989.

Wiley, H. Orton and Culbertson, Paul T. *Introduction to Christian Theology*. Kansas City, MO: Beacon Hill Press, 1946.

**பரிசுத்த ஆவியானவர்**

Carter, Charles. *The Person and Ministry of the Holy Spirit*: *A Wesleyan Perspective*. Grand Rapids: Baker Book House, 1974.

Murray, Andrew. *Andrew Murray on the Holy Spirit*. New Kensington: Whitaker House, 1998.

***திருச்சபை***

Noll, Mark. *Turning Points*. Grand Rapids: Baker Academic, 1997.

Oden, Thomas. *Life in the Spirit*. Peabody: Prince Press, 2001.

***நித்திய விதி***

Lewis, C. S. "The Weight of Glory," in *The Weight of Glory and Other Addresses*. New York: Macmillan Publishing, 1980.

Purkiser, W.T., ed. *Exploring Our Christian Faith*. Kansas City, MO: Beacon Hill Press, 1967. (See Chapter XXVIII, "The Future Life.")

Wesley, John. "The Great Assize." *Wesley's 52 Standard Sermons*. Salem, OH: Schmul Publishing, 1988.

***கடைசிக்கால சம்பவங்கள்***

Ladd, George Eldon. *The Blessed Hope*. Grand Rapids: Eerdmans, 1992.

Wiley, H. Orton & Culbertson, Paul T. *Introduction to Christian Theology*. Kansas City, MO: Beacon Hill Press, 1949.

***பண்டைய சமயக் கோட்பாடுகள்***

Gonzalez, Justo L. *The Story of Christianity, Vol. I*. New York: Harper, 2010.

Noll, Mark. *Turning Points: Decisive Moments in the History of Christianity*. Grand Rapids: Baker, 2012.

# கிறிஸ்தவ நம்பிக்கைகள்
# வீட்டுப்பாடங்களின் பதிவு

*மாணவர் பெயர்:* ___________________________________

*ஒவ்வொரு வீட்டுப்பாடமும் முடிந்ததும் கையெழுத்து இடுதல். மாணவர் 70% அல்லது அதற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெறும்போது தேர்வுகள் "முழுமையானதாக" கருதப்படும். ஷெப்பர்ட்ஸ் குளோபல் கிளாஸ்ரூமில் இருந்து சான்றிதழைப் பெற, அனைத்து வீட்டுப்பாடங்களும் வெற்றிகரமாக முடிக்கப்பட வேண்டும்.*

| பாடம் | வேதப்பகுதி | தேர்வு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |
| 13 | | |
| 14 | | |
| 15 | | |

| வகுப்புக்கு வெளியே கற்பித்தல் | |
|---|---|
| தேதி | அமைப்பு |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

# ஷெப்பர்ட்ஸ் குளோபல் கிளாஸ்ரூமிடமிருந்து ***(Shepherds Global Classroom)*** சான்றிதழைப் பெறுவதற்கான கோரிக்கை

www.shepherdsglobal.org *என்னும் இணையதளத்தில் பாடத்திட்டத்தை நிறைவுச் செய்ததற்கான சான்றிதழுக்கான விண்ணப்பம் குளோபல் கிளாஸ்ரூமில் (Shepherds Global Classroom) உள்ள எங்கள் வலைப்பக்கத்தில் பூர்த்தி செய்யப்படலாம். தங்கள் மாணவர்(கள்) சார்பாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் பயிற்றுனர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு SGC இன் தலைவரிடமிருந்து சான்றிதழ்கள் டிஜிட்டல் முறையில் அனுப்பப்படும்.*

# ஷெப்பர்ட்ஸ் குளோபல் கிளாஸ்ரூமினுடைய பாட விவரங்கள்

### பழைய ஏற்பாட்டின் ஆய்வு

இந்த பாடம் பழைய ஏற்பாட்டிலுள்ள *39* புத்தகங்களின் அத்தியாவசிய உள்ளடக்கம் மற்றும் போதனைகளைக் கற்பிக்கிறது.

### புதிய ஏற்பாட்டின் ஆய்வு

இந்த பாடம் புதிய ஏற்பாட்டிலுள்ள *27* புத்தகங்களின் அத்தியாவசிய உள்ளடக்கம் மற்றும் போதனைகளைக் கற்பிக்கிறது.

### இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியம்

இந்த பாடம் *21* ஆம் நூற்றாண்டில் ஊழியம் மற்றும் தலைமைத்துவத்திற்கான முன்மாதிரியாக இயேசுவின் வாழ்க்கையைப் போதிக்கிறது.

### ரோமருக்கு எழுதிய நிருபம்

இந்த பாடம் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் விளக்கப்பட்டுள்ளபடி இரட்சிப்பு மற்றும் ஊழியங்களின் இறையியலைக் கற்பிக்கிறது, திருச்சபையில் காணப்படுகின்ற சர்ச்சைக்குரிய பல பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கிறது.

### வேதாகமவிளக்கத்தின் கோட்பாடுகள்

இந்த பாடமானது நமது வாழ்க்கையையும் தேவனுடனான உறவையும் வழிநடத்தும் பொருட்டு வேதாகமத்தை சரியாக விளக்கும் கொள்கைகளையும் முறைகளையும் கற்பிக்கிறது.

### கிறிஸ்தவ நம்பிக்கைகள்

இது வேதாகமம், தேவன், மனிதன், பாவம், கிறிஸ்து, இரட்சிப்பு, பரிசுத்த ஆவி, திருச்சபை மற்றும் கடைசிக்கால சம்பவங்களைப் பற்றிய கிறிஸ்தவ உபதேசங்களை விவரிக்கும் ஒரு வரையறுக்கப்பட்ட இறையியல் பாடமாகும்.

***கடைசிக்கால சாஸ்திரம்***

*இந்த பாடமானது வேதாகமப்புத்தகங்களாகிய தானியேல் மற்றும் வெளிப்படுத்துதல் பற்றிய தீர்க்கதரிசனத்தை வேதத்தின் மற்ற பிரிவுகளுடன் சேர்த்து கற்பிக்கிறது மற்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, கடைசி நியாயத்தீர்ப்பு மற்றும் தேவனுடைய நித்திய ராஜ்யம் போன்ற முக்கியமான உபதேசங்களை வலியுறுத்துகிறது.*

***பரிசுத்த வாழ்விற்கான உபதேசம் மற்றும் நடைமுறை***

*இந்த பாடம் ஒரு கிறிஸ்தவருக்கு தேவன் எதிர்பார்க்கும் மற்றும் அதிகாரம் அளிக்கும் பரிசுத்த வாழ்க்கையின் வேதாகமவிளக்கத்தை அளிக்கிறது.*

***திருச்சபையின் உபதேசம் மற்றும் நடைமுறை***

*இந்த பாடம் திருச்சபைக்கான தேவனுடைய வடிவமைப்பு மற்றும் திட்டத்தை விளக்குகிறது மற்றும் திருச்சபை உறுப்பினர், ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி, தசமபாகம் மற்றும் ஆவிக்குரியத் தலைமை போன்ற வேதாகமப்பாடங்களை விளக்குகிறது.*

***திருச்சபை வரலாறு ஓர் கண்ணோட்டம் 1***

*ஆரம்பகால திருச்சபையிலிருந்து சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியில் திருச்சபை எவ்வாறு தனது பணியை நிறைவேற்றியது மற்றும் அத்தியாவசிய உபதேசங்களை எவ்வாறு பாதுகாத்தது என்பதை இந்த பாடம் விவரிக்கிறது.*

***திருச்சபை வரலாறு ஓர் கண்ணோட்டம் 2***

*சீர்திருத்தம் முதல் நவீன காலம் வரை திருச்சபை எவ்வாறு விரிவடைந்தது மற்றும் சவால்களை எதிர்கொண்டது என்பதை இந்த பாடம் விவரிக்கிறது.*

### *ஆவிக்குரிய வாழ்வின் கட்டமைப்பு*

*இந்த பாடத்திட்டத்தில் மாணவர்கள் இயேசுவின் மனப்பான்மையைக் கொண்டிருக்கவும், இயேசு தம் பிதாவுடன் தொடர்புகொண்ட விதத்தில் தேவனுடன் தொடர்பு கொள்ளவும், இயேசுவைப் போல நம்மைத்தாழ்த்தவும், இயேசுவின் ஆவிக்குரிய மற்றும் தனிப்பட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவும், இயேசுவைப் போல துன்பங்களைச் சகிக்கவும், மற்றும் இயேசுவால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்தில் (திருச்சபை) தங்களை ஈடுபடுத்திக்கொள்ளுதலையும் போதிக்கிறது.*

### *ஊழியத்தலைமைத்துவம்*

*மதிப்புகளைக் கண்டறிதல், நோக்கத்தை உணர்ந்துகொள்வது, பார்வையைப் பகிர்ந்துகொள்வது, இலக்குகளை நிர்ணயித்தல், உத்திகளைத் திட்டமிடுதல், நடவடிக்கை எடுப்பது மற்றும் சாதனைகளை அனுபவிப்பது போன்ற செயல்களின் மூலம் நிறுவனங்களை வழிநடத்த தலைவர்களுக்குப் போதிப்பதில்,இந்தப் பாடம் கிறிஸ்தவப் பண்பை வலியுறுத்துகிறது.*

### *தகவல் தொடர்பு கோட்பாடுகள்*

*இந்த பாடம் தகவல் தொடர்பின் இறையியல், திறம்பட பேசுவதற்கான முறைகள் மற்றும் வேதாகமப் பிரசங்கங்களை தயாரித்து வழங்குவதற்கான முறைகளை கற்பிக்கிறது.*

### *வேதாகம சுவிசேஷ ஊழியம் மற்றும் சீஷத்துவம்*

*இந்த பாடம் சுவிசேஷ முறைகளை வழிநடத்தும் வேதாகமக்கொள்கைகளை முன்வைக்கிறது. இது சுவிசேஷத்தின் வடிவங்களை விவரிக்கிறது மற்றும் புதிதாக மனந்திரும்பியவர்களை சீஷர்களாக்குவதில் பயன்படுத்தக்கூடிய பாடங்களை வழங்குகிறது.*

***நியாயவாத சாஸ்திரம் ஓர் அறிமுகம்***

*இந்த பாடம் ஒரு கிறிஸ்தவ உலகக்கண்ணோட்டத்திற்கான அறிவியல், வரலாற்று மற்றும் தத்துவ அடிப்படையைக் கற்பிக்கிறது, மேலும் கிறிஸ்தவ நம்பிக்கை எவ்வாறு காரணம் மற்றும் யதார்த்தத்துடன் ஒத்துப்போகிறது என்பதைக் காட்டுகிறது.*

***உலக மதங்கள் மற்றும் சமய வழிபாட்டு முறைகள்***

*இந்த பாடம் சுவிசேஷத் திருச்சபை விசுவாசிக்கு போதனைகள் பற்றிய புரிதலையும் பதினெட்டு மத குழுக்களுக்கான சரியான பதில்களையும் வழங்குகிறது.*

***கிறிஸ்தவ ஆராதனை ஓர் அறிமுகம்***

*ஆராதனை எவ்வாறு விசுவாசிகளின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பாதிக்கிறது என்பதை இந்த பாடம் விளக்குகிறது மற்றும் தனிப்பட்ட மற்றும் சபையின் ஆராதனை நடைமுறைகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை வழங்குகிறது.*

***கிறிஸ்தவ நடைமுறை வாழ்க்கை***

*இந்த பாடம் பணம், உறவுகள், சுற்றுச்சூழல், அரசாங்கத்துடனான உறவுகள், மனித உரிமைகள் மற்றும் நடைமுறை வாழ்க்கையின் பிற பகுதிகளுக்கு வேதத்தின் கோட்பாடுகளைப் பயன்படுத்துகிறது.*

***கிறிஸ்தவ திருமணமும் குடும்பமும்***

*இந்த பாடம் வாழ்க்கையின் நிலைகளின் மூலம் மனித வளர்ச்சியின் கிறிஸ்தவ கண்ணோட்டத்தை அளிக்கிறது மற்றும் குடும்பத்தில் வகிக்கும் பொறுப்புக்கள் மற்றும் உறவுகளுக்கு வேதக் கோட்பாடுகளைப் பயன்படுத்துகிறது.*